MARAIMALAI LIBRARY

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம

ஸர்வம்விஷ்ணுமயஞ்ஜகத்

# ஸ்ரீமத்கம்பராமாயணம்

தெய்வப்புலமைக்

## கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

ஐந்தாவது

# சுந்தரகாண்டம்.

இயற்றமிழாசிரியர்

**அ - வீராசாமிசெட்டியாரவர்கள்**

மாணாக்கரும் நார்மல்கல்லீஜில்தமிழ்ப்புலவருமாகிய

கோமளபுரம்

**இராசகோபாலபிள்ளையவர்களால்**

பலபிரதிகளைக்கொண்டாராய்ந்து

கையெழுத்தாலுளவாகியவழுக்களைக்களைந்து

புங்கத்தூர்

**ம - சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இஃது


வையாவூர்

**அருணாசலமுதலியாரால்**

நிறைவேறியது

சித்தார்த்தி ௵ - சித்திரை ௴ 1859

ஹரிஓம்.



நன்றாக குருவாழ்க குருவேதுணை.

## கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணம்.

## ௫-வது. சுந்தரகாண்டம்.

### முதலாவது - கடறாவுபடலம்.

தனியன்.

மெச்சிட்டார்பொதுநோக்கிற்சீர்தூக்கிக்கம்பனெனுமேதக்கோன்றன்,உச்சிட்டமூலகிலுளகசடறக்கற்றுயர்புலவருஞற்றியாப்பில்,லைச்சிட்டசொற்பொருளுக்கணிமுதலவென்பர்தனிமிதிலைக்காந்தை,விச்சிட்டமணவாளன்புகழெனின்மற்றிதன்றகைமைவிளம்பற்பாற்றே.

காப்பு.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார். (௧)

# கடறுவுபடலம்.

## நூல்.

ஆண்டகையாண்டவ்வானோர்துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டிதுதான்கொல்வேலையிலங்கையென்றையமெய்தா
வேண்டருவிண்ணாடென்னுமெய்ம்மைகண்டுள்ளமீட்டான்
காண்டகுமோங்கையும்பரில்லெனக்கருத்துட்கொண்டான். (௨)

கண்டனனிலங்கைமூதூர்க்கடிபொழிற்கனகஞாஞ்சில்
மண்டலமதிலுங்கொற்றவாயிலுமணியிற்செய்த
வெண்டளக்கனகமாடவீதியும்பிறவுமெல்லாம்
அண்டமுந்திசைகளெட்டுநடுங்கத்தோள்கொட்டியார்த்தான். (௩)

வன்றந்தவரிகொளுகம்வயங்கனலுமிழும்வாய
பொன்றந்தமுழைகடோறும்புறத்துராப்புரண்டுபோவ
நின்றந்தமிலாவூன்றநெரிந்துகிழுந்திநீலக்
குன்றந்தன்வயிறுகிழிப்பதுங்கினகுடர்கண்மான. (௪)

புகலருமுழைபுட்டுஞ்சும்பொங்குளைச்சீயம்பொன்றி
உகலருங்குருதிகக்கியுள்ளுறநெரிந்தவுழின்
அகலிரும்பரவைநாணவரற்றுறுகுரலவாகிப்
பகலொளிகரப்பவானைமறைத்தனபறவையெல்லாம். (௫)

மொய்புறுசெவிகடாவிமுதுகுறமுறைகாறள்ள
மையுறுவிசும்பினூடுநிமிர்ந்தவாலதியமஞ்சின்
மெய்புறத்தழீஇயமெல்லென்பிடியொடும்வெருவலோடும்
கையுறமரங்கள்சுற்றிப்பிளிறினகளிநல்யானை. (௬)

பொன்பிறழ்சிமயக்கோடுபொடியுறப்பொறியுஞ்சிந்த
மின்பிறழ்குடுமிக்குன்றம்வெரிநுறவிரியுப்வேலை
பன்புறமயிரும்பூவாக்கட்புலப்புறத்துதாரு
வன்பிறழ்வாயிற்கவ்விவல்லியமிரிந்தமாதோ. (௭)

தெக்குறுசிகரக்குன்றந்திரிந்துமெய்ந்நெரிந்துசிந்தத்
தூக்குறுதோலர்வாளர்துரிதத்தினெழுந்ததோற்றம்
தாக்குறுசெருவினேரார்தாளறவீசத்தாவி
மேக்குறவிசைத்தாலொன்னப்பொலிந்தனர்விஞ்சைவேந்தர். (௮)

தாரகைசுடர்கண்மேகமென்றிவைதவிரத்தாழ்ந்து
பாரிடையழுந்துகின்றபட்டர்நெடும்பனிமாக்குன்றம்
கூருகிர்க்குவவுத்தோளான்கூம்பெனக்குமிழிபொங்க
ஆர்கலியழுவத்தாழுங்கலமெனலாயிற்றன்றே. (௯)

சாந்துநறுமென்சந்தங்குங்குமங்குலிகந்தண்மென்
போதுருகுபொலன்றாதென்றித் தொடக்கத்தயாவும்பூசி
மீதுறுசுனைநீராடியருவியொடலகின்வீழ்வ
ஓதியகுன்றங்கீண்டு குருதிநீர்சொரிந்தாலொத்த. (௰)

கடலுறுமத்திதென்னக்கருவரைதிரியுங்காலை
விடலுறுபுலன்கள்வென்றமெய்த்தவர்விசும்பினுற்றார்
இடலுறுகிரியிற்றாந்தஞ்செய்வினைமுற்றிமுற்றா
உடலுறுபாசம்வீசாதும்பர்செலவாருமொத்தார். (௰௧)

வெயிலியற்குன்றங்கீண்டுவெடித்தலுநடுக்கமெய்தி
மயிலியற்றேவிமார்கடழீஇக்கொளப்பொலிந்தவானோர்
அயிலெயிற்றரக்கனள்ளாத்திரிந்தநாளணங்குபுல்லக்
கயிலையினிருந்ததேவைத்தனித்தனிக்கடுத்தல்செய்தார். (௰௨)

ஊறியநறவுமுற்ற நற்றமுமுணர்வையுண்ணச்
சீறியமனத்தர்தெய்வமடந்தையரூடறீர்வுற்
றாறினரஞ்சுகின்றாரன்பனைத்தழுவியும்பர்
ஏறினரிடரினீத்தபைங்கிளிக்கிரங்குகின்றார். (௰௩)

இத்திறநிகழும்வேலையிமையவர்முனிவர்மற்றை
முத்திறத்துலகத்தாருமுறைமுறைவிரைவின்மொய்த்தார்
தொத்துறுமலருஞ்சாந்துஞ்சுண்ணமுமணியுந்தூவி
வித்தகசென்றீயென்றார்வீரனும்விரைவதானான். (௰௪)

குறுமுனிகுடித்தவேலைக்குப்புறங்கொள்கைத்தாதல்
வெறுவிதாவிசயம்வைகும்விலங்கற்றோளலங்கல்வீர
சிறுவிதென்றிகழற்பாலையல்லைநீசேறியென்று
உறுவலித்துணைவர்சொன்னா ரொருப்பட்டானப் பொருப்பையொப்
[பான். (௰௫)

இலங்கையினளவிற்றன்றாலிவ்வுருவெடுத்ததோற்றம்
விலங்கவுமுளதன்றென்றுவிண்ணவர்வியந்துநோக்க
அலங்குதாழ்மார்பன்முன்றாழ்ந்தடித்தலமழுத்தமேலாடும்
பொலன்கெழுமலையுந்தாளும்பூதலம்புக்கமாதோ. (௰௬)

வால்விசைத்தெடுத்துவன்றாண்மடக்கிமார்பொடுக்கிமானத்
தோள்விசைத்துணைகள்பொங்கக்கழுத்தினைச்சுருக்கித்தூண்டுங்
கால்விசைத்தடக்கைநீட்டிக்கட்புலங்கதுவாவண்ணம்
மேல்விசைத்தெழுந்தானுச்சிவிரிஞ்சனூடுரிஞ்சவீரன். (௰௭)

# கடறாவுபடலம்.

ஆயவனெழுதலோடுமருப்பணைமரங்கடாமும்
வேயுயர்குன்றும்வென்றிவேழமும்பிறவுமெல்லாம்
நாயகன்பணியிதென்றுதளிர்கடலிலங்கைசாரும்
பாய்வனவென்னவானம்படர்ந்தனவெழுவமான. (௰௮)

இசையுடையண்ணல்சென்றவேகத்தாலெழுந்தகுன்றும்
பசையுடைமரனுமாவும்பல்லுயிர்க்குலமும்வல்லே
திசையுறச்சென்றுசென்றுசெறிகடலிலங்கைசேரும்
விசையிலவாகத்தள்ளிவீழ்ந்தனவென்னவீழ்ந்த (௰௯)

மாவொடுமரனுங்கல்லும்வல்லியுமியாவுமற்றும்
போவதுபுரிந்தவீரன்விசையினாற்புணரிபொங்கத்
தூவினகீழுமேலுந்தூர்த்தனசுருதியன்ன
சேவகன்சீறுமுன்னஞ்சேதுவுந்தெரிந்தமாதோ. (௨௰)

கீண்டதுவேலைநன்னீர்கீழுறக்கிடந்தநாகர்
வேண்டியவுலகமெங்கும்வெளிப்பட்டமணிகண்மின்ன
ஆண்டவையுடனேநோக்கியரவினுக்கரசர்வாழ்வும்
காண்டகுதவத்தனுமேனியானெனக்கருத்துட்கொண்டான். (௨௧)

வெய்திவர்வான்சிறையினனீர்வேலையைக்கிழியவீசி
நொய்திறைமுதங்கொண்டநோன்மையேநுவலுநாகர்
உய்த்துநாமெம்பதென்னேயுறுவலிக்கலுழனூழின்
எய்தினனென்றஞ்சிமறுக்கமுற்றிரியல்போனார். (௨௨)

துள்ளியமகரமீன்கடிப்பறச்சுறவுதூங்க
ஒள்ளியபணமீச்சுறுஞ்சநதிவலையவூழிக்காலின்
வள்ளுகிராவீரன்செல்லும்விசைபொருமறுகிவாரி
தெள்ளியதிரைகண்முந்துற்றிலங்கைமேற்றவழ்ந்தமாதோ. (௨௩)

இடிக்குறுபொருள்களென்னமெண்டிசைசுமந்தயானை
நடுக்குறவிசையிற்செல்லுநாயகன்றூதனாகம்
எடுக்குறுகாலவன்காற்றிடியொடுமொடியவந்நாள்
முடுக்குறக்கடலிற்செல்லுமுத்தலைக்கிரியுமொத்தான். (௨௪)

கொட்புறுபுரவித்தெய்வக்கூர்நுதிக்குலிசத்தாற்றும்
கட்புலங்கதுவலாகாவேகத்தாற்கட்டுமண்ணும்
உட்படத்தங்கூட்டியண்டமுறவுளசெலவினொற்றைப்
புட்பகவிமானந்தானவ்விலங்கைமேற்போவதொத்த. (௨௫)

விண்ணவரேத்தவேதமுனிவரர்வியந்துவாழ்த்த
மண்ணவரிறைஞ்சச்செல்லுமாருதிமறமுட்கூர
அண்ணல்வாளரக்கன்றன்னையமுக்குவாம்பின்னுமென்றுக்
கண்ணுதலொழியச்செல்லுங்கைலையங்கிரியுமொத்தான். (௨௬)

மாணியாய்வேடந்தாங்கிமலரயற்கறிவுமாண்டோர்
ஆணியாயுலகுக்கெல்லாமறம்பொருணிரப்புமண்ணல்
சேணுயர்நெடுநாடேர்ந்ததிரிதலைச்சிறுவன்றன்னைக்
காணியவிளாவிற்செல்லுங்கனகமால்வரையுமொத்தான். (௨௭)

மழைகிழித்துதிரமீன்கண்மறிகடல்பாயவானம்
குழைவுறத்திசைகள்கீறமேருவுங்குலுங்கக்கோட்டின்
முழையுடைக்கிரிகண்முற்றமுடுக்குவான்முடிவுக்காலத்
தழிவுறக்கடுக்கும்வேகத்தாதையுமனையனானான். (௨௮)

தடக்கைநாலைந்துபத்துத்தலைகளுமுடையான்றானே
அடக்கியைம்புலன்கள்வென்றதவப்பயனறுதலோடும்
கெடக்குறியாகமாகங்கிழக்கெழுவழக்குநீங்கி
வடக்கெழுந்திலங்கைசெல்லும்பரிதிவானவனுமொத்தான். (௨௯)

புறத்துறலஞ்சிவேறோரரணம்புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர்வாழுமாநகர்மனுவின்வந்த
திறத்தவையிராமனென்னுஞ்செவகற்பற்றிச்செல்லும்
அறத்தவையரசன்றிண்போராழியுமனையனானான். (௩௰)

கேழலாமுழுநிலாவிற்கிளரொளியிருளைக்கீறப்
பாழிமாமேருநாணவிசும்புறப்படர்ந்தகோளான்
ஆழிசூழுலகமெல்லாமருங்கனன்றூங்கவுண்ணும்
ஊழிநாள்வடபாற்றோன்றுமுவாமுழுமதியுமொத்தான். (௩௧)

அடலெலாந்திகிரிமாயற்கமைந்தனனாற்றல்காட்டக்
குடலெலாமவுணர்சிந்தக்குன்றெனக்குறித்துநின்ற
திடலெலாந்தொடர்ந்துசெல்லச்சேண்விசும்பொதுங்கத்தெய்வக்
கடலெலாங்கலங்கத்தாவுங்கலுழனுமனையனானான். (௩௨)

நாவினோடுலகமூன்றுநடுக்குறவடுக்கிநாகர்
மேவின்மேனின்றகாற்றுஞ்சென்றகாலத்தின்விண்டு
காலினாலளந்தவான்முகட்டையுங்கடக்கக்கால
வாலினாலளந்தானென்றவ்வாண்வரம்நீளச்சென்றான். (௩௩)

விளித்துப்பின்வேலைநாவும்வீரன்வால்வேதமெய்க்கும்
அளித்துப்பினனுமனென்னுமறந்துணைபெற்றதாயும்
களித்துப்புன்றொழின்மேனின்றவரக்கர்கண்ணுறுவராமென்
றொளித்துப்பின்செல்லுங்காலபாசத்தையொத்ததன்றே. (௫௪)

மேருவைமுழுதுஞ்சூழ்ந்துமீதுற்றவேகநாகம்
கார்நிறத்தண்ணலேவக்கலுழன்வந்துற்றகாலை
சோர்வுறுமனத்ததாகிச்சுற்றியசுற்றுநீங்கிப்
பேர்வுறுகின்றவாறுமொத்ததப்பிறங்குபேர்வால். (௫௫)

குன்றொடுகுணிக்குங்கொற்றக்குவவுத்தோட்குரக்குச்சீயம்
சென்றுறுவேகத்திண்காலெறிதரத்தேவர்வைகும்
மின்றொடர்வானத்தானவிமானங்கள்விசையிற்றம்மின்
ஒன்றொடொன்றுடையத்தாக்கிமாக்கடலுற்றமாதோ (௫௬)

வலங்கையின்வயிரவேதிவைத்தவன்வைகுநாடும்
கலங்குவதேகுவான்றன்கருத்தென்கொலென்னுங்கற்பான்
விலங்கயிலெயிற்றுவீரன்முடுக்கியவேகம்வெய்யோர்
இலங்கையினளவன்றென்னுவிம்பர்நாடிரிந்ததிப்பால். (௫௭)

ஓசனையுலப்பிலாதவுடம்பமைந்துடையவென்னத்
தேசமுநாலுஞ்சொல்லுந்திமிங்கிலகிலங்களோடும்
ஆசையையுற்றவேலைகலங்கவன்றண்ணலயாக்கை
வீசியகாலின்வீழ்ந்துமிதந்தனமீன்களெல்லாம். (௫௮)

பொருவருமுருவத்தன்னான்போகின்றபொழுதுவேகம்
தருவனதடக்கைதள்ளாநிமிர்ச்சியதம்முளொப்ப
ஒருவருங்குணத்துவள்ளலோருயிர்த்தம்பியோடும்
இருவருமுன்னர்ச்சென்றுலொத்தவவ்விரண்டுபாலும், (௫௯)

வேறு.

இந்நாகமன்றினெறிகாலெனவேகும்வேலை
திந்நாகமாவிற்செறிகீட்டிசைக்காவல்செய்யும்
கைந்நாகமந்நாள்கடல்வந்ததொர்காட்சிதோன்ற
மைந்நாகமென்னுமலைவானுறவந்ததன்றே. (௬௰)

மீயோங்குசெம்பொன்முடியாயிரமின்னிமைப்ப
ஓயாவருவித்திரளுத்தரியத்தையொத்த
தீயோருளராகியதாலவர்தீமைதீர்ப்பான்
மாயோன்மகரக்கடலின்றெழுமாண்பதாகி. (௬௧)

நூலேந்துகேள்விநுகராப்புலனோக்கலுற்றார்
போலேந்துநின்றதனியாண்மைபொருதுநீங்கக்
காலாழ்ந்தழுந்திக்கடல்புககுழீஇக்கச்சமாகி
மாலேந்தமேவாங்குநெடுமந்தரமேபுமான, (௪௨)

நள்ளாற்கருநற்சிறைமாமுதலைப்பொடோங்கு
எள்ளாற்கருநன்னிறமெல்லையிலாதபுல்ல
வள்ளாற்கடலைகெடநீககிமருந்துவவ்வி
உள்ளூற்றெழுமோருவணத்தரசேயுமொத்த. (௪௩)

ஆன்றுநெடுநீரிடையாழியொடந்தமாகித்
தோன்றுதுநின்றனருடோன்றிடமுற்றுதோன்று
மூன்றுமுலகத்திடைமுற்றுயிராயமற்றும்
ஈன்றுனையீன்றசுவணத்தனியண்டமென்ன, (௪௪)

இந்நீரினென்னைத்தருமெந்தையையெய்தியன்றிச்
செந்நீர்மைசெய்யேனெனச்சிந்தனைசெய்துநொய்தின்
அந்நீரிலவர்துமுதலந்தணனேதிநாளம்
முந்நீரின்மூழ்கித்தவமுற்றிமுளைத்தவாபோல், (௪௫)

பூவாலிடையூறுபுகுந்தபொருதநெஞ்சின்
போவாமுனிசீறிடவாரிகுளித்தவெல்லாம்
மூவாமுதனையசன்மீளமுயல்றவந்நாள்
தேவாசுரர்வேலையில்வந்தெழுதிங்களென்ன, (௪௬)

நிறங்குங்குமமொப்பனநீனிறம்வாய்த்தநீரின்
இறங்கும்பவளக்கொடிசுற்றினசெம்பொனேய்ந்த
பிறங்குஞ்சிகரப்படாமுன்றிருறும்பிணுவோ
மிறங்கும்மகரங்களுயிர்ப்பொடுணர்ந்துலாவ, (௪௭)

கூன்சூன்முதிரிப்பிகுலாக்கநிரைத்தபாசி
வான்சூழ்மழையொப்பவயங்குபளிங்குமூன்றி
முன்சூலநாளிற்றலைகமுத்தமுயிர்த்தசங்கம்
மீன்சூழ்வருமம்முழுவெண்மதிவீறுகீற, (௪௮)

பல்லாயிரமாயிரங்காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயத்தடங்கைத்தலநீண்டுகாட்டத்
தொல்லார்கலியுட்புகமூழ்கிவயங்குதோற்றத்
தெல்லாமணியீட்டமுகந்தெழுகின்றதென்ன, (௪௯)

மனையிற்பொலிதாகநெடுங்கொடிமாலையேய்ப்ப
வினையிற்றிரள்வெள்ளருவித்திரணீங்கிவீழ
நினைவிற்கடலூடெழுமேலொடுமுணர்ந்துநீங்காச்
சுனையிற்பனைமீன்றிமிலோடுதொடர்ந்துதுள்ள, (ரு0)

கொடுநாலொடிரண்டுகுலப்பகைகூற்றமூன்றும்
சுடுஞானம்வெளிப்படவுய்த்ததுயக்கிலார்போல
விடநாகமுழைத்தலைவிம்மலுழன்றுநீங்க
நெடுநாள்பொறைபுற்றவுயிர்ப்புநிமிர்ந்துநிற்ப, (ருக)

எழுந்தோங்கிவிண்ணோடுமண்ணோக்கவிலங்குமாடி
உழுந்தோடுகாலத்திடையும்பரினிம்பரொங்கும்
கொழுந்தோடிநின்றகொழுங்குன்றைவியந்துநோக்கி
அழுங்காமனத்தண்ணலிதென்கொலென்றுவயிர்த்தான், (ருஉ)

நீர்மேற்படராநெடுங்குன்றுநிமிர்ந்துநிற்றல்
சீர்மேற்பட்டாதெனச்சிந்தையுணர்ந்துசெல்வான்
வேர்மேற்படவன்றலைகீழ்ப்படநூக்கிவிண்ணோர்
ஊர்மேற்படரக்கடிதும்பரின்மீதுயர்ந்தான், (ருங)

உந்தாமுனலைந்துயர்வேலையொளித்தகுன்றும்
சிந்தாகுலமுற்றதுபின்னருந்தீர்விலன்பால
வந்தோங்கியாண்டோர்சிறுமானிடவேடமாகி
எந்தாயிதுகேளெனவின்னவிசைத்ததன்றே, (ருச)

வேற்றுப்புலத்தோனெனலையவிலங்கலெல்லாம்
மாற்றுச்சிறையென்றரிவச்சிரமாணவோச்ச
வீற்றுப்படநூறியவேலையின்வேலையுய்த்துக்
காற்றுக்கிறைவனெனைக்காத்தனனன்புகாக்க, (ருரு)

அன்னானருங்காதலனாதலினன்பதூண்ட
என்னாலுனக்கிண்டுசெயற்கரிதாயதின்மை
பொன்னார்சிகரத்திடையாறினைபோதியேனும்
உன்னாலுயர்ந்தேனுயாவிற்குமுயர்ந்ததோளாய்; (ருசு)

கார்மேகவண்ணன்பணிபூண்டருங்காலின்மைந்தன்
தேர்வான்வருகின்றதுசீதையைத்தேவருய்யப்
பேர்வானயல்சேறியிதிற்பெறும்பேறிலென்ன
நீர்வேலையுமென்னையுரைத்ததுநீதிநின்றாய், (ருஎ)

நற்றாயினுநல்லனெனக்கினியனென்றுநாடி
இற்றைப்பிறையெயிற்றினையேய்ந்ததுகோடியென்றால்
பொற்றாரகன்மார்பதம்மில்லுழைவந்தபோதே
உற்றார்செயன்மற்றுமுண்டோவெனவுற்றுரைத்தான் (ருஅ)

உரைத்தானுரையாவிவனூற்றிலனென்பதுன்னி
விரைத்தாமரைவாண்முகம்விட்டுவிளங்குவீரன்
சிரித்தானமம்வசிரித்துத்திசைசெல்லநோக்க
வரைத்தாணெடும்பொற்குடுமித்தலைமாடுகண்டான் (ருகூ)

வருந்தேனதுவென்றுணைவானவன்வைத்தகாதல்
அருந்தேனினியாதுமென்றாசைநிரப்பினல்லாய்
பெருந்தேன்பொழிசாரனின்னன்புபிணித்தபோதே
இருந்தேனுகர்ந்தேனிதினூஉங்கினியீவதுண்டே (கூய)

முன்பிற்சிறந்தாரிடையுள்ளவர்காதன்முற்றப்
பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்
கென்பிற்சிறந்தாயதொரூற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாயதொர் பூசனையார்கணுண்டே, (கூக)

ஈண்டியாங்கடிதேகியிலங்கைவிலக்கலெய்தி
ஆண்டானடிமைத்தொழி லாற்றலினாற்றலுண்டேல்
மீண்டியானுயர்வென்னல்விருந்தெனவேண்டுமெய்ம்மை
பூண்டானவல்லட்புலம்பிற்படமுந்துபோனான், (கூஉ)

செவ்வாய்கதிருங்குளிர்திங்களுந்தேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீனொடுமேகமற்றும்
எவ்வாயுலகத்தவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொத்திடவூழிவெங்காலுமொத்தான் (கூங)

நீர்மாக்கடன்மேனிமிர்கின்றநிமிர்ச்சிநோக்காப்
பார்மேற்றவழ்சேவடிபாய்நடவாப்பகத்தே
தேர்மேற்குறிகொண்டவனித்திறஞ்சிந்தைசெய்தான்
ஆர்மேற்கொலென்றெண்ணிபருக்கனுமையமுற்றான் (கூச)

வாளொத்தொளிர்வாலெயிறாழின்மருங்கிமைப்ப
நீளொத்துயர்வாலின்விசும்புநிரம்புமெய்யன்
கோளொத்தவல்மேனிவிசும்பிருகூறுசெய்த
நாளொத்ததுமேலொளிகீழிருளுற்றஞாலம் (கூரு)

மூன்றுற்றதலத்திடைமுற்றியதுன்பம்வீப்பான்
என்றுற்றுவந்தான்வலிமெய்ம்மைபுணர்த்துநீயென்
றூன்றுற்றவானோர்குறைநேரவரக்கியாகித்
தோன்றுற்றுநின்றாள்சுரசைப்பெயர்ச்சிந்தைதூயாள் (௬௬)

பேழ்வாயொரரக்கியுருக்கொடுபெட்பினோங்கிக்
கோழ்வாயரியின்குலத்தாய்கொடுங்கூற்றுமுட்க
வாழ்வாமெனக்காமிடமாய்வருவாயொலென்று
நீழ்வாய்விசும்பின்றனதுச்சிநெருங்கிநின்றாள் (௬௭)

தீயேயெனலாயபசிப்பிணிதீர்த்தல்செய்வாய்
ஆயேவினைவுற்றனையண்மினொண்மையாள
நீயேயினிவந்தெனிணங்கொள்பிணங்கெயிற்றின்
வாயேபுகுவாய்வழிமற்றிலைவானினென்றாள் (௬௮)

பெண்பாலொருநீபசிப்பீழையொறுக்கநொந்தாய்
உண்பாயெனதாக்கையையானுதவற்குநேர்வல்
விண்பாலவர்நாயகனேவலிழைத்துமீண்டால்
நண்பாலெனச்சொல்லியநல்லறிவாளனக்கான் (௬௯)

காய்ந்தேழுலகங்களுங்காணநின்யாக்கைதன்னை
ஆய்ந்தேபசிதீர்வெனின்னுணையென்றனள்சொன்னாள்
ஓர்ந்தானுமிகழ்ந்தொருவேனினதாழில்பேழ்வாய்
சேர்ந்தேகுகின்றேன்வலையாமெனிற்றின்னியென்றான் (௭௰)

அக்காலையரக்கியுமண்டமனந்தமாகப்
புக்காணிறையாதபுழைப்பெருவாய்திறந்து
மிக்காதுவிழுங்கநின்றாளதுநோக்கிவீரன்
திக்காரவள்வாய்சிறிதாம்வகைசேணினீண்டான் (௭௧)

நீண்டானுடனேசுருங்காநிமிர்வாள்வயிற்றின்
ஊண்டானெனவுற்றொருயிர்ப்புயிராதமுன்னர்
மீண்டானதுகண்டனர்விண்ணுறைவோர்களெம்மை
ஆண்டான்வலனென்றலர்தூஉய்நெடிதாசிசொன்னார் (௭௨)

மின்மேற்படர்நோன்மையனுயுடல்வீங்கிநீங்கத்
தன்மேனியளாயவடாயினுமன்புதாழ
என்மேன்முடியாதனவென்றினிதேத்திநின்றாள்
பொன்மேனியனுநெடிதாசிபுனைந்துபோனான் (௭௩)

கீதங்களிசைத்தனர்கின்னரர்கீதநின்ற
பேதங்களியம்பினர்பேதையராடல்பின்னர்ப்
பூதங்கடொடர்ந்துபுகழ்ந்தனபூசுரேசர்
வேதங்களியம்பினர்தென்றல்விருந்துசெய்த. (௭௪)

மந்தாரமுந்துமகரந்தமணந்தவாடை
செந்தாமரைவாண்முகத்திற்செறிவேர்சிதைப்பத்
தந்தாமுலகத்திடைவிஞ்சையர்பாணிதள்ளும்
கந்தாரவீணைக்களிசெஞ்செவிக்காதுநுங்க. (௭௫)

வேறு.

வெங்கார்நிறப்புணரிவேறேயுமொன்றைப்
பொங்கார்கலிப்புணரப்பொலிவதேபோல்
இங்கார்கடத்திரெனவென்றுவெழுந்தாள்
அங்காரதாரைபெரிதாலாலமன்னாள். (௭௬)

காதக்கடுங்குறிகணக்கிறுதிகண்ணுள்
பாதச்சிலம்பினொலிவேலையொலிபம்ப
வேதக்கொழுஞ்சுடரைநாடிநெறிமேனாள்
ஓதத்தின்மேவுமதுகைடவனையொத்தாள். (௭௭)

துண்டப்பிறைத்துணையெனச்சுடரெயிற்றாள்
கண்டத்திடைக்கறையுடைக்கடவுள்கைம்மா
முண்டத்துரித்தவுரியாண்முளரிவந்தான்
அண்டத்தினுக்குறையமைத்தபிலவாயாள். (௭௮)

நின்றாணிமிர்ந்தலைநெடுங்கடலினீர்தன்
வன்றாளலம்பமுடிவான்முகடுவவ்வ
அன்றாய்நிறத்தவனறத்தையருளோடும்
தின்றாளொருத்தியிவளென்பதுதெரிந்தான். (௭௯)

பேழ்வாயகத்தலதுபேருலகமூடும்
நீழ்வானகத்தினிடையேகுநெறிநேரா
வாழ்வானனுக்கனவளாழ்பிலவயிற்றைப்
போழ்வானினைத்திணையவாய்மொழிபுகன்றான். (௮௰)

சாயாவரந்தழுவினாய்தழியபின்னும்
ஓயாதுவந்தவிசைகண்டுணரகில்லாய்
வாயாலளந்துநெடுவான்வழியுடைத்தாய்
நீயாரையென்னையிவணின்றநிலையென்றான். (௮௧)

பெண்பாலெனக்கருதுபெற்றியொழியுற்றால்
விண்பாலவர்க்குமுயிர்வீறுதல்மெய்யே
கண்பாலறித்தவுயிர்காலன்வரும்மனும்
உண்பானருத்தியதொழிப்பரியதென்றாள் (௮௨)

திறந்தாளெயிற்றையவளண்ணலிடைசென்றான்
அறந்தானரற்றியதயர்த்தமரரெய்த்தார்
இறந்தானெனக்கொடொரிமைப்பதனின்முன்னம்
பிறந்தானெனப்பெரியகோளரிபெயர்ந்தான் (௮௩)

கள்வாயரக்கிகதறக்குடர்கணத்தில்
தொள்வார்கடக்கையின்விசும்பைமிசைகொண்டான்
முள்வாழ்பொருப்பின்முழையெய்ப்திமிசநொய்தின்
உள்வாளரக்கொடெழுநிண்கலுழமெறுத்தான் (௮௪)

சாகாவரத்தலைவரிற்றிலகமன்றான்
ஏகாவரக்கிகுடர்தொண்டிடனெழுந்தான்
மாகாலசைப்பவடமண்ணிலுறவாலோ
டாகாயமுற்றகலிக்குவமையானான் (௮௫)

ஆர்த்தனர்கள்வானவர்கடானவரமூங்கா
வேர்த்தனர்விரிஞ்சனும்வியந்துமலர்வெள்ளம்
தூர்த்தனனகன்கைலையிற்றொலைவிலோனும்
பார்த்தனன்முனித்தலைவராசிகள்பகர்ந்தார் (௮௬)

மாண்டாளரக்கியவள்வாய்வயிறுகாறும்
கீண்டானிமைப்பினிடைமேநகிரிகீழா
நீண்டான்வயக்கதிநினைப்பினெடிதென்றாம்
பூண்டானருக்கனுயர்வானின்வழிபோனான் (௮௭)

சொற்றார்கள்சொற்றதொகையல்லதுணையொன்றே
முற்றுமுடந்தநெறிவானினிடைமுந்நீர்
இற்றாவிபெற்றெனினுமியானினியிலங்கை
உற்றால்விலங்குமிடையூறெனவுணர்ந்தான் (௮௮)

ஊறுகடிதூறுவனவூறிலறமுன்றுத்
தேறியரக்கர்புரிதீமையவைதீர
வேறுவகையாண்டைய வீராமனெனவெல்லாம்
மாறுமதின்மாறுபிறிதில்லெனவலித்தான் (௮௯)

வேறு.

பசும்புடைக்கனகநாஞ்சிற்படிமதிறிரித்துநோக்கான்
அசும்புடைப்பிரசத்தெய்வக்கற்பகநாட்டையண்மி
விசும்பிடைச்செல்லும்வீரன்விலங்கிவேறிலங்கைமூதூர்ப்
பசுஞ்சுடர்ச்சோலைத்தாங்கோர்பவளமால்வரையிற்பாய்ந்தான் (௯௰)

மேக்குறச்செல்வோன்பாயவிலங்கிநீரிலங்கைவெற்பு
நூக்குறுத்தங்கேமிங்குதந்தன்னுறநுடங்குநோன்மை
போக்கினுக்கிடையூறாப்புயலொடுபொதிர்ந்தவாடை
தாக்குறத்தளர்ந்துசிந்துங்கலமெனத்தகைத்தன்றே (௯௧)

மண்ணடியுற்றுமீதுவானுறவரம்பின்றன்மை
எண்ணடியுற்றகுன்றத்தலத்துநின்றெய்தநோக்கி
விண்ணிடையுலகமென்னுமெல்லியன்மேனிநோக்கக்
கண்ணடிவைத்ததன்னவிலங்கையைத்தெரியக்கண்டான் (௯௨)

நன்னகரதனைநோக்கிநளினக்கைமறித்துநாகர்
பொன்னகரிதனையொக்குமெம்பதுபுல்லிதம்மா
அந்நகரிதனினன்றேயண்டத்தைமுழுதுமாள்வான்
இந்நகரிருந்துவாழ்வானிதுவதற்கேதுவென்றான் (௯௩)

மாண்டதோர்நலத்திற்றென்றுணர்த்துதல்வாட்மைத்தன்றால்
வேண்டியவேண்டினெய்திவெறுப்பின்றிவிழைந்ததுய்க்கும்
ஈண்டரும்போகவின்பமீறிலதியாண்டுக்கண்டாம்
ஆண்டதுதுறக்கமென்பேயருமறைத்துணிவுமம்மா (௯௪)

உட்புலனொருநூறென்பர்யோசனையுலகமூன்றில்
மிகட்புறுபொருள்களெல்லாமிதனுழைச்செறிந்தவென்றால்
நுட்புலனுணர்ந்தகேள்விநுழைவிலொளினுநோக்கும்
கட்புலன்வரம்பிற்றாமோகாட்சியுங்காயிற்றாமே (௯௫)

கடறாவுபடலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-௯௫,
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ௨-வது-ஊர்தேடுபடலம்

வேறு.

பொன்கொண்டிழைத்துமணியைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயிலைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றியவெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதிமுட்டுவனமாடம் (௧)

நாகாலயங்களொடுநாகருலகுந்தம்
பாகாமருங்குதுயில்வென்னவுயர்பணைய
ஆகாயமஞ்சவகன்மேருவையனுக்கும்
மாகால்வழங்குசிறுதென்றல்வரநின்ற. (௨)

மாகாரின்மின்கொடிமடக்கினரடுக்கி
மீகாரமெங்கணுநறுந்துகள்விளக்கி
ஆகாயகங்கையிணையங்கையினினள்ளிப்
பாகாயசெஞ்சொலவர்வீசுபடுகாரம். (௩)

வேறு.

பஞ்சியூட்டியபாட்டிசைக்கிண்கிணிப்பதுமச்
செஞ்செவிச்செழும்பவளத்தின்கொழுஞ்சுடர்சிதறி
மஞ்சினஞ்சனநிறமறைத்தரக்கியர்வடித்த
அஞ்சிலோதியோடுவமையவவர்க்குறுமுவமை. (௪)

நானநாண்மலர்க்கற்பகநறுவிரைநாறப்
பானம்வாயுறவெறுத்ததாளாறுடைப்பறவை
தேனவாவிரைச்செழுங்கழுநீர்த்துயிலசெய்ய
வானயாறுகம்பரமிபதலந்தொறுமடுத்த. (௫)

குழலும்வீணையும்யாழுமென்றினையனகுழைய
மழலைமென்மொழிகிளிக்கிருந்தளிக்கின்றமகளிர்
சுழலுநன்னெடுந்தடமணிச்சுவர்தொறுந்துவன்றும்
நிழலுந்தம்மையுமெய்ம்மைநின்றறிவருநிலைய. (௬)

இனையமாடங்களிந்திரற்கமைவரவெடுத்த
மனையின்மாட்சியவென்னினச்சொல்லுமாசுண்ணும்
அனையதாமெனினரக்கர்தந்திருவுக்குமளவை
நினையலாமன்றியுவமைபுமன்னதாநிற்கும் (௭)

மணிகளொத்துணைபெரியவுமாமிருமார்பின்
அணியுங்காசினுக்ககன்றனவுளவெனலரிதால்
திணியுநன்னகர்த்திருமனைதெய்வமாத்தச்சன்
துணிவின்வந்தனன்றொட்டமைத்தவத்தொழில்கள்- (௮)

வாழுமன்னுயிர்யாவையுமொருவழிவாழ
ஊழிநாயகன்றிருவயிறொத்துளதிவ்வூர்
ஆழியண்டத்தினருக்கன்றனலங்குதேர்ப்புரவி
ஏழுமல்லனவீண்டுளகுதிரையுமெல்லாம். (௯)

மரமடங்கலுங்கற்பகமனையெலாங்கனகம்
அரமடந்தையர்சிலதி யராக்கியர்க்கமரர்
உரமடங்கிவந்துழையராயுழல்பவரொருவர்
தரமடங்குவதன்றிதுதவஞ்செய்ததவமால். (௰)

போரிசைபந்தனதோற்றவென்றிகழ்தலிற்புறம்போய்
நேரியன்றவன் றிசைதொறுநின்றமாநிற்க
ஆரியந்தனி யைங்கரக்களிறுமோராழிச்
சூரியன்றனித்தேருமேயிந்நகர்தொகாத. (௰க)

தேவரொன்பவர்யாருமித்திருநகர்க்கிறைவற்
கேவல்செய்கிலாரேவரேயெண்ணவகையுருவின்
மூவர்தம்மினு மதிகனென்றாலவன்முயலும்
நாவின்மாதவமல்லதுபிறிதொன்றுதருமோ. (௰உ)

கழங்குபேரியினார்கலித்தகைநெடுங்களிறு
முழங்குமோதையுமூரிநீர்முழக்கொடுமுழங்கும்
கொழுங்குழற்புதுக்குதலையர்நூபுரக்குரலின்
வழங்குமப்பெருந்துழனிகள்வயின்றெறுமறையும். (௰ங)

மரகதத்தினுமற்றுளமணியினும்வனைந்த
உரகதத்தடந்தேரினமவைபயில்கொட்டில்
இரவிவெள்கநின்றிமைக்கின்றவியற்கையவென்றால்
நரகமொக்குமானன்னெடுந்துறக்கமிந்நகர்க்கு. (௰ச)

திருகுறுஞ்சினத்தரக்கருங்கருநிறந்தீர்ந்தார
ருருகுபோகின்றதிங்களுமறுவற்றதழகைப்
பருகுமிந்நகர்த்துன்னொளிபாய்தலிற்பசும்பொன்
உருகுகின்றதுபோன்றுளதுலகுசூழ்வரி. (௰ரு)

அண்டமுற்றவும்வீங்கிருளகற்றுநின்றலரி
கண்டவாற்றினிக்கடிநகர்நெடுமணிக்கதிர்கள்
உண்டவாற்றினென்றுணைப்பரிதொப்பிடிற்றன்முன்
விண்டவாய்ச்சிறுமின்மினியென்னவும்விளங்கா. (௰சா)

தேனுஞ்சாந்தமுமான்மதஞ்செறிநறுஞ்சேறும்
வானநாண்மலர்க்கற்பகமலர்களும்வயமாத்
தானவாரியுநீரொடுமடுத்தலிற்றழீஇய
மீனுந்தானுமோர்வெறிமணங்கமழுமாம்வேலை. (௰எ)

தெய்வத்தச்சனைப்புகழ்துமோசெங்கண்வாளரக்கன்
மெய்ம்மையாத்தாற்றியதவத்தையேவியத்துமோவிரிஞ்சன்
ஐயப்பாடிலாவரத்தையேமதித்துமோவறியாத்
தொய்யற்சிந்தையாம் யாவரையாதென்றுதுதிப்பாம். (௰௮)

வேறு.

வானுந்நிலனும்பெறுமாறினிமற்றுமுண்டோ
கானும்பொழிலும்மிவைசெங்கனகத்தினாலும்
ஏனம்மணியாலுமியற்றியவேனும்யாவும்
தேனும்மலருங்கனியந்தரச்செய்தசெட்டை. (௰௯)

வேறு.

நீரும்வையமுநெருப்புமேனியிர்நெடுங்காலும்
வாரிவானமும்வழங்கலவாகுந்தன்வளர்ச்சி
ஊரினிந்நெடுங்கோபுரத் துயர்ச்சிகண்டுணர்ந்தால்
மேருவெங்ஙனம்விளர்க்குமோமுழுமுற்றும்வெள்கி. (௨௰)

முன்னம்பாவருமிராவணன்முனிபுமெம்மெண்ணிப்
பொன்னின்மாநகர்மீச்செலாக்கதிரோனைப்புகல்வார்
என்னிபானையிஞெளியினிற்கண்டுறக்குறுதல்
உன்னிநாடொறும்விலங்கினல்போதகைடுணரா. (௨௧)

தீபசெப்புநர்தேவராலனையவர்சேரும்
வாயிலல்லமேனார்வரம்பமைக்குவமெனமதியாக்
காயமென்னுமக்கணக்கறுபகத்தைடநீட்டிக்க
ஐயுநன்மநிவிட்டனன்கைலையையெடுத்தான். (௨௨)

கறங்குகால்புகாததிரவனொளிபுகாமறலி
மறம்புகாதினிவானவர்புகாரென்னைவப்பே
திறம்புகாலத்துள்யாவையுஞ்சிதையினுஞ்சிதையா
அறம்புகாதிந்தவணிமதிட்கிடக்கைநின்றகத்தின்

கொண்டவான்றிகாக்குழாட்டலினடையதாக்குடுமி
எண்டவாவிசும்பெட்டநின்றிமைக்கின்றவெழிலால்
பண்டைநாகணைப்பள்ளியானுந்தியிற்பயந்த
அண்டமேயுமொத்திருந்ததல்வகனகரமதி (௨௪)

பாடுவார்பலரொன்னிர் மற்றவரினும்பலரால்
ஆடுவார்கண்மற்றவரினும்பலருளரனமதி
கூடுவாரிடையின்னியங்கொட்டுவார்முட்டில்
வீடுகாண்குழுந்தேவரால்விழுநடங்காண்பார் (௨௫)

வானமாதரோடிகலுவர்விஞ்சையர்மகளிர்
ஆனமாதரோடாடுவரியக்கியரவரைச்
சேணைவார்குழலரக்கியர்தொடர்குவர்தொடர்ந்தால்
ஏனைநாடியரருநடக்கிரியையாய்ந்திருப்பார் (உ௬)

இழையுமாலையுமாடையுஞ்சாந்தமுமேந்தி
உழையரென்னநின்றுதவுவநிதியங்களொருவர்
விழையும்போகமேயிங்கிதுவாய்க்கொண்டுவிளம்பின்
குழையுநெஞ்சினுனினையினுமாசென்றுகொள்ளும் (உ௭)

பொன்னின்மால்வரைமேன்மணிபொழிந்தன்னபொருத்தி
உன்னுநான்முகத்தொருவனின் றாழ்முறையுரைக்கப்
பன்னிநாள்பலபணியுழன்றரிதினிற்படைத்தான்
சொன்னவானவர்தச்சனு மிந்நகர்துதிப்பான் (உ௮)

மகரவீணையின்மந்திரகீதத்தின்மறைந்த
சகரவேலையினூர்கலிதிசைமுகன்றடவும்
சிகரமாளிகைத்தலந்தொறுந்தெரிவையர்நிவந்த
அகருதூபத்தினமூழ்ந்தினமுகிற்குலமனைத்தும் (உ௯)

பளிக்குமாளிகைத்தலந்தொறுமிடந்தொறும்பசுந்தேன்
துளிகளுங்கற்பகத்தண்ணறுஞ்சோலைகடோறும்
அளிக்குந்தேறலுண்டாடுநர்பாடுநராகிக்
களிக்கின்றாரலாற்கவல்கின்றாரொருவரைக்காணேன் (௩௰)

தேறன்மாந்தினர்தேனிசைமாந்தினர்செவ்வாய்
ஊறன்மாந்தினரின்னுலாமாந்தினரூடல்
கூறன்மாந்தினரனையவர்த் தொழுதெழுகோபத்
[illegible]ன்மாந்தினரரக்கியர்க்குயிரன்னவரக்கர் (௩௧)

[illegible]குங்குமத்திளமுலையெழுதியதொழில்கள்
[illegible]த்தமேனியிற்பொலிந்தனரூடலிற்கனன்று
மறித்துநோக்கியர்மலரடிமஞ்சுளப்பஞ்சி
குறித்தகோலங்கள்பொலிந்தனவரக்கர்தங்குஞ்சி (௩௨)

விளரிச்சொல்லியர்வாயினுன்வேலையுண்மிடைந்த
பவளக்காடெனப்பொலிந்தது படைநெடுங்கண்ணாற்
குவளைக்கோட்டகங்கடுத்ததுகுளிர்முகக்குழுவான்
முளரிக்கானமுமானதுமுழங்குநீரிலங்கை (௩௩)

### வேறு.

எழுந்தனர்திரிந்துவைகு மிடத்ததாயின்றுகாறும்
கிழிந்திலதண்டமென்னு மிதனையேகிளப்பதல்லால்
அழுந்திநின்றுவதென்னே யலருளோனாதியாக
ஒழிந்தபேருயிர்களெல்லாமரக்கருக்குறையும்போதா (௫௪)

காயத்தாற்பெரியர்வீரங் கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றன்மையளவற்றாரறிதறேற்றும்
மாயத்தார்நகர்க்கெங்கேனும்வரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறல்தெருவிலோர்தெருவின்சேறல். (௫௫)

கழலிலாக்காலுங்காலவயிலிலாக்கையுங்காந்தும்
அழலிலாக்கண்ணுமில்லாவாடவரில்லையன்னார்
குழலுலாங்களிவண்டார்க்குங்குஞ்சியாற்பஞ்சிகுன்று
மழலையாழ்க்குதலைச்செவ்வாய்மாதருமில்லைமாதோ. (௫௬)

கள்ளுறக்கனிந்தபங்கியரக்கனைக்கடுத்தகாதல்
பள்ளுறத்தொடர்வமேனிபுலாலுறக்கடிதும்போவ
வெள்ளுறுப்பெயிற்றசெய்யதலையனகரியமெய்ய
உள்ளுறக்களித்தகுன்றினுயர்ச்சியவோடையானை. (௫௭)

வள்ளிநுண்மருங்குலன்னவானவர்மகளிருள்ளம்
தள்ளுறப்பாணிதள்ளாநடம்புரிதடங்கண்மாதர்
வெள்ளிவெண்முறுவறோன்ற மடந்தையர்வெள்குகின்றார்
கள்ளிசையரக்கர்மாதர்களியிடுகுரவைகாண்பார், (௫௮)

ஒறுத்தலோதிற்கமற்றெம்முயர்படைக்கொருங்கிவ்வூர்வத்
திறுத்தலுமெளிதாமற்றும் யாவர்க்குமியக்கமுண்டே
கறுத்தவாளரக்கிமாருமரக்கருங்கழித்துவீசி
வெறுத்தபூண்வெறுக்கையாலேதூருமிவ்வீதியெல்லாம்

வடங்களுங்குழைபும்பூணுமாலையுஞ்சாந்தும்யானைக்
கடங்களுங்கலினமாவிலாழியுங்கணக்கிலாத
இடங்களுமிடங்கடோறும் யாற்றொடுமெடுத்தவெல்லாம்
அடங்கியதென்னிலென்னே யாழியிறுழ்ந்ததுண்டோ (௬௰.

விற்படைபெரிதென்கோயான்வேற்படைமிகுமென்கோயான்
மற்படையுளதென்கோயான்வாட்படைவலிதென்கோயான்
கற்பணந்தண்டுபிண்டிபாலமென்றினையகாந்தும்
நற்படையுடைத்தென்கோயான் நாயகற்குலாக்குநாளில். (௬௧)

என்றனனிலங்கைநோக்கியிணையணைபலவுமெண்ணி
நின்றவாளரக்கர்வந்துநேரினுநேர்வரொன்றாத்
தன்றனையனையமேனி சுருக்கியச்சரளச்சாரற்
குன்றிடையிருந்தான்வெய்யோன்குணகடல்குளிப்பதானான் (சஉ)

வேறு.

ஐய்வினைபிறத்தியிற்செல்வமெய்தினான்
ஆய்வினைமனத்திலானறிஞர்சொற்கொளான்
வீய்வினைநினைக்கிலாதொருவன்மெய்யிலான்
தீவினையெனவிருள்செறிந்ததெங்குமே (சங)

கரித்தழன்றெறியினுடைக்கணிச்சிவானவன்
எரித்தலைபந்தணரினழுத்தயானையை
உரித்தபேருரிவையாலுலகுக்கோருறை
புரித்தனனெனப்பொலியும்பொற்பதே (சச)

அணங்கரவரசர்கோனளவிலாண்டெலாம்
பணங்களின்றலைதொறுமுயிர்த்தபாய்விடம்
உணங்கலினுலகெலாமுறையினுண்டுவந்
திணங்கெரிபுகையொடுமெழுந்ததென்னவே (சரு)

வண்மைநீங்காநெடுமரபின்வந்தவன்
பெண்மைநீங்காதகற்புடையபேதையைத்
திண்மைநீங்காதவன்சிறைவைத்தானெனும்
வெண்மைநீங்கியபுகழ்விரிந்ததென்னவே. (சசா)

அவ்வழியவ்விருள்பரந்தவாயிடை
எவ்வழிமருங்கினுமரக்கரோகினர்
செவ்வழிமந்திரத்திசையாரயினும்
வெவ்வழியிருடரமிதித்துமீச்செல்வார் (சஎ)

இந்திரன்வளநகர்க்கேகுவாரிகற்
சந்திரனுலகினைச்சார்குவார்கலித்
தந்தகனுறைபுலையணுகுவாரியல்
வெந்[illegible]ழிலரக்கனதேவன்மேயினர் (சஅ)

பொன்னகர்மடந்தையர்விஞ்சைப்பூவையர்
பன்னகவனிதையரியக்கர்பாவையர்
முன்னினபணிமுறைமாறமுந்துவார்
மின்னினமிடைந்தெனவிசும்பின் மீச்செல்வார் (சகூ)

தேவருமவுணருஞ்செங்கணாகரும்
மேவருமியக்கரும்விஞ்சைவேந்தரும்
யாவரும்விசும்பிருளிரியவீண்டினார்
தாவரும்பணிமுறைதழுவுந்தன்மையார். (௫௰)

சித்திரபத்தியிற்றேவர்சென்றனர்
இத்துணைதாழ்ந்தனமுனியுமென்றுதம்
முத்திராங்களுமுடியின்மாலையும்
உத்தரீயங்களுமிரியவோடுவார் (௫௧)

நீண்டருந்தீவினைநீக்கத்தீந்துபோய்
மாண்டறவுலர்ந்ததுமாருதிப்பெயர்
ஆண்டகைமாரிவந்தளிக்கவாயிடை
ஈண்டறமுளைத்தெனமுளைத்ததிந்துவே (௫௨)

வந்தனனிராகவன்றாதன்வாழ்ந்தனன்
எந்தையேயிந்திரனாமென்றேமுறு
அந்தமில்கீட்டிசையளகவாணுதற்
சுந்தரிமுகமெனப்பொலிந்துதோன்றிற்றே (௫௩)

பற்றைவெண்கவரிபோற்கடலின்வெண்டிரை
சுற்றுநின்றலமரப்பொலிந்துதோன்றிற்றால்
இற்றதெம்பகையெனவெழுந்தவிந்திரன்
கொற்றவெண்குடையெனக்குளிர்வெண்டிங்களே (௫௪)

தெரிந்தொளிர்திங்கள்வெண்குடத்தினாற்றிரை
முரிந்துயர்பாற்கடன்முகந்துமூரிவான்
சொரிந்ததுமேயாமெனத்துள்ளிமீனெடும்
விரிந்ததுவெண்ணிலாமேலுங்கீழுமே. (௫௫)

அருந்தவன்சுரபியேயாகிவானமா
விரிந்தபேருதயமேம்மடிவெண்டிங்கள்
வருந்தலின்முலைக்கதிர்வழங்குதாரையாச்
சொரிந்தபாலொத்ததுநிலவின்றோற்றமே. (௫௬)

எண்ணுடையநுமன்மேலிழிந்தபூமழை
மண்ணிடைவீழ்கிலமறித்தும்போகில
அண்ணல்வாளரக்கனையஞ்சியாய்கதிர்
விண்ணிடைத்தங்கினபோன்றமீனெலாம். (௫௭)

எல்லியினிமிரிருட்குறையுமவ்விருள்
கல்லியநிலவின்வெண்முறியுங்கள்வன
புல்லியபகையெனப்பொருவபோன்றன
மல்லிகைமலர்தொறும்பொதிந்தவண்டெலாம். (௫௮)

வீசுறுபசுங்கதிர்க்கற்றைவெண்ணிலா
ஆசுறவெங்கணுநுழைந்ததாயது
காசறுகடிமதிலிலங்கைக்காவலூர்த்
தூசுறையிட்டதுபோன்றுதோன்றிற்றே (௫௯)

இகழ்வருபெருங்குணத்திராமனெய்ததோர்
பகழியின்செலவெனவநுமன்பற்றினால்
அகழ்புகுந்தரண்புகுந்திலங்கையன்னவன்
புகழ்புகுந்துலாயதோர்பொலிவும்போன்றதே (௬௰)

அவ்வழியநுமனுமணுகலாம்வகை
எவ்வழியென்பதையுணர்வினெண்ணினான்
செவ்வழியொதுக்கினன்றேவரோத்தப்போய்
வெவ்வழியரக்கரூர்மேவன்மேயினான் (௬௧)

வேறு.

ஆழியகழாகவரிதாயமரர்வாழும்
ஏழுலகின்மேலைவெளிகாறுமுகடேறிக்
கேழரியபொன்கொடுசமைத்தகிளர்வெள்ளத்
தூழிதிரிநாளுமழியாமதிலையுற்றான் (௬௨)

கலங்கலில்கடுங்கதிர்கண்மீதுகடிதேகா
அலங்கலயில்வஞ்சகனையஞ்சியெனினன்றால்
இலங்கைமதிலிங்கிதனையேறலரிதென்றே
விலங்கியகல்கின்றனவினாந்தெனவியந்தான் (௬௩)

தெவ்வளவிலாதவிறைசேறலுளதென்றால்
அவ்வளவதன்றரணமண்டமிடையாக
எவ்வளவிலுண்டுவெளியீறுமதுவென்றே
வெவ்வளவரக்கனைமனக்கொளவியந்தான். (௬௪)

மடங்கலரியேறுமதமால்களிறுநாண
நடந்துதனியேபுகுதுநம்பிநனிமூதூர்
அடங்கரியதானையயிலந்தகனதானைக்
கடுந்திறலின்வாயனையவாயிலெதிர்கண்டான் (௬௫)

மேருவைநிறுத்திவெளிசெய்ததுகொல்விண்ணோர்
ஊர்புகவமைத்தபடிகால்கொலுலகேழும்
சோர்விலநிலைக்கநடுவிட்டதொருதூணோ
நீர்புகுகடற்குவழியோவெனநினைந்தான் (௬௬)

எழுலகின்வாழுமுயிர்யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுடனேபுகுதலுண்டே
வாழியரியங்குவழியீதெனவகுத்தால்
ஆழியுளவேழினளவன்றுபகையென்றான் (௬௭)

வெள்ளமொருநூறொடொருநூறுமுடைவீரக்
கள்ளவினைவெவ்வியரக்கரிருகையும்
முள்ளெயிறும்வாளுமுறமுன்னமுறைநின்றார்
எள்ளரியகாவலினையண்ணலுமெதிர்ந்தான் (௬௮)

சூலமழுவாளொடயில்தோமரமுலக்கை
காலவரிவிற்பகழிகற்பணமுசுண்டி
கோல்கணையம்நமிகுலிசஞ்சுரிகைகுந்தம்
பாலமுதலாயுதம்வலித்தனர்வலத்தார் (௬௯)

அங்குசநெடுங்கவணையிற்சிலைவழங்கும்
வெங்குசையபாசமுதல்வெய்யபயில்கையார்
செங்குருதியன்னசெறிகுஞ்சியர்சினத்தோர்
பங்குனிமலர்ந்தொளிர்பலாசவனமொப்பார் (௭௰)

அளக்கவரிதாகியகணக்கொடயனிற்கும்
விளக்கினையிருட்டனைவிழுங்கிவெளிகால
உளக்கடியகாலன்மனமுட்குமணிவாயில்
இளக்கமில்கடற்படையிருக்கையையெதிர்ந்தான் ([illegible])

எவ்வமரரெவ்வவுணரெவ்வருளரென்னே
கவ்வைமுதுவாயிலினெடுங்கடைகடப்பார்
தெவ்வரிவர்சேமமிதுசேவகனும்யாமும்
வெவ்வமர்தொடங்கினினெனுவிளையுமென்றான்

கருங்கடல்கடப்பதரிதன்றுநகர்காவற்
பெருங்கடல்கடப்பதரிதெண்ணமிறைபேரின்
அருங்கடன்முடிப்பதரிதாமமர்கிடைக்கின்
நெருங்கமர்கிடக்குநெடுநாளெனநினைந்தான் (௭௩)

வாயில்வழிசேறலரிதன்றியும்வல்லத்தோர்
ஆயிலவர்வைத்தவழியேகலழகன்றால்
காய்கதிரியக்கின்மதிலைக்கடிது தாவிப்
போயிநகர்புக்கிடுவெ னென்றெரயல்போனான் (எச)

வேறு

நாணாருந்தானல்கியகாவனணிமூதூர்
வாணாளந்நாள்போவதின்மேலேவழிநின்றாள்
தாணுமென்னுந்தோளுடையானைச்சுடரோனைக்
காணுவந்தகட்செவியென்னக்கனல்கண்ணாள் (எரு)

எட்டுத்தோளானுவுமுகத்தாளுலகேழும்
தொட்டுப்பேருஞ்சோதிநிறத்தாள் சுழல்கண்ணாள்
மூட்டிப்பேரின்மூவுலகத்தைமுதலோடும்
கட்டிச்சீறுங்காவல்வலத்தாள்கமையில்லாள் (எசா)

பாராநின்றாளெண்டிசைதோறும்பலரப்பால்
வாராநின்றாரோவெனமாரிமழையேபோல்
ஆராநின்றாணூபுரமச்சந்தருதாளாள்
வேராமெய்யாண்மின்னினிடைமக்குமிளிர்பூணாள்; (எஎ)

வேல்வாள்சூலம்வெங்கதைபாசம்விளிசங்கம்
கோல்வாள்குந்தங்கொண்டகரத்தாள்வடகுன்றம்
போல்வாடிங்கள்போழினெயிற்றாள்புகைவாயிற்
காலவாள்காணிற்காலனுமுட்குங்கதமிக்காள் (எஅ)

அஞ்சுவணத்தினுடையுடுத்தாளரவெல்லாம்
அஞ்சுவணத்தின்வேகமிகுத்தாளருளில்லாள்
அஞ்சுவணத்தினுத்தரியத்தாளலையாரும்
அஞ்சுவணத்தின்முத்தொளிராரத்தணிகொண்டாள் (எகூ)

சிந்தாரத்தின்செச்சையணிந்தாள்தெளிநூல்யாழ்
அந்தாரத்தினேர்வருசொல்லாளறைதும்பி
கந்தாரத்தினின்னிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தின்மாலையலம்புமகுடத்தாள் (அ0)

எல்லாமுட்குமாழியிலங்கையிகன்மூதூர்
நல்லாளவ்வூர்வைகுறையொக்குநயனத்தாள்
நில்லாய்நில்லாயென்றுரைநேர்வாணினையாமுன்
வல்லேசென்றுண்மாருதிகண்டாய்வருகென்றான் (அக)

ஆகாசெய்தாயஞ்சனைபோலுமறிவில்லாய்
சாகாமூலந்தின்றுழல்வார்பாற்சலமென்னும்
பாகாரிஞ்சிப்பொன்மதிறுவிப்பதையாதே
போகாயென்றாள்பொங்கனலென்னப்புகைகண்ணாள் ௮௨

களியாவுள்ளத்தண்ணன்மனத்திற்கசமூழ்க
விளியாநின்றேநீதிநலத்தின்வினையோர்வான்
அளியாலிவ்வூர்காணுநலத்தினணைகின்றேன்
எளியேனுற்றால்யாவதுனக்கிங்கிழவென்றான் (௮௩)

என்றான்முன்னமேகெனவேசாதெதிர்மாற்றம்
சொன்னாயேநீயாவனடா;தொல்புரமட்டான்
அன்றோனுமஞ்சுவவொய்தற்களியுற்றால்
உன்றாலெய்துமூர்கொலிவ்வூரொன்றுறநக்காள் (௮௪)

நக்காளைக்கண்டையன்மனத்தோர்நகைகொண்டான்
நக்காய்நீயார்யார்சொலவந்தாயுனதாவி
உக்காலேதாறோடலையென்றாளினியிவ்வூர்
புக்காலன்றிப்போகிலெனென்றான்புகழ்கொண்டான் (௮௫)

வஞ்சங்கொண்டான்வானரமல்லன்வருகாலன்
துஞ்சுங்கண்டாலென்னையிவன்சூழ்திரையாழி
நஞ்சங்கொண்டகண்ணுதலைப்போனகுகின்றான்
நெஞ்சங்கண்டேகல்லெனநின்றேநினைவுற்றாள் (௮௬)

கொல்வாமன்றேற்கோளுறுமிவ்வூ ரெனல்கொண்டாள்
வெல்வாய்நீயேவென்றியெனத்தன்விழிதோறும்
வல்வாய்தோறும்வெங்கனல்பொங்கமதில்வாயில்
செல்வாயென்றுமூவிலைவேலைச்செலவிட்டாள் (௮௭)

தடித்தாமென்னத்தன்னெதிர்செல்லுந்தழல்வேலைக்
கடித்தானுகம்விண்ணின்முரிக்குங்கருளன்போல்
ஒடித்தான்கையாலும்பருவப்பவுயிர்காலம்
பிடித்தானெஞ்சத்துண்ணெனவெண்ணம்பிழையாதாள் ௮௮

இற்றுச்சூலநீறெழுகாலத் தெரியொப்பாள்
மற்றுத்தெய்வப்பல்படைகொண்மலைவாண்மேல்
உற்றுக்கையாலாயுதமெல்லாமொழியாமல்
பற்றிக்கொள்ளாவிண்ணிலெறிந்தான்பழியோர்வான் (௮௯)

வழங்குந்தெய்வப்படையானை மலைவான்மேல்
முழங்கும்மேகமென்னவுரப்பிமுதிர்கின்றாள்
கழங்கும்பந்துங்கன்றுகொடாமங்கரமோச்சித்
அழுங்குஞ்செந்தீச்சித்தவடித்தாடகைவில்லாள் (௧௰)

அடியாமுன்னமங்கைதனைத்து மொருகையால்
பிடியாவெவ்வினைபெண்ணிவள்கொல்விற்பிழையென்று
ஒடியாநெஞ்சத்தோரடிகொண்டானுயிரோடும்
இடியேறுண்டநாகமெனப்பாரிடைவீழ்ந்தாள் (௧௧)

விழுந்தாளோந்தாள்வெங்குருதிச்செம்புனல்வெள்ளத்
தழுந்தாநின்றாளன்னமுனோர்தம்மருளன்றி
எழுந்தாள்யாரும் யாவையுமெல்லாவுலகத்தும்
தொழுந்தாள்வீரன்றானுவன்முன்னின்றிவைசொன்னாள் (௧௨)

வேறு.

ஐயகேள்வையநல்குமயனருளமைதியாக
எய்தியிம்மூதூர்காப்பெனிலங்கைமாதேவியென்பேர்
செய்தொழிலிழுக்கியுள்ளந்திகைத்திந்தச்சிறுமைசெய்தேன்
உய்தியென்றளிதியாயினுணர்த்துவலுண்மையென்றாள். (௧௩)

எத்தனைகாலங்காப்பல் யானிந்தமூதூரொன்று
முத்தனைவினவினேற்குமுரண்வலிக்குரங்கொன்றுன்னைக்
கைத்தலமதனாற்றீண்டக்காய்ந்தவன்றெலனைக்காண்டி
சித்திரநகரம்பின்னைச்சிதைவதுதிண்ணமென்றான் (௧௪)

அன்னதேமுடிந்ததையவறம்வெல்லும்பாவந்தோற்கும்
என்னுமீதியம்பவேண்டுந்தகையதோவினிமற்றுன்னால்
உன்னியவெல்லாமுற்றுமுனக்குமுற்றாததுண்டோ
பொன்னகர்புகுதியென்றுப்புகழ்ந்தவளிறைஞ்சிப்போனாள். (௧௫)

...ட்விரும்பிநோக்கிமெய்ம்மையேவினையுமைந்தென்
ரியன்கமலபாதமகத்துறவணங்கியாண்டப்
பூரியரிலங்கைமூதூர்ப்பொன்மதிலுருவிப்புக்கான்
சீரியபாலின்வேலைசிறுதிரைதெறித்ததன்னான்; (௧௬)

வான்றொடர்மணியிற்செய்தமையறுமாடகோடி
ஆன்றபேரிருளைச்சீத்துப் பகல்செய்தவழகைநோக்கி
ஊன்றியவுதயத்துச்சியொற்றைவானுருளைத்தேரோன்
தோன்றினன்கொல்லோவென்னவறிவனுந்துணுக்கங்கொண்டான்.(

மொய்ம்மணிமாடமூதூர்முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையேயணிறுமிகையெனவிலங்கிற்போறன்
இம்மதிலிலங்கைநாட்டமனைத்துமேற்றன்பாலெய்து
மின்மினியல்லனோவவ்வெயிற்கதிர்வேந்தனென்றான் (௯௮)

பொசிவுறாபசும்பொற்குன்றிற்பொன்மதிளடுவட்பூத்து
வசையறவிளங்குஞ்சோதிமணியினலமைந்தமாடத்
நசைவிலவிலங்கைமூதூராரிருளில்லையாலே
நிசிசரராயிற்றம்மாநெடுநகர்நிருதரெல்லாம் (௯௯)

என்றனனிம்பியீதேயெகுவலிமூக்கமென்னாத்
தன்றனையனையமேனிசுருக்கிமாளிகையின்சாரல்
சென்றனனென்பமன்னோதேவருக்கமுதமீந்த
குன்றெனவயோத்திவேந்தன்புகழெனக்குவவுத்தோளான் (௱)

ஆத்துறுசாலைதோறுமானையின்கூடந்தோறும்
மாத்துறுமாடந்தோறும்வாசியின்பந்திதோறும்
காத்துறுசோலைதோறுங்கருங்கடல்கடந்தகாலாற்
பூத்தொறும்வாவிச்செல்லும்பொறிவரிவண்டிற்போனான் (௱௧)

பெரியநாளொளிகொழுஞ்சுவிதமணிப்பிச்சிட்டுச்சி
சொரியமாசிழல்களாற்சுற்றலாற்காலிற்றோன்றல்
கரியனாய்வெளியனாகிச்செய்யனாய்க்காட்டுங்காண்டற்
கரியனையெளியனைத்தன்னகத்துறையமலனேபோல் (௱௨)

கானகமயிற்களென்னக்களிமடவன்னமென்ன
ஆனகமலப்போதுபொலிதரவரக்கர்மாதர்
தேனுகுசரளச்சோலைதெய்வநீராற்றிற்றெண்ணீர்
வானவர்மகளிராட்டமஞ்சனமாடுவாரை ( )

நீட்டுவார்கவமலான்மற்றீட்டவலியையவுரின்மை
காட்டினர்விழியாரஃதுநாண்கிற்பார்காண்மினம்மா
பூட்டுவார்முலைபொருதபொய்யிடைநையப்பூநீர்
ஆட்டுவாரமரர்மாதராடுவாரரக்கர்மாதர் (௱௪)

இலக்கணமரபிற்கேற்றவெழுவகைநரம்பினல்யாழ்
அலத்தகத்தளிர்க்கைநோவவளந்தெடுத்தவமுதபாடல்
கலக்குறமுழங்கிற்றென்றுசேடியர்கன்னிமார்கள்
மலர்க்கையான்மாடத்தும்பர்மழையின்வாய்பொத்துவாரை (௱௫)

சந்தப்பூம்பந்தர்வேய்ந்ததமனியவரங்கிற்றத்தம்
சிந்தித்த துதவுந்தெய்வமணிவிளக்கொளிருஞ்சேக்கை
வந்தொத்துந்துரிதமாக்கள்விளம்பித்தந்நெறிவழாமை
கந்தர்ப்பமகளிராடிநாடகங்காண்கின்றாரை (௱௬)

திருத்தியபளிக்குவேதிதெள்ளியவேல்களென்னக்
கருத்தியல்புரைக்குமுண்கட்கருங்கயல்செம்மைகாட்ட
வருத்தியகொழுநர்தம்பால்வரம்பின்றிவளர்ந்தகாம
வருத்தியபயிர்க்குநீர்போலருநறவருந்துவாரை (௱௭)

கோதறுங்குவளைநாட்டங்கொழுநர்கணாட்டங்கொள்ளத்
தூதுளங்கனியைவென்றதுவர்த்தவாய்வெண்மைதோன்ற
மாதருமைந்தர்தாமுமொருவர்மேலொருவர்வைத்த
காதலங்கள்ளுண்டார்போன்முறைமுறைகளிக்கின்றாரை (௱௮)

விற்படர்பவளப்பாதத்தலத்தகமெழுதிமேனி
பொற்பளவில்லாவாசப்புனைநறுங்கலவைபூசி
அற்புதவடிக்கண்வாளிலஞ்சனமெழுதியந்தில்
கற்பகங்கொடுக்கவாங்கிக்கலன்றெரிந்தணிகின்றாரை (௱௯)

புலியமெதுகைமைந்தர்புதுப்பிழையுயிர்ப்புக்கு
நலிவிடவமுதவாயானச்சுயிர்த்தயிற்கணல்லார்
மெலிவுடைமருங்குன்மின்னினலமரச்சிலம்புவிம்மி
ஒலிபடவுதைக்குந்தோறுமயிர்புளகுதிக்கின்றாரை (௱௰)

உள்ளூடைமயக்காலுண்கண்சிவந்துவாய்வெண்மையூறித்
துள்ளிடைப்புருவங்கோட்டித்துடிப்பவேர்பொடிப்பத்துய
வெ ளிடைமருங்குலார்தம்மதிமுகம்வேறொன்றாகிக்
டைத்தோன்றநோக்கிக்கணவனைக்கவல்கின்றாரை (௱௰௧)

ன்மலையின்சாரன்முலைமுழையினிலமுதவாரிச்
பிற்றுவசரில்விற்சானகர்மனையிற்றூய
ந்கொளவொணுதவேற்கணார்குமுதச்செவ்வாய்
ற்றூறுதீந்தேன்மாந்தினர்மயங்குவாரை (௱௰௨)

றுகணவர்தம்மைநவையுறப்பிரிந்துநல்கு
முலையுறுகலவைதீயமுள்ளிலாமுளரிச்செங்கேழ்
மலர்மிசைமலர்பூத்தென்னமலர்க்கையாம்வதனந்தாங்கி
உலவருமுபிரிவேறொநெடிதிருந்துயிர்க்கின்றாரை (௱௰௩)

ஏதியங்கொழுநர்தம்பாலெய்தியசலத்தர்வைகும்
தாதியங்குமளிச்சேக்கையுயிரிலாவுடலிற்சார்வார்
மாதுயர்க்காதறூண்டவழிபின்மேல்வைத்தகண்ணார்
தாதியர்முறுவனோக்கியுயிர்வந்துதுடிக்கின்றாரை (௱௰௪)

சங்கொடுசிலம்புதூதும்பாதசாலகமுந்தாழப்
பொங்குபன்முரசமார்ப்பவில்லுறைதெய்வம்பேணிக்
கொங்கலர்கூந்தற்செவ்வாயரம்பையர்பாணிகொட்டி
மங்கலகீதம்பாடமலர்ப்பலிவகுக்கின்றாரை (௱௰௫)

இழைதொடர்வில்லும்வாளுமீநொடுமலையயாணர்க்
குழைதொடர்நயனக்கூர்வேல்குமரர்நெஞ்சுருவக்கோட்டி
முழைதொடர்சங்கம்பேரிமுகிலெனமுழங்கமூரி
மழைதொடர்மஞ்ஞையென்னவிழாவொடுவருகின்றாரை (௱௰௬)

பள்ளிபின்னைமந்தமோடுமூழ்உயபண்புநீங்கி
ஒள்ளியநலவிப்பூசலுடற்றுதற்கருத்தநெஞ்சர்
மெள்ளவேயிமைமைநீக்கியஞ்சனவிழுதுமேய்ந்த
கள்ளவாணெடுங்கணொண்ணும்வாளுறைகழிக்கின்றாரை (௱௰௭)

ஒலிபணிபமாதருடனருணர்வோடுள்ளம்
மேவியபரணமற்றுங்கொழுநரோடொழியயாணர்த்
தூவியம்பேடையென்னமின்னெனத்துவளவேகி
ஆவிபுந்தாமுமேசென்றருங்கதவடைக்கின்றாரை (௱௰௮)

இன்னரமிதுனம்பாடவெண்மழைகிழித்துத்தோன்று
மின்னெனத்தரளம்வேய்ந்தவெண்ணிறவிமானமூர்ந்து
பன்னகமகளிர்சுற்றிப்பலாண்டிசைபரவப்பண்ணைப்
பொன்னகர்வீதிதோறும்புதுமணைபுகுகின்றாரை (௱௰௯)

கோவையுங்குழையுமின்னக்கொண்டலின்முரசமார்ப்பத்
தேவர்வந்தாசிகூறமுனிவர்சோபனங்கள்செப்பப்
பாவையர்குழாங்கள்சூழப்பாட்டொடுவானநாட்டுப்
பூவையர்பலாண்டுகூறப்புதுமணம்புணர்கின்றாரை (௱௨௰)

இயக்கியரரக்கிமார்கணாகியரெஞ்சில்விஞ்சை
முயற்கறைமலராத்திங்கண்முகத்தியர்முதலினோரை
மயக்கறநாடிமேயகுமாரருமலையின்வைகும்
உயக்கமிற்றுயிர்க்கிரங்கும்கருணைக்கண்ணிற்கண்டான். (௱௨௰௧)

## வேறு.

ஓசனையேழகன்றுயர்ந்தவும்பரின்
வாசவன்மணிமுடிகவித்தமண்டபம்
ஏசறவிளங்கியதிருவினெண்வகை
ஆசையினிலைபெடவலிக்கலான்றது. (௱௨௨)

அன்னதனடுவணோரமளிமீமிசைப்
பன்னகவரசெனப்பரவைதானெனத்
துன்னிருளொருவழித்தொக்கதாமென
உன்னருந்தீவினையுருக்கொண்டென்னவே. (௱௨௩)

முன்னிபாசனைகடன்முழுகிமூவகைத்
தன்னியல்பதுபொதிந்தூவித்தாதுகு
மன்னெனும்பங்கயப்பவனத்துள்வைகிய
இன்னிளந்தென்றல்வந்திழுகியேகவே. (௱௨௪)

வானவர்மகளிர்கால்வருடமாமதி
ஆனனங்கண்டமண்டபத்துளாய்க்கதிர்க்
கானகுநாந்தமீகான்றகாமர்நீர்
தூநிறநறுந்தளிமுகத்திற்றூற்றவே. (௱௨௫)

மூசியவுயிர்ப்பெனுமுமந்துவாதமும்
வாசலின்புறத்திடைநிறுவிவன்மையான்
நாசிபினளவையினடத்தக்கண்டவன்
கூசினன்குதித்தனன்விதிர்த்தகையினான். (௱௨௬)

பூழிபின்முறைகவிசும்பணவப்போய்ப்புகும்
கேழிலம்வங்கிளர்கிடையுயிர்ப்புக்கேடிலா
வாழிபவுலகெலாந்துடைக்குமாருதம்
ஊழியின்வரவுபார்த்துழல்வதொத்ததே (௱௨௭)

பகையெனமதியினைப்பகுத்துப்பாடுற
வகையில்பேழ்வாய்மடுத்தருந்துவானெனப்
புகையொடுமுழங்குபேருயிர்ப்புப்பொங்கிய
நகையிலாமுழுமுகத்தெயிறுநர்றவே. (௱௨௮)

தடைபுகுமந்திரந்தகைந்தநாகம்போல்
இடைபுகலரியதோருறக்கமெய்தினான்
கடையுகமுடிவெனுங்காலம்பார்த்தயல்
புடைபெயராநெடிதுறங்கும்போலவே (௱௨௯)

## வேறு.

ஆவதாகியதன்மையவரக்கனையரக்கர்
கோவெனாநின்றகுணமிலிபிறனெனக்கொண்டான்
காவலாட்டங்கள்பொறிபுகக்கணமெனக்கனன்றான்
ஏவதோவிவன்மூவரினொருவனோமீட்டான் (௱௫௰)

குறுகிநோக்கிமற்றவன்றலையொருபதுங்குறித்த
இறுகுதிண்புயமிருபதுங்கிவனிலனென்று
மறுகிபெறியமுனிவெனும்வடவைவெங்கனலை
அறிவெனும்பெரும்பரவையம்புனலினாலவித்தான் (௱௫௧)

அவித்துநின்றவனயினுமாகவென்றங்கை
கவித்துநீங்கிடச்சிலபதமெலன்பதுகருதாச்
செவிக்குத்தேனெனவிராகவன்புகழினைத்திருத்தும்
கவிக்குநாயகனனையவனுறைபுலங்கடந்தான் (௱௫௨)

மாடகூடங்கண்மாளிகையோளிகைமதளிர்
ஆடரங்குகளம்பலந்தேவராலயங்கள்
பாடல்வேதிகைபட்டிமண்டபமுதற்பலவும்
நாடிநேயகினனிராகவன்புகழெனுநலத்தான் (௱௫௩)

மணிகொள்வாயிலுட்சாளரத்தாள்களின்மலரில்
கணிகொணாத்திறற்காலினும்புகையினுங்கலக்கும்
நுணுகும்வீங்குமற்றவனிலையாவரோநுவல்வார்
அணுவின்மேருவினாழிபோனெனச்செலுமனுமன் (௱௫௪)

ஏந்தலிவ்வகையெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரன்மடந்தையர் யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர்மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியன்கண்ணகன்கோயிலுட்புக்கான்

பளிக்குவேதிகைப்பவளத்தின்கூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப்பந்தரிற்கருநிறத்தோரை
வெளிக்கவைகுவதருமையென்றவருருமேவி
ஒளித்துவாழ்கின்றதருமமன்னான்றனையுற்றான் (௱௫௬)

உற்றுநின்றவனுணர்வைத்தன்னுணர்வினாலுணர்ந்தான்
குற்றமில்லதோர்குணமுளனிவனெனக்கொண்டான்
செற்றநீங்கியமனத்தினனொருசிறைசென்றான்
பொற்றைமாடங்கள்கோடியோர்நொடியிடைப்புக்கான் ( )

முந்தரம்பையர்முசலினர்முழுமதிமுகத்துச்
சிந்துரப்பயில்வாய்ச்சியர்யாரையுந்தெரிந்து
மந்திரம்பலகடந்தவன்மணத்திடைமுன்செல்வான்
இந்திரன்சிறையிருந்தவாயிலின்கடையெதிர்ந்தான் (௱௩௮)

ஏதியேந்தியதடக்கையர்பிறையெயிறிலங்க
மூதுணாப்பெருங்கதைகளும்பிறர்களுமொழிவார்
ஓதிலாயிரமாயிரமுணர்விலியரக்கர்
காதுவெஞ்சினக்களியினர்காவலைக்கடந்தான் (௱௩௯)

முக்கணோக்கினன்முதன்மகனறுவகைமுகனும்
திக்குநோக்கியபுயங்களுஞ்சிலகரத்தனையான்
ஒக்கநோக்கியர்குழாத்திடையுறங்குகின்றானைப்
புக்குநோக்கினன்புகைபுகாவாயிலுட்புகுவான் (௱௪௰)

வளையும்வாளெயிற்றரக்கனோகணிச்சியான்மகனோ
அளையில்வாளரியனையவன்யாவனோவறியேன்
இளையவீரனுமேந்தலுமிருவரும்பலநாள்
உளையவுள்ளபோரிவனொடுமுளதெனவுணர்ந்தான் (௱௪௧)

இவனையின்றனையுடையபோரிராவணனென்னே
புவனமூன்றையும்வென்றதோர்பொருளெனப்புகறல்
சிவனைநான்முகத்தொருவனைத்திருநெடுமாலாம்
அவனையல்லவர்நிகர்ப்பவரொன்றுதுமறிவோ (௱௪௨)

என்றுமைம்மறித்திடைநின்றுகாலத்தையிகப்ப
தன்றுபோவதென்றாயிரமாயிரத்தடங்காத்
துன்றுமாளிகைபோலிகபிசறத்துருவிச்
சென்றுதேடினனிந்திரசித்தினைத்தீர்ந்தான் (௱௪௩)

அக்கன்மாளிகைகடந்துபோய்மேலதிகாயன்
றொக்ககோயிலும்பொருநர்களில்லமுந்துருவித்
தக்கமந்திரத்தலைவர்கண்டனைகளுந்தாவிப்
புக்குநீங்கினனிராகவன்கழலெனப்புகழோன் (௱௪௪)

இன்னராமிரும்பெரும்படைத்தலைவர்களிருக்கைப்
பொன்னின்மாளிகையாயிரகோடியும்புக்கான்
கன்னிமாநகர்ப்புறத்தகன்கரந்துறைகாண்பான்
சொன்னமூன்றினுநடுவணத்தகழிடைத்தொடர்ந்தான் (௱௪௫)

தனிக்கடக்களிற்றனையொருதுணையிலான்றங்கு
பனிக்கடற்பெருங்கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதன்றேழ்கடல்கிடந்ததென்றிசைத்தால்
கனிக்கடற்கதிர்தொடர்ந்தவனகழியைக்கண்டான் (௱௪௬)

பாழிநன்னெடுங்கிடங்கெனப்பாரவரோற்பல்லோர்
ஊழிகாலநின்றுலகெலாங்கலவினுமுலவா
ஆழிவெஞ்சினத்தரக்கனையஞ்சியாழ்கடல்கள்
ஏழுமிந்நகர்சுலாயதுகொலாமெனவிசைத்தான் (௱௪௭)

ஆயதாகியவகன்புனலகழியையடைந்தான்
தாயவேலையினிருமடிவிசைகொடுதாவிப்
போயகாலத்தும்போக்கரிதென்பதுபுகன்றான்
நாயகன்புகழ்நடந்தபேருலகெலாநடந்தான் (௱௪௮)

வேறு

மேக்குநால்வகைமேகமுங்கீழ்விழத்
தூக்கினலன்னதோயத்ததாய்த்துயர்
ஆக்கினன்படையன்னவகழியை
வாக்கினாலுரைக்கலுமாகுமோ (௱௪௯)

ஆனைமும்மதமும்பரியாழியும்
வானமங்கையர்குங்குமவாரியும்
நானமாதர்நறைக்குழலாவியும்
தேனுமாரமுந்தேய்வையுநாறுமால் (௱௫௰)

உன்னுநாமமகன்றில்புதாவுளில்
அன்னங்கோழிபண்டானங்களாழிப்புள்
கின்னரங்குரண்டங்கிலுக்கஞ்சிரல்
சென்னங்காகங்குணாலஞ்சிலம்புமே (௱௫௧)

நலத்தமாதர்நறையகிலாவியும்
அலத்தகக்குழம்புஞ்செறிந்தாடிய
விலக்கணக்கரியோடிளமென்னடைக்
குலப்பிடிக்குமொருடல்கொடுக்குமால் (௱௫௨)

நறவுநாறியநாண்மறுந்தாமரை
துறைகடோறுமுகிழ்த்தனதோன்றுமால்
சிறையினெய்தியசெல்விமுகத்தினே
றுறவுதாமுடையாரொடுங்கார்களோர் (௱௫௩)

பளிங்குசெற்றிக்குயிற்றியபாயொளி
விளிம்பும்வெள்ளமுமெய்தெரியாதுமேல்
தெளிந்தசிந்தையருஞ்சிறியார்களோ
டளிந்தபோதறிதற்கெளிதாவரோ (௩௫௪)

நீலமேமுதனன்மணிநித்திலம்
மேலகீழபல்வெருளிவீசலால்
பாலின்வேலைமுதற்பலவேலையும்
கால்யலந்தனவோவெனக்காட்டுமே (௩௫௫)

அன்னவேலையகழியையார்கவி
என்னவேகடந்திஞ்சியும்பிற்படத்
துன்னருங்கடிமாநகர்துன்னினான்
பின்னரெய்தியதன்மையும்பேசுவாம், (௩௫௬)

கரியநாழிகைபாதியிற்காலனும்
வெருவியோடுமரக்கர்தம்வெம்பதி
ஒருவனேயொருபன்னிருயோசனைத்
தெருவுமும்மைநூறாயிரந்தேடினான். (௩௫௭)

வேறு.

வேரியுமடங்கினநெடுங்கடல்விளம்பும்
பாரியுமடங்கினதடங்கியதுபாடல்
காரியமடங்கினர்கள்கம்மியர்கண்மும்மைத்
தூரியமடங்கினதொடங்கியதுறக்கம். (௩௫௮)

இறங்கினதிறங்கொள்பரியேமமுறவெங்கும்
கறங்கினமறங்கொளெயில்காவலர்துடிக்கண்
பிறங்கினர்நறுங்குழலிரண்பர்பிரியாதோர்
உறங்கினர்பிணங்கியெதிரூடினவரல்லார். (௩௫௯)

வடந்தருகடங்கொள்புயமைந்தர்கலவிப்போர்
கடந்தனரிடைந்தனர்களித்தமயில்போலும்
மடந்தையர்கடந்தனமுகட்டிடைமயங்கிக்
கிடந்தனர்நடந்ததுபுணர்ச்சிதருகேதம். (௩௬0)

வாமநறையின்றுறைமயங்கினர்மறந்தார்
காமநறையின்றிறநுகர்ந்தனர்களித்தார்
பூமணறைவண்டறையலங்கமளிபுக்கார்
தூமநறையின்றுறைபயின்றிலர்துயின்றார். (௩௬௧)

பண்ணிமையடைத்தபலகைப்பொருநர்பாடல்
விண்ணிமையடைத்தனவிளைந்ததிருள்வீணை
தண்ணிமையடைத்தனதழங்கிசைவழங்கும்
கண்ணிமையடைத்தனவடைத்தனகபாடம். (௱௯௨)

விரிந்தனநரந்தமுதல்வெண்மலர்விளாகத்
துரிஞ்சவருதென்றலுயிரின்புடையுலாவச்
சொரிந்தனகருங்கண்வருதுள்ளிதருவெள்ளம்
எரிந்தனபிரிந்தவர்தமெஞ்சுதல்னெஞ்சம். (௱௯௩)

இளக்கரிழுநெஞ்சவிழுமென்னணருவிளக்கைத்
துளக்கியதுதென்றல்பகைசோரவுயர்வோரின்
அளக்கரொடளகரியவாலசயுறவீசா
விளக்கினம்விளக்குமணிமெய்யுறுவிளக்கம். (௱௯௪)

நித்தநியமத்தொழிலராய்நிறையுஞானத்
துத்தமருறங்கினர்கள்யோகியர்துயிலேனார்
மத்தமதவெங்களிறுறங்கினமயங்கும்
பித்தருமுறங்கினரினிப்பிறரிதென்னும். (௱௯௫)

ஆயபொழுதம்மதிலகத்தரசர்வைகும்
தூயதெருவொன்றொடொருகோடிதுருவிட்போய்த்
தீயவனிருக்கையயல்செட்தவகழிஞ்சி
மேயதுகடந்தனன்வினைப்பகையைவென்றான். (௱௯௬)

வேறு.

போரியற்கைப்பிராவணன்பொலம்பணை
சீரியற்கைநிரம்பியதிங்களாத்
தாரகைக்குழுவிற்றழுவித்தொடர்
நாரியர்க்குறைவாயிடநண்ணினான். (௱௯௭)

முயற்கருங்கறைநீங்கியமொய்ம்மதி
அயர்க்கும்வாண்முகத்தாரமுதன்னவர்
இயக்கர்மங்கையர்பாவருமீண்டினார்
நயக்குமாளிகைவீதியைநண்ணினான். (௱௯௮)

தழைந்தமொய்யொளிபெய்மணித்தாழ்தொறும்
இழைந்தநாலினுமின்னிளங்காலினும்
நுழைந்துநொய்தினின்மெய்யறநோக்கினான்
விழைந்தவெவ்வினைவேரறவீசினான். (௱௯௯)

அத்திரம்புனையானையரக்கன்மேல்
வைத்தசிந்தையர்வாங்குமுயிர்ப்பினர்
பத்திரம்புரைநாட்டம்பதைப்பறச்
சித்திரங்களெனவிருந்தார்சிலர். (௱௭௰)

வள்ளல்வெஞ்சரமாரனையஞ்சியோ
மெள்ளவேகனவின்பயன்வேண்டியோ
கள்ளமென்கொலறிந்திலங்கண்முகிழ்த்
துள்ளமின்றியுறங்குகின்றார்சிலர். (௱௭௧)

பழுதின்மன்மதன்வெங்கணைபன்முறை
உழுதகொங்கையருசலுயிர்ப்பினர்
அழுதுசெய்வதென்னையரக்கனை
எழுதலாங்கொலென்றெண்ணுகின்றார்சிலர். (௱௭௨)

ஆவதொன்றருளாயெனதாவியைக்
கூவுகின்றிலைகூற்றலைசென்றெனாப்
பாவைபேசவும்பாற்கண்பனிப்புறப்
பூவையோடும்புலம்புகின்றார்சிலர். (௱௭௩)

ஈரத்தென்றலிழுகமெலிந்துதம்
பாரக்கொங்கையைப்பார்த்தனர்பாதகன்
வீரத்தோள்களின்வீக்கநினைந்துயிர்
சோரச்சோரத்துளங்குகின்றார்சிலர். (௱௭௪)

நக்கசெம்மணிநாறியநாணிழல்
பக்கம்வீசுறுபள்ளியிற்பல்பகல்
ஒக்கவாசையுலக்கவுலந்தவர்
செக்கர்வான்றருதிங்களொத்தார்சிலர்.

வாளினூற்றெளிகற்பகவல்லியர்
தோளினூற்றியதுங்கமளித்துயில்
நாளினூற்செவியிற்புகநாமபாழ்த்
தேளினூற்றிகைப்பெய்துகின்றார்சிலர். (௱௭௬)

கவ்வுதிக்கணைமேருவைக்காலலைத்
தெவ்விறைன்மலைமேயந்திரியவேந்துதோள்
வவ்வுசாந்துதம்மாமுலைவெளவிய
செவ்விகண்டுகுலாவுகின்றார்சிலர் (௱௭௭)

கூடிநான்குயர்வேலையுங்கோக்கநின்
றாடினான்புகழங்கைநரம்பினால்
நாடிநாற்பெரும்பண்ணுநயப்புறப்
பாடினான்பெயர்பாடுகின்றார்சிலர் (௱௭௮)

இனையதன்மையியக்கியரெய்திய
மனையொராயிரமாயிரகோடியாம்
அனையவன்குலத்தாயினழபாரிடம்
நினைவினெய்தினனீறியினெய்தினான் (௱௭௯)

வேறு

எரிசுடர்மணியின்செங்கேழிளவெயிலிடைவிடாது
விரியிருள்பருகிநாளும்விளக்கின்றிவிளங்குமாடத்
தரிவையர்தழுவுநீங்கவாசையுந்தாமுமேயாய்
ஒருசிறையிருந்தும்போனவுள்ளத்தோடுவாரும் (௱௮௰)

நகையெரிக்கற்றைநெற்றிநாவிதோய்ந்தனையவோரி
புகையெனத்தும்பிசுற்றப்புதுமலர்பொங்குசேக்கை
பகையெனம்வகியான்றபளிங்குடைச்சிதப்பள்ளி
மிகையொடுங்காதகாமவிம்மலின்வெதும்புவாரும் (௱௮௧)

சவிபடுதகைசால்வானந்தாரொருமேனியாகக்
குவியுமீனாரமாகமின்கொடிமருங்குலாகக்
கவிரொளிச்செக்கர்க்கற்றையோதியாமனை
அவிரமதிநெற்றியாகவந்திவானெக்கின்றாரும் (௱௮௨)

பானலுங்கண்ணும்வண்ணப்படிமுறைமாறப்பண்ணைச்
சோனைபோன்றளிகள்பம்புஞ்சுரிகுழற்கற்றைசோர
மேனிமிர்ந்தெழுந்தமாடவெண்ணிலாமுன்றினண்ணி
வானமீன்கையின்வாரிமணிக்கழங்காடுவாரும் (௱௮௩)

உழையுழைபரந்தவானயாற்றுநின்றும்பர்நாட்டுக்
குழைமுகத்தாயநந்தபுனல்குளிர்ப்பிலவென்றாடி
இழைதொடுத்திலங்குமாடமிடைதடுமாறவேறி
மழையொதுத்தொழுகுநீரான்மஞ்சனமாடுவாரும் (௱௮௪)

பன்னகவரசர்செங்கேழ்ப்பணமணிவலிதிற்பற்றி
இன்னுயிர்க்கணவனீந்தானெனமனவிருந்திவிஞ்சை
மன்னவர்முடியும்பூணுமாரமும்பணியமாகப்
பொன்னணிபலகைக்குத்துயில்கிலர்பொருகின்றாரும் (௱௮௫)

தென்னகுகுடமுட்பாடல்சித்தியரிசைப்பத்தீச் சொற்
பன்னகமகளிர்வள்வார்த்தண்ணுமைபாணிபேணப்
பொன்னகர்த்தரளப்பந்தர்கற்கைப்பொதும்பர்பொற்றேள்
இன்னகையரம்பைமாரையாடல்கண்டிருக்கின்றாரும் (௱அரு)

ஆணியிற்கிடந்தகாதலகஞ்சுடவருவியுண்கண்
சேணுயருறக்கந்தீர்ந்தசிந்தையர்செய்வதோரார்
வீணையுங்குழலுந்தத்தமிடறும்வேற்றுமையுந்தீர்ந்த
பாணிகளளந்தபாடலமிழ்துகப்பாடுவாரும் (௱அ௬)

தண்டலைவாழையன்னகுறங்கிடையல்குற்றட்டில்
கொண்டபூந்துகிலுங்கோவைகலைகளுந்சோரக்கூர்ங்கள்
உண்டலமந்தகண்ணேடுசேவிட்டுலாவுகின்ற
குண்டலந்திருவில்வீசக்குரவையிற்குழற்றுவாரும் (௱அஎ)

நச்செனக்கொடியநாகக்கள்ளொடுகுருதிநக்கிப்
பிச்சரிற்பிதற்றியல்குற்பூந்துகில்கலையப்பீறிக்
குச்சரித்திறத்திறேனைசைகளங்கொளக்கெழுக்கொண்டிண்டிச்
சச்சரிப்பாணிகொட்டிநிறைதடுமாறுவாரும் (௱அஅ)

தயிர்திறச்துறுரனர்ளந்தள்ளுறவறிவுசள்ளிப்
பயிர்வுறத்தெய்வமென்மேற்படிர்ததுபார்மினென்று
உயிர்நயிர்த்திரண்டுகையுமுசசிமேலுயரநீட்டி
மயிர்சிலிர்த்துடலுங்கூசிவாய்விரித்தொடுங்குவாரும் (௱அகூ)

இத்திறத்தரக்கிமார்களீரிருகோடியீட்டப்
பத்தியருறையுந்தெய்வப்படர்நெடுந்தெருவும்பார்த்தான்
சித்தியருறையுமாடத்தெருவும்பின்னுறக்சென்றான்
உத்திசைவிஞ்சைமாதருறையுளைமுறையினுற்றான் (௱கூ௦)

வேறு

வளர்ந்தகாதலர்மகரிகைநெடுமுடியரக்கனைவரக்காணர்
தளர்ந்தசிந்தைதம்மிடையினுநடுங்கிடவுயிரொடுசெடுமாறிக்
களந்தவாநெடுங்கருவியிற்கைகளிற்செயிரியர்கலைகட்கண்ணல்
அளந்தபாடல்வெவ்வரவுதஞ்செவிபுகவலமரலுறுகின்றார் (௱கூக)

புரியுநன்னெறிமுனிவருட்புலவரும்புகவிலாப்பொறைகூர
எரியும்வெஞ்சினத்திகலிற்கொடுந்திறலிராவணற்கென்றான்றும்
பரியுநெஞ்சினரிவரொனவயிர்த்ததோர்பகைகொடுபனிதிங்கள் [றார்
செரியும்வெங்கதிர்தூணைமுலைக்குழைசடுங்கொடுகளிற்றடிக்கின்

சிறுகுகாலங்களுழிகளாம்வகைதிரிந்துசிந்தனைசிந்த
முறுதகாக்கலின்மேவதனையுழப்பவர்முயங்கினர்முலைமுன்றில்
இறுதசாந்தமுமெழுதநற்குறிகளுமின்னுயிர்ப்பொறையீர
மறுகுவாட்கண்கள்சிவப்புறநோக்கினர்வயிர்த்தனருயிர்க்கின்றார் ()

ஆயவிஞ்சையர்மடந்தையருறைவிடமாயிரண்டமைகோடி
தூயமாளிகைநெடுந்தெருத்துருவிப்போய்த்தொலைவில்மூன்றுலகி
நாயகன்பெருங்கோயிலைநண்ணுவான்கண்டனனளிர்திங்கள் [ற்கும்
மாயநற்றியவாண்முகத்தொருதனிமயன்மகளுறைமாடம் (௱௧௫)

கண்டெண்ணெருத்தொடோவினன்காரணங்கடைநின்ற
துண்டுமேவருசிறப்பெங்களையகர்க்குயிரினுமுரியாளைக்
கொண்டுபோந்தவன்வைத்ததோருறையுள்கொலகுலமணிடனைக்கெ
ல்லாம் விண்டுவின்றடமார்பினின்மணியொத்ததுவெனவியப்புற்
[றான். (௱௧௬)

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசியாதியர்மலர்க்காமன்
சரம்பெய்தூணிம்பாறளிரடிசார்ந்தொடச்சாமரைபணிமாறக்
கரும்பைபுஞ்சுவைகப்பித்தசொல்லியர்காமரங்கனியாழின்
நரம்பினின்னிசைசெவிபகநாசியிற்கற்பகவிரைநாற (௱௧௭)

விழைவுநீங்கியமேன்மைபோராயினுங்கீழ்மையோர்வெருள்வுற்றால்
பிழைகொனன்மையொல்பெறுவதெல்லையுள பீழையாற்பெருந்
தென்றல்-உழைபர்கூவப்புக்கேதெனப்பெயர்வதோருசலினுளதாகு
பழையம்யாமெனப்பணிபலசெய்வரோபரிணிதர்பயனோவார் [ப்()

இன்னதன்மையினெரிமணிவிளக்கங்களெழில்கெடப்பொலிகின்ற
தன்னதின்னொளிதழைப்புறத்துயில்வுறுதையலைத்தகைவிலலான்
அன்னளாகியசானகியிவளெனவயிர்த்தகத்தெழுவெந்தீ
துன்னுமாருயிருடலொடுசுடுவதோர்துயருழந்திவைசொன்னான் ()

எற்புவான்றொடர்யாக்கையாற்பெறும்பயனிகந்தனெனிதுநிற்க
அற்புவான்றனையிற்பிறப்பதனொடுமிகழ்ந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற்காகுத்தன்புகழோடும் [ன்
பொற்புமியானுமிவ்விலங்கையுமரக்கரும்பொன்றுதுமின்றென்று

மானுயர்த்திருவடிவினளவளிவண்மாறுகொண்டனள்கூறின்
தானியக்கியோகானவர்தையலேயாவுறுந்தகையாளுள்
கானுயர்த்ததாரிராமன்மேனுச்சியகாதல்காரிகையார்க்கு
மீனுயர்த்தவன்மருங்குதான்மீளுமோநினைந்ததுமிகையென்றான்.

இலக்கணங்களுஞ்சிலவுளவென்னினுமெல்லைசென்றுறலில்லா
அலக்கணெய்துவதணியதுண்டென்றெடுத்தறைகுவதிவள்யாக்கை
மலர்க்கருங்குழல்சோர்ந்துவாய்வெரீஇச்சிலமாற்றங்கள்பறைகின்றா
உலக்குமிங்கிவள்கணவனுமழிவுமிவ்வியனகர்க்குளதென்றான். [ள்

என்றுணர்ந்துநின்றெண்ணுறுமிந்நிலைநிற்கவித்திறனென்னாப்
பின்றுசிந்தையன்பெயர்ந்தனனெடுமலைபிற்படப்பெரும்மருக்
குன்றுகுன்றியசகையுறவோங்கியகொற்றமாளிகைதன்னில்
சென்றுபுக்கனனிராவணற்கெடுப்பருங்கிரியெனத்திரடோளான் ()

நிலந்துடித்தனநெடுவரைபொடித்தனநிருதர்சங்குலமாதர்
பொலந்துடிக்கமைமருங்குல்போற்கண்களும்புருவமும்பொற்றோ
அலர்ந்துடித்தனமாதிரந்துடித்தனதடித்தின்றிமதிவானம் [ளும்
கலந்திடித்தனவெடித்தனபூரணமங்கலகலசங்கள். (௨௱௪)

புக்குநின்றுதன்புலன்கொடுநோக்கினன்பொருவருந்திருவுள்ளம்
நெக்குநின்றனனீங்குமந்தோவிந்தநெடுநகர்த்திருவென்னா
எக்குலங்களின்யாவரேயாயினுமிருவினையெல்லோர்க்கும்
ஓகுமூழ்முறையல்லதுவலியதொன்றில்லெனவுணர்வுற்றான் (௨௱௫)

நூற்பெருங்கடனுணங்கியகேள்வியனோக்கினனியனேன்றாள்
வேற்பெருங்கடல்புடைபரந்தீண்டியவெள்ளிடைவியன்கோயில்
பாற்பெருங்கடற்பன்மணிப்பஃறிரைப் பரப்புடைப்படர்வேலை
மாற்பெருங்கடல்வதிந்ததேயனையதோர்வளாட்பினன்றுயில்வானை ()

சூழவிஞாயிறுகுன்றிவர்ந்தனையனகுருமணிநெடுமோலி
இழைகளோடுநின்றிளவெயிலெறித்திடவிரவெனும்பொருள்வீய
முழைகொண்மேருவின்பொருட்டிடைக்கனகனைநெருக்கியமுரடீ
யம்- தழைகொடோளொடுதலைபலபரப்பிமுன்றுயில்வதோர்தகை
[யானை. (௨௱௭)

ஆயபொற்கலத்தாய்வளையரம்பையராயிரரணிநின்று
தூயபொற்கவரித்திரளியக்கிடச்சுழிபடுபசுங்காற்றின்
வீயகற்பகத்தேன்றுளிவிராயனவீழ்தொறுநெடுமேனி
தீயநற்றொடிச்சீதையைநினைதொறுமுயிர்த்துயிர்தேய்வானை (௨௱௮)

குழந்தைவெண்மதிக்குடுமியநெடுவரைகுலுக்கியகுலத்தோளைக்
கழிந்துபுக்கிடைகரந்தனவநங்கன்வெங்கடுங்கணைபலபாய
உழந்தவெஞ்சமத்துயர்திசையானையினொளிமருப்புற்றிற்ற
பழந்தழும்பினுக்கிடையிடையேசிலபசும்புண்களசும்பூற (௨௱௯)

சாந்தளாவியகல்வைமேற்றவழ்வுறுதண்டமிழ்ப்பசுந்தென்றல்
ஏந்துகாமவெங்கனலினுக்குமிழசட்டுருத்தியினுயிர்ப்பேறக்
காந்தள்மென்விரற்சனகிமேன்மனமுதற்கரணங்கள்கடிதோடப்
பாந்தணீங்கியமுழைமெயனக்குழைவுறு நெஞ்சுபாழ் பட்டானை ()

வேறு

கொண்டபேருக்கமுளத்திசைதொறுங்குறித்துமேனாள்
மண்டியசெருவில்வீரத்தோள்களால்வாரிவாரி
உண்டறுதெவிட்டிப்பேழ்வாய்க்கடைகடோறொழுகிப்பாயும்
அண்டர்தம்புகழிற்றோன்றும்வெள்ளெயிற்றமைதியானை (உ௱௧)

வெள்ளிவெண்சேக்கைவெந்துபொறியெழவெதும்பமேனி
புள்ளிவெண்மொக்குளென்னப்பொடித்துவேர்கொதித்துப்பொங்
கள்ளவிழ்மாலைத்தும்பிவண்டொடுங்கரிந்துசாம்ப [கக
ஒள்ளிணர்மாலைதீயவுயிர்க்கின்றவுயிர்ப்பினானை (உ௱உ)

தேவியைமேனியாணிற்சிந்தைமெய்த்திருவினைகட்
பூவியமணிமேலாப்பொய்புறக்கிறங்குவானைக்
காவியங்கண்ணிதன்பாற்கணணியகாதனீரின்
ஆவியையுயிர்ப்பென்றோதுமம்பியிடடைக்கின்றானை (உ௱௩)

மிருந்தகைநினைப்புமுற்றவுருவெளிப்பட்டவேலை
நகுந்தகைமுகத்தன்காதலடிக்குறுமெய்யன்வார்தேன்
உகுந்தகைமொழிபாண்முன்னமொருவகையுறையுளுள்ளே
புகுந்தனளன்றோவென்றுமயிர்புறம்பொடிக்கின்றானை (உ௱௪)

மென்றொழிற்கலாபமஞ்ஞைவேட்டகாதீக்கூருமேனும்
குன்றொழிதகொருமாக்குன்றினரிதிற்சேர்கொள்கைபோல
வன்றொழிற்கொற்றப்பொற்றோணமணந்தருமயிலேயன்னார்
ஒன்றொழித்தொன்றினைகவரியதோரொழுக்கினானை (உ௱௫)

வேறு

தழுவாநின்றகருங்கடன்மீதுதயகிரியிற்சுடர்தயங்க
எழுவானென்னமின்னிமைக்குமாரம்புரளுமியல்பிற்றாய்
முழுவானவராயுலகமொருமூன்றுங்காக்குமுதற்றேவா
மழுவானேமிகுலிசத்தின்வாய்மைதுடைத்தமார்பானை (உ௱௬)

வேறு.

தோடுழுதகண்டார்வண்டுந்திசையானைமதந்துலைந்தவண்டுஞ்சுற்றி
மாடுழுதநறுங்கலவையவயக்களிற்றின்சித்துரத்தைமாறுகொள்ளக்
கோடுழுதமார்பானைக்கொலையுழுதவடிவேலின்கொற்றமஞ்சித்
தாடொழுதபகைவேந்தர்முடியுழுததழும்பிருந்த சரணத்தானை ()

வேறு.

கொண்டதோருருவமாயன்குறளினுங்குறுகநின்றான்
திண்டலைபத்துந்தோள்களிருபதுந்தெரியநோக்கிக்
கண்டனன்காண்டலோடுங்கருத்தின்முன்காலச்செந்தீ
விண்டனகண்கள்மீண்டுவெடித்தனரோமமேனும். (௨௱௰௮)

வேறு.

தோளாற்றலென்னாகுமேனிற்குஞ்சொல்லென்னாம்
வாளாற்றலண்ணானவனுஞ்சித்தான்மணிமுடியென்
தாளாற்றலாலிடித்துத்தலைபத்துந்தகர்த்தென்றன்
ஆளாற்றல்காட்டேனேலடியேனாய்முடியேனே. (௨௱௰௯)

நடித்துவாழ்தகைமையதோவடிமையானன்றுதலைப்
பிடித்தவாளரக்கரூர்யான்கண்டுப்பிழைப்பரோ
ஒடித்துவான்றோளனைத்துந்தலைபத்துமுகைத்துருட்டி
முடித்திவ்வூர்முடித்தான்மேன்முடிவதெலாமுடிந்தொழிக. ()

என்றாக்கியெயிறடித்திருகரனும்பிசைந்தெழுந்து
நின்றாக்கியுணர்ந்துரைப்பானேமியோன்பணியன்றால்
ஒன்றாக்கிப்பொன்றிழைத்த லுணர்வுடைமைக்குரிதன்றால்
பின்றாக்கினிதுசாலப்பிழையாகுமெனப்பெயர்ந்தான். (௨௱௨௧)

ஆலம்பார்த்துண்டவன்போலாற்றலமைந்துளனெனினும்
சீலம்பார்க்குரியோர்களெண்ணாதுசெய்பவோ
மூலம்பார்க்குறினுலகைமுற்றுவிக்குமுறைதெரினும்
காலம்பார்த்திறைவேலைகடவாதகடலொத்தான். (௨௱௨௨)

இற்றைப்போர்ப்பெருஞ்சீற்றமென்னோடுமுடிந்திடுக
கற்றைப்பூங்குழலாளைச்சிறைவைத்தகண்டனை
முற்றப்போர்முடித்ததொருகுரங்கென்றான்முனைவீரன்
கொற்றப்போர்ச்சிலைத்தொழிற்குக்குறைவுண்டாமெனக்குறைந்தான்.

அந்நிலையான்பெயர்ந்துரைப்பானுய்வளைக்கையணியிழையார்
இந்நிலையானுடன்றுயில்வாருளரல்லரிவணிலையும்
புன்னிலையகாமத்தாற்புலர்கின்றநிலைபூவை
நன்னிலையினுளளென்னுநலனெனக்குநல்குமால். (௨௱௨௪)

என்றெண்ணிமீண்டினியோர்பயனில்லையெனநினைந்தாக்
குன்றன்னதோளவன்றன்கோயிலைப்பிற்படப்பெயர்ந்தான்
நின்றெண்ணிப்புன்னுவானந்தோவிந்தெடுத்தகரம்
பொன்றுன்னுமணிப்பூந்தரிலொன்னப்பொருமுவான். (௨௱௨௫)

# ஊர்தேடுபடலம்.

கொன்றாரோதற்பழியாக்குலமகளைக்கொடுந்தொழிலால்
தின்றாரோவப்புறத்தேசெறித்தாரோசிறையறியேன்
ஒன்றானுமுணர்கிலேன்மீண்டினிப்போயென்னுரைக்கேன்
பொன்றாதபொழுதெனக்குநெடுந்துயரம்போகாதால். (௨௱௨௬)

கண்டுவருமென்றிருக்குங்காகுத்தன்கவிகுலத்தோன்
கொண்டுவருமென்றிருக்கும்யானிழைத்தகோளிதுவால்
புண்டரிகநயனத்தான்பாலினம்போவேனோ
விண்டவரோடுடன்வீயாதியான்வாளாவிளிவேனோ. (௨௱௨௭)

எண்ணியநாள்கழிந்துளவாற்கண்டிலெனற்கனங்குழையை
விண்ணடைதுமென்றாலுமாண்டுருத்திவினைந்தயான்
எண்ணியதுமுடிக்ககிலேன்யான்முடியாதிருப்பேனோ
புண்ணியமென்றொருபொருளொன்றுளதுநின்றுபோயதால். ()

ஏழுநூறாசனைசூழ்ந்தெயில்கிடந்ததிவ்விலங்கை
வாழுமாமன்னுயிர்யான்காணாதமற்றில்லை
ஊழியான்பெருந்தேவியொருவரையும்யான்காணேன்
ஆழிதாயிடராழியிடையேவீழ்ந்தழிவேனோ. (௨௱௨௯)

வல்லரக்கன்றனைப்பற்றிவாயாறுகுருதியுகக்
கல்லரக்குங்கரதலத்தாற்காட்டென்றுகாண்கேனோ
எல்லரக்குமபினுமிவ்விராவணனுமிவ்வூரும்
மெல்லரக்கினுருக்கியுகவெந்தழலால்வேட்கேனோ. (௨௱௩௰)

வானவரோமுதலோராவினவுவெனேல்வல்லரக்கன்
தானொருவனுளனாகவுரைசெய்யந்தருக்கிலரால்
யானவர்களெங்குளாப்பாவைதனைத்தெரிகேனோ
ஊனழியநீங்காதவுயிர்சுமந்தவுணர்வில்லேன். (௨௱௩௧)

எருவைக்குமுதலாயசம்பாதியிலங்கையிலத்
திருவைக்கண்டனெனென்றானவனுரையுஞ்சிதைந்ததால்
கருவைக்குநெடுநகராக்கடலிடையேகரையாதென்
உருவைக்கொண்டின்னமுநாளுவெருவியுழல்கேனோ. (௨௱௩௨)

வடித்தாய்பூங்குழலாளைவானவர்பட்டண்ணறியப்
பிடித்தானிவ்வடலரக்கனெனுமாற்றம்பிழையாதால்
எடுத்தாழியிலங்கைதனையிருங்கடலினிட்டிடுவேன்
முடித்தாலையான்முடிக்கன்றுமறைமன்றவென்றுணர்வான். (௨௱௩௩)

எள்ளுறையுமொழிபாமலியாண்டையுருமுளனாய்த்தன்
உள்ளுறையுமழகனைப்போலெம்மருங்குமுலாவினான்
புள்ளுறையும்பானத்தையுநோக்கியபல்போவான்
கள்ளுறையுமலர்ச்சோலையயலொன்றுகண்ணுற்றான். (௨௱௩௪)

ஊர்தேடுபடலம் - முற்றிற்று.

ஆ படலம் - ௨ - ஆ - திருவிருத்தம் - ௩௱௩௰.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ௩ · வது · காட்சிப்படலம்.

வேறு.

மாடுநின்றவம்மணிமலர்ச்சோலையைமருவித்
தேடியவ்வழிகாண்பெனேற்றீருமென்சிறுமை
ஊடுகண்டிலெனெனிற்பின்னருரியதொன்றில்லை
வீடுவென்மற்றிவ்விலங்கையின்மேலிலங்கையைவீட்டி. (௧)

என்றுசோலைபுக்கெய்தினனிராகவன்றூதன்
ஒன்றிவானவர்பூமழைசொரிந்தனருவந்தார்
அன்றவாளரக்கன்சிறையவ்வழிவைத்த
துன்றலோதிதன்னிலையினைச்சொல்லுவான்றுணிந்தாம். (௨)

வன்மருங்குல்வாளரக்கியர்நெருக்கவங்கிருந்தாள்
கன்மருங்கெழுந்தென்றுமோர்துளிவரக்காணா
நன்மருந்துபோனலனறவுணங்கியநங்கை
மென்மருங்குல்போல்வேறுள வங்கமுமெலிந்தாள். (௩)

துயிலெனக்கண்களிமைத்தலுமுகிழ்த்தலுந்துறந்தாள்
வெயிலிடைத்தந்தவிளக்கெனவொளியிலாமெய்யாள்
மயிலியற்குயின்மழலையாண்மானிளம்பேடை
அயிலெயிற்றுவெம்புலிகுழாத்தகப்பட்டதன்னாள். (௪)

விழுதல்விம்முதன்மெய்புறவெதும்புதல்வெருவல்
எழுதலேங்குதலிரங்குதலிராமனையெண்ணித்
தொழுதல்சோருதலுளங்குதலுயங்குதலுயிர்த்தல்
அழுதலன்றிமற்றயலொன்றுஞ்செய்குவதறியாள். (௫)

தழைத்தபொன்முலைத்தடங்கடந்தருவிபோய்த்தாழப்
புழைத்தபோலநீர்நிரந்தரம்பொழிகின்றபொலிவால்
இழைக்குநுண்ணிடைமருங்குலாளிணைநெடுங்கண்கள்
மழைக்கணென்பதுகாரணக்குறியெனவகுத்தாள். (௬)

# காட்சிப்படலம்

அரிமஞ்சிறையுடைஞ்சனமுதலிவையதிகம்
கரியசாண்டனுயர்கண்ணினீர்கடல்புக்கழுவாள்
உரியகாதலினொருவரோரொருவரையுலகில்
பிரிவெனுந்துயருருவுகொண்டாலனபிணியாள். (௭)

துப்பினற்செய்தகைகொடுகால்பெற்றதுளிமஞ்
சொப்பினன்றனை நினைதொறு நெடுங்கண்களுகுத்த
அப்பினனைந்தருந்துயருயிர்ப்புடையாக்கை
வெப்பினிற்புலர்ந்தொருநிலையுறுதமென்றுகிலாள். (௮)

அரிதுபோகவோவிதிவலிகடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன்குலத்தையும்பழியையும்பாராச்
சுருதிநாயகன்வரும்வருமென்பதோர்துணிவால்
கருதிமாதிரமனைத்தையுமளக்கின்றகண்ணாள். (௯)

உழையினூடுருமுகத்தயல்கதுப்புறக்கவ்விச்
சுமையுடைக்கற்றை நிலத்திடைக்கிடந்ததூமதியை
அமையவாயிற்பெய்துமிழ்கின்றவயிலெயிற்றரவிற்
குமைபுறத்திரண்டொருசடையாகியகுழலாள். (௰)

ஆவியந்துகில்புனைவதொன்றன்றிவேறறியாள்
தூவியன்னமென்புனலிடைத்தோய்கிலாமெய்யாள்
மேவுசெண்டலமிழ்ந்துகொண்டநங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதேயொக்கின்றவுருவாள். (௰௧)

கண்டிலன்கொலாமிளவலுங்கனைகடனடுவண்
உண்டிலங்கையென்றுணர்ந்திலனலகொலாமொறுப்பான்
கொண்டிறந்தமையறிகிலராமெனக்குழையாட்
புண்டிறந்ததிலெரிநுழைந்தாலெனப்புகைவாள். (௰௨)

மாண்டுபோயினனொருவைகட்கரசன்மன்மற்றோர்
யாண்டையென்னிலையறிவுறுப்பார்களிப்பிறப்பில்
காண்டலோவரிதெனத்தென்றுவிம்முறுங்கலங்கும்
மீண்டுமீண்டுபுக்கெரிநுழைந்தாலெனமெலிவாள் (௰௩)

எழினைநாயகனிவ்வலையெண்ணலாவினையேன்
சொன்னவார்த்தைகேட்டறிவிலளெனத்துறந்தானோ
முன்னைத்தீவினைமுடிந்ததோவென்றென்றுமுறையால்
பன்னிப்பன்னிப்புலர்ந்துணர்வுதேய்ந்தாருயிர்பதைப்பாள். (௰௪)

அருந்துமெல்லடகாரிடவருந்துமென்றழுங்கும்
விருந்துகண்டபோதென்னுறுமோவென்றுவிம்மும்
மருந்துமுண்டுகொல்யான்கொண்டநோய்க்கென்றுமயங்கும்
இருந்தமாநிலஞ்செல்லரித்திடவுமாண்டெழாதாள். (௰௫)

வன்கண்வஞ்சனையரக்கரித்துணைப்பகல்வையார்
தின்பரென்னினிச்செயத்தக்கதென்றுதீர்ந்தானோ
தம்பிதுலப்பொறைதன்பொறையெனத்தணிந்தானோ
என்கொலோவென்னும்வென்னுமங்கிராப்பகலில்லாள். (௰௬)

பெற்றதாயருந்தம்பியும்பெயர்த்தும்வந்தெய்திக்
கொற்றமாநகர்கொண்டிறந்தார்களோகுறித்துச்
சொற்றவாண்டெலாமுறைந்தன்றியந்நகர்துன்னான்
உற்றதுண்டெனப்படருழந்துருகநோயுறுவாள். (௰௭)

பூரணத்ததுமொய்ம்பினோர்முன்பொருதவர்போல்
வரனுமாயமும்வஞ்சமும்வரம்பிலவல்லார்
பொரதிறந்தமோர்பூசலுண்டாமெனப்பொருமாக்
கூரமன்னிர்நகதுண்டனளாமெனக்கவல்வாள். (௰௮)

வேறு

தெம்மடங்கியசேணிலங்கைகயர்
தம்மடந்தையுந்தம்பியதாமென
மும்மடங்குபொலிந்தமுகத்தினன்
வெம்மடங்கலையுன்னிவெதும்புவாள். (௰௯)

மெய்த்திருப்பதமேவென்றபோதினும்
இத்திருத்துறந்தேகென்றபோதினும்
சித்திரத்தினலர்ந்தசெந்தாமரை
ஒத்திருக்குமுகத்தினையுன்னுவாள். (௨௰)

தேங்குகங்கைத்திருமுடிச்செங்கணான்
வாங்குகோலவடவரைவார்சிலை
ஓங்குமாத்திரத்திற்றிரண்டாய்விழ
வீங்குதோளைநினைந்துமெலிந்துளாள். (௨௧)

இன்னலம்பரவேந்தற்கியற்றிய
பன்னலம்பதினாலாயிரம்படை
கன்னன்மூன்றிற்களப்படக்கால்வினை
வின்னலம்புகழ்த்தேற்றிவெதும்புவாள். (௨௨)

ஆழநீர்க்கங்கையம்பிகடாவிய
ஏழைவேடனுக்கெம்பிநின்றம்பிநீ
தோழன்மங்கைகொழுந்தியெனச்சொன்ன
வாழிநண்பினையுன்னிமயங்குவாள். (௨௩)

மெய்த்ததாதைவிரும்பினனீட்டிய
கைத்தலங்களைக்கைகளினீக்கியே
யுய்த்தபோதுதருப்பையிலுண்பதம்
வைத்தவேதிகைச்செய்திமனக்கொள்வாள். (௨௪)

உரங்கொடேமலர்ச்சென்னியுரிமைசால்
வரங்கொள்பொன்முடிதம்பிவனைந்திலன்
திரங்குசெஞ்சடைகட்டியசெய்வினைக்
கிரங்கியேங்குவதெண்ணியிரங்குவாள். (௨௫)

பரித்தசெல்வமொழியப்படருநாள்
அருத்திவேதியர்க்கான்குலமீந்தவர்
கருத்தினாசைக்கரையின்மைகண்டிறை
சிரித்தசெய்கைநினைந்தழுஞ்செய்கையாள். (௨௬)

மழுவின்வாளினன்மன்னரைமூவெழு
பொழுதினூறிப்புலவுறுபுண்ணினீர்
முழுகினூற்றவமொய்ம்பொடுமூரிவில்
தழுவுமேன்மைநினைந்துயிர்சாம்புவாள். (௨௭)

ஏகவாளியவ்விந்திரன்காதன்மேல்
போகவேவியதுகண்பொடித்தநாள்
காகமுற்றுமொர்கண்ணிலவாக்கிய
வேகவென்றியைத்தன்றலைமேற்கொள்வாள். (௨௮)

வெவ்விராதனைமேல்வருந்தீவினை
வவ்விமாற்றருஞ்சாபமுமாற்றிய
அவ்விராமனையுன்னித்தன்னாருயிர்
செவ்விராதுணர்வோய்ந்துடனேம்புவாள். (௨௯)

வேறு.

இருந்தனடிரிசடையென்னுமின்சொலில்
திருந்திழையொழியமற்றிருந்ததீவினை
அருந்திறலரக்கியரல்லுநள்ளுறப்
பொருந்தலுந்துயிலெனுங்களிபொருந்தினார். (௩௰)

ஆயிடைத்திரிசடையென்னுமன்பினாள்
தாயினுமினியவ டன்னைநோக்கினாள்,
தூயைநீகேட்டியென் றுணைவியாமென
மேயதோர்கட்டுரைவிளம்பன்மேயினாள். (௫௧)

நலந்துடிக்கின்றதோநான்செய்தீவினைச்
சலந்துடித்தின்னமுந்தருவ துண்மையோ
பொலந்துடிமருங்குலாய்புருவங்கண்முதல்
வலந்துடிக்கின்றிலவருவதோர்கிலேன். (௫௨)

முனியொடுமிதிலையின் முதல்வன்முந்துநாள்
துனியறுபுருவமுந்தோளுநாட்டமும்
இனியனதுடித்தன வீண்டுமாண்டென
நனிதுடிக்கின் றனவாய்ந்துநல்குவாய். (௫௩)

மறந்தனெனிதுவுமோர்மாற்றங்கேட்டியால்
அறந்தருசிந்தையென் னாவிநாயகன்
பிறந்தபார்முழுவதுந்தம்பியேபெறத்
துறந்துகான்புகுந்தநாள்வலந்துடித்ததே. (௫௪)

நஞ்சனையான்வனத்திழைக்குநாளிடை
வஞ்சனையால்வலந்துடித்தவாய்மையால்
எஞ்சலவிண்டதாமிடந்துடித்ததால்
அஞ்சலென்றிரங்குதற்கடுப்பதியாதென்றாள். (௫௫)

என்றலுந்திரிசடையியைந்தசோபனம்
நன்றிதுநன்றெனநயந்தசிந்தையாள்
உன்றுணைக்கணவனையுறுதலுண்மையால்
அன்றியுங்கேட்டியென்றறைதன்மேயினாள். (௫௬)

உன்னிறம்பசப்புறவுயிருயிர்ப்புற
இன்னிறத்தேனிசையினிய நண்பினால்,
மின்னிறமருங்குலாய்செவியின்மெல்லெனப்
பொன்னிறத்தும்பிவந் தூதிற்போயதால் (௫௭)

ஆயதுதேறினுன்னாவிநாயகன்
ஏயதுதூதுவந்தெதிர்தலுண்மையால்
தீயதுதீயவர்க்கெய்தறிண்ணமென்
வாயதுகேளெனமறித்துங்கூறுவாள். (௫௮)

துயிலிலவாதலிற்கனவுதோன்றல
அயில்விழியொருகனவமைந்துநோக்கினேன்
பயில்வனபழுதிலபழுதிறுடென
வெயிலினுமெய்பனவுளாத்தன்மேயினுள். (௩௯)

எண்ணெய்பொன்முடிதொறுமிழுகியீறிலாத்
திண்ணெடுங்கழுதைபேய்பூண்டதேரின்மேல
அண்ணலவ்விராவணனரத்தவாடையன்
நண்ணினன்றென்புலனவயில்சேற்பினுய். (௪௰)

மக்களுஞ்சுற்றமுமற்றுளோர்களும்
புக்கனரப்புலத்தேபோந்ததில்லையால
சிக்கறநோககினென்றீயவின்னமும்
மிக்கனகேட்டெனவிளம்பன்மேயினுள். (௪௧)

ஆண்டகையிராவணன்வளர்க்குமவ்வனம்
ஈண்டனவிறந்தவால்னங்கொள்செஞ்சிகை
தூண்டருமணிவிளக்கழலுந்தொன்மனை
கீண்டதாலவானவேறெறியக்கிழைநாள். (௪௨)

பிடமதம்பிறந்தனபிறங்குபேரியும்
இடியெனமுழங்குமாலிரட்டலின்றியே
கடியுடைமுகிற்குலமின்றித்தாவில்வான்
வெடிபடவதிருமாலுதிருமீனெலாம். (௪௩)

விற்பகலின்றியேயிரவுவிண்டற
எற்படவெரிந்துளதென்னத்தோன்றுமால்
மற்பயலர்ந்ததோண்மைந்தர்சூடிய
கற்பகமாலையும்புலவுகாலுமால். (௪௪)

திரியுமாலிலங்கையுமதிலுந்திக்கெலாம்
எரியுமாற்கந்தர்ப்பநகரமெங்கணும்
தெரியுமான்மங்கலகலசஞ்சிந்தின
விரியுமால்விளக்கினைவிழுங்குமாலிருள். (௪௫)

தோரணமுறிந்தனதுணியச்சூழுமால்
வாரணமுறியுமால்வலத்தவாண்மருப்
பாரணமந்திரத்தறிஞர்நாட்டிய
பூரணகுடத்துநீர்நறவுபொங்குமால். (௪௬)

விண்டொடர்மதியினைப்பிளந்துமீனெழும்
புண்டொடர்குருதியிற்பொழியப்போர்மழு
தண்டொடுதிகிரிவாடனுவென்றின்னன
மண்டமர்புரியுமாலாழிமாறுற. (சஎ)

மங்கையர்மங்கலத்தாலிமற்றையோர்
அங்கையின்வாங்கினரொருவருமன்றியே
கொங்கையின்வீழ்ந்தனகுறித்தவாற்றினால்
இங்கிதனற்புதமின்னுங்கேட்டியால். (சஅ)

மன்னவன்றேவியம்மயன்மடந்தைதன்
பின்னவிழோதியும்பிறங்கிவீழ்ந்தன
துன்னிருஞ்சுடர்சுடச்சுறுக்கொண்டேயின
இன்னலுண்டெனுமிதற்கேதுவீதரோ. (சகூ)

என்றனளிம்பிவேறிசைப்பக்கேட்டியால்
இன்றிவணிப்பொழுதியைந்ததோர்சுறு
வன்றுணைக்கோளரிபிரண்டுமாறிலாக்
குன்றிடைபுழுவையங்குழுக்கொண்டுண்டியே. (ருய)

வரம்பிலாமதநரியுறையுமவ்வனம்
நிரம்புறவளைந்தனநெருக்கிநேர்ந்தன
குரம்பறுபிணப்படக்கொன்றமாறிலாப்
புரம்புகவிருந்ததோர்மயிலும்போயதால். (ருக)

ஆயிரந்திருவிளக்கமையமாட்டிய
சேயொளிவிளக்கதொல்றெந்திச்செய்யவள்
நாயகன்றிருமனைநின்றுநண்ணுதல்
மேயினள்வீடணன்றோயின்மென்சொலாய். (ருஉ)

பொன்மனைபுக்கவப்பொருவில்போழினில்
என்னைநீயுணர்த்தினைமுடிந்ததில்லென
அன்னையேயதன்குறைகாணென்றுயினழ
இன்னமுந்துயில்கெனவிருகைகூப்பினாள். (ருங)

இவ்விடையண்ணலவ்விராமனேவிய
வெவ்விடையனையம்போர்வீரத்தூதனும்
அவ்விடையெய்தினனரிதின்முகருவான்
நொவ்விடைமடந்தைதன்னிருக்கைநோக்கினான். (ருச)

அவ்வயினரக்கியரறிவுற்றம்மவோர்
செவ்வையிற்றுயின்மைச்செகுத்ததீதென
எவ்வயின்மருங்கினுமெழுந்துவீங்கினர்
வெவ்வயின்மழுவெழுச்சூலவெங்கையார். (௫௫)

வயிற்றிடைவாயினர்வளைந்தநெற்றியின்
குயிற்றியவிழியினர்கொடியநோக்கினர்
எயிற்றினுக்கிடையிடையானையாளிபேய்
துயிற்கொள்வெம்பிலமெனத்தோட்டவாயினர். (௫௬)

ஒருபதுதலையினரொற்றைச்சென்னியர்
இருபதுதலையினரிரண்டுகையினர்
வெருவருதோற்றத்தர்விகடவேடத்தர்
பருவரையெனமுலைபலவுநாற்றினர். (௫௭)

சூலம்வாள்சக்கரந்தோட்டிதோமரம்
காலவேல்கற்பணங்கற்றைகையினர்
ஆலமேயுருவுகொண்டனையமேனியர்
வாலமேதரித்தவன்வெருவும்வண்மையர். (௫௮)

கரிபரிவேங்கைமாக்கரடியாளிபேய்
அரிநரிநாயெனவணிமுகத்தினர்
வெரிநுறுமுகத்தினர்விழிகண்மூன்றினர்
புரிதருகொம்மையர்புகையும்வாயினர். (௫௯)

எண்ணினுக்களவிடலரியவீட்டினர்
கண்ணினுக்களவிடலரியகாட்சியர்
பெண்ணெனப்பெயர்கொடுதிரியும்பெற்றியர்
துண்ணெனத்துயிலுணர்ந்தெழுந்துசுற்றினர். (௬௰)

ஆயிடையுளையழித்தழகன்றேவியும்
தீயினையவர்முகநோக்கித்தேம்பினாள்
நாயகன்றூதனும்வினாவினண்ணினான்
ஓய்விலதுயர்மரப்பணையினும்பரான். (௬௧)

அரக்கியரயின்முதலேந்துமங்கையர்
நெருக்கியகுழுவினர்துயிலுநீங்கினர்
இருக்குநர்பலரிதற்கேதுவென்னெனாப்
பொருக்கெனவவரிடைப்பொருந்தநோக்கினான். (௬௨)

விரிமழைக்குலங்கிழித்தொளிருமின்னெனக்
கருநிறத்தரக்கியர்குழுவிற்கண்டனன்
உருநிறத்தொருதனிக்கொண்டலூழியான்
இருநிறத்துற்றவெற்கிலையந்தகாந்தத்தை. (௬௩)

தொடற்கருமரக்கியர்காவல்சுற்றுளாள்
மடக்கொடிச்சீதையாமாதமோகொலாம்
கடற்றுணைநெடியதன்கண்ணினீர்ப்பெருந்
தடத்திடையிருந்ததோரன்னத்தன்மையாள். (௬௪)

வீடினதன்றறன்யானும்வீடலேன்
தேடினென்கண்டனென்றேவியேயெனா
ஆடினன்பாடினனாண்டுமீண்டும்பாய்ந்
தோடினனுலாவினனுவகைத்தேனுண்டான். (௬௫)

எள்ளருமுருவினவ்விலக்கணங்களும்
வள்ளறன்னுரையொடுமாறுகொண்டில
கள்ளவாளரக்கனற்கமலக்கண்ணனா
ருள்ளுறையுயிரினையொளித்துவைத்தவா. (௬௬)

மூவகையுலகையுமுறையினீக்கிய
பாவிதன்னுயிர்கொள்வானிழைத்தபண்பிதால்
ஆவதேயையமிலரவினீங்கிய
தேவனேயவனிவள்கமலச்செல்வியே. (௬௭)

மாசுண்டமணியனாள்வயங்குவெங்கதிர்த்
தேசுண்டதிங்களுமென்னத்தேய்ந்துளாள்
காசுண்டகூந்தலாள்கற்புங்காவலும்
ஏசுண்டதில்லைபாலறத்துக்கீறுண்டோ. (௬௮)

புண்கழலிராகவன்புயத்தையோபுகழ்
வனிதையர்திலகத்தின்மனத்தின்மாண்பையோ
வணைகழலரசரின்வண்மைவீக்கிடும்
சனகர்தங்குலத்தையோயாதைச்சாற்றுகேன். (௬௯)

தேவரும்பிழைத்திலர்தெய்வவேதியர்
ஏவரும்பிழைத்திலரறமுமீதின்றால்
யாவதிங்கினிச்செயலரியதெம்பிராற்
காவவென்னடிமையும்பிழைத்தின்றுமன்றோ. (௭௰)

சேழிலாணிமையுயிறைகிண்டதாமெனிச்
ஆழியான்முனிவெனுமாழிமீக்கொள
ஊழியினிறுதிவந்துறுமென்றுன்னினேன்
வாழியநலத்தினிவரம்பிருமெலாம். (௭௧)

வெங்கணன்முழுகியும்புலன்கள்வீக்கியும்
தங்குவவருந்துவநீக்கிநோற்றவர்
எங்குளர்குலனில்வந்தில்லின்மாண்புடை
நங்கையர்மனத்தவநவிலற்பாலதே. (௭௨)

பேணநோற்றதுமனைப்பிறவிபெண்மைபோல்
நாணநோற்றுயர்ந்தது நங்கைகோன்றலால்
மாணநோற்றீண்டிவளிருந்தவாறெலாம்
காணநோற்றிலனவன்கமலக்கண்களால். (௭௩)

முனிபவரரக்கியர்முறையினீங்கினார்
இனியவடானலாகியாருமில்லையால்
தனிமையும்பெண்மையுந்தவமுமின்னதே
வனிதையர்க்காநல்லறத்தின்மாண்பெலாம். (௭௪)

தருமமோதாத்தோசழக்கன்றன்வினைக்
கருமமோதாத்தோகற்பின்காவலோ
அருமையேயநமையேயாரிதாற்றுவார்
ஒருமையேயெம்மனோர்க்குரைக்கற்பாலதே (௭௫)

செல்வமோவதுவவர்தீமையோவிது
அல்லினும்பகலினுமமரராட்செய்வார்
ஒல்லுமோவொருவர்க்கிதுறுகண்யாதினி
வெல்லுமோதீவினையறத்தைமெய்ம்மையால். (௭௬)

என்றிவையினையனவெண்ணிவண்ணவான்
பொன்றிணிநெடுமரப்பொதும்பர்புக்கவண்
நின்றனனவ்வழிநிகழ்ந்ததென்னெனின்
குன்றுபூஞ்சோலைவாயரக்கன்றோன்றினான் (௭௭)

காட்சிப்படல முற்றிற்று.

ஆக படலம்-௩-இ திருவிருத்தம் - ௬௱௭

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

## ச. வதுநிந்தனைப்படலம்.

சிரவண்குடுமி நெடுவரையையுமொருவழியிரண்டனையவன
மகரிகைவயிரகுண்டலமலைப்புயர்திண்டிறற்றோள்புனைவயங்கச்
சகரவேலையினீர்தழுவியகதிர்த்தலைதொறுந்தலைதொறுந்தயங்கும்
வகையபன்மகுடமிளவெயிலெறிப்பக் கங்குலும்பகலபடவந்தான்.

உருப்பசியுடைவாளெடுத்தனடொடரமேனகை வெள்ளடையுதவச்,
செருப்பினைத்தாங்கித்திலோத்தமைசெல்லவரம்பையர்குழாம்புடை
சுற்றக், கருப்புரஞ்சாந்துங்கலவையுமலர்நுங்கலந்துதமிழ்பரிமளகந்த
ம், மருப்புடைப்பொருப்போர்மாதிரக்களிற்றின்வரிக்கைவாண்முகக்
கிடைமடுப்ப. (உ)

தானநெய்விளக்கநாலிருகோடி நங்கையரங்கையிலெடுப்ப
மேனிவந்தெழுந்தமணிபுனையணியின் விரிகதிரிருளெலாம்விழுங்க
க், கானமுகற்றொடர்ந்தநூபுரஞ்சிலம்பக்கிண்கிணிகலையொடுங்கலிப்
ப, பானிறத்தனக்குழாம்படர்ந்தென்னப்பற்பலமழலையும்பகர ()

அந்தரம்புகுந்ததுண்டெனமுனிவுற்றருந்துயினீங்கினுண்டை
சுந்திரவதனத்தருந்ததியிருந்தகண்ணுறுஞ்சோலையின்றனையோ [ச்
மந்திரம்யாதோயாரொடும்போமோவென்றுமாமனமறுக்குறலால்
இந்திரன்முதலோரிமைப்பிலாநாட்டமுகிழ்த்தன ருயிர்ப்பவித்திரு
[ப்ப. (ச)

நீனிறக்குன்றினெடிதினிற்றாழ்ந்த நீத்தவெள்ளருவியி னிமிர்ந்த
பானிறப்பட்டின்மாலையுத்தரியம் பண்புறப்பசும்பொனூரத்தின்
* மானிறப்புடவியுடையுறப்பரந்த வளர்கதிரிளவெயில்பொருவச்
சூனிறக்கொண்மூக்கிழித்திடைதுடிக்கு மின்னெனமார்பினூறுளங்
[க. (ரு)

தோடொறுந்தொடர்ந்தமகரிகைவயிரக்கிம்புரிவலயமாச்சுடர்கள்
நாடொறுஞ்சுடருங்கவிகெழுவிசும்பினொளொடுகோளினைநக்கத்
தாடொறுந்தொடர்ந்த தழங்குபொற்கழலின் றகையொளிநெடுநில
த்தடவத், கோடொறுந்தொடர்ந்தமுறுவல்வெண்ணிலவின் முகமலரி
ரவினுங்கிளர. (சு)

தன்னிறத்தோடுமாறுதந்திமைக்கு நீவியந்தழைபடவுடுத்த
பொன்னிறத்துகிற்கருவரைமருங்கிற் றழுவியபுதுவெயில்பொருவ
மின்னிறக்கதிர்ச்சுற்றியபசும்பொன் விரற்றலையிலொளிக்கானின்
கன்னிறக்கற்றைநெடிரிழல்பூத்த கற்பகமுழுவனங்கவின. (எ)

---

* திறப்புடவி - வலித்தல்விகாரம்.

சுன்னவீரத்தகோவைவெண்டாள மூழியினிருதியிற்றனித்த
பொங்கொடு வரையிற் றேற்றியகோரு நாளுமொத்திடை யிடை
பொலிய, மின்னெறிமௌலிபுதையமால்வரையின் மீப்படர் வெங்க
திர்ச்செல்வர், மன்னிருவரினுமிருவரைத்தவிர்வுற் றுதித்ததோர்படி
யொளிபரப்ப. (அ)

பயிலெயிற்றிரட்டைப் பணைமருப்பொடியப் படியினிற்பரியவ
ருசுமந்த, மயில்டித்தொழுக்கினனையமாமதத்த மாதிரக்காவன்மால்
யானை, கயிலையிற்றிரண்டமரண்டொடர் தடந்தோட் கனகணது
வரங்கடந்த, அயிலெயிற்றரியின்சுவடுதன்கரத்தா லளைந்தமாக் கரி
யினின்றஞ்ச. (௯)

அங்கயற்கருங்க ணியக்கியர்துயக்கி லரம்பையர் விஞ்சையர்க்க
ளைமந்த, மங்கையர்நாகமடந்தையர்சித்தர் நாரிய ரரககியர்முதலாக்
குங்குமக்கொங்கைக்குவிமுலைக்கனிவாய்க் கோகிலந்துயர்ந்தமென்
குதலை, மங்கையரீட்ட மால்வரைதழீஇய மஞ்ஞையங் குழுவெனம
யங்க. (௰)

தொளையுறுபுழைவேய்த்தூக்கிசைக்கானந் துயல்வுறுவொருநிலை
படர, இளையவர்மிடறுமிந் நிலையிசைப்பக் கிந்நரர்முறைநிறுத்தெ
டுத்த, கிளையுறுயாடல்சில்லரிப்பாண்டி றழுவியமுழவொடு கெழு
மி, அளையுறுமரவுமழு துவாயுகுப்பவண்டமும்வையமுமளப்ப (௰௧)

அன்னபூஞ்சதுக்கஞ் சாமரையுக்க மாதியாம்வரிசையிற்கமைந்த-
உன்னரும்பொன்னின்மணியினிற்புனைந்த விழைக்குலமுழைக்குல
மனைய, மின்னிடைச்செவ்வாய்க்குவிமுலைப்பணைத்தோள் வீங்குதே
மல்குலார்தாங்கி, நன்னிறக்காரின்வரவுகண்டுவக்கு நாடகமயிலென
நடப்ப. (௰௨)

தந்திரிநெறியிற்றூக்குறுகருவி தூக்கினொழுவிதச்சதியின்
முந்துறுகுணிலோடியையுறுகுறட்டிற் சில்லரிப்பாண்டிலின்முறை
யின், மந்திரகீதத்திசைப்பதந்தொடர வகையுறுகட்டளைவழாமல்
அந்தரவானத்தரம்பையர்கரும்பிற் பாடலாரருகுவந்தகவ. (௰௩)

அந்திவேளநங்கனழல்படத்தரந்தவயின்முகட்பகழிவாயறுத்த
வெந்துறுபுண்ணின்வேலுழைத்தாங்கு வெண்மதிப்பசுங்கதிர்விரவ
மந்தமாருதம்போய்மலர்தொறும்வாரிவயங்குநீர்மம்மரின் வருதேன்
சிந்துறுவண்டுளியின்சீகரத்திவலையுருக்கியசெம்பெனத்தெறிப்ப ()

இழைபுனைமருங்குலிறுமிறுமெனவுமிறுகலாவணமுலையிரட்டை
உழைபுகுசெப்பினொளிதரமறைத்த வுத்தரியத்தினையொல்கிக் [க்
குழைபுகுகமலங்கோட்டினர்நோக்குங்குறுநகைக்குமுதவாய்மகளி
மழைபுனைதடங்கட்செங்கடையிட்ட மார்பினுந்தோளினுமலைய. ( )

மாலையுஞ்சாந்துங்கலவையும்பூணும் வயங்குநுண்டுகிலொடுகாசும்
சோலையின்றொழுதிக்கற்பகத்தருவுநிதியமுங்கொண்டுபின்றொடர
ப் பாலின்வெண்பரவைத்திரைகருங்கிரிமேற்பரந்தெனச்சாமரைப
தைப்ப, வேலைநின்றுயருமுயலில்வெண்மதியின்வெண்குடைமீதுற
விளங்க. (௰௬)

ஆர்த்தருமகழியருவரையிலங்கையடிபெயர்த்திடுதொறுமழுந்தி
நேர்தரும்பரவைப்பிறழ்திரைதவழ்ந்து நெடுந்தடந்திசைதொறுநி
மிரச்; சார்தருங்கவினையிறுடைப்பகுவா யரந்தனுர்தலைதடுமாற
மூரிநீராடையிருநிலமடந்தை முதுகுளுக்குற்றனண்முரல. (௰௭)

கேடகத்தோடு மழுவெழுச்சூல மங்குசங்கற்பணங்கிடுகோ
டாடகச்சுடர்வாளயில்சிலைகுலிச முதலியவாயுதமனைத்தும்
தாடைக்கிரட்டியெறும்வலிக்கமைந்த கைகளமையர்கடவரைபொரு
க்கும், குடகத்தடக்கைச்சுடுசினத்தடுபோரரக்கியர்தலைதொறுஞ்சும
ப்ப. (௰௮)

விரிசனிர்முகைபூக்கொட்படைமுசல்வேரிவையெலாமணிபொரு
ல்விரிந்த, தருவுயர்சோலை திசைதொறுங்கரியத் தழலுமிழுயிர்ப்பு
முன்றவழத், திருமகளிருந்த திசையறிந்திருந்துந் திகைப்புறுசிந்
தையன்கெடுத்த, தொருமணிநெடும்பற்பஃறலையரவினுழைதொறு
முழைதொறுமுலாவ. (௰௯)

இனையதோர்தன்மையெறும்வலியரக்க னேந்தல்வந்தெய்துகின்று
னை, அனையதோர்தன்மையஞ்சனைச்சிறுவன் கண்டனனடவுறநோ
க்கி, வினையமுஞ்செயலுமேல்விளைபொருளு மிவ்வழிவிளங்குமெ
ன்றெண்ணி, வனைகழலிராமன்பெருப்பெயரோதி யிருந்தனன் வந்
தயன்மறைந்தே. (௨௰)

ஆயிடையரக்கனரம்பையர்குழுவுமல்லவும்வேறயலகல
மேயினன்றெண்ணின்விளக்கெனுந்தகையா ளிருந்தழியாண்டவள்
வெருவிப், போயினவுயிரளாமெனநடுங்கிப்பொழிவரியெறும்புலி
ப்புழைக்கட், காய்சினவுழுவைதின்னியவந்தகலையிளம்பிணையெனக்
கரைந்தாள். (௨௧)

வேறு.

கூசியாவி குலைவுறுவாளையும்
ஆசையாலுயிராசழிவானையும்
காசில்கண்ணிணைசான்றெனக்கண்டனன்
ஊசலாடியுளையுமுளத்தினான். (௨௨)

வாழிசானகிவாழியிராகவன்
வாழிநான்மறைவாழியரந்தணர்
வாழிநல்லறமென்றுறவாழ்த்தினான்
ஊழிதோறும்புதிதுறுங்கீர்த்தியான். (௨௩)

அவ்விடத்தரசெய்தியரக்கன்றான்
எவ்விடத்தெனக்கின்னருளீவது
நொவ்விடைக்குயிலேநுவல்கென்றனன்
வெவ்விடத்தையமிழ்தெனவேண்டுவான். (௨௪)

ஈசற்காயினுமீடழிவுற்றிலா
வாசிப்பாடழியாதமனத்தினான்
ஆசைப்பாம்மந்நாணுமடர்த்திடக்
கூசிக்கூசியிணையனகூறினான். (௨௫)

இன்றிறந்தனநாளையிறந்தன
என்றிறந்தருந்தன்மையிதாமெனக்
கொன்றிறந்தபின்கூடுதியோகுழை
சென்றிறங்கிமறந்தருசெங்கணாய். (௨௬)

உலகமொன்றொடிரண்டொருங்கோம்புமென்
அலகில்செல்வத்தரசியலாணையில்
திலகமேயுன்றிறத்தநங்கன்றரு
கலகமல்லதெளிமையுங்கண்டியோ. (௨௭)

பூந்தண்வார்குழற்பொற்கொழுந்தேபுகழ்
ஏந்துசெல்வமிகழ்ந்தனையின்னுயிர்க்
காந்தன்மாண்டிலன்காடுகடந்துபோய்
வாழ்ந்தவாழ்வதுமானிடர்வாழ்வன்றே. (௨௮)

நோற்கின்றார்களுநுண்பொருணுண்ணிதின்
பார்க்கின்றாரும்பெறும்பயன்பார்த்திமேல்
வார்க்குன்றாமுலையென்சொன்மௌலியால்
ஏற்கின்றாயொடுநுறையின்பமால். (௨௯)

பொருளும்யாழும்விளரியும்பூவையும்
மருளுநாளுமழலைவழங்குவாய்
தெருளுநான்முகன்செய்கதுன்சிந்தையின்
அருளுமின்மருங்கும்மரிதாக்கியோ. (௫௰)

ஈண்டுநாளுமிளமையுமீண்டில
மாண்டுமாண்டுபிறிதுறுமாலைய
வேண்டுநாள்வெறிதேவிளிந்தாலினி
யாண்டுவாழ்வ்விடருழன்றுழந்தியோ. (௫௧)

இழவெனக்குயிர்க்கெய்தினுமெய்துக
குழைமுகத்துநின்சிந்தனைகோடினால்
பழகரிற்புறம்பண்பிவைகாமத்தோ
டழகினுக்கினியாருளராவரோ. (௫௨)

பெண்மையும்மழகும்பிறழாமனத்
திண்மையும்முதல்யாவையுஞ்செய்யவாய்க்
கண்மையும்பொருந்திக்கருணைப்படர்
வண்மையென்கொல்சனகரின்மாண்டவா. (௫௩)

வீட்டுங்காலத்தலறியமெய்க்குரல்
கேட்டுங்காண்டற்கிருத்திகொல்கிள்ளைநீ
நாட்டுங்கானெடுநல்லறத்தின்பயன்
ஊட்டுங்காலத்திகழ்வதுறுங்கொலோ. (௫௪)

தக்கதென்னுயிர்வீடெனிற்றாழ்கிலா
தொக்கசெல்வமுலையுமொருவுதிநீ
புக்குயர்ந்ததெனும்புகழ்பாக்கிவே
றுக்கதென்னுமுறுபழிகோடியோ. (௫௫)

தேவர்தேவியர்சேவடிகைதொழும்
தாவின்மூவுலகின்றனிநாயகம்
மேவுகின்றதுநுன்கண்விலக்கினை
யாவரேழையர்நின்னினிலங்கிழாய். (௫௬)

குடிமைமூன்றுலகுஞ்செயுங்கொற்றத்தென்
அடிமைகோடியருளுதியாலென
முடியின்மீதுமுகிழ்த்துயர்கையினன்
படியின்மேல்விழுந்தான்பழிபார்க்கலான். (௫௭)

வேறு.

காய்ந்தனசலாகையன்னவுகாவந்துகதுவாமுன்னம்
தீந்தனசெவிகளுள்ளந்திரிந்ததுசிவந்தசோரி
பாய்ந்தனகண்கடொன்றும்பரிந்திலளுயிர்க்குப்பெண்மைக்
கேய்ந்தனவல்லாவெய்யமாற்றங்களினையசொன்னாள். (௩௮)

மல்லடுதிரடோள்வஞ்சன் மனம்பிறிதாகும்வண்ணம்
கல்லொடுந்தொடர்ந்தநெஞ்சங்கற்பின்மேற்கொண்டதுண்டோ
இல்லொடுந்தொடர்ந்தமாதர்க்கேய்வனவல்லவெய்ய
சொல்லிதுதெரியக்கேட்டிதுரும்பெனக்கனன்றுசொன்னாள். (௩௯)

மேருவையுருவல்வேண்டின்விண்பிளந்தேகல்வேண்டின்
நீரெழுபுவனம்யாவுமுற்றுவித்திடுதல்வேண்டின்
ஆரியன்பகழிவல்லதறிந்திருந்தறிவிலாதாய்
சீரியவல்லசொல்லித்தலைபத்துஞ்சிந்துவாயோ. (௪௰)

அஞ்சினையாதலானன்றாரியனற்றநோக்கி
வஞ்சனைமானொன்றேவிமாயையான்மறைந்துவந்தாய்
உய்ஞ்சனைபோதியாகின்விதியுன்குலத்துக்கெல்லாம்
நஞ்சினையெதிர்ந்தபோதுநோக்குமேநினதுநாட்டம். (௪௧)

பத்துளதலையுந்தோளும்பலபலபகழிதூவி
வித்தகவில்லினாற்குத்திருவிளையாடற்கேற்ற
சித்திரவிலக்கமாகுமல்லதுசெருவிலேற்கும்
சத்தியைபோலின்மேனாள்சடாயுவாற்றலாயின்வீழ்ந்தாய். (௪௨)

தோற்றனைபலவைகக்கன்றுநள்ளுநீர்வெள்ளஞ்சென்னி
ஏற்றவன்றனால்வென்றாயன்றெனினிறத்தியல்பே
நோற்றநோன்புடையவாழ்நாள்வரமிவைநுனித்தவெல்லாம்
கூற்றினுக்கன்றேவீரச்சரத்திற்குங்குறித்ததுண்டோ. (௪௩)

பெற்றுடைவாளுநாளும்பிறந்துடையரனும்பின்னும்
மற்றுடையவையுந்தந்தமலரயன்முதலோர்வார்த்தை
விற்றொடையிராமன்கோத்துவிடுதலும்விலக்குண்டெல்லாம்
இற்றிடைந்திறுதனெய்மேய்விளக்கின்முன்னிருளுண்டாமோ (௪௪)

குன்றுநீயெடுத்தநாடன்சேவடிக்கொழுந்தாலுன்னை
வென்றவன்புரங்கள்வேவத்தனிச்சரந்துரந்தமேரு
என்றுணைக்கணைவலாற்றற்குரனிலாதிற்றுவீழ்ந்த
அன்றெழுந்துயர்ந்தவோசைகேட்டிலைபோலுமம்மா. (௪௫)

வேறு.

மலையெடுத்தகொடுங்கைசைகாக்குமாக்களை
நிலையெடுத்தேனெனுமாற்றமேநாநீ
சிலையெடுத்திளையவனிற்கச்சேர்ந்திலை
தலையெடுத்தின்னமுமகளிற்றாழ்தியோ. (௪௬)

ஏழைநின்னொளித்துறையின்னகாடென
வாழியங்கோமகனறியவந்தநாள்
ஆழியுமிலங்கையுமழியத்தாழுமோ
ஊழியுந்தீயுமுன்னுயிரொடேயுமோ. (௪௭)

வெஞ்சினவரக்கனைவிளித்துரீயுமோ
வஞ்சனைநீசெயவள்ளல்சீற்றத்தால்
எஞ்சலிலுலகெலாமெஞ்சுமெஞ்சுமென்
றஞ்சுகின்றேனிதற்கறனுஞ்சான்றரோ. (௪௮)

அங்கண்மாஞாலமும்விசும்புமஞ்சவாழ்
வெங்கணாட்புன்றொழில்விலக்கிமேற்கொளாய்
செங்கண்மானான்முகன்சிவனென்றேயெலா
எங்கணாயகனையுநினைந்ததேழைநீ. (௪௯)

மாறுபரிவொணமனக்கொண்டாயெனின்
காலுயர்வரைநிகர்கார்த்தவீரியன்
ஓரொருமனிதனாற்றளர்ந்துளானெனில்
தேறுயர்தெரியலான்றன்மைதேர்தியால். (௫௰)

இருவரொன்றிகழ்ந்தனையென்னின்யாண்டெல்லை
ஒருவனன்றேயுலகழிக்குமூழியான்
செருவருங்காலையென்மெய்ம்மைதேர்தியால்
பொருவருந்திருவிழந்தாயம்பெற்றுவாய். (௫௧)

பொற்கணான்றம்பியென்றினையபோர்த்தொழில்
விற்கொணுண்பொருவுதோளவுணர்வேறுளார்
நற்கணாநலலறந்துறந்தநாளினும்
இற்கணாலிறந்திலரிறந்துநீங்கினர். (௫௨)

வேறு.

பூவிலோனுநியாகப்புலன்கள்போனெறியிற்போகாத்
தேவரோவவுணர்தாமோநிலைநின்றுவினையிற்றீர்ந்தார்
ஏவலெவ்வுலகுஞ்செய்பச்செல்வநிற்கிசைந்தவென்றால்
பாவமோமுன்னீசெய்ததருமமோதெரியப்பாராய். (௫௩)

இப்பெருஞ்செல்வநின்கணீந்தபேரீசன்யாண்டும்
அப்பெருஞ்செல்வந்துய்ப்பா னின்றுமாதவத்தினன்றே
ஒப்பருந்திருவுநீங்கியுறவொடுமுலக்கவுன்னித்
தப்புறியறத்தைமேயழாய்தருமத்தைக்காழியாந்த. (௫௪)

மறந்திறம்பாதகோலாவலியினரெனினுமாண்டார்
அறந்திறம்பினருமக்கட்கருடிறம்பினருமன்றே
பிறந்திறந்துழலும்பாசப்பிணக்குடைப்பிணியிற்றீர்ந்தார்
துறந்தரும்பகைகண்மூன்றுந் துடைத்தவர்பிறர்யார்சொல்லாய். ( )

சென்றமிழ்நாதத்தோன்முன்னுடைத்தீர்முனிவர்யாரும்
புன்றொழிலரக்கர்க்காற்றாதோற்கிலம்புகுந்தபோதே
தொன்றருணின்னுலன்னார்குறைவதுசரதங்கோவே
என்றனர்யாமனம்கேட்டேனியிதற்கியைவசெய்தாய். (௫௬)

உன்னைபங்கேட்டுமற்றுன்னூற்றமுமுடையநாளும்
பின்னையிவ்வரக்கர்சேனைப்பெருமையுமுனிவர்பேணிச்
சொன்னபினுங்கைமுக்குமும்பியர்தோளுந்தாளும்
சின்னபின்னங்கள்செய்தபதனைநீசிந்தியாயோ. (௫௭)

ஆயிரந்தடக்கையாணின்னைநீநான்குகரமும்பற்றி
வாய்வழிதருதிம்சாரக்குத்திவான்சிறையில்வைத்த
தூபவன்வயிரத்தோள்கடுணித்தவன்றொலைந்தமாற்றம்
நீயறிந்திலையோவேகுநெறியறிந்திலாதநீசா. (௫௮)

கடிக்குமவல்லரவுங்கேட்குமந்திரங்களிக்கின்றோயை
அடிக்குமீட்டாதென்றூன்றமேவதுவோடறிவுகாட்டி
இடிக்குநரில்லையுள்ளாரொண்ணியதெண்ணியுன்னை
முடிக்குநரொன்றபோதுமுடிவஞ்றிமுடிவதுண்டோ. (௫௯)

வேறு.

என்றறத்துறைகேட்டலுமிருபதுதபனம்
மின்றிறப்பனவொத்தனவெயில்விடுபகுவாய்
குன்றிறத்தெழித்துரப்பினன்குறிப்பதென்காமன்
தன்றிறத்தையுங்கடந்ததுசீற்றத்தின்றகைமை. (௬௰)

வளர்ந்தநாணினன்மாதிரமனைத்தையுமறைவித்
தளர்ந்த... னனல்சொரிகண்ணினனிவளைப்
பிளந்துதி... ப்பினென்றுடன்றனன் பெயர்ந்தனன்பெயதான்
கிளர்ந்தசீற்றமுங்காதலு மெதிரெதிர்கிடைப்ப. (௬௧)

அன்னகாலையினநுமனுமருந்ததிக்கற்பின்
என்னையாளுடைநாயகன்றேவியையென்முன்
சொன்னநீசன்கைதொடுவதன்முன்றுகைத்துழக்கிப்
பின்னைநின்றதுசெய்குவெனென்பதுபிடித்தான். (௫௨)

தனியினின்றனன்றலைபத்துங்கடிதுகத்தாக்கிப்
பனிபிறழ்வேலையிலிலங்கையைக்கீழுறப்பாய்ச்சிப்
புனிதமாதவத்தணங்கினைச்சுமந்தனன்போவான்
இனிதிதென்பதுநினைந்தனன்கரம்பிசைந்திருந்தான். (௫௩)

ஆண்டவாளரக்கன்கணன்றண்டத்தையழிப்பான்
மூண்டகாலவெந்தீயெனமுற்றியசீற்றம்
நீண்டகாசனீர்நீத்தத்தின்வீவுறுநிலையின்
மீண்டுநின்றொருதன்மையாலிவையிவைவிளம்பும். (௫௪)

வேறு.

கொல்வெனென்றுடன்றேனுன்னைக்கொல்கிலென்குறித்துச்சொன்
சொல்லுளவவற்றுக்கெல்லாங்காரணந்தெரியச்சொல்லின் [ன
ஒல்வதீதொல்லாதீதென்றெனக்குமொன்றுலகத்துண்டோ
வெல்லவதுந்தோற்றானும்விளையாட்டின்விளைந்தமேனாள். (௫௫)

ஒன்றுமேழுநாக்கநிற்போருயிரெனவுரியோன்றன்னைக்
கொன்றுங்காளிழைத்தானீநின்னுயிர்விடற்கூற்றங்கூடும்
என்றருநபிருநீங்குமென்பதையிலையவெண்ணி
அன்றுநான்வஞ்சஞ்செய்ததாமெனக்கமரினேர்வா. (௫௬)

மானென்பதறிந்துபோனமானிடராவார்மீண்டு
யானென்பதறிந்தால்வாரா ரோழைமையெண்ணிநோக்கல்
தேனென்பதறிந்தசொல்லாய்தேவராம்யாவரோவெங்
கோனென்பதறிந்தபின்னைத்திறம்புவார்குறையினல்லால். (௫௭)

வென்றொருமிருப்பயார்க்குமேலவர்விளிவிலாதோர்
என்றொருமிருப்பவன்றேயிந்திரனேவல்செய்ய
ஒன்றுதவுலகமூன்றுமுணர்கிற்றவொருவன்யானே
மென்றோளாயிதற்குவேறோர்காரணம்விரிப்பதுண்டோ. (௫௮)

மூவருந்தேவர்தாமுமுரணுகமுற்றுங்கொற்றம்
பாவைநின்பொருட்டினலோர்பழிபெறப்பயன்றீர்தோன்பின்
ஆவியின்மனிதர்தம்மையடுகிலேனவரையீண்டுக்
கூவிநின்றேவல்கொள்வென்காணுதிகுதலைச்சொல்லாய் (௫௯)

சிற்றியற்சிறுமையாற்றல்சிறுதொழின்மறவரோடே
முற்றிபகாவில்வீரமுனிவென்கண்விளையாதேனும்
இற்றையிற்பகலினெய்தியிருவரையொருகையாலே
பற்றினென்கொணருந்தன்மைகாணுதிபழிப்பிலாதாய் (௭௰)

பதவியமனிதரோனும்பைந்தொடிநின்னைத்தந்த
உதவியையுணரநோக்கினுயிர்கொலைக்குரியரல்லர்
சிதைவுறலவர்க்குவேண்டிற்செய்திறன்றேர்ந்ததெண்ணின்
இதனினுக்கேயாகினியற்றுவல்காண்டியின்னும். (௭௧)

பள்ளநீரபோதிநண்ணிப்பாதகனைமுதலினோரான
வுள்ளவர்தம்மையெல்லாமுயிர்குடித்தழித்தியின்
வெள்ளநீர்மிதிலைம்பாரைவேரறுத்தெளிதினெய்திக்
கொள்வெனினுமிருமைநின்னையறிந்திலகுறைந்தநாளோய். (௭௨)

கூறாத்தழன்றுபொங்கி யெரிகதிர்வாளைநோக்கித்
தீதுயிர்க்கிழைக்குநாளுந்திங்களோரிரண்டிற்றேய்ந்த
தாதலினின்றநெண்ணெனவறிந்தவாறறிவாயென்னாப்
போதரிக்கண்ணிநுளையகத்துவைத்தரப்பிப்போனான், (௭௩)

அஞ்சவித்தானுமொன்றாலறிவுறத்தேற்றியானும்
வஞ்சியிற்செவ்வியாளைவசித்தென்பாலவருவீரன்றால்
நஞ்சுமக்காவெனென்று நகையிலாமுகத்துப்பேழ்வாய்
வெஞ்சினத்தரக்கிமாரகதம்வேறுறவுணர்த்திப்போனான். (௭௪)

போயினனரக்கன்பின்னைப்பொங்குராநுங்கிக்கான்ற
தூயவெண்மதியையொத்தசீதையைத்தொடர்ந்துசுற்றித்
தீயவல்லரக்கிமார்கடெழீஇத்தெழித்துரப்பிச்சிந்தை
மேயினவண்ணமெல்லாம்விளம்புவருடன்றுமிக்கார். (௭௫)

வேறு

முன்முன்னின்றார்கண்கனல்சிந்தமுடுகுற்றார்
மின்மின்னென்னுஞ்சூலமும்வேலுமிலைமயோச்சிக்
கொன்மின்கொன்மின்கொன்றுகுறைத்துக்குடாரத்
தின்மின்றின்மினென்றுதெழித்தார்சிலரெல்லாம். (௭௬)

வையந்தந்தநான்முகன்மைந்தன்மகன்மைந்தன்
ஐயன்வேதமாயிரம்வல்லோனறிவாளன்
மெய்பங்கும்பால்வைத்துளதல்லால்வினைவென்றோன்
செய்புன்மையாதுகொலென்றார்சிலரெல்லாம். (௭௭)

மண்ணிற்றீயமானுயர்தத்தம்வழியோடும்
பெண்ணிற்றீயோய்நின்றுதன்மாயும்பிணிசெய்தாய்
பண்ணிற்கோலிட்டாலனசொல்லிப்பொதுநோக்காம்
எண்ணிக்காணாய்மெய்ம்மையுமென்றார்சிலரெல்லாம். (எஅ)

புக்கவழிக்கும்போந்தவழிக்கும்புனைவெந்தீ
ஒக்கவிதைப்பாயுற்றனையன்றேவுணர்வில்லாய்
இக்கணமிற்றாய்முந்தினமெல்லாமினிவாழாய்
சிக்கவுனாதுஞ்சமென்றுதெழித்தார்சிலரெல்லாம். (எகூ)

சொல்வானுற்றோர்பெற்றிமையாதுங்குறையாதாள்
வெல்வானங்கோன்றின்னுமின்லம்மென்பவர்மெய்யும்
வல்வாய்ப்பொய்யோனேவலுமெல்லாமனம்வைத்தாள்
நல்லாணல்லகணகள்களுழ்ந்தேநகுகின்றாள். (அய)

இன்னோரன்னவெய்யியசாலத்திடைநின்றாள்
முன்னேசொன்னேனென்னண்டகருவின்முடிவைம்மா
பின்னேவாளாபேதுறுவீரோர்பிழையென்றாள்
அன்னேநன்றென்றாரவரெல்லாமவிவுற்றார். (அக)

அறிந்தாரன்னாளுச்சடையென்பாளவள்சொல்லப்
பிறிந்தார்சீற்றமல்லனையஞ்சிப்பிறிதில்லா
செறிந்தாராயதீவினையன்றார்தெறலெண்ணார்
நெறிந்தாரோரிப்பேதையுமாவிநிலைநின்றாள். (அஉ)

நிந்தனைப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - ச - இ - திருவிருத்தம் - சஅகூ.

ஏய்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ௫ வது உருக்காட்டுப்படலம்

காண்டற்கொரிக்காலமுமீதேதெறுகாவல்
தூண்டற்கொதகாசிந்தையிருந்துயில்கில்லார்
வேவ டத்துஞ்சாரொன்றுருவிந்தைசவினைசெய்தான்
மாண்டற்குற்றாராமெனவெல்லாமயர்வுற்றார். (க)

துஞ்சாதாருந்துஞ்சுதல்கண்டாபியராற்றாள்
நெஞ்சாலொன்றுமுய்வழிகாணாணுகின்றாள்
அஞ்சாநின்றாள்பன்னெடுநாளுமழிவுற்றாள்
எஞ்சாவன்பாலின்னபகர்ந்தாங்கிடருற்றாள். (உ)

வேறு.

கருமேகநெடுங்கடல்காரனையான்
தருமேதனியேனெனதாருயிர்தான்
உருமேறுறழ்வெஞ்சிலைநாணொலிதான்
வருமேயுனையாய்வலியார்வலியே. (௩)

கல்லாமதியேகதிர்வாணிலவே
செல்லாவிரவேசிறுகாலிருளே
எல்லாமெனையேமுனிவீர்நினையா
வில்லாளனையாதும்விளித்திலிரோ. (௪)

தழல்வீசவுலாய்வருவாடைதழீஇ
அழல்வீரெனதாவியறிந்திலிரோ
நிழல்வீரையனுருடனீர்நெடுநாள்
உழல்வீர்கொடியீருரையாடிலிரோ. (௫)

வாராதொழியானெனும்வண்மையினால்
ஓராயிரங்கோடியிடர்க்குடைவேன்
[illegible]ராவொருநாள்வலிசேவகனே
நாராயணனேதனிநாயகனே. (௬)

[illegible]றுவொன்றியகானடைவாய்தவிர்நீ
வருவென்சிலநாளினின்மாநகர்வாய்
இருவென்றனையின்னருடானிதுவேல்
ஒருவென்றனியாவியையுண்ணுதியோ. (௭)

பேணும்புணர்வேயுயிரோபெருநாள்
நாணின்றுழல்வீர்தனிநாயகனைக்
காணுந்துணையுங்கழிவீரலிர்நான்
பூணும்பழியோடுபொருந்துவதோ. (௮)

முடியாமுடிமன்னன்முடிந்திடவும்
படியேழுநெடுந்துயர்பாவிடவும்
மடியாநெறிவந்துவனம்புகுதும்
கொடியார்வருமென்றுகுலாவுவதோ. (௯)

என்றென்றுயிர்விம்மியிருந்தழிவாள்
மின்றன்னுமருங்குல்விளங்கிழையாள்
ஒன்றென்றுயிருண்டெனினுண்டிடர்யான்
பொன்றும்பொழுதேபுகழ்பூணுமெனா. (௰)

### வேறு.

பொறையிருந்தாற்றியென்னுயிரும்போற்றினேன்
அறையிருங்கழலவற்காணுமாசையால்
நிறையிரும்பல்பகனிருதர்நீணகர்
சிறையிருந்தேனையப்புனிதன்றீண்டுமோ. (௰௧)

உன்னினர்பிறெனவுணர்ந்துழைய்ந்தவர்
சொன்னனசொன்னனசெவியிற்றூங்கவும்
மன்னுயிர்காத்திருங்காலம்வைகினேன்
என்னின்வேறரக்கியர்யாண்டையார்கொலோ. (௰௨)

சொற்பிரியாப்பழிசுமந்துதூங்குவேன்
நற்பிறப்புடைமையுநாணுநன்றரோ
கற்புடைமடந்தையர்கதையுளோர்கடாம்
இற்பிரிந்துய்ந்தவர்யாவராயானலால். (௰௩)

பிறர்மனையெய்தியபெண்ணைப்பேணுதல்
திறனலதென்றுயிர்க்கிறைவன்றீர்ந்தனன்
புறனலரவனுறப்போதும்போக்கியான்
அறனலதியற்றிவேறென்கொண்டாற்றுகேன். (௰௪)

எப்பொழுதிப்பெரும்பழிபினெய்தினேன்
அப்பொழுதேயுயிர்துறக்குமாணையன்
ஒப்பரும்பெருமறுவுலகமோதயான்
துப்பழிந்துய்வதுதுறக்கந்துன்னவோ. (௰௫)

அன்பழிசிந்தையராயவாடவர்
வன்பழிசுமக்கினுஞ்சுமக்கவானுயர்
துன்பழிபெரும்புகழ்க்குலத்துட்டோன்றினேன்
என்பழிதுடைப்பவொன்னின்யாவரோ. (௰௬)

வஞ்சனைமானின்பின்மன்னைப்போக்கியென்
மஞ்சனைவைதுபின்வழிக்கொள்வாயெனு
நஞ்சனையானகம்புகுந்தநங்கையான்
உய்ஞ்சனெனிருத்தலுமுலகங்கொள்ளுமோ. (௰௭)

வல்லியன்மறவர்தம்வடுவிற்றீர்பவர்
வெல்லினும்வெல்ப்போர்விளிந்துவீடினு
இல்லியலறத்தையாணிறந்துவாழ்ந்தபின்
சொல்லியவென்பழியவரைச்சுற்றுமோ. (௰௮)

வருந்தலின்மானமாவனையமாட்சியர்
பெருந்தவமடந்தையர்முன்புபேதையேன்
கருந்தனிமுகிலினைப்பிரிந்துகள்வனூர்
இருந்தவளிவளெனவேசநிற்பெனோ. (௧௯)

அற்புதனரக்கர்தம்வருக்கமாசற
விற்பணிகொண்டருஞ்சிறையின்மீட்டநாள்
இற்புகத்தக்கலையென்னின்யானுடைக்
கற்பினையெப்பரிசிசைத்துக்காட்டுகேன். (௨௰)

ஆதலானிறத்தலேயறத்தினாறெனாச்
சாதல்காப்பவருமென்றவத்திற்சாம்பினார்
ஈதலாதிடமும்வேறிலையென்றொரு
போதுலாமாதவிப்பொதும்பரெய்தினாள். (௨௧)

கண்டனனநுமனுங்கருத்துமெண்ணினான்
கொண்டனன்றுணுக்கமெய்தீண்டக்கூசுவான்
அண்டர்நாயகனருடூதன்யானெனாத்
தொண்டைவாய்மயிலினைத்தொழுதுதோன்றினான். (௨௨)

அடைந்தனெனடியனேனிராமனாணையால்
குடைந்துலகனைத்தையுநாடுங்கொட்பினால்
மிடைந்தவருலப்பிலர்தவத்தைமேவலான்
மடந்தைநின்சேவடிவந்துநோக்கினேன் (௨௩)

ஈண்டுநீயிருந்ததையிடரின்வைகுறும்
ஆண்டகையறிந்திலனதற்குக்காரணம்
வேண்டுமேயரக்கர்தம்வருக்கம்வேரொடு
மாண்டிலவீதலான்மாறுவேறுண்டோ. (௨௪)

ஐயுறலுளதடையாளமாரியன்
மெய்யுறவுணர்த்தியவுரையும்வேறுள
கையுறுநெல்லியங்கனியிற்காண்டியால்
நெய்யுறுவிளக்கனாய்நினையல்வேறென்றான். (௨௫)

வேறு.

என்றவனிறைஞ்சநோக்கியிரக்கமுமுனிவுமெய்தி
நின்றவனிருதனல்லனெறிநின்றுபொறிகளைந்தும்
வென்றவனல்லனாகின்விண்ணவனாகவேண்டும்
நன்றுணர்வுடையன்றூயனவையிலன்போலுமென்னா (௨௬)

அரக்கனேயாகவேறோரமரனேயாகவன்றிக்
குரக்கினத்தலைவனேதானாகுககொடுமையாக
இரக்கமேயாகவந்திங்கெம்பிரானாமஞ்சொல்லி
உருக்கினானுணர்வைத்தந்தானுயிரிதினுதவியுண்டோ. (௨௭)

எனநினைத்தெய்தநோக்கியிரங்குமெனுள்ளங்கள்ளம்
மனனகத்துடையராயவஞ்சகர்மாற்றமல்லன்
நினைவுடைச்சொற்கள்கண்ணீர்நிலம்புகப்புலம்பாநின்றான்
வினவுதற்குரியனென்னாவீரநீயாவனென்றாள். (௨௮)

ஆயசொற்றலைமேற்கொண்டவங்கையனன்னைநின்னைத்
தூயவன்பிரிந்தபின்புதேடியதுணைவன்றொல்லைக்
காய்கதிர்ச்செல்வன்மைந்தன்கவிக்குலமவற்றுக்கெல்லாம்
நாயகன்சுக்கிரீவனென்றுளனவையிற்றீர்ந்தான். (௨௯)

மற்றவன்முன்னோனைந்நாளிராவணன்வலிதன்வாலின்
இற்றுகக்கட்டியெட்டுத்திசையினுமெழுந்துபாய்ந்த
வெற்றியன்றேவர்வேண்டவேலையைவிலங்கன்மத்தில்
சுற்றியநாகந்தேயவமுதெழக்கடைந்ததோளான். (௩௰)

அன்னவன்றன்னையுங்கோனம்பொன்றாலாவிவாங்கிப்
பின்னவற்கரசுநல்கித் துணையெனப்பிடித்தானங்கள்
மன்னவன்றனக்குநாயேன்மந்திரத்துள்ளேன்வானின்
நன்னெடுங்காலின்மைந்தநாமமுமநுமனென்றான். (௩௧)

எழுபதுவெள்ளங்கொண்டவெண்ணனவுலகமெல்லாம்
தழுவிநின்றறிப்பவேலைதனித்தனிக்கடக்குந்தாள
குழுவினவுங்கோன்செய்யக்குறித்ததுகுறிப்பினுன்னி
வழுவிலசெய்தற்கொத்தவானரம்வானினீண்ட. (௩௨)

துப்புறுபரவையேழுஞ்சூழ்ந்தபாரேழுமாழ்ந்த
ஒப்புறுநாகர்நாடுமும்பரினிம்பர்காறும்
இப்புறந்தேடிநின்னையெதிர்ந்திலவென்னினண்டத்
தப்புறம்போயுந்தேடவவதியினமைந்துபோன. (௩௩)

புன்றொழிலரக்கன்கொண்டுபோந்தநாள்பொதிந்ததூசின்
குன்றினம்மருங்கினிட்டவணிகலக்குறியினாலே
வென்றியானடியன்றன்னைவேறுகொண்டிருந்துகூறித்
தென்றிசைசேறியென்றானவனருள்சிதைவதாமோ. (௩௪)

கொற்றவற்காண்டுக்காட்டிக்கொடுத்தபோதடுத்ததன்மை
பெற்றியி னுணர்தற்பாற்றோ வுயிர்நிலைபிறிதுமுண்டோ
இற்றைநாளளவுமன்னவன்று நீயிழித்து நீத்த
மற்றைநல்லணிகள்காணுன்மங்கலங்காத்தமன்றே. (௫௫)

ஆயவன்றன்மைநிற்கவங்கதன்வாலிமைந்தன்
ஏயவன்றெம்பால்வெள்ளமிரண்டுடனெழுந்துசேனை
மேயினபடர்ந்துதீரவளையவல்விடுத்தானெனலைப்
பாய்புனலிலங்கைசூழுதார்க்கென்றனன்பழியையென்றான். (௫௬)

எய்தவனுரைத்தலோடுமெழுந்துபேருவகையேற
வெய்துறலொடுங்குமேனிவானுறவிம்மியோங்கி
உய்தலவற்றுற்றதோவென்றருவிநீரொழுகுகண்ணாள்
ஐயசொலையன்மேனியெப்படிக்கறிதியென்றாள். (௫௭)

படியெடுத்துரைத்துக்காட்டும்படித்தன்றுபடிவம்பண்பின்
முடிவுளவுவமமெல்லாமிலக்கணமொழியுமுன்னர்த்
துடியிடையடையாளத்தின்றொடரவைதொடர்தியென்று
அடிமுதன்முடியின்காறுமறிவுறவநுமன்சொல்வான். (௫௮)

வேறு.

சேயிதழ்த்தாமரையென்றுசேணுளோர்
ஏயினரதன்றுணையெளியதில்லையால்
நாயகன்றிருவடிகுறித்துநாட்டுதின்
பாய்திரைப்பவளமுங்குவளைப்பண்பினும். (௫௯)

தளங்கெழுகற்பகமுகிழுந்தண்டுறை
இளங்கொடிப்பவளமுங்கிடக்கவென்னவை
துளங்கொளிவிரற்கெதிருதிக்குஞ்சூரியன்
இளங்கதிரொக்கினுமொக்குமேந்திழாய். (௬௰)

சிறியவும்பெரியவுமாகித்திங்களோ
மறுவிலபத்துளவல்லமற்றினி
எறிசுடர்வயிரமோதிரட்சியெய்தில
அறிகிலெனுகிர்க்கியானுவமமாவன. (௬௧)

பொருந்திலநிலனொடுபோந்துகானிடை
வருந்தினவெனினதுநூலைமாறுகொண்
டிருந்தது நின்றதுபுவனம்யாவையும்
ஒருங்குடன்புணர்வதுரைக்கற்பாலதோ. (௬௨)

தாங்கணைப்பணிலமும்வளையுந்தாங்கரா
வீங்கணைப்பள்ளியானெனினும்வேறினிப்
பூங்கணைக்காற்கொருபரிசுதான்பொரும்
ஆங்கணைக்காவமோவாவதல்லையே. (௪௩)

அறங்கிளர்பறவையினரசனுடெழிற்
பிறங்கெருத்தனையனபெயரும்பெற்றுடை
மறங்கிளர்மதகரிக்கரமுதானை
குறங்கினுக்குவமையிவ்வுலகிற்கூடுமோ. (௪௪)

வலஞ்சுழித்தொழுகுநீர்வழங்குகங்கையின்
பொலஞ்சுழியென்றலும்புன்மைபூவொடு
நிலஞ்சுழித்தெழுமணியுந்திநேரினி
இலஞ்சியம்போலும்வேறுவமையாண்டரோ (௪௫)

பொருவருமரகதப்பொலன்கொண்மால்வரை
வெருவுறவிரிந்துயர்விலங்கலாகத்தைப்
பிரிவறநோற்றிலளென்னிற்பின்னையத்
திருவினிற்றிருவுளார்யாவர்தெய்வமே. (௪௬)

நீடுறுகீட்டிசைநின்றயானையின்
கோடுறுகரமெனச்சிறிதுகூறலாம்
தோடுறுமலரெனச்சுரும்புசுற்றறாத்
தாடொடுதடக்கைவேறுவமைசாலுமே. (௪௭)

பச்சிலைத்தாமரைபகல்கண்டாலெனக்
கைச்செறிமுகிழுகிர்கனகனென்பவன்
வச்சிரயாக்கையைவகிர்ந்தவன்றொழில்
நிச்சயமன்றெனினனையநீங்குமோ. (௪௮)

திரண்டிலவொளியிலதிருவின்சேர்வில
முரண்டருமேருவின்முரியமூரிநாண்
புரண்டிலபுகழிலபொருப்பென்றொன்றுபொன்
திரண்டிலபுயங்களுக்குவமமேற்குமோ. (௪௯)

கடற்படுபணிலமுங்கன்னிப்பூகமும்
மிடற்றினுக்குவமையென்றுரைக்குமெல்லியோர்
உடற்படவொன்னுமோவுரகப்பள்ளியான்
இடத்துறைசங்கமொன்றிருக்கவெங்களால். (௫௰)

அண்ணறன்றிருமுகங்கமலமாமெனின்
கண்ணினுக்குவமைவேறியாதுகாட்டுகேன்
தண்மதியாமெனவுரைக்கத்தக்கதோ
வெண்மதிபொலிந்ததுமெலிந்துதேயுமால். (௫௧)

வேறு.

ஆரமுமகிலுநீவியகன்றதோளமலன்செவ்வாய்
நாரமுண்டலர்ந்தசெங்கேழ்நளினமென்றுரைக்கநாளும்
ஈரமுண்டமுகமூறுமின்னுரையியம்பாதேனும்
மூரலவெணமுறுவலபூவாப்பவளமோமொழியற்பாற்றே. (௫௨)

வேறு.

முந்தங்கொல்லோமுழுநிலவின்முறியின்றிறனோமுறையமுதச்
சொத்தின்றுள்ளிவெள்ளியினற்றொடுத்தகொல்லோதுறையறத்தின்
வித்துமுளைத்தவங்குரங்கொல்வேறேசிலகொன்மெய்ம்முகிழ்த்த
தொத்தின்றொகைகொல்யாதென்றுபல்லுக்குவமைசொல்லுகேன்.)

எள்ளாநிலத்திந்திரநீலத்தெழுந்தகொழுந்துமரகதத்தின்
விள்ளாமுழுமாநிழற்பிழம்பும்வேண்டம்வண்டுமேனியதோ
தள்ளாவோதிகோபத்தைக்கவ்வவந்துசார்நதுவும்
கொள்ளாவள்ளறிருமுகத்திற்குவமைபின்னுங்குணிப்பாமோ. (௫௪)

பணிக்கச்சரத்துக்கரன்முதலோர்கவர்ந்தப்படையும்பல்பேயும்
தணிக்கைச்சிலையும்வானவருமுனிவர்குழுவுந்தனியறனும்
இனிக்கட்டழிந்ததரக்கர்குலமென்னுஞ்சுருதியீரிரண்டும்
குனிக்கக்குனித்தபுருவத்துக்குவமநீயேகோடியால். (௫௫)

வருநாட்டோன்றுந்தனிமறுவும்வளர்வுந்தேய்வும்வாளரவம்
ஒருநாட்கவ்வுமுறுகோளுமிறப்பும்பிறப்புமொழிவுற்றால்
இருநாட்பகலினிலங்குமதியலங்கலிருளினெழினிழற்கீழ்ப்
பெருநாணிற்பினவனெற்றிப்பெற்றிற்றுகப்பெறுமன்றே. (௫௬)

நீண்டுகுழன்றுநெய்த்திருண்டுநெறிந்துசெறிந்துநெடுநீலம்
பூண்டுபுரிந்துசரிந்துகடைசுருண்டுபுகையுநறும்பூவும்
வேண்டுமல்லவெனத்தெய்வவெறியேகமழுநறுங்குஞ்சி
ஈண்டுசடையாயினதென்றான்மழையென்றுரைத்தலிழிபன்றே ()

புல்லலேற்றதிருமகளும்பூவும்பொருந்தப்புவியேழும்
எல்லையேற்றநெடுஞ்செலவமெதிர்ந்தஞான்றுமஃதின்றி
அல்லலேற்றகானகத்துமழியாநடையையிழிவான
மல்லலேற்றினுளதென்றான்மத்தயானைவருந்தாதோ. (௫௮)

இன்னமொழியவம்மொழிகேட்டெரியினிட்டமெழுகென்னத்
தன்னையறியாதயர்வாளைத்தளாய்பின்வணங்கிநாயகனார்
சொன்னகுறியுண்டடையாளச்சொல்லுமுளவாலவைநோகை
அன்னநடையாய்கேட்கென்னவறியவுறைவானுயிருறல். (௫௯)

வேறு.

நடத்தலரிதாகுநெறிநாள்கள்சிலதாயர்க்
கடுத்தபணிசெய்திவணிருத்தியெனவச்சொற்
கொடுத்ததுகிலோடுமுயிருக்கவுடலோடும்
எடுத்தமுனிவோடுமயனின்றதுமிசைப்பாய். (௬௰)

நீண்டமுடிவேந்தனருளேந்திநிறைசெல்வம்
பூண்டதனைநீங்கிநெறிபோதலுறுநாளின்
ஆண்டநகராரையொடுவாயிலகலாமுன்
யாண்டையதுகானெனவிசைத்ததுமிசைப்பாய். (௬௧)

எள்ளரியதேர்சுருசுமந்திரனிசைப்பாய்
வள்ளன்மொழிவாசகமனத்துயர்மறந்தாள்
கிள்ளையொடுபூவைகள்கிளத்தல்கிளவென்றும்
பிள்ளையொடுதன்றிறமுணர்த்துதிபெயர்த்தும். (௬௨)

மீட்டுமுரைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்
தீட்டியதுதீட்டரியசெய்கையதுசெவ்வே
நீட்டியதெனநேர்ந்தனனெடியகையால்
காட்டினனோராழியதுவானுதலிகண்டாள். (௬௩)

இறந்தனர்பிறந்தபயனெய்தினர்கொலென்கோ
மறந்தனரறிந்துணர்வுவந்தனர்கொலென்கோ
துறந்தவுயிர்வந்திடைதொடர்ந்ததுகொலென்கோ
திறந்தெரிவதென்னையொலிநன்னுதலிசெய்கை. (௬௪)

இழந்தமணிபுற்றரவெதிர்ந்ததெனலானாள்
பழந்தனமிழந்தனபடைத்தவரையொத்தாள்
குழந்தையையுயிர்த்தமலடிக்குவமைகொண்டாள்
உழந்துவிழிபெற்றதொருயிர்ப்பொறையுமொத்தாள் ()

வாங்கினண்முலைக்குவையில்வைத்தனள்சிரத்தால்
தாங்கினண்மலர்க்கண்மிசையொத்தினடடந்தோள்
வீங்கினண்மெலிந்தனள்குளிர்ந்தனள்வெதுப்போ
டேங்கினளுயிர்த்தனளிதின்னதெனலாமே. (௬௬)

மோக்குழலைவைத்துறமுயங்குமொளிர்தன்னீர்
நீக்கிநிறைகண்ணிணைததும்பநெடுநீள
நோக்குறுவலக்கருதுமொன்றுறுவல்கில்லாள்
மேக்குநிமிர்விம்மலள்விழுங்கலுறுகின்றாள். (௬௭)

நீண்டவிழிநேரிழைதன்மின்னிறமெல்லாம்
பூண்டதொளிர்பொன்னனையபொம்மனிறமெய்யே
ஆண்டகைதன்மோதிர மறித்தபொருளெல்லாம்
தீண்டளவிலவேதிகைசெய்தெய்வமணிகொல்லோ (௬௮)

இருந்துபசியாலிடருழந்தவர்களெய்தும்
அருந்துமமுதாகியகறத்தவளையண்மும்
விருந்துமெனலாகியதுவீயுமுயிர்மீளும்
மருந்துமெனலாகியதுவாழிமணியாழி. (௬௯)

இத்தகையளாகியுயிரோமுறவிளங்கும்
முத்தநகையாள்விழியினாலிமுலைமுன்றில்
தத்தியுகமென்றுதலைதள்ளவுயிர்தந்தாய்
உத்தமவெனாவினையவாசகமுரைத்தாள். (௭௰)

வேறு

மும்மையாமுலகந்தந்த முதல்வர்க்குமுதல்வன்றாதாய்ச்
செம்மையாலுயிர்தந்தாய்க்குச்செயலென்னாலெளியதுண்டே
அம்மையாயத்தனாயவப்பனேயருளின்வாழ்வே
இம்மையேமறுமைதானுநல்கினையிசையோடென்றாள். (௭௧)

பாழியபணைத்தோள்வீர துணையிலேன்பரிவுதீர்த்த
வாழியர்வள்ளலேயான்மறவிலாமனத்தேனென்னின்
ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாமுலகமேழும்
ஏழுப்வீவுற்றஞான்றுமின்றெனவிருத்தியென்றாள். (௭௨)

மீண்டுரைவிளம்பலுற்றாள்விழுமியகுணத்தோய்வீரன்
யாண்டையானிராவலோடுமெவ்வழியெய்தினானை
ஆண்டகையடியேன்செய்கையார்சொலவறிந்ததென்றாள்
தூண்டிரடடந்தோளானுமுற்றதுசோறலுற்றான் (௭௩)

உழைக்குலத்தீயமாயவுருவுகொண்டுறுதல்செய்தான்
மழைக்கருநிறத்துமாயவரக்கன்மாரீசனென்பான்
இழைத்தடமார்பத்தண்ணலெய்ப்பப்போய்வையஞ்சேர்வான்
அழைத்ததவ்வோசையுன்னைமயக்குதற்கரக்கன்சொல்ல. (௭௪)

இக்குரலிளவல்கேளாதொழிகெனவிறைவனிட்டான்
மெய்க்குரல்சாபம்பின்னைவிளைந்ததுவிதியின்மெய்ம்மை
பொய்க்குரலென்றுபோலாம்பொருள்பின்னர்ப்பயக்குமென்பான்
கைக்குரல்வரிவில்லானுமிளையவன்வரவுகண்டான். (௭௫)

கண்டபினிளையவீரன்முகத்தினாற்கருத்தையோர்ந்த
புண்டரீகக்கண்ணனுமுற்றதுபுகலக்கேட்டான்
உண்டிறைசாலவநகானின்றிருவடிவுகாணான்
உண்டுயிரிருந்தானின்னலுழப்பதற்கேதுவொன்றோ. (௭௬)

தேண்டிநேர்கண்டேன்வாழிதீதிலனெங்கோனுகம்
பூண்டமெய்யுயிரோபோகப்பொய்யுயிர்போலநின்ற
ஆண்டகைநெஞ்சினின்றுமகன்றிலையழிவுண்டாமோ
ஈண்டுநீயிருந்தாயாண்டங்கெவ்வுயிர்விடுமிராமன். (௭௭)

அந்நிலைபாயவண்ணலாண்டுநின்றன்னைநின்னைத்
துன்னிநுங்காணும்யாறுமலைகளுந்தொடர்ந்துநாடி
இன்னுயிரின்றியேகுமியந்திரப்படிவமொப்பான்
தன்னுயிர்புகழ்க்குவிற்றசடாயுவைவந்துசார்ந்தான். (௭௮)

வந்தவன்மேனிநோக்கிவானுயர்துயரின்வைகி
எந்தைநீயுற்றதென்னையியம்பெனவிலங்கைவேந்தன்
சுந்தரிநிலைனச்செய்தவஞ்சனைசொல்லச்சொல்ல
வெந்தனவுலகமென்னநிமிர்ந்ததுசீற்றவெந்தீ. (௭௯)

சீறியிவ்வுலகமூன்றுந்தீந்துகச்சினவாயம்பால்
நூறுவெனென்றுகைவிற்குனிக்கியகாலைநோக்கி
ஊறொருசிறியோன்செய்யமுனிதியோவுலகையுள்ளம்
ஆறுதியென்றுதாதையாற்றலிற்சீற்றமாற்றி. (௮௰)

எவ்வழியேகியுற்றான்யாண்டையானுறையுள்யாது
செவ்விதோய்கூறுகென்னச்செப்புவானுற்றசெவ்வி
வெவ்வியவிதியின்கோட்பால்விடினன்கழுகின்வேந்தன்
எவ்வியவரிவிற்செங்கையிருவருமிடரில்வீழ்ந்தார். (௮௧)

அயர்த்தவரரிதிற்றேறியாண்டொழிற்றாதைக்காண்டச்
செயத்தகுகடன்மையாவுந்தேவருமருளச்செய்தார்
கயத்தொழிலரக்கன்றன்னைநாடிநாங்காண்டுமென்னாப்
புயற்றெழுகுடுமிக்குன்றுங்கானமுங்கடிதுபோனார். (௮௨)

அவ்வழிநின்னைக்காணுநசையர்த்தவரரிதிற்றேறிச்
செவ்வழிநயனஞ்செல்லுநெடுவழிசேறுசெய்ய
வெவ்வழலுற்றமெல்லென்மெழுகெனவழியுமெய்யன்
இவ்வழியினையபன்னியறிவழிந்திரங்கலுற்றான். (௮௩)

வேறு.

கன்மத்தைஞாலத்தவராருளரோசடப்பார்
பொன்மொய்த்ததோளான்மயல்கொண்டுபுலன்கள்வேறாய்
நன்மத்தைநாகத்தயல்சூடியநம்பனேபோல்
உன்மத்தனானான்றனையொன்றுமுணர்ந்திலாதான். (௮௪)

போதாயினபோதுனதண்புனலாடல்பொய்யோ
சீதாபவளக்கொடியன்னவட்டேடியென்கண்
நீதாகருகிற்றிலையேனெருப்பாதியென்னாக்
கோதாவிரியைச்சினங்கொண்டனன்கொண்டலொப்பான். (௮௫)

குன்றேகடிதோடினைகோமளக்கொம்பரன்ன
என்றேவியைக்காட்டுதிர்நாட்டலையென்னினிவ்வும்
பொன்றேயமையும்முனுடைக்குலமுள்ளவெல்லாம்
இன்றேபிளவாவெரியாக்கரியாக்கவென்றான். (௮௬)

பொன்மானுருவாற்சிலமாயைபுணர்க்கவன்றோ
என்மானகல்வுற்றனளிப்பொழுதென்கணென்று
நன்மாக்களைநோக்கிநுந்நாமமுமாட்டுவெனின்றே
வின்மாண்கொலைவாளியினென்றுவெகுண்டுநின்றான். (௮௭)

வேறுற்றமனத்தவனின்னதொர்விட்டமேவ
ஆறுற்றநெஞ்சிற்றனதாருயிராயதம்பி
கூறுற்றசொல்லென்றுளகோதறுநன்மருந்தால்
தேறுற்றுயிர்பெற்றியல்புஞ்சிலசொல்லலுற்றான். (௮௮)

வந்தானிளையானொடுவானுயர்தேரின்வைகும்
நந்தாவிளக்கின்வருமெங்குலநாதன்வாழும்
சந்தார்தடங்குன்றினிற்றன்னுயிர்க்காதலோனும்
செந்தாமரைக்கண்ணனுநட்டனர்தேவருய்ய. (௮௯)

உண்டாயதுமுற்றதுமுற்றுமுணர்த்தியுள்ளம்
புண்டானெனநோயுறவிம்முறுகின்றபோழ்தின்
எண்டானிழந்திட்டனனேந்திழையாங்கள்காட்டக்
கண்டானுயர்வேதமும்போதமுங்காண்கிலாதான் (௯௰)

தணிநின்றநஞ்சொற்றொடர்த்தன்மையத்தன்மைதன்னைத்
துணிகொண்டுழலுங்குஞ்சுடர்வேலவன்றாயநின்கண்
அணிகண்டபழியேயமுதந்தெளித்தாலுமாறாப்
பிணிகொண்டதுபண்டதுண்டாயினும்பேர்ப்பதன்றால். (௬௧)

அயர்வுற்றரிதிற்றெளிந்தம்மலைக்கப்புறத்தோர்
உயர்பொற்கிரியுற்றுளான்வாலியென்றோங்கலொப்பான்
துயருற்றவிராவணன்வாலிடைப்பண்டுதூங்க
மயர்வுற்றபொருப்பொடுமால்கடறாவிவந்தான். (௬௨)

ஆயானையோரம்பினிலாருயிர்வாங்கியன்பிற்
றூயான்வயினவ்வரசீந்தவன்சுற்றுசேனை
மேயான்வருவானெனவிட்டனன்மேவுகாறும்
ஏயானிருந்தானிடைதிங்களிரண்டிரண்டும், (௬௩)

பிற்கூடியசேனைபெருந்திசைபின்னவாக
விற்கூடுநுதற்றிருநின்னிடைமேவவேவித்
தெற்கூடுநுவக்கடிதேவினன்சேர்ந்ததென்ன
முற்கூடியகூறினன்காலமோமூன்றும்வல்லான். (௬௪)

வேறு.

அன்பினனிவ்வுரையுணர்த்தவாரியன்
வன்பொறைநெஞ்சினளருத்தமுன்னுவாள்
என்புறவுருகினளிரங்கியேங்கினள்
துன்பமுமுவகையுஞ்சுமந்தவுள்ளத்தாள். (௬௫)

நையுறுசிந்தையளையனவாரியின்
தொய்யல்வெஞ்சுழியிடைச்சுழிக்குமேனியள்
ஐயநீயளப்பருமளக்கர்நீந்தினை
எய்தியதெப்பரிசியம்புவாயென்றாள், (௬௬)

சுருங்கிடையுன்றொருதுணைவன்றாயதாள்
ஒருங்குடையுணர்வினோய்நின்மாயையின்
பெருங்கடல்கடந்தனர்பெயரும்பெற்றிபோல்
கருங்கடல்கடந்தனன்காலினாலென்றான். (௬௭)

இத்துணைச்சிறியதோவொண்ணில்யாக்கையை
தத்தினைகடலதுதவத்தினையதோ
சித்தியினியன்றதோசெப்புவாயென்றாள்
முத்தினுநிலவினுமுறுவன்முற்றினாள். (௬௮)

கட்டினனின்றனன்றொழுதகையினன்
விட்டுயர்தோளினன்விசும்பின்மேக்குயர்
எட்டருநெடுமுகடெய்திநீளுமேல்
முட்டுமென்றுருவொடுவளைந்தமூர்த்தியான். (௯௯)

செவ்வழிப்பெருமையென்றுரைக்குஞ்செம்மைதான்
வெவ்வழிப்பூகம்மாறாநந்தின்மேலதோ
அவ்வழித்தன்றெனினநுமன்பாலதோ
எவ்வழித்தாகுமென்றெண்ணுமீட்டதே. (௱)

ஒத்துயர்கனகவான்கிரியிலோங்கிய
மெய்த்துறுமரந்தொறுமின்மினிக்குலம்
மொய்த்துளவாமெனமுன்னும்பின்னரும்
தொத்தினதாரகைமயிரின்சுற்றெலாம். (௱க)

கண்டலமறிவொடுநடந்தகாட்சியன்
விண்டலமிருபுடைவிளங்குமெய்ம்மையக்
குண்டலமிரண்டெனக்கோளிம்மாச்சுடர்
மண்டிலமிரண்டொடுமாறுகொண்டவே. (௱௨)

ஏவலினொருகுரங்கிதென்றெண்ணலா
ஆணையையநுமனையமையநோக்குவாள்
சேணுயர்பெருமையோர்திறத்ததன்றெனு
நாணுறுமுலகெலாமளந்தநாயகன். (௱௩)

எண்டிசைமருங்கினுமுலகம்யாவினும்
தண்டலிலுயிரெலாந்தன்னைநோக்கின
அண்டமென்றதினுறையமரர்யாரையும்
கண்டனன்றானுந்தன்கமலக்கண்களால். (௱௪)

எழுந்துயர்நெடுந்தகையிரண்டுபாதமும்
அழுந்துறவழுத்தலினிலங்கையாழ்கடல்
விழுந்ததுநிலமிசைவிரிந்தவெண்டிரை
தழைந்தனபுரண்டனமீனந்தாமெலாம். (௱௫)

வஞ்சியும்மருங்குலம்மறுவில்கற்பினாள்
கஞ்சமும்புரைவனகழலுங்கண்டிலாள்
துஞ்சினராக்கரொன்றுவக்குஞ்சூழ்ச்சியாள்
அஞ்சினெனிவ்வுருவடங்குவாயென்றாள், (௱௬)

முழுவதுமிவ்வுருக்காணமுற்றிய
குழுவிலதுலகினிக்குறுகுவாயென்றாள்
எழுவினுமெழிலிலங்கிராமன்றோள்களைத்
தழுவினளாமெனத்தளிர்க்குந்தன்மையாள். (௱௭)

ஆண்டகையநுமனுமருளதாமென
மீண்டனன்விசும்பெனும்பதத்தைமீச்செல்வான்
காண்டலுக்கரியதோருருவங்காட்டினான்
தூண்டருவிளக்கனையிழையசொல்லினாள். (௱௮)

வேறு.

இடந்தாயுலகைமலையோடுமெடுத்தாய்விசும்பையிமைசுமக்கும்
படந்தாழரவைபொருவரத்தாற்பறித்தாயெனினும்பயனின்றால்
நடந்தாயிடையேயென்றால நாணுநினக்குநளிர்கடலைக்
கடந்தாயென்றாலென்னாகுங் காற்றுமன்னகடுமையாய். (௱௯)

ஆழிநெடுங்கையாண்டகைதன்னருளும்புகழுமழிவின்றி
ஊழிபலவுநிலைநிறுத்தற்கொருவனீயேயுளையானாய்
பாழிநெடுந்தோள்வீராநின்பெருமைக்கேற்பப்பகையிலங்கை
ஏழுகடற்குமப்புறத்ததாகாதிருந்ததிழிபன்றோ. (௱௰)

அறிவுநீயேயுருவீந்தயாற்றலீதேயரும்புலத்தின்
செறிவுநீயேசெயலீதேதேற்றநீயேதேற்றத்தின்
நெறியுநீயேநினைவீதேநீதியீதேநினக்கென்றால்
வெறியரன்றோகுணங்களான்விரிஞ்சன்முதலாமேலானோர். (௱௰௧)

பின்னேயெயிற்றுவல்லரக்கர்வீக்கநோக்கிவீரர்க்குப்
பின்னேபிறந்தானல்லதோர்துணையிலாதபிழைநோக்கி
உன்றுநினைந்தேயுடைகின்றேனொழிந்தேனையமுயிருயிர்த்தேன்
என்னைநிருதரொன்றுவரிவனேயெங்கோன்றுணையென்றால். (௱௰௨)

மாண்டேனெனினும்பழுதன்றேயின்றேமாயச்சிறைநின்றும்
மீண்டேனென்னையொறுத்தாரைக்குலங்களோடும்வேரறுத்தேன்
பூண்டேனெங்கோன்பொலன்கழுற்புகழேயன்றிப்புன்பழியும்
தீண்டேனென்றுமனமகிழ்ந்தாளருவின்முகத்துத்திருவன்னாள். ()

அன்னணற்பெரியோனடிவணங்கியறியவுரைப்பானருந்ததியே
வண்ணக்கடலினிடைக்கிடந்தமணலிற்பலரால்வானரத்தின்
எண்ணற்கரியபடைத்தலைவரிராமற்கடியார்யானவர்தம்
பண்ணைக்கொருவனெனப்போந்தேனேவக்கடவபணிசெய்வேன். ()

வெள்ளமேழுபத்துள்ளதால்வீரன்சேனையின்வேலைப்
பள்ளமொருகைநீரள்ளிக் குடிக்கச்சாலும் பான்மையதோ
கள்ளவரக்கர்கடியிலங்கைகாணுதொழிந்ததாலன்றே
உள்ளதுணைபுமுள்ளதாவதறிந்துபின்னுமுளதாமோ. (௩௰௫)

வாலிபிள்ளைவல்வன்மைமைந்தன்மயிந்தன்றுமிந்தன்வயக்குமுதன்
நீலனிடபன்குமுதாக்கன்பனசன்சாபமெறிஞ்சாம்பன்
காலனனையதுன்மருடன்காம்பன்கவயன்கவயாக்கன்
ஞாலமறியுநற்சங்கன்வினதன்றுயிந்தனளனென்பான். (௩௰௬)

கும்பன்றாமதத்தனிப்பெயரோன்றதிபின்வதனன்சதவலியென்
றிம்பருலகோடெவ்வுலகுமெடுக்குமிடக்கரிராமன்கை
அம்பினுதவும்படைத்தலைவரவரைநோக்கினிவ்வரகயர்
வம்பினமுலையாயுறையிடவும்போதார்கணக்குவரம்புண்டோ (௩௰௭)

உருக்காட்டுப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - ௫ - இ - திருவிருத்தம் - ௯௱௯.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ௬-வது சூடாமணிப்படலம்.

வேறு.

உண்டிதுணையென்னவெளிதோவுலகினம்மா
புண்டரிகைபோலுமிவளின்னல்புரிகின்றாள்
அண்டமுதனாயகனதாவியனையாளைக்
கொண்டகல்வதீதகருமமென்றுணர்வுகொண்டான். (௧)

கேட்டியடியேனுரைமுனிந்தருளல்கேளாய்
வீட்டியிடுமெல்லவனை வேறல்வினையன்றால்
ஈட்டியினியென்பலவிராமனெதிர்நின்னைக்
காட்டியடிதாழ்வெனிதுகாண்டியிதுகாலம். (௨)

பொன்றினிபொலன்கொடியென்மென்மயிர்பொருந்தித்
தோன்றியபுயத்தினிதிருக்கதுயர்விட்டாய்
இன்றுயில்விளக்கவொரிமைப்பினிறைவைகும்
குன்றிடையுனைக்கொடுகுதிப்பெனிடைகொள்ளேல். (௩)

அறிந்திடையரக்கர்தொடர்வார்களுளராமேல்
முறிந்துதிரநூறியெதிரொன்சினமுடிப்பேன்
நெறிந்தகுழனின்னிலைமைகண்டுநெடியோன்பால்
வெறுங்கைபெயரேனொருவராலும்வெளியாதேன். (௪)

இலங்கையொடுமேருதிகொலென்னினுமிடந்தென்
வலங்கொளொருகைத்தலையில்வைத்தெதிர்தடுப்பான்
விலங்கினனைநூறிவரிவெஞ்சிலையினேர்கம்
பொலன்கொள்கழறாழ்குவெனிதல்லைபொருளன்றால்.

அருந்ததியுரைத்தியழகற்கருகுசென்றுன்
மருந்தனையதேவிநெடுவஞ்சர்சிறைவைப்பில்
பெருந்துயரினோடுமொருவீடுபெறவில்லா
திருந்தனளெனப்பரிவினல்லடிமையென்றும். (௬)

புண்டொடர்வகற்றியபுயத்திறனொடுபுக்கேன்
விண்டவர்வலத்தையும்விரித்துரைசெய்கேனோ
கொண்டுவருகிற்றிலெனுயிர்க்குறுதிகொண்டேன்
கண்டுவருகிற்றிலெனெனக்கழறுகேனோ. (௭)

இருக்குமதில்சூழ்கடியிலங்கையையிமைப்பின்
உருக்கியெரியாவிகலரக்கரையுமொன்றா
முருக்கிநிருதக்குலமுடித்துவினைமுற்றிப்
பொருக்கவகலச்செல்லினுமதின்றுபுரிகின்றேன். (௮)

இந்துநுதனின்றொடிவணைய்தியிகல்வீரன்
சிந்தையுறுவெந்துயர்தவிர்ந்துதெளிவோடும்
அந்தமிலரக்கர்குலமற்றவியநூறி
நந்தலில்புவிக்கணிடர்பிற்களைதனன்றால். (௯)

வேறினிவிளம்பவுளதன்றுவிதியாலிப்
பேறுபெறவென்றனைருடந்தருளுபின்போய்
ஆறுதுயரஞ்சொலிளவஞ்சியடியன்றேள்
ஏறுகடிதென்றுதொழுதின்னடிபணிந்தான். (௰)

வேறு.

ஏயநன்மொழியெய்தவிளம்பிய
தாயின்முன்னியகன்றனையான்றனை
ஆயதன்மைபரியதன்றமெனத்
தூயமென்சொலினையனசொல்லினாள். (௰௧)

# சூடாமணிப்படலம்

அரியதன்றுநின்னாற்றலுக்கேற்றதே
தெரியவெண்ணினைசெய்வதுஞ்செய்தியே
உரியதன்றெனவோர்கின்றதுண்டதென்
பெரியபேதைமைச்சின்மதிப்பெண்மையால். (௰௨)

வேலையின்னிடையேவந்துவெய்யவர்
கோலிவெஞ்சரநின்றொடுங்கோத்தபோ
தாலமன்னவர்க்கல்லையெற்கல்லையால்
சாலவுந்தடுமாறுந்தனிமையோய். (௰௩)

அன்றியும்பிறிதுள்ளதொன்றுரியன்
வென்றிவெஞ்சிலைமாசுணும்வறினி
தன்றியென்பதம்வஞ்சித்தநாய்களின்
நின்றவஞ்சனைநீயுநினைத்தியோ. (௰௪)

கொண்டபோரினுங்கொற்றவன்விற்றொழில்
அண்டரோவருநோக்கவென்னாக்கையைக்
கண்டபோரரக்கன்விழிகாகங்கள்
உண்டபோதன்றி யானுளெனாவெனோ. (௰௫)

வெற்றிநாணுடைவில்லியர்விற்றொழில்
முற்றநாணிலரக்கியர்மூக்கொடும்
அற்றநாணினராயினம்போதன்றிப்
பெற்றநாணமும்பெற்றியதாகுமோ. (௰௬)

பொற்பிறங்க விலங்கைபொருந்தலர்
எற்புமால்வரையாகிலதேயெனின்
இற்பிறப்புமொழுக்குமிழுக்கமில்
கற்பும்யான்பிறர்க்கெங்ஙனங்காட்டுகேன். (௰௭)

அல்லன்மாக்களிலங்கையதாகுமோ
எல்லைநீத்தவுலகங்கள்யாவுமென்
சொல்லினாற்சுடுவேனதுதூயவன்
வில்லினாற்றற்குமாசென்றுவீசினேன். (௰௮)

வேறுமுண்டுரைகேளதுமெய்ம்மையோய்
ஏறுசேவகன்மேனியல்லாலிடை
ஆறுமைம்பொறிநின்னையுமாணெனக்
கூறுமிவ்வுருத்தீண்டுதல்கூடுமோ. (௰௯)

தீண்டுவானெனினித்தனைச்சேண்பகல்
ஈண்டுமோவுயிர்மெய்யினிமைப்பின்முன்
மாண்டுதீர்வனென்றேநிலம்வன்மையால்
கீண்டுகொண்டெழுந்தேகினன்கீழ்மையான் (௨௰)

மேவுசிந்தையின்மாதரைமெய்தொடின்
தேவுவன்றலைசிந்துகவீதெனப்
பூவின்வந்தபுராதனனேபுகல்
சாவமுண்டெனதாருயிர்தந்ததால். (௨௧)

அன்னசாவமுளதெனவாண்மையான்
மின்னுமௌலியன்மெய்ம்மையல்வீடணன்
கன்னியென்வயின்வைத்தகருணையாள்
சொன்னதுண்டுதுணுக்கமகற்றுவாள். (௨௨)

ஆயதன்மையினானுமதன்றெனின்
மாய்வென்மன்றவறம்வழுவாதென்றும்
நாயகன்வலியெண்ணியநானுடைத்
தூய்மைகாட்டவுமித்துணைதாங்கினேன். (௨௩)

ஆண்டுநின்றுமரக்கனகழ்ந்துகொண்
டீண்டுவைத்ததிளவலியற்றிய
நீண்டசாலையொடுநிலைநின்றது
யாண்டையையநின்மெய்யுணர்கண்களால். (௨௪)

தீர்விலேனிதொருபகலுஞ்சிலை
வீரன்மேனியைமானுமிவ்வீங்குநீர்
நாரநாண்மலர்ப்பொய்கையைநண்ணுவென்
சோருமாருயிர்காக்குந்துணிவினால். (௨௫)

ஆதலானதுகாரியமன்றைய
வேதநாயகன்பாலினிமீண்டனை
போதல்காரியமென்றனன்பூவையக்
கோதிலானுமினையனகூறினான். (௨௬)

நன்றுநன்றிவ்வுலகுடைநாயகன்
தன்றுணைப்பெருந்தேவிதவத்தொழிற்
கென்றுசிந்தைகளித்துவந்தேத்தினான்
நின்றசங்கையிடரொடுநீங்கினான். (௨௭)

இருளறுநூலரிராவணனலிது
தெருளறுநீயினிச்சிற்பகறங்குறின்
மருளறுமன்னவற்கியான்சொலும்வாசகம்
அருளறுவாயென்றடியினிறைஞ்சினான் (௨௮)

இன்னுமீண்டொருதிங்களிருப்பல்யான்
நின்னைநோக்கிப்பகர்ந்ததுநீதியோய்
பின்னையாவிபிடிக்கின்றிலேனிந்த
மன்னனாணையிதனைமனக்கொணீ. (௨௯)

ஆரந்தாழ்திருமார்பற்கமைந்ததோர்
தாரந்தானலளேனுந்தயாவெனும்
ஈரந்தானதற்கில்லலென்றாலுந்தன்
வீரங்காத்தலைவேண்டென்றுவேண்டுவாய். (௩௰)

ஏத்தும்வென்றியிளையவற்கொரு
வார்த்தைகூறுதிமன்னருளாலெனைக்
காத்திருந்தவற்கேகடனன்றிடை
கோத்தவெஞ்சிறைவீடென்றுகூறுவாய். (௩௧)

திங்களொன்றினெனச்செய்தவந்தீர்ந்ததால்
இங்குவந்திலனேயெனின்யாணர்நீர்க்
கங்கையாற்றங்கரையடியேற்குந்தன்
செங்கையாற்கடன்செய்யென்றுசெப்புவாய். ௩௨.

சிறக்குமாமியர்மூவர்க்குஞ்சீதையாள்
இறக்கின்றாடொழுதாளெனுமின்னசொல்
அறத்தினாயகன்பாலருளின்மையால்
மறக்குமாயினுநீமறவேலையா. (௩௩)

வந்தெனைக்கரம்பற்றியவைகல்வாய்
இந்தவிப்பிறவிக்கிருமாதரைச்
சிந்தையாலுந்தொடேனென்றசெவ்வரம்
தந்தவார்த்தைதிருச்செவிசாற்றுவாய். (௩௪)

ஈண்டுநானிருந்தின்னுயிர்மாயினும்
மீண்டுவந்துபிறந்துதன்மேனியைத்
தீண்டலாவதோர்தீவினைதீர்வரம்
வேண்டினாடொழுதென்றுவிளம்புவாய். (௩௫)

அரசுவீற்றிருந்தாளவுமாமணிப்
புரசையானையின்வீதியிற்போகவும்
விரசுகோலங்கள்காணவிதியிலேன்
உரைசெய்தென்னையெல்லூழ்வினையுன்னுமேயம் ( )

தன்னைநோக்கியுலந்தளர்தற்கும்
அன்னைநாய்க்கும்பரதனைங்காற்றுறும்
இன்னநேனுப்பக்குமறுகுவதன்றியே
என்னைநோக்கியிங்கெங்ஙனமெய்துமோ. (௧௭)

வேறு.

எந்தையாய்முதலியகிளைஞர்யார்க்குமென்
வந்தனைவிளம்புதிநவிபின்மன்னனைச்
சுந்தரத்தோளனைத்தொடர்ந்துகாத்துப்போய்
அந்தமினெடுநகர்க்கரசனுக்கென்பாய். (௧௮)

இத்திறமினையனைவிளம்பவின்னுநீர்
நத்துறவொழிந்திலீர்கையலீமொறு
எத்திறத்தேதுவுமியைந்தவின்னுரை
ஒத்தனதெரிவுறவுணர்த்திஞனமோ. (௧௯)

வேறு.

வீவாய்நீயிவண்மெய்யஃதே
ஓய்வானின்னுயிருய்வானும்
போய்வானந்நகர்புக்கன்றோ
வேய்வான்மௌலிபுமெய்யன்றோ (௪௰)

கைத்தோடுஞ்சிறைகற்போயை
வைத்தோனின்னுயிர்வாழ்வானும்
பொய்த்தோர்வில்லிகள்போவாராம்
இத்தோடொப்பதியாதுண்டே. (௪௧)

நல்லோய்நின்னைநலிந்தோரைக்
யொல்லேமெம்முயிர்கொண்டங்கே
எல்லோருஞ்செலவெங்கோனும்
வில்லோடுஞ்செலவேண்டாவோ. (௪௨)

நீந்தாவின்னலினீந்தாமே
தேய்ந்தாறுதபெருஞ்செல்வம்
ஈந்தானுக்குனையீயாதே
ஓய்ந்தாலெம்மினுயர்ந்தாரியார். (௪௩)

நன்றாப்நல்வினைநல்லோனைத்
தின்றார்தங்குடர்பேய்தின்னக்
கொன்றாலல்லதுகொள்ளேனோ
டென்றானுக்கிவையியலாவோ. (௪௪)

மாட்டாதார்சிறைவைத்தோனை
மீட்டாமென்கிலமீள்வாமேல்
நாட்டார்நல்லவர்நன்னாளும்
கேட்டாரிவ்வுரைகேட்பாரோ. (௪௫)

பூண்டாள்கற்புடையாள்பொய்யாள்
தீண்டாவஞ்சகர்தீண்டாமுன்
மாண்டாளென்றுமனந்தேறி
மீண்டால்வீரம்விளங்காதோ. (௪௬)

கெட்டேநீயுயிர்கேதத்தால்
விடாயென்றிடின்மெல்லம்பால்
ஒட்டாரோடுலகோரேழும்
சுட்டாலுந்தொலையாவன்றே. (௪௭)

முன்னேகொல்வான்மூவுலகும்
பொன்னேயோங்கியபோர்வில்லான்
என்னேநின்னிலையீதென்றால்
பின்னேசெம்மைபிடிப்பானே. (௪௮)

கோளாருயிர்கோளோடும்
மூளாவெஞ்சினமுற்றாகா
மீளாவேலையல்வேறுண்டோ
மாளாதோபுவிவானோடும். (௪௯)

தாழிக்கண்கடறம்மோடும்
எழுக்கேழுலகெல்லாமன்
ஆழிகளையவனம்பம்மா
ஊழித்தீயெனவுண்ணாவோ. (௫௰)

படுத்தான்வானவர்பற்றாரைத்
தடுத்தான்றீவினைதக்கோரை
எடுத்தானவ்வினையெந்நாளும்
கொடுத்தானென்றிலைகொள்ளாயோ. (௫௧)

சின்னாணீயிடர்தீராதாய்
இன்னாவைகலினெல்லோரும்
நன்னாள்காணுதனன்றன்றோ
உன்னானல்லறமுண்டானால். (௫௨)

புளிக்குங்கண்டகர்புண்ணீருள்
குளிக்கும்பேய்க்குடையுந்தோறும்
ஒளிக்குந்தேவ ருவந்துள்ளம்
களிக்குந்நல்வினைகாணாயோ. (௫௩)

வேறு.

ஊழிப்பிணிறுதியினாறுமெறிந்தெனக்
கேழ்கிளர்சுடுகணைகிழித்தபுண்பொழி
தாழிருங்குருதியிற்றரங்கவேலைகள்
எழுமொன்றாகநின்றிரைப்பக்காண்டியால். (௫௪)

சூலிநம்பெருவலிறலைத்துச்சோர்வுறும்
ஆலியங்கண்ணியரறுத்துநீத்தன
வாலியுங்கடப்பருவனப்பவாணுயர்
தாலியம்பெருமலைதயங்கக்காண்டியால். (௫௫)

விண்ணினீளியநெடுங்கழுதும்வெஞ்சிறை
எண்ணினீவியபெரும்பறவையீட்டமும்
புண்ணினீர்புனரியிற்படிந்துபூவையர்
கண்ணினீராற்றினிற்குளிப்பக்காண்டியால். (௫௬)

கரம்பயின்முரசினங்கறங்கக்கைதொடர்
நரம்பினுழிமிழிசைநவிலநாடகம்
அரம்பையராடியவரங்கினுண்டொழிற்
குரங்குகண்முறைமுறைகுனிப்பக்காண்டியால். ()

புரையுறுபுன்றொழிலரக்கர்புண்பொழி
திரையுறுகுருதியாதீர்ப்பச்செல்வன
வரையுறுபிணப்பெரும்பிறக்கமண்டின
கரையுறுநெடுங்கடலார்ப்பக்காண்டியால். (௫௮)

வினையுடையரக்கராமிருந்தைவெந்துகச்
சனகியென்றொருதழனடுவட்டங்கலான்
அனகன்றையம்பெனுமாவிலூதையால்
கனகநீடிலங்கைநின்றுருகக்காண்டியால். (௫௯)

தாக்கியவிராவணன்றலையிற்றாவின
பாக்கியமனையநின்பழிப்பின்மேனியை
நோக்கியகண்களைநுதுகொண்மூக்கினால்
காக்கைகள்கவர்ந்துகொண்டுண்ணக்காண்டியால்.

மேலுறவிராவணற்கழிந்துவெஃகிய
நீலுறுதிசைக்கரிநிரிந்துநிற்பன
வாலுறவனையவன்றலையைவவ்வலின்
காலுறுகணைபடிந்திடுவகாண்டியால். (௬௧)

நீர்த்தெழுகணைமழைவழங்குநீலவான்
வேர்த்ததென்றிடையிடைவீசுந்தூசுபோல்,
போர்த்தெழுபொலன்கொடியிலங்கைப்பூழிபோ
டார்த்தெழுகழுதினாத்தாடக்காண்டியால். (௬௨)

நீனிறவரக்கர்தங்குருதிநீத்தநீர்
வேலைமிக்காற்றொடுமீளவேலைசூழ்
ஞாலமுற்றுங்கடையுகத்துநச்சறாக்
காலனும்வெறுத்துயிர்காலக்காண்டியால். (௬௩)

அணங்கிளமகளிரொடரக்கராடுறு
மணங்கிளர்கற்பகச்சோலைவாவிவாய்ப்
பிணங்குறுவான்முறைபிடித்துமாலைய
கணங்கொடுகுரக்கினங்குளிப்பக்காண்டியால். ()

செப்புறலென்பலதெய்வவாளிகள்
இப்புறத்தரக்கரைமுருக்கியேகின
முப்புறத்துலகையுமுடிக்கமூட்டலான்
அப்புறத்தரக்கருமவியக்காண்டியால் (௬௫)

கண்டொருதிங்களிவ்விடரின்வைகுதல்
வேண்டுவதன்றுநான்விரைவின்வீரனைக்
காண்டலேகுறைவுபின்காலம்வேண்டுமோ
ஆண்டகையினியொருபொழுதுமாற்றுமோ (௬௬)

ஆவியுண்டென்னுமீதுண்டென்றாருயிர்ச்
சேவகன்றிருவுருத்தீண்டத்தீதிலாப்
பூவிலைதளிரிலைபொரிந்துவெந்திலாக்
காவிலைகொடியிலைநெடியகானெலாம். (௬௭)

சோகம்வந்துறுவதுதெளிவுதோய்ந்தன்றே
மேகம்வந்திடித்துவந்துருமுவீழ்கினும்
ஆகமும்புயங்களுமழுந்தவைத்தலை
நாகம்வந்தடர்ப்பினுமுணர்வுநாறுமோ. (௬௮)

மத்துறுதயிரெனவந்துசென்றிடை
தத்துறுமுயிரொடுபுலன்கடள்ளுறும்
பித்துநின்பிரிவினிற்பிறந்தவேதனை
எத்தனையுளவவையெண்ணுமீட்டவோ. (௬௯)

இந்நிலையுடையவன்றரிக்குமென்றியேல்
மெய்ந்நிலையுணர்ந்துநீஇ யிடைந்ததீதெனின்
பொய்ந்நிலைகொண்டியான்புகன்றதாகுமுன்
கைந்நிலைநெல்லியங்கனியிற்காட்டுவேன். (௭௰)

தீர்த்தனுங்கவிக்குலத்திறையுந்தேவிநின்
வார்த்தைகேட்டுவப்பதன்முன்னர்மாக்கடல்
தூர்த்தனவிலங்கையைச்சுழுமாக்குரங்
கார்த்ததுகேட்டுவந்திருத்தியன்னைநீ. (௭௧)

எண்ணருப்பெரும்படைநாளையிந்நகர்
நண்ணியபொழுதுநடுவணங்கைநீ
விண்ணுறக்கருளன்மேல்விளங்கும்விண்டுவின்
கண்ணனையன்னெடுவெரிநிற்காண்டியால். (௭௨)

அங்கதன்றோண்மிசையிளவலம்மலை
பொங்குவெங்கதிரெனப்பொலியப்போர்ப்படை
இங்குவந்திறுக்குநீயிடருழையமும்
சங்கையுநீங்குதிதனிமைநீங்குவாய். (௭௩)

குராவருங்குழலியிக்குறித்தநாளினே
விராவருநெடுஞ்சிறைமீட்கிலானெனின்
பராவருப்பழியொடும்பாவம்பற்றுதற்
கிராவணனவனிவனிராமனென்றனன். (௭௪)

வேறு

ஆகவிம்மொழியாசிலகேட்டறிவுற்றாள்
ஓகைகொண்டுகளிக்குமனத்தளுயர்ந்தாள்
போதைநன்றிவனென்பதுபுந்தியின்வைத்தாள்
தோகையுஞ்சிலவாசகமின்னனசொன்னாள். (௭௫

சேறிணையயவிளைந்தணீயகையெல்லாம்
வேறியானினியொன்றும்விளம்பலன்மேலோய்
கூறுகின்றனமுன்குறியுற்றனகோமாற்
கேறுமென்றவைசொல்லெனவின்னவிசைப்பாள். (எசு)

நாகமொன்றியநல்வரையின்றலைமேனாள்
ஆகம்வந்தெனைவள்ளுகிர்வாளினளைந்த
காகமொன்றைமுனிந்தயல்கல்லெழுபுல்லால்
வேகவெம்படைவிட்டதுமெல்லவிரிப்பாய். (எஎ)

அங்கதஞ்சிநடுங்கியயல்பதியண்மி
இங்குநின்வரவென்னவெனக்கனலவெய்த
மங்கைபங்கனொடெண்டிசையுஞ்செலமற்றோர்
தங்கடங்களிடங்கண் மறுத்தமைசைப்பாய். (எஅ)

இந்திரன்றருமைந்தனுறுந்துயர்யாவும்
அந்தரத்தினினின்றவர்கண்டினியந்தோ
எந்தைதன்சரணன்றியோர்தஞ்சமுமின்றால்
வந்தவன்சரண்வீழ்கெனவுற்றதும்வைப்பாய். (எகூ)

ஐயனின்சரணஞ்சரணென்றவனஞ்சி
வையம்வந்துவணங்கிடவள்ளன்மகிழ்ந்தே
வெய்யவன்கணிரண்டொடுபோகெனவிட்ட
தெய்வவெம்படையுற்றுளதன்மைதெரிப்பாய். (அ௰)

எந்தைநின்சரணஞ்சரணென்றவிதன்னால்
முந்துநின்குறையும்பொறைதந்தனமுந்துன்
சந்தமொன்றுகொடித்திரள்கண்கடமக்கே
வந்தொர்நன்மணிநிற்கெனவைத்ததும்வைப்பாய். (அக)

வேகம்விண்டுசயந்தன்வணங்கிவிசும்பில்
போகவண்டர்கள்கண்டலர்கொண்டுபொழிந்தார்
நாகனம்பனிளங்கிளைநன்குணராத
பாகுதங்கியவென்றியினின்சொல்பணிப்பாய். (அஉ)

என்னெனின்னுயிர்மென்கிளிக்கியார்பெயரீகேன்
மன்னவென்றலுமாசறுகைகயன்மாதென்
அன்னைதன்பெயராகெனவன்பினொடன்னாட்
சொன்னமெய்ம்மொழிசொல்லுதிமெய்ம்மைதொடர்ந்தோய். ()

என்றுரைத்தினிதித்தனைபேரடையாளம்
ஒன்றுணர்த்துவதில்லெனவெண்ணிபுணர்ந்தாள்
தன்றிருத்துகிலிற்பொலிவுற்றதுதானே
வென்றதச்சுடர்மேலொடுகீழுறமெய்யால். (௮௪)

வாங்கினாடன்மலர்க்கையினன்னதுமுன்னா
எங்கினனடலநுமனுமென்கொலிதென்னா
வீங்கினான்வியந்தானுலமேழும்விழுங்கித்
தூங்குகாரிருண்முற்றுமிரிந்ததுசுற்றி (௮௫)

மஞ்சலங்கொளிபோனுமிம்மாநகர்வந்தான்
அஞ்சலன்னெனவெங்கணரக்கரயிர்த்தார்
சஞ்சலம்புரிசக்கரவாகமுடன்றாழ்
கஞ்சமும்மலர்வுற்றனகாந்தினகாந்தம். (௮௬)

கூந்தன்மென்மழைகொண்முகின்மேலெழுகோளின்
வேந்ததன்னதுமெல்லிபறன்னெழின்மேனி
சேந்ததற்சமில்சேவகன்சேவடிபுனைபூஉக்
காந்துகின்றதுகாட்டினன்மாருதிகண்டாள். (௮௭)

சூடையின்மணிகண்மணியொப்பனதொன்றாள்
ஆடையின்கணிருந்ததுபேரடையாளம்
நாடிவந்தெனதின்னுயிர்நல்கியநம்பா
கோடியென்றுகொடுத்தனண்மெய்ப்புகழ்கொண்டாள். (௮௮)

தொழுதுவாங்கினன்சுற்றியதூசினன்முற்றப்
பழுதுறுவகைபந்தனைசெய்தனன்வந்தித்
தழுதுமும்மைவலங்கொடிறைஞ்சினனன்போ
டெழுதுபாவையுமேத்தினளேகினனிப்பால். (௮௯)

சூடாமணிப்படலம்- முற்றிற்று.

ஆக படலம் - ௬ - இ - திருவிருத்தம் - ௬௯௫.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# எ-வது. பொழிலிறுத்தபடலம்.

நெறிக்கொடுவடக்குறநினைப்பினிமிர்ந்தான்
பொறிக்குலமலர்ப்பொழிலிடைக்கடிதுபோவான்
சிறுத்தொழின்முடித்தகறதீதெனறெரிந்தான்
மறித்துமொர்செயற்குரியகாரியமதித்தான். (௧)

ஈனமுறுபற்றலரையெற்றியெயின்மூதூர்
மீனநிலயத்திறுதவீசிவிழிமானை
மானவன்மலர்க்கழலின்வைத்துமிலெனென்றால்
ஆனபொழுதெப்பரிசினானடியனாவேன். (௨)

வஞ்சனையரக்கனைநெருக்கிநெடுவாலால்
அஞ்சினொடுவஞ்சுதலைம்தாளுறவசைத்தே
வெஞ்சிறையில்வைத்துமிலென்வென்றுமிலெனென்றால்
தஞ்சமொருவர்க்கொருவரொன்றாகுமன்றே. (௩)

கண்டநிருதக்கடல்கலக்கினன்வலத்தில்
திண்டிறலரக்கனுமிநக்கவொர்சிறத்தின்
மண்டவுகரத்தவண்மலர்க்கழல்பிடித்துக்
கொண்டுசிறைவைத்திடுதலிற்குறைவதுண்டோ. (௪)

மீட்டுமினியெண்ணுப்வினைவேறுமுளதன்றால்
ஓட்டியிவரக்கரையுலைத்துரிமையெல்லாம்
காட்டுகிதும்வகருமமன்னவர்கடுப்போர்
மூட்டும்வகையாவதுகொலென்றமுயல்கின்றான். (௫)

இப்பொழிலினைக்கடிதிறுக்குவெனிறுத்தால்
அப்பெரியபூசல்செவிசார்தலுமரக்கர்
வெப்புறுசினத்தரெதிர்மேல்வருவர்வந்தால்
துப்புறமுருக்கியிருண்பலிதுருசால். (௬)

வந்தவர்கள்வந்தவர்கண்மீள்கிலர்மடிந்தால்
வெந்திறலரக்கனும்விலக்கருவலத்தால்
முந்துமெனினன்னவன்முடித்தலைமுசித்தென்
சிந்தையுறுகோபமுமவித்தினிதுசெல்வேன். (௭)

என்றுநினையாவிரவிசந்திரனியங்கும்
குன்றமிருமோராளையதன்னுருவுகொண்டான்
அன்றலமெயிற்றிடைமொழ்ளனமெனலானான்
றுன்றுகடிகாவினைபடிக்கொடுதுகைத்தான். (௮)

முடிந்தனபிளந்தனமுறிந்தனநெரிந்த
மடிந்தனபொடிந்தனமறிந்தனமுறிந்த
இடிந்தனதகர்ந்தனவெரிந்தனகரிந்த
ஒடிந்தனவொசிந்தனவுலர்ந்தனபிதிர்ந்த. (௯)

வேரொடுமறிந்தசிலவெந்தசிலவிண்ணில்
காரொடுமறிந்தசிலகாலினொடுமேலைத்
தூரொடுமறிந்தசிலதும்பியியாடுவாமோர்
ஊரொடுமறிந்தசிலவுக்கசிலநெக்க. (௰)

சோலைமுதன்மற்றவைசுழற்றியதிசைப்போர்
ஆனைநுகரக்குளகுமானவடிபற்று
மேனிமிரவிட்டனவிசும்பின்வழிமீப்போய்
வானவர்கணந்தனவனத்தொடைப்புமடித்த (௰௧)

அலைந்தனகடற்றிரையரக்கர்கண்மாடம்
குலைந்தனகவிழ்ந்தனகுலக்கிரிகளோடு
மலைந்துபொடியுற்றனமயங்கிநெடுவானத்
துலைந்துவிழுமீனினொடுவெண்மலருதிர்ந்த. (௰௨)

முடக்குநெடுவேரொடுமுகந்துலகமுற்றும்
கடக்கும்வகைவீசினகளித்ததிசையானை
மடப்பிடியினுக்குதவமைப்பினிமிர்கைவைத்
திடுக்கியனவொத்தனவெயிற்றினிடைஞால்வ. (௰௩)

விஞ்சையுலகத்தினுமியக்கர்மலைமேலும்
துஞ்சுதலில்வானவர்துறக்கநகரத்தும்
பஞ்சியடிவஞ்சியர்கண்மொய்த்தனர்பறித்தார்
நஞ்சமனைபானுடையசோலையினரும்பூ. (௰௪)

பொன்றிணிமணிப்பருமரன்றிசைகள்போவ
மின்றிரிவவொத்தனவெயிற்கதிருமொத்த
ஒன்றினொடொன்றிடைபுடைத்துதிரவாழின்
தன்றிரளொடுக்கிவிழுதாரகையுமொத்த. (௰௫)

புள்ளிறொடுவண்டுமிஞிறுங்களிகொள்பூவும்
கள்ளுமுகையுந்தளிர்களோடினியகாயும்
வெள்ளநெடுவேலையிடைமீனினம்விழுங்கித்
துள்ளினமரன்படநெரிந்தனதுடித்த. (௰௬)

தூவியமலர்த்தொகைசுமந்துதிசைதோறும்
பூவின்மணநாறுவபுலால்கமழ்கிலாத
தேவியர்களோடுமுயர்தேவரினிதாடும்
ஆவியெனலாயதிணையார்கவிகளம்மா. (௰௭)

இடந்தமணிவேதியுமிறுத்தகடிகாவும்
தொடர்ந்தனதுரந்தனபடிந்துநெறிதூரக்
கடந்துசெலவென்பதுகடந்தவிருகாலால்
நடந்துசெலலாகுமெனலாகியதுநன்னீர். (௰௮)

வேனில்விளையாடுசுடரோனிறெளிவிம்மும்
வானினிடைவீசியவரும்பணைமரத்தால்
தானவர்கண்மாளிகைதகர்ந்துபொடியாய
வானவிடியாலொடியுமால்வரைகண்மான. (௰௯)

எண்ணிறருகோடிகளெறிந்தனசெறிந்தே
தண்ணமழைபோலிடைதழைந்ததுசலத்தால்
அண்ணலநுமானடலிராவணனதந்நாள்
விண்ணுமொருசோலையுளதாமெனவிதித்தான். (௨௰)

தேனுறைதுளிப்பநிறைபுட்பலசிலம்பப்
பூநிறைமணித்தருவிசும்பினிடையேபோய்
மேன்முறைநெருக்கவொளிவாளொடுவில்வீச
வானிடைநடாயநெடுமானுமெனலான. (௨௧)

சாகநெடுமாப்பணைதழைத்தனதனிப்போர்
நாகமனையானெறியமேனிமிர்வநாளு
மாகநெடுவானிடையிழிந்துபுனல்வாரும்
மேகமெனலாயநெடுமாகவிடலம்வீழ்வ. (௨௨)

வேறு.

ஊனமுற்றிடைமண்ணினுதித்தவர்
ஞானமுற்றுபுநண்ணினர்வீட்டெனத்
தானகற்பகத்தண்டலைவிண்டலம்
போனபுக்கனமுன்னுறைபொன்னகர். (௨௩)

மணிகொள்குட்டிமமட்டித்துமண்டபம்
துணிபடுத்தயல்வாவிதூர்த்தொளிர்
திணிசுவர்த்தலஞ்சிந்திச்செயற்கரும்
பணிபடுத்துயர்குன்றம்படுத்தமோ. (உச)

வேங்கைசெற்றுமராமரம்வேர்பறித்
தோங்குகற்பகம்பூவொடொடித்துராய்
பாங்கர்சண்பகப்பத்திபறித்தயல்
மாங்கனிப்பணைமட்டித்துமாற்றியே. (உரு)

சந்தனங்கடகர்ந்தனதாள்பட
இந்தனங்களின்வெந்தெரிசிந்திட
முந்தனங்கவசந்தன்முகங்கெட
நந்தனங்கள்கலங்கிநடுங்கவே. (உசா)

காமரங்களிவண்டுகலங்கிட
மாமரங்கண்மடிந்தனமண்ணொடு
தாமரங்கவரங்குதகர்ந்துகப்
பூமரங்களெரிந்துபொரிந்தவே. (உஎ)

குழையுங்கொம்புங்கொடியுங்குயிற்குலம்
விழையுந்தண்டளிர்ச்சூழலுமென்மலர்ப்
புழையும்வாசப்பொதும்பும்பொலன்கொடேண்
மழையும்வண்டுமயிலுமறிந்தவே. (உஅ)

பவளமாக்கொடிவீசினபன்மழை
துவளுமின்னெனச்சுற்றிடச்சூழ்வனா
திவளும்பொற்பணைமாமரஞ்சேர்ந்தன
கவளயானையினோடையிற்காந்தவே. (உகூ)

பறவையார்த்தெழுமோசையும்பன்மரம்
இறலெடுத்தவிடிக்குரலோசையும்
அறவணர்த்தெழுமோசையுமண்டத்தின்
புறநிலத்தையுங்கைம்மிகப்போயதே. (௩௰)

பாடலம்படர்கோங்கொடும்பன்னிசைப்
பாடலம்பணிவண்டொடுபஃறிணைப்
பாடலம்புயர்வேலையிற்பாய்ந்தன
பாடலம்பெறப்புள்ளினம்பாறவே (௩௧)

வண்டலம்புநலாற்றின்மராமரம்
வண்டலம்புனலாற்றின்மடிந்தன
விண்டலம்புகநீங்கியவெண்புனல்
விண்டலம்புகநீண்மரம்வீழ்ந்தவே. (௯௨)

தாமரைத்தடம்பொய்கைசெஞ்சந்தனம்
தாமரைத்தன வொத்த குழைத்தலின்
காமரக்கரிவண்டொடுங்கள்ளொடும்
காமரக்கடல்புக்கடல்கன்னடவே. (௯௩)

சிந்துவாரந்திசைதொறுஞ்சென்றன
சிந்துவாரம்புனைதிரைசேர்ந்தன
தந்துவாரம்புதம்வாய்தொளறத்
தந்துவாரந்துகள்படச்சாய்ந்தவே. (௯௪)

நந்தவாநத்துநாண்மலர்நாறின
நந்தவானத்துநாண்மலர்நாறின
சிந்தவாநந்திரிந்துகச்செம்மணி
சிந்தவானந்திரிந்ததிலாக்கடம். (௯௫)

புல்லும்பொற்பணைப்பன்மணிப்பொன்மரம்
கொல்லுமிப்பொழுதேயெனுங்கொள்கையால்
எல்லியிட்டுவிளக்கியவிந்திரன்
வில்லுமொத்தனவிண்ணுறவீசின. (௯௬)

ஆனைத்தானமுமாடலரங்கமும்
பானத்தானமும்பாய்பரிப்பந்தியும்
ஏனைத்தாரணிதேரொடுமிற்றன
கானத்தார்தருவன்னல்கடாவவே. (௯௭)

மயக்கில்பொற்குலவல்லிகள்வாரிநேர்
இயக்குறத்திசைதோறுமெறிந்தன
வெயிற்கதிர்க்கற்றைபற்றுறவீழ்ந்தன
புயற்கடற்றலைபுக்கனபோல்வன. (௯௮)

பெரியமாமரமும்பெருங்குன்றமும்
இரியவீசலினீர்நெடும்பொன்மதில்
நெரியமாடநெருப்பெழநீறெழ
இரியல்போனவிலங்கையுமெங்கணும். (௯௯)

வேறு.

தொண்டையங்கனிவாய்ச்சீதை துயக்கிறலென்னைச்சுட்டாய்
விண்டவானவர்தம்முன்னேவிரிபொழிலிறுத்துவீசக்
கண்டனைநின்றாயென்றுகாலுமேலரக்கன்காய்தல
உண்டெனவெருவினான்போலொளித்தனனுடுவின்கோமான். (ச௰)

காசறுமணியம்பொன்னுங்கார்த்தமுங்களுல்வதாய
மாசறுமரங்களாகக்குயிற்றியமதனச்சோலை
ஆலசவேடோறுமையன்கைகளாலள்ளியள்ளி
வீசியவிளக்கலாமேல்விளங்கினவுலகமெல்லாம். (சக)

சுகறினவெருவிபுள்ளாங்கலங்கினவிலங்குகண்கள்
குகறினபறவைவேலைகுளித்தனகுளித்திலாத
பகறினபறைத்தவானிற்பறந்தனபறந்துபார்வீழ்ந்
துதறினசிறையைமீளவொடுக்கினவுலந்துபோன. (சஉ)

சோட்டொடுந்துறைந்ததெய்வமரந்தொறுந்தொடுத்தபுட்டம்
கூடொடுநீர்குரகைய்புக்கசுன்றெனக்குவவுத்திண்டோள்
சேட்டகன்மரிமொர்பன்சிறியுந்தீண்டறன்றால்
மீட்டவன்கருணைசெய்தாற்பெறுப்பதம்விளம்பலாமே. (சங)

பொய்ம்முறைபரக்கர்காக்கும்புள்ளுறைபுதுமென்சோலை
விம்முறுமுள்ளத்தன்னமிருக்குமவ்விருக்கமொன்றும்
மும்முறையுலகமெல்லாமுற்றுறமுடிவதான
அம்முறையையன்வைகுமாலெனநின்றதம்மா. (சச)

உறுசுடர்சூடைக்காசவ்வுயிரினையுயிரொட்பானுக்
கறிகுறியாகவிட்டாளாகலான்வறியளந்தோ
செறிகுழற்சீதைக்கென்றோர் சிகாமணிதெரிந்துவாங்கி
எறிகடலீவதென்னவெழுந்தனனிரவியென்பான். (சரு)

தாழிரும்பொழில்களெல்லாந்துடைத்தொருதமியனின்றான்
எழிரெண்டேழுநாடுமளந்தவனெனலுமானான்
ஆழியினடுவணின்றவருவரைக்கரகமொத்தான்
ஊழியினிறுதிக்காலத்துருத்திரமூர்த்தியொத்தான். (சசு)

இன்னனநிகழுட்வேலையரக்கியரொழுந்துபொங்கிப்
பொலமலையன்னநின்றபுனிதனைப்புகன்றுநோக்கி
அன்னையீதென்னமேனியார்கொலென்றச்சமுற்றார்
நன்னுதறன்னைநோக்கியறிதியோநங்கையென்றார். (சஎ)

தீயவர்தீயசெய்ததீயவர்தெரியினல்லால்
தூயவர்துணிதலுண்டேநம்முடைச்சூழலெல்லாம்
ஆயமானெய்தவம்மானிளையவனரக்கர்செய்த
மாயமென்றுரைக்கவேயுமெய்யெனமையல்கொண்டேன். (௪௮)

என்றனளரக்கிமார்கள்வயிறலைத்திரியல்போகிக்
குன்றமுமுலகும்வானுங்கடல்களுங்குலையவோட
நின்றதோர்சமித்தங்கண்டானீக்குவலிதனையென்றுத்
தன்றடக்கைகணீட்டிப்பற்றினன்றுதையொப்பான். (௪௯)

கண்கொளவரிதுமீதுகால்கொளவரிதுதிண்கால்
எண்கொளவரிதிராவுமிருள்கொளவரிதுமாக
விண்கொளநிவந்தமேருவென்குறவெதும்பியுள்ளம்
புண்கொளவுயர்ந்ததிப்பார்பொறைகொளவரிதுபோலாம். (௫௰)

பொங்கொளிநெடுநாளீட்டிப்புதியபால்பொழிவதொக்கும்
திங்களைநக்குகின்றவிருளெலாம்வாரித்தின்ற
அங்கைபத்திரட்டியான்றன்றுணையாலழகுமானப்
பங்கயத்தொருவன்றனேபகும்பொனுற்படைத்ததம்மா. (௫௧)

தூணெலாஞ்சுடருங்காசுகற்றெலாமுத்தஞ்சொன்னம்
பேணலாமணியின்பத்திட்டிடமெலாமொளிகள்விம்மச்
சேணெலாம்விரியுங்கற்றைச்சேயொளிச்செல்வற்கேயும்
பூணலாமெம்மனோராற்புகழலாம்பொதுமைத்தன்றே. (௫௨)

வெள்ளியங்கிரியைப்பண்டவ்வெந்தொழிலரக்கன்வேரோ
டள்ளினனென்னக்கேட்டானத்தொழிற்கழிவுதோன்றப்
புள்ளிமாமேருவென்னும்பொன்மலையெடுப்பான்போல
வள்ளுகிர்த்தடக்கைதன்னான்மண்ணின்றும்வாங்கியண்ணல். (௫௩)

விட்டனனிலங்கைதன்மேல்விண்ணுறவிரிந்தமாடம்
பட்டனபொடிகளானபகுத்தனபாங்குநின்ற
சுட்டனபொறிகள்பின்னைத்துளங்கினரரக்கர்தாமும்
கெட்டனர்வீரரம்மாபிழைப்பரோகேடுசூழ்ந்தார். (௫௪)

நீரிடுதுகிலரச்சர்நெருப்பிடுநெஞ்சர்நெக்குப்
பீரிடுமுருவர்நெற்றிப்பிணங்கிடுதாளர்பேழ்வாய்
ஊரிடுபூசலாரவுளைத்தனரோடியுற்றார்
பாரிடுபழுவச்சோலைபாரிக்கும்பருவத்தேவர். (௫௫)

அரிபடுசீற்றத்தான்றனருகுசென்றடியின்வீழ்ந்தார்
கரிபடுதிசையினீண்டகாவலாய்காவலாற்றேம்
கிரிபடுகுவவுத்திண்டோட்குரங்கிடைகிழித்துவீச
எரிபடுதுகிலினொய்தினிற்றதுகடிகாவென்றார். (ருசு)

சொல்லிடவெளியதன்றாற்சோலையைக்காலிற்கையின்
புல்லொடுதுகளுமின்றிப்பொடிபடநூறிப்பொன்னால்
வில்லிடுவோமந்தல்லை வேரொடுவாங்கிவீசச்
சில்லிடமொழியத்தெய்வவிலங்கையுஞ்சிதைந்ததென்றார். (ருஎ)

ஆடகத்தருவின்சோலைபொடிபடுத்தரக்கர்காக்கும்
தேடருமோடம்வாங்கியிலங்கையுஞ்சிதைத்தசெப்பமா
கோடரமொன்றேநன்றிதிராக்கதர்கொற்றஞ்சொற்றல்
மூடருமொழியாரென்னமன்னனுமுறுவல்செய்தான். (ருஅ)

சேவர்கள்பின்னுமன்னவதனுருச்சுமக்குந்திண்மைப்
பூவலயதனையன்றேபுகழ்வதுபுலவர்போற்றும்
மூவரிலொருவனென்றுபுகலினுமுடிவிலாத
ஏவமக்குரங்கையையநாணுதியின்மையென்றார். (ருகூ)

மண்டலங்கிழிந்தவாயின்மறிகடன்மோழைமண்ட
எண்டிசைசுமந்தமாவுந்தேவருமிரியல்போகத்
தொண்டைவாயரக்கிமார்கள்சூல்வயிறுடைந்துசோர
அண்டமும்பிளந்துவிண்டதாமெனவநுமனார்த்தான். (கூ0)

பொழிலிறுத்தபடலம்-முற்றிற்று.

ஆ. படலம்-எ-இ- திருவிருத்தம்- எ௱ருரு.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## அ-வது-கிங்கரர்வதைப்படலம்.

அருவரைமுழையின்முட்டுமசனியினிடிப்புமாற்றி
வெருவருமுழக்குமீசன்வில்லிறுமொலியுமென்னக்
குருமணிமகுடகோடிமுடித்தலைகுலுங்கும்வண்ணம்
இருபதுசெவியினூடு நுழைந்ததவ்வெழுந்தவோசை. (க)

புல்லியமுறுவறோன்றப்பொறுமையுஞ்சிறிதுபொங்க
எல்லையிலாற்றன்மாக்களெண்ணிறந்தானையேவி
வல்லையினகலாவண்ணம்வானையும்வழியையமாற்றிக்
கொல்லலீர்குரங்கைநொய்திற்பற்றுதிர்கொணர்திரென்றான், (௨)

சூலம்வாண்முசலங்கூர்வேறோமரந்தண்டுபிண்டி
பாலமேமுதலாவுள்ளபடைக்கலம்பரித்தகையர்
ஆலமேயனையமெய்யரகலிடமழிவுசெய்யும்
காலமேலெழுந்தமூரிக்கடலெனக்கடிதுசெல்வார். (௩)

நானிலமதனினுண்டுபோமெனநவிலினச்சொல்
தேனினுங்களிப்புச்செய்யுஞ்சிந்தையர்தெரித்துமென்னின்
கானினும்பெரியரோசைகடலினும்பெரியர்கீர்த்தி
வானினும்பெரியர்மேனிமலையினும்பெரியர்மாதோ. (௪)

திருகுறுஞ்சினத்துத்தேவர் தானவரொன்னுந்தெவ்வர்
இருகுறும்பெறிந்துநின்றவிசையினார்வலசையென்றெண்ணிப்
பொருகுறும்பென்றுவென்றுபுணர்வதுபூவுண்வாழ்க்கை
ஒருகுறுங்குரங்கென்றெண்ணிநெடிதுநாணுழக்குநெஞ்சர். (௫)

கட்டியவாளரிட்டகவசத்தர்கழலர்திக்கைத்
தட்டியதோளர்மேகந்தடவியகையர்வானை
எட்டியமுடியர்தாளாலிடறியபொருப்பரீட்டிக்
கொட்டியபேரியென்னமழையெனக்குமுறுஞ்சொல்லார். (௬)

வானவரெறிந்ததெய்வவடுபடைவடுக்கண்மற்றைத்
தானவர்துரந்தவேதித்தழும்பொடுதயங்குந்தோளர்
யானையும்பிடியும்வாரியிடுங்கயவாயரீன்ற
கூனவெண்பிறையிற்றோன்றுமெயிற்றினர்கொதிக்குங்கண்ணர். (௭)

சக்கரமுலக்கைதண்டுதானைவாள்பரிகஞ்சங்கு
முற்கரமுசுண்டிபிண்டிபாலம்வேல்சூலமுட்கோல்
பொற்பரங்குலிசம்பாசம்புகர்மழுவெழுப்பொற்குந்தம்
விற்கருங்கணைவிட்டேறுகழுக்கடையெழுக்கண்மின்ன. (௮)

பொன்னின்றுகளுந்தெய்வப் பூணினர்பொருப்புத்தோளர்
மின்னின்றபடையுங்கண்ணும்வெயில்விரிக்கின்றமெய்யர்
என்னெனன்றார்க்கென்னென்னென்றெய்தியதறிந்திலாதார்
முன்னின்றார்முதுகுதீயப்பின்னின்றார்முடுகுகின்றார். (௯)

வெய்துறுபடையின்மின்னர்வில்லினர்வீசுகாலர்
மையுறுவிசும்பிற்றோன்றுமேனியர்மடிக்கும்வாடர்
கைபரந்துலகுபொங்கிக்கடையுகமுடியுங்காலைப்
பெய்யவென்றெழுந்தமாரிக்குவமைசால்பெருமைபெற்றார். (௰)

பணியுறுசெயலைசிந்தியோமழும்பறித்தகம்மா
தனியொருகுரங்குபோலாநன்றுநந்தருக்கென்கின்றார்
இனியொருபழிமற்றுண்டோவிதனினென்றினைத்துப்பொங்கி
முனிவுறுமனத்திற்றாவிமுந்துறமுடுகுகின்றார், (௰௧)

எற்றுறுமுரசும்வின்னாணேறுவிட்டெடுத்தவார்ப்பும்
சுற்றுறுகழலுஞ்சங்குந்தெழிதெழித்துரப்புஞ்சொல்லும்
உற்றுடன்றொன்றாய்ப்பொங்கியொலித்தெழுந்தூழிப்போவில்
நற்றிரைகடல்களோடு மழைகளைநாவடக்க. (௰௨)

செருவிடமில்லென்றெண்ணிவானிடைச்செல்கின்றாரும்
புருவமுஞ்சிலையுங்கோட்டிப்புகையுயிர்த்துயிர்க்கின்றாரும்
ஒருவரினொருவர்முந்திமுறைமறுத்துருக்கின்றாரும்
விரிவிலதிலங்கையென்றுவழிபெறார்விளிக்கின்றாரும். (௰௩)

வாளுறைவிதிர்க்கின்றாரும்வாயினைமடிக்கின்றாரும்
தோளுறத்தட்டிக்கல்லைத்துகள்படத்துகைக்கின்றாரும்
தாள்பெயர்த்திடம்பெறாதுதருக்கினர்நெருக்குவாரும்
கோள்வளையெயிறுதின்றுதீயெனக்கொதிக்கின்றாரும். (௰௪)

வேறு.

அனைவருமலையெனநின்றாரளவறுபடைகள்பயின்றார்
அனைவருமரினுயர்ந்தாரகலிடநெளியநடந்தார்
அனைவரும்வரனினமைந்தாரசனியினணிகளணிந்தார்
அனைவருமமரரைவென்றாரசுரரையுயிரையயின்றார். (௰௫)

குறுகினகவசருமின்போல்துளைகழலுரகரும்வன்போர்
முறுகினபொழுதினுடைந்தார்முதுகிடைமுறுவல்பயின்றார்
இறுகினநிதிகிழவன்பேரிசைகெடவளகையெறிந்தார்
தெறுகுநரின்மையர்வன்றோடினவுறவுலகுதிரிந்தார். (௰௬)

வரைகளையிடறுமினென்றான்மறிகடல்பருகுமினென்றால்
இரவியைவிழவிடுமென்றாலெழுமழைபிழிபுமினென்றால்
அரவினதரசனையொன்றோதலையாயிரொடுமறைபுமினென்றால்
தரையினையெடுமெடுமென்றொருவரதமைதல்சமைந்தார். (௰௭)

தூளியினுயிர்படலம்போயிமையவர்விழிதுறவெம்போர்
மீளியினினமெனவன்றாள்விளாபுலிநிரையெனவிண்டோய்
ஆளியினணியெனவன்றேலலைகடல்விடமெனவஞ்சா
வாளியின்விசைகொடுதிண்கார்வளாவருவனவெனவந்தார். (௰௮)

பொறிதரவிழியுயிரொன்றேபுகையுகவயிலொளிமின்போல்
செறிதரவுருமதிர்கின்றார் திசைதொறும்விசைகொடுசென்றார்
எறிதருகடைபுகவன்காலிடறிடவுருமினினம்போய்
மறிதரமழையகல்விண்போல்வடிவழிபொழிலைவளைந்தார். (௰௯)

வயிரொலிவளையொலிவன்கார்மழையொலிமுரசொலிமண்பால்
உயிருலைவுறதிமிரம்போருருமொலிசெவியினுணர்ந்தான்
வெயில்விரிகதிரவனும்போய்வெருவிடவெளியிடைவிண்டோய்
கயிலையின்மலையெனநின்றாணையவர்வருதொழில்கண்டான். (௨௰)

இகலியலிதுவெனமுந்தேயிலையுறவினிதுதெரிந்தான்
பகலியலறிவுபயந்தாலதினலபயனுளதுண்டோ
சிதவியல்குடிபொழிலொன்றே சிதறியசெயமருதிண்போர்
உகவியலினிதினுவந்தா னெனவரினுமதிகமுயர்ந்தான், (௨௧)

இவனிவனிவனெனநின்றாரிதுவெனமுதலியெதிர்ந்தார்
பவனனின்முடுகிநடந்தார்பகலிரவுறமிடைகின்றார்
புவனியுமலைபும்விசும்பும்பொருவருநகருமுடன்போர்
துவனியினதிரவிடம்போற்சுடர்விடுபடைகடுரந்தார். (௨௨)

மழைதருமறிகடலும்போய்மதமறமுரசமறைந்தார்
முழைகளினிதழ்கடிறந்தார்முதுபுகைகதுவமுனிந்தார்
பிழையிலபடவரவின்றோள்பிடருறவடியிடுகின்றா
கழைதொடர்வனமெரியுண்டாலெனவெறிபடைஞர்கலந்தார். (௨௩)

அறவனுமதனையறிந்தானருகினினழகினமைந்தார்
இறவினினுதவுநெடுந்தா ருயர்மரமொருகையிலேந்தான்
உறவருதுணையெனவன்றே வுதவியவதனையுவந்தான்
நிறைகடல்கடையுநெடுந்தாண்மலையெனநடுவணிமிர்ந்தான் (௨௪)

பருவரைபுரைவனவன்றோள்பணிமலையருவிநெடுங்கால்
சொரிவனபலவெனமண்டோய்துறைபொருகுருதிசொரிந்தார்
ஒருவரையொருவர்தொடர்ந்தாருயர்தலையுடையவுருண்டார்
இருவரைநெரியவிழும்பேரசனியுமசையவறைந்தான். (௨௫)

பறைபுரைவிழிகள்பறிந்தார்படியிடைநெடிதுபடிந்தார்
பிறைபுரையெயிறுமிழந்தார்பிடரொடுதலைகள்பிளந்தார்
குறையுயிர்சிதறநெரிந்தார்குடரொடுகுருதிகுழைந்தார்
முறைமுறைபடைகளெறிந்தார்முடையுடன்மறியமுறிந்தார் (௨௬)

புடையொடுவிடுகனலின்காய்பொறியிடைமயிர்கள்புகைந்தார்
தொடையொடுமுதுகுதுணிந்தார்சுழிபடுகுருதிசொரிந்தார்
படையிடையொடியநெடுந்தோள்பறிதரவயிறுதிறந்தார்
இடையிடைமலையின்விழுந்தாரிகல்பொரமுடுகியெழுந்தார். (௨௭)

புதைபடவிருளின்மிடைந்தார்பொடியிடைநெடிதுபுரண்டார்
விசைபடவுயிரர்விழுந்தார்விளிவொடுவிழிபுமிழ்ந்தார்
கதையொடுமுதிரமலைந்தார்கணைபொழிசிலையர்கலந்தார்
உதைபடவுரனுநெரிந்தாருதரொடுகுருதியுமிழ்ந்தார். (௨௮)

அயலயன்மலையொடறைந்தானடுபகையளவையடைந்தார்
வியலிடமறையவிரிந்தார்மிசையுலகடையமிடைந்தார்
புயனெறுகடலின்விழுந்தார்புடைபுடைசிதைவொடுசென்றார்
உயர்வுறவிசையினெறிந்தானுடலொடுமுலகுதுறந்தார். (௨௯)

வேறு.

பற்றித்தாளொடுதோள்பறித்தெறிந்தனன்பாரின்
இற்றவெஞ்சிறைவெற்பினமாமெனக்கிடந்தார்
கொற்றவாளிடைக்கொடுந்தொழிலரக்கரையடங்கச்
சுற்றிவீசலிற்பம்பரமாமெனச்சுழன்றார். (௩௰)

வாள்களிற்றனவிற்றனவரிசிலைவயிரத்
தோள்களிற்றனவிற்றனசுடர்மழுச்சூலம்
நாள்களிற்றனவிற்றனநகையெயிற்றீட்டம்
தாள்களிற்றனவிற்றனபடையுடைத்தடக்கை. (௩௧)

தெறித்தவன்றலைதெறித்தனசெறிசுடர்க்கவசம்
தெறித்தபைங்கழல்தெறித்தனசிலம்பொடுபொலந்தார்
தெறித்தபன்மணிதெறித்தன பெரும்பொறித்திறங்கள்
தெறித்தகுண்டலந்தெறித்தனகண்மணிசிதறி. (௩௨)

உக்கபற்குலையுக்கனதுவக்கெலும்புதிர்வுற்
றுக்கமுற்கரமுக்கனமுசுண்டிகளுடைவுற்
றுக்கசக்கரமுக்கனவுடற்றிறந் துயிர்கள்
உக்கசற்பணமுக்கனவுயர்மணிமகுடம். (௩௩)

தாள்களாற்பலர்தடக்கைகளாற்பலர்தாக்கும்
தோள்களாற்பலர்சுடர்விழியாற்பலர்தொடரும்
கோள்களாற்பலர்குத்துகளாற்பலர்தத்தம்
வாள்களாற்பலர்மரங்களினாற்பலர்மடிந்தார். (௫௪)

ஈர்க்கப்பட்டனர்சிலர்சில ரிடிப்புண்டுபட்டார்
பேர்க்கப்பட்டனர்சிலர்சிலர்பிடியுண்டுபட்டார்
ஆர்க்கப்பட்டனர்சிலர்சிலரடியுண்டுபட்டார்
பார்க்கப்பட்டனர்சிலர்சிலர்பயமுண்டுபட்டார். (௫௫)

ஓடிக்கொன்றனன்சிலவரையுடனுடனேறும்
கூடிக்கொன்றனன்சிலவரைக்கொடுநெடுமரத்தால்
சாடிக்கொன்றனன்சிலவரைப்பிணர்தொறுந்தடவித்
தேடிக்கொன்றனன்சிலவரைக்கறங்கெனத்திரிவான் (௫௬)

முட்டினார்படமுட்டினான்முறைமுறைமுடுகிக்
கிட்டினார்படக்கிட்டினான்கிரியெனநெருங்கிக்
கட்டினார்படக்கட்டினான்கைகளின்மெய்யின்
தட்டினார்படத்தட்டினான்மலையெனத்தகுவான். (௫௭)

மறக்கினுங்கொல்லுமுணரினுங்கொல்லுமால்விசும்பின்
பறக்கினுங்கொல்லும்படரினுங்கொல்லுமின்படைக்கை
திறக்கருங்கழலரக்கர்கண்ணரிதொறும்பொறிகள்
பிறக்கநின்றெறிபடைகளைத்தடக்கையாற்பிணையும். (௫௮)

சேறும்வண்டலுமூளையுநிணமுமாய்த்திணிய
நீறுசேர்நெடுந்தெருவெலாநீத்தமாய்நிரம்ப
ஆறுபோல்வருங்குருதியவ்வாறுமன்றலைப்புண்
டூறில்வாய்தொறுமுமிழ்வதேயொத்ததவ்விலங்கை (௫௯)

கருதுகாலினுங்கையினும்வாலினிற்கட்டிச்
சுருதியேயன்னமாருதிமரத்திடைத்துரப்பான்
நிருதரெந்திரத்திடைக்கரும்பாமெனநெரிவார்
குருதிசாறெனப்பாய்வதுகுளாகடற்கூலில். (௬௰)

எடுத்தரக்கரையெறிதலுமவருடலெற்றக்
கொடித்திண்மாளிகையிடிந்தனமண்டபங்குலைந்த
தடக்கையானைகண்மறிந்தனகோபுரந்தகர்ந்த
பிடிக்குலங்களும்புரவியுமவிந்தனபெரிய. (௬௧)

தத்தமாடங்கடம்முடலாற்சிலர்தகர்த்தார்
தத்தமாதனாத்தங்கழலாற்சிலர்சமைத்தார்
தத்தமாக்களைத்தம்படையாற்சிலர்தடிந்தார்
எற்றிமாருதிதடக்கைகளான்விசித்தெறிய. (௪௨)

ஆடன்மாக்களிறனையவனரக்கியர்க்கருளி
வீடுநோக்கியேசெல்கென்றுசிலவனைவிட்டான்
கூடினார்க்கவருயிரெனச்சிலவனைக்கொடுத்தான்
ஊடினார்க்கவர்மனைதொறுஞ்சிலவனையுய்த்தான். (௪௩)

ஒருவெலாமுட றெற்றியெலாமுடல் சதுக்கத்
துருவெலாமுடலுவரியெலாமுடலுள்ளூர்க்
கருவெலாமுடல்காயமெலாமுடலரக்கர்
தெருவெலாமுடறேயமெலாமுடல்சிதறி. (௪௪)

ஊனெலாமுயிர்கவர்வுறுங்காலனேய்ந்துலந்தான்
தானெலாமாயுமாருதிசாடுகைதவிரான்
மீனெலாமுயிர்மேகமெலாமுயிர்மேன்மேல்
வானெலாமுயிர்மற்றுமெலாமுயிர்சுற்றி. (௪௫)

ஆகவிச்செருவிளைவுறுமடமதியினரக்கர்
மோகமுற்றனராமெனமுறைமுறைமுனிந்தார்
மாகமுற்றவுமாதிரமுற்றவும்வளைந்தார்
மேகமொத்தனர்மாருதிவெய்யவனொத்தான். (௪௬)

அடலரக்கருமார்த்தலினலைத்தலினயரப்
புடைபெருத்துயர்பெருமையிற்கருமையிற்பொலிவின்
மிடலயிற்படைமீனெனவிலங்கலிற்கலங்கும்
கடனிகர்த்தனர்மாருதிமந்தரங்கடுத்தான். (௪௭)

கரதலத்தினுங்காலினும்வாலினுங்கதுவ
நிரைமணித்தலைநெரிந்துகச்சாய்ந்துயிர்நீப்பார்
சுரர்நடுக்குறவமுதுகொண்டெழுந்தநாடொடரும்
உரகரொத்தனரநுமனுங்கலுழனேயொத்தான். (௪௮)

மானமுற்றகட்பகையினான்முனிவுற்றுவளைந்த
மீனுடைக்கடலுலகினினுள்ளவெலாமிடைந்த
ஊனறக்கொன்றுதுகைக்கவுமொழிவிலாநிருதர்
ஆனையொத்தனராளரியொத்தனனநுமன். (௪௯)

எய்தவெற்றினவெறிந்தனவீர்த்தனவிசலின்
பொய்தகுத்தினபொருத்தனதொளைத்தனபோழ்ந்த
கொய்தசுற்றினபற்றினகுடைந்தனபொலிந்த
ஐயன்மற்பெரும்புயத்தனபுண்ணளப்பரிதால் (௫௰)

கார்க்கருந்தடங்கடல்களுமழைமுகிற்கண்ணும்
வேர்க்கவெஞ்செருவிளைத்தெழும்வெள்ளெயிற்றரக்கர்
போர்க்குழாம்படிபூசலினையனைப்புகழ்வுற்
றார்க்கும்விண்ணவரமலையேயுயர்ந்ததன்றமரில். (௫௧)

மேவும்வெஞ்சினத்தரக்கர்கண்முறைமுறைவிசையால்
ஏவும்பல்படையெத்தனைகோடிகளெனினும்
தூவுந்தேவருமாதிருமுனிவருஞ்சொரிந்த
பூவும்புண்களுந்தெரிந்திலமாருதிபுயத்தில். (௫௨)

பெயர்க்குஞ்சாரிகைகறங்கெனத்திசைதொறும்பெயர்வின்
உயர்க்கும்விண்மிசைபோங்கவிமண்ணின்வந்துறலின்
அயர்த்துவீழ்ந்தனரழிந்தனரரக்கராயுள்ளார்
வெயர்த்திலன்மிசையுயிர்த்திலனல்லறவீரன். (௫௩)

எஞ்சலக்கணத்தறிந்திலமிராவணனேவ
நஞ்சமுண்டவராமெனவருமன்மேனடந்தார்
துஞ்சினாரல்லதியாவருமறத்தொடுந்தொலைவுற்
றஞ்சினாரில்லையரக்கரில்வீரர்மற்றியாரோ. (௫௪)

வந்தகிங்கரரோயெனுமாத்திரைமடிந்தார்
நந்தவானத்துநாயகரோடினர்நடுங்கிப்
பிந்துகாலினர்கையினர்பெரும்பயம்பிடரின்
உந்தவாயிரம்பிணக்குவைமேல்விழுந்துளைவார். (௫௫)

விரைவினுற்றனர்விம்மலுற்றியாதொன்றும்விளம்பார்
கரதலத்தினாற்பட்டதுங்கட்டுரைக்கின்றார்
தரையினிற்கிலர்திசைதொறுநோக்கினர்சலிப்பார்
அரசன்மற்றவரலக்கணையுணர்த்திடவறிந்தான். (௫௬)

இறந்துநீங்கினரோவின்றெனுணையையிகழ்ந்து
துறந்துநீங்கினரோவன்றிவெஞ்சமர்தொலைந்தார்
மறந்துநீங்கினரோவென்கொல்வந்ததென்றுரைத்தான்
நிறஞ்செருக்குறவாய்தொறுநெருப்புமிழ்கின்றான். (௫௭)

வேறு.

சலந்தலைக்கொண்டனராயதன்மையார்
அலந்திலர்செருக்களத்தஞ்சினாரலர்
புலந்தெரிபொய்க்கரிபுகலும்புன்கணார்
குலங்களினவிந்தனர்குரங்கினாலென்றார். (௫௮)

ஏவலின்வெய்தினிருந்தவெண்டிசைத்
தேவரைநோக்கினானுஞ்சிந்தையான்
யாவதென்றறிந்திலிர்போலுமாலென்றான்
மூவகையுலகையும்விழுங்கமூள்கின்றான். (௫௯)

மீட்டவருரைத்திலர்பயத்தின்விம்முவார்
தோட்டலரினமலர்த்தொங்கன்மாலியன்
வீட்டிபதரக்கனாயென்னும்வெவ்வுரை
கேட்டதோகண்டதோகிளத்துவீரென்றான். (௬௰)

கண்டனெம்பொருபுடைநின்றுகண்களால்
தெண்டிரைகடலெனவளைந்தசேனையை
மண்டலந்திரிந்தொருமரத்தினாலடி
உண்டதக்குரங்கெனமொழிவதனெறன்றார். (௬௧)

கிங்கரர்வதைப்படலம் - முற்றிற்று.

ஆக படலம் - ௮ - இ - திருவிருத்தம் - அாயகூ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ௯-வது-சம்புமாலிவதைப்படலம்.

கூம்பினனையனின்றகுன்றெனக்குவவுத்திண்டோட்
பாம்பிவர்தறுகட்சம்புமாலியென்பவனைப்பாரா
வாம்பரித்தானையோடும் வளைத்ததன்மரனைமாற்றித்
தாம்பினிற்பற்றித்தந்தென்மனச்சினந்தணித்தியென்றான். (௧)

ஆயவன்வணங்கிவீர மளக்கருமளக்கர்முன்னர்
நீயிதுமுடித்தியென்றுநேர்ந்தனைநினைவினெண்ணி
ஏயினையென்னப்பெற்றேனின்யாருயர்ந்தாரென்னாப்
போயினனிலங்கைவேந்தன்போர்ச்சினம்போவதொப்பான். (௨)

தன்னுடைத்தானையோடுந்தயமுகன்றருகென்றேய
மன்னுடைச்சேனையோடுந்தாதைவந்தீந்தவாளின்
மின்னுடைப்பரவையோடும்வேறுளோர்சிறப்பின்விட்ட
பின்னுடையனிகத்தோடும்பெயர்ந்தனன்பெரும்போர்பெற்றான் (௩)

உருமொத்தமுழக்கிற்செங்கண்வெள்ளெயிற்றோடைநெற்றிப்
பருமித்தகிரியிற்றோன்றும்வேழமும்பதுமத்தண்ணல்
நிருமித்தவெழிலிமுற்றிற்றென்னலாநிலையநேமி
சொரிமுத்தமாலைசூழ்ந்துகிற்கொடித்தடந்தேர்சுற்ற. (௪)

காற்றினைமருங்கிற்கட்டிக்கால்வகுத்துயிருங்கூட்டிக்
கூற்றினையேற்றியன்ன குலப்பரிகுழுவக்குன்றின்
தூற்றினினெழுப்பியாண்டுந்தொகுத்தெனச்சுழல்பைங்கண்ண
வேற்றினப்புலியேயென்னவியந்தெழும்பதாதியீட்டம். (௫)

தோமரமுலக்கைகூர்வாள்சுடர்மழுக்குலிசந்தோட்டி
தாமரந்தின்றகூர்வேறழலொளிவட்டஞ்சாபம்
காமாதண்டெழுக்கள்காந்துங்கற்பணங்காலபாசம்
மாமரம்வலயம்வெங்கோல்முதலியவயங்கமாதோ. (௬)

எத்திறயவயில்வெல்குந்தமெழுக்கழுமுதலவேந்திக்
குத்தியதிளைப்பமீதிற்குழுவினமழைமாக்கொண்மூப்
பொத்துருபொருவினன்னீர்சொரிவனபோவபோலச்
சித்திரப்பதாகையீட்டந்திசைதொறுஞ்செறிவசெல்வ. (௭)

பல்லிபந்துவைப்பநமாப்பணிலங்கண்முரலப்பொன்றேர்ச்
சில்லிகளிடிப்பவாசிசிரித்துடச்செறிபொற்றாரும்
விலலுநின்றிசைப்பயானைமுழக்கம்விட்டார்ப்பவிண்டோய்
ஓலமேலாலிவானிற்றேவருணாசெரிவொழிக்கமன்றே. (௮)

பின்னகுகிரிகள்யாவுமேருவின்விளங்கித்தோன்றத்
தொன்னகர்பிறவுமெல்லாம்பொலிந்தனதுறக்கமென்ன
அன்னவன்சேனைசெல்லவார்கலியிலங்கையாய
பொன்னகர்தகர்ந்துபொங்கியார்த்தெழுதூளிபோர்ப்ப. (௯)

ஆயிரமைந்தொடைந்தாமாழியந்தடந்தேரத்தேர்க்
கேயினவிரட்டியானையானையினிரட்டிபாய்மா
போயினபதாதிசொன்னபுரவியினிரட்டிபோலாம்
தீயவன்றடந்தேர்சுற்றித்தெற்றெனச்சென்றசேனை. (௰)

வின்மறைக்கிழவர்நானுவிஞ்சையர்வர்த்தின்மிக்கார்
வன்மறக்கண்ணராற்றல்வரம்பிலாவயிரத்தோளார்
தொன்மறக்குலத்தர்தூணிதூக்கியபுறத்தர்மார்பின்
கன்மறைத்தொளிருஞ்செம்பொற்கவசத்தர்கடுந்தேராட்கள். (௰௧)

பொருதிசையானையூரும்புனிதனைப்பொருவும்பொற்பர்
சுரிபடைத்தொழிலுமற்றையங்குசத்தொழிலுந்தொக்கார்
திருகியிற்பிறந்தவீரர்நெருப்பிடைபரப்புங்கண்ணர்
பரிதியிற்பொலியுமெய்யர்படமதக்களிற்றின்பாகர். (௰௨)

ஏர்கெழுதிசையுஞ்சாரிபதினெட்டுமியல்பினெண்ணிப்
போர்கெழுபடையுங்கற்றவித்தகப்புலவர்போரில்
தேர்கெழுமறவர்யானைச்சேவகர்சிரத்திற்செல்லும்
தார்கெழுபுரவியென்னுந்தம்மனந்தாவப்போனார். (௰௩)

அந்நெறிந்தானைசுற்றவமரராயச்சஞ்சுற்றப்
பொன்னெடுந்தேரிற்போனான்பொருப்பிடைநெருப்பிற்பொங்கித்
தன்னெடுங்கண்கள்காந்தத்தாழ்பெருங்கவசமார்பின்
மின்னிடவெயிலுப்வீசவில்லிடுமெயிற்றுவீரன். (௰௪)

நாயகன்.

வந்திலரரக்கரென்னுமனத்தினன்வழியைநோக்கிச்
சந்திரன்முதலவானமீனெலாந்தழுவநின்ற
இந்திரதனுவிற்றோன்றுந்தோரணமிவர்ந்துநின்றான். (௰௫)

கேழிருமணியும்பொன்னும்விசும்பிருள்கிழித்துவீங்க
ஊழிருங்கதிர்களோடுந்தோரணத்தும்பர்மேலான்
சூழிருங்கதிர்களெல்லாந்தோற்றிடச்சுடருஞ்சோதி
ஆழியினடுவட்டோன்றுமருக்கனையனையனானான். (௰௬)

செய்லொழிமேருஞ்சிந்தத்திரைக்கடல்சிலைப்புத்தீரக்
கல்லினைகிடந்தநாகமுயிரொடுவிடமுங்காலக்
கொல்லியலரக்கர்நெஞ்சிற்குடிபுகவச்சம்வீரன்
வில்லெனவிடிக்கவிண்ணோர்நடுக்குறவீரனார்த்தான். (௰௭)

நின்றனதிசைக்கண்வேழநெடுங்களிச்செருக்குநீங்கத்
தென்றிசைநமனும்புள்ளந்துணுக்கெனச்சிந்திவானில்
பொன்றவின்மீன்களெல்லாம்பூவெனவுதிரப்பூவும்
குன்றமும்பிளக்கவேலைதுளக்குறக்கொட்டினான்றோள். (௰௮)

அவ்வழிபாகரெல்லாமலைநெடுங்கடலினார்த்தார்
செவ்வழிசேறலாற்றார்பிணப்பெருங்குன்றந்தெற்றி
வெவ்வழிக்குருதிவெள்ளம்புடையிடைந்துயர்ந்துவீங்க
எவ்வழிச்சேறுமென்றார்தமருடம்பிடறிவீழ்வார். (௰௯)

ஆண்டுநின்றரக்கன்வெவ்வேறணிவகுத்தனிருந்தமை
மூண்டுருவுடையமூன்றுமூலமுமுறைமுசம்வலித்
தூண்டினன்றானுந்திண்டேர்தோரணத்திருந்ததோன்றல்
வேண்டியதெதிர்ந்தானென்னவீங்கினன்விசயத்திண்டோள். (௨௰)

ஐயனுமமைத்துநின்றானழிபாணளவிலமம்
நெய்சுடர்விளக்கிற்றோன்றுநெற்றியேநெற்றியாக
மொய்மயிர்ச்சேனைபொங்குமூரணையிலுகிர்வாண்மொய்த்த
தைநுனைகளாகக்கடைக்கூழைதிருவாலாக. (௨௧)

வயிர்கள்வால்வளைகள்விம்மவரிசிலைசிலைப்பமாயப்
பயிர்களார்ப்பெழுப்பமுரிப்பல்லிபங்குமுறப்பற்றிச்
செயிர்கொள்வாளரக்கர்சீற்றஞ்செருக்கினர்படைகள்சீர்த்தி
வெயில்கள்போலொளிகள்வீசவீரன்மேற்கடிதுவிட்டார். (௨௨)

வேறு.

கருங்கடலரக்கர்தம்படைக்கலங்கரத்தால்
பெருங்கடலுறப்புடைத்திறுத்துகப்பிசைந்தான்
விரிந்தனபொறிக்குலநெருப்பெனவெகுண்டான்
டிருந்தவன்கிடந்ததொழுமுத்தெரிந்தெடுத்தான். (௨௩)

இருந்தனனெழுந்தனனிழிந்தனனுயர்ந்தான்
திரிந்தனன்புரிந்தனனெனநனிதெரியார்
விரிந்தவர்குவிந்தவர்விலங்கினர்கலந்தார்
பொருந்தினர்நெருங்கினர்களப்படப்புடைத்தான். (௨௪

எறிந்தனவெய்தனவிடுயுருமேன்மேல்
செறிந்தனபடைக்கலமிடக்கையிற்சிதைத்தான்
முறிந்தனதெறுங்கரிமுடிந்தனதடந்தேர்
மறிந்தனபரிநிரைவலக்கையின்மலைந்தான். (௨௫)

இழந்தனநெடுங்கொடியிழந்தனவிருங்கோ
டிழந்தனநெடுங்கரமிழந்தனவியன்றாள்
இழந்தசாமுழங்கொலியிழந்தனமதப்பா
டிழந்தனபெருங்கரியிருங்கவுள்யானை. (௨௬)

நெரிந்தனதடஞ்சுவர்நெரிந்தனபெரும்பார்
நெரிந்தனநுகம்புடைநெரிந்தனவதன்கால்
நெரிந்தனகொடிஞ்சிலொடெரிந்தனவியன்றூர்
நெரிந்தனகுறும்பரிநெரிந்தனநெடுந்தேர். (௨௭)

ஒடிந்தனவுருண்டனவுலந்தனபுலந்த
இடிந்தனவெரிந்தனநெரிந்தனவெழுந்த
மடிந்தனமறிந்தனமுறிந்தனமலைபோல்
படிந்தனமடிந்தன கிடந்தனபரிமா. (௨௮)

வெருண்டனர்வியர்த்தனர்விழுந்தனரெழுந்தார்
மருண்டனர்மயங்கினர்மறிந்தனரிறந்தார்
உருண்டனருலைந்தனருழைத்தனர்பிழைத்தார்
சுருண்டனர்புரண்டனர்தொலைந்தனர்மலைந்தார். (௨௯)

கரிகொடுகரிகளைக்களப்படப்புடைத்தான்
பரிகொடுபரிகளைத்தலத்திடைப்படுத்தான்
வரிசிலைவயவரைவயவரின்மடித்தான்
திரைமணித்தேர்களைத்தேர்களினிரைத்தான். (௩௰)

மூளையுமுதிரமுமுழங்கிருங்குழம்பாய்
மீளிருங்குழைபடக்கரியிழுந்தழுந்தத்
தாளொடுந்தலையுகத்தடநெடுங்கிரிபோல்
தோளொடுதிருதரைவாளொடுந்துகைத்தான். (௩௧)

மல்லொடுமலைமலைத்தோளரைவளைவாய்ப்
பல்லொடுநெடுங்கரப்பகட்டொடும்பருந்தாள்
வில்லொடுமயிலொடும் விறலொடும்விளிக்கும்
சொல்லொடுமுயிரொடுநிலத்தொடுந்துகைத்தான். (௩௨)

புகைநெடும்பொறிபுகுந்திசைதொறும்பொலிந்தான்
சிகைநெடுஞ்சுடர்விடுந்தேர்தொறுஞ்சென்றான்
தகைநெடுங்கிரிதொறும்பரிதொறுஞ்சரித்தான்
நகைநெடும்படைதொறுந்தலைதொறுநடந்தான். (௩௩)

வென்றிவெம்புரவியின்வெரிநினும்விரவார்
மன்றலந்தாரணிமார்பினுமணித்தேர்
ஒன்றினின்றொன்றினுமுயர்மதமழைசால்
குன்றினுங்கடையுகத்துருமெனக்குதித்தான். (௩௪)

பிரிவருமொருபெருங்கோலெனப்பெயரா
இருவினைதுடைத்தவரறிவெனவெவர்க்கும்
வருமுலையிலைக்கெனமதித்தனர்வழங்கும்
தெரிவையர்மனமெனக்கறங்கெனத்திரிந்தான். (௩௫)

அண்ணலவ்வரியினுக்கடியவரவன்சீர்
நண்ணுவரானும்பொருணவையறத்தெரிப்பான்
மண்ணினும்விசும்பினுமருங்கினும்வலிதார்
கண்ணினுமனத்தினுந்தனித்தனிக்கலந்தான். (௩௬)

கொடித்தடந்தேரொடுங்கரகதக்குழுவை
அடித்தொருதடக்கையினிலத்திலிட்டரைத்தான்
இடித்துநின்றதிர்தகத்தெயிற்றவன்பொருப்பைப்
பிடித்தொருதடக்கையினுயிருகப்பிழிந்தான். (௩௭)

கறுத்தெழுதிறத்தினரெயிற்றினர்வயிற்றார்
செறுத்தெரிவிழிப்பவர்சினைக்குழுவலத்தார்
மறுத்தெழுமறவிரளிவரெனவதிந்தார்
ஒறுத்துருத்திரனெனத்தனித்தனியுதைத்தான். (௩௮)

சக்கரந்தோமரமுலக்கைதண்டயில்வாள்
மிக்கனதேர்பரிகுடைகொடிவிரவி
உக்கனகுருதியம்பெருந்திரையுருட்டிப்
புக்கனகடலிடைநெடுங்கரப்பூட்கை. (௩௯)

எட்டினவிசும்பினையெழுப்படவெழுந்த
முட்டினமலைகளைமுடங்கினதிசையை
ஒட்டினவொன்னலரியான்றாடடித்துதைந்து
தட்டுமுட்டாடினதலையொடுதலைகள். (௪௰)

வேறு.

கானேகாவல்வேழக்கணங்கள்கதவாளரிகொன்ற
வானேயெய்தத்தனியேநின்றமதமால்வரையொப்பான்
தேனேபுரைகண்கனலேசொரியச்சீற்றஞ்செருக்கினான்
தானேயானான்சம்புமாலிகாலன்றன்மையான். (௪௧)

காற்றிற்கடியகலினப்புரவிதிருதர்களத்துக்கார்
ஆற்றுக்குருதிநிணத்தோடத்துவள்ளற்பெருங்கொள்ளைச்
சேற்றிற்செல்லாத்தேருழியாழநிலைத்தேரர்
வீற்றுச்செல்லும்வெளியோவில்லையளியன்விளாகின்றான். (௪௨)

எதியொன்றுற்றேருமனைகாலெலியோருயிர்கோடல்
நீதியன்றாலுடன்வந்தானாக்காக்கு நிலையில்லாய்
சாதியன்றேற்பிறிதென்செய்தியவர்பின்றனிநின்றாய்
போதியென்றான்பூத்தமரம்போற்புண்ணாற்பொலிகின்றான். (௪௩)

நன்றுநன்றுன்கருணையென்றுநெருப்புநகநக்கான்
பொன்றுவாரிலொருவனென்றாய்போலுமென்னையென்று
வன்றிண்சிலையினாயிரக்காலால் வடித்திண்சுடர்வாளி
ஒன்றுபத்துநூறுநூறாயிரமுமுதைப்பித்தான். (௪௪)

செய்திசெய்திசிலைக்கொண்டால்வெறுங்கைதிரிவோனை
நொய்தின்வெல்வதரிதோவென்றுமுறுவலுநகையான்
ஐயனங்குசமிங்குங்காலாலழிபுமழையென்ன
எய்தவெய்தபகழியெல்லாமெழுவாலெழுவித்தான். (௪௫)

முற்றமுனிந்தானிருதன்முனிபாமுன்னும்பின்னுஞ்சென்
றுற்றபகழியுருதுமுறியாவுதிர்கிற்றனையுன்னைச்
சுற்றுநெடுந்தேரோட்டித்தொடர்ந்தானொன்றுடருந்துறைகாணான்
வெற்றவெழுவைமழுவாயப்பாலறுத்துவீழ்த்தினான். (௪௬)

சலித்தானையன்கையாலெய்யுஞ்சரத்தையுமச்சாடி
ஒலித்தாரமரர்கண்டாரார்ப்பத்தேரினுட்புகதுக்
கலித்தான்சிலையைக்கையாலவாங்கிக்கழுத்திணிடையிட்டு
வலித்தான்பகுவாய்மடித்தமலைபோற்றலைமண்ணிடைவீழ. (௪௭)

குதித்துத்தேருங்கோல்கொளாளும்பரியுஞ்சூழும்பாக
மிதித்துப்பெயர்த்துநெடுந்தோரணத்தை வீரன்மேற்கொண்டான்
கதித்துப்பழித்துக்கழிந்தார்பெருமைகண்டுகணத்தஞ்சி
உதித்துப்புலர்ந்ததோல்போலுருவத்தமரரோடினார். (௪௮)

பரிந்துபுலம்புமகளிர்காணக்கணவர்பிணம்பற்றி
விரிந்தகுருதிப்பேராறீர்த்துமனைகடொறும்வீச
இரிந்ததுலங்கையெழுந்ததழுகையின்றிங்கிவனாலே
சரிந்ததரக்கர்வலியென்றெண்ணியறமுந்தளிர்த்ததால். (௪௯)

புக்காரமரர்பொலந்தாரரக்கன்பொருவில்பெருங்கோயில்
விக்காநின்றாவிளம்பலாற்றாவெருவிவிழுவார்
தக்கானரக்கனடுங்கலென்றானையதமொல்லாம்
உக்கார்சம்புமாலியுலந்தானென்றேகுரங்கென்றார். (௫௰)

என்றுமளவினெரிந்துவீங்கியெழுந்தவெகுளியான்
உன்னவுன்னவுதிரக்குழம்புவிழியுமிழ்கின்றான்
சொன்னகுரங்கையானேபிடிப்பன்கடிதுதொடர்ந்தென்று
அன்னதுணர்ந்தசேனைத்தலைவரைவரறிவித்தார். (௫௧)

சம்புமாலிவதைப்படலம்- முற்றிற்று.

ஆ படலம்-௯-இ-திருவிருத்தம். ௮௱௬௭.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

# ௰-வது. பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்.

சிலந்தியுண்டதோர்குரங்கின்மேற்சேறியேற்றிறலோய்
கலந்தபோரிடைக்கட்புலன்கடுங்கனல்கதுவ
உலந்தமால்வரையருவியா றொழுக்குற்றவொக்கப்
புலந்தமாமதம்பூக்குமன்றேதிசைப்பூட்கை (௧)

இலங்குவெஞ்சினத்தஞ்சிறையெறுழ்வலிக்கலுழன்
உலங்கின்மேலுருத்தன்னநீகுரங்கின்மேலுருக்கின்
அலங்கன்மாலைநின்புயநினைந்தல்லுநன்பகலும்
குலுங்கும்வன்றுயர்நீங்குமாலவெள்ளியங்குன்றம். (௨)

உறுவதென்கொலோவானிழிவென்பதொன்றுடையார்
பெறுவதியாதொன்றுங்காண்கிலர்கேட்கிலர்பெயர்ந்தார்
சிறுமையீதொப்பதியாதுநீகுரங்கின்மேற்சேறின்
முறுவல்பூக்குமன்றேநின்றமூவர்க்குமுகங்கள். (௩)

அன்றியும்முனைக்காளின்மைதோன்றுமாலரச
வென்றியில்லவர்மெல்லியோர்தமைச்செலவிட்டாய்
நன்றியின்றென்றுகாண்டியேலெமைச்செலநயத்தி
என்றுகைதொழுதிறைஞ்சினரரக்கனுமிசைந்தான். (௪)

உலகமூன்றிற்குமுதன்மைபெற்றோரெனவுயர்ந்தார்
திலகமண்ணுறவணங்கினர்கோயிலிற்றீர்ந்தார்
அலகிறேர்பரிகரியொடாண்மிடைந்தபோரரக்கர்
தொலைவிலாதனகழுமெனவருகெனச்சொன்னார். (௫)

ஆனைமேன்முரசறைந்தனர்வள்ளுவரமைந்தார்
சேனைவேலையிற்புடைபரந்ததுபெருஞ்சேனை
சோனை[illegible]மழைமுகிலெனப்போர்ப்பணைதுவைப்ப
த[illegible]னவாணிடைமின்னெனப்படைக்கலமிடைந்த. (௬)

[illegible]ராக்கொடிமழைபொதுத்துயர்நெடுந்தாள
[illegible]றருமாருதிமுனியநாளுலந்து
போ[illegible]ற்றலர்புகழெனக்காலபொரட்புரண்ட
[illegible]ற்றுவெண்டிரையெனவரப்பிலபரந்த. (௭)

[illegible]ரவேபோர்க்கழல்விசித்தனர்வெரிநுற்றுவிளங்கச்
சரமொடுகேடகினபுட்டிலுஞ்சாத்தினர்சலமயக்
கருவிக்கனரரக்கர்மாப்பல்லணங்கவினப்
புரவியிட்டதேர்பூட்டினபருமித்தபூட்கை. (௮)

ஆறுசெய்தனவானையின்மதங்களவ்வாற்றைச்
சேறுசெய்தனதேர்களின்சில்லியச்சேற்றை
நீறுசெய்தனபுரவியின்குரமற்றைநீற்றை
வீறுசெய்தனவப்பரிக்கலினமாவிலாழி. (௯)

வழங்குதேர்களினிடிப்பொடுவாசியினார்ப்பும்
முழங்குவெங்களிற்றதிர்ச்சியுமொய்கழலொலியும்
தழங்குபல்லியத்தமலையுங்கடையுகத்தாழி
விழுங்குமோதையின்முழங்கெழுந்ததுவிரைந்து. (௰)

ஆழித்தேர்த்தொகையைம்பதினாயிரமஃதே
சூழிப்பூட்கைக்குத்தொகையவற்றிரட்டியின்றொகைய
ஊழிக்காற்றன்னபுரவிமற்றவற்றினுக்கிரட்டி
பாழித்தோணெடும்படைக்கலப்பதாதியின்பகுதி. (௰௧)

கூய்த்தருந்தொறுந்தருந்தொறுந்தானைவெங்குழுவின்
நீத்தம்வந்துவந்தியங்கிடுமிடனின்றிநெருங்கக்
காய்த்தமைந்தவெங்கதிர்ப்படையொன்றொன்றுகதுவித்
தேய்த்தெழுந்தனபொறிக்குலமழைக்குலந்தீய. (௰௨)

பண்மணிக்குலம்யானையின்புடைதொறும்பரந்த
ஒண்மணிக்குலமழையிடையுருமெனவொலிப்பக்
கண்மணிக்குலங்கனலெனக்காந்துவகதுப்பின்
தண்மணிக்குலமழையெழுகதிரெனத்தழைப்ப. (௰௩)

தொக்கதாம்படை.சரிகுழன்மடந்தையர்தொடிக்கை
மக்கடாயர்மற்றியாவருந்தடுத்தனர்மறுகி
ஒக்கவேகுதுங்குரங்கினுக்குயிர்தரவொருவர்
புக்குமீண்டிலரொன்றழுதிரங்கினர்புலம்பி, (௰௪)

கைபரந்தெழுசேனையங்கடலிடைக்கலந்தார்
செய்கைதாம்வருந்தேரிடைக்கதிரொனச்செல்வார்
மெய்கலந்தமாநிகர்வருமுவமையைவென்றார்
ஐவரும்பெரும்பூதமோரைந்துமொத்தனடைந்தார். (௰௫)

முந்தியம்பலதறங்கிடமுறைமுறைபொறிகள்
சிந்தியம்புறுகொடுஞ்சிலையுருமெனத்தெறிப்பார்
வந்தியம்புறுமுனிவர்க்குமமரர்க்கும்வலியார்
இந்தியம்பகையாயவையைந்துமொத்தியைந்தார். (௰௬)

வாசவன்வயக்குலிசமும்வருணன்றன்கயிறும்
ஏசிறென்றிசைக்கிழவன்றனெரிமுனைடெழுவும்
ஈசன்வன்றனிச்சூலமுமென்றிவையொன்றும்
ஊசிபோல்வதோர்வடுச்செயாநெடுப்புயமுடையார்

சூர்தடிந்தவன்மயிலிடைப்பறித்தவன்றோகை
பார்பயந்தவனன்னத்தினிறகிடைப்பறித்த
மூரிவெஞ்சிறகிடையிட்டுத்தொடுத்தனமுறுக்கி
வீரசூடிகைநெற்றியினயலிட்டுவிசித்தார. (௰௮)

பொன்றிணிந்ததோளிராவணன்மார்பொடுப்பொருத
அன்றிழந்தகோடரிந்திடுமழகுறுகுலமுயர்
நின்றவன்றிசைநெடுங்களியானையின்மற்றி
மின்றிணிந்தன்னவோடையின்வீரபட்டத்தார். (௰௯)

வேறு.

நிதிநெடுங்கிழவனைநெருக்கிநீணகர்ப்
பதியொடும்பெருந்திருப்பறித்தபண்டைநாள்
விதியொடுமன்னவன்விழுந்துவெந்திடப்
பொதியொடும்வாரியபொலன்கொள்பூணினார். ()

இந்திரனிசையிழந்தேகுவானிகற்
றந்திமுன்கடாவினன்முடுகத்தாமதன்
மந்தரவாலடிபிடித்துவல்லையேல்
உந்துதிநீயெனவலிந்தலூற்றத்தார். (௨௰)

பாணிறத்தந்தணன்பணியனாகிநின்
றேணினைத்திலனெனவுலகங்கூறலும்
நீணிருந்திராவணன்முனிவுநீக்குவான்
காலினைக்காலினிற்கையிற்கட்டினார். (௨௨)

மலைகளைநகுந்தடமார்பர்மால்கடல்
அலைகளைநகுநெடுந்தோளரந்தகன்
கொலைகளைநகுநெடுங்கொலையர்கொல்லனு
லுலைகளைநகுமனலுமிழுங்கண்ணினார். (௨௩)

தெழில்கிளர்திசைதொறுமுலகைச்சுற்றிய
சால்கிளர்முழங்கெரிதழங்கியேறினும்
கால்கிளர்ந்தோங்கினுங்காலங்கையுற
மால்கடல்கிளரினுஞ்சரிக்கும்வன்மையார். (௨௪)

இவ்வகையனைவருமெழுந்ததானையர்
மொய்கிளர்தோரணமதனைமுற்றினார்
மைமெயாநிலையுறவணிபுங்கட்டினார்
ஐயனுமவர்நிலைபமையநோக்கினான். (௨௫)

அரக்கரதாற்றலுமளவில்சேனையின்
நெருக்குமம்மாருதிதனிமைத்தன்மையும்
பொருக்கெனநோக்கியபுரந்தராதியர்
இரக்கமுமவலமுந்துளக்குமெய்தினார். (௨௬)

இற்றனரரக்கரிப்பகலுளேயெனாக்
கற்றுணர்மாருதிகளிக்குஞ்சிந்தையான்
முற்றுறச்சுலாவியமுடிவிறானையைச்
சுற்றுறநோக்கித்தன்றோளைநோக்கினான் (௨௭)

புன்றலைக்குரங்கிது போலுமாலமர்
வென்றதுவிண்ணவர்புகழைவேரொடும்
தின்றவல்லரக்கரைத்திருகித்தின்றதால்
என்றனரயிர்த்தனர்நிருதரெண்ணிலார். (௨௮)

ஆயிடையநுமனுமமரர்கோனகர்
வாயினின்றவ்வழிகொணர்ந்துவைத்தமாச்
சேயொளித்தோரணத்தும்பர்ச்சேணெடு
வீயுயர்விசும்பையுங்கடக்கவீங்கினான். (௨௯)

## ௱௰௯ பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்

வீங்கியவீரனைவியந்துநோக்கிய
தீங்கியலரக்கருந் திருகினார்சினம்
வாங்கியசிலையினர்வழங்கினார்படை
ஏங்கியசங்கினமிடித்தபேரியே. (௯௰)

எறிந்தனவெய்தனவெண்ணிறந்தன
பொறிந்தெழுபடைக்கலமரக்கர்போக்கினார்
செறிந்தனமயிர்ப்புறந்தினவுதீர்வுறச்
சொறிந்தனவெனவிருந்தையன்றாங்கினான். (௯௧)

உற்றுடன்றரக்கருமுருத்துடற்றினர்
செற்றுறநெருக்கினர் செருகருஞ்சிந்தையர்
மற்றையர்வரும்பரிசிவனாவல்வினாந்
தெற்றுவெனெனவெழு வருமனேந்தினான். (௯௨)

ஊக்கியபடைகளுமுருத்தவீர்ரும்
தாக்கியபரிகளுந்தடித்ததேர்களும்
மேக்குயர்கொடியிடைமேகமாலைபோல்
தூக்கியகரிகளும்புரளதூக்கினான் (௯௩)

வார்மதக்கரிகளின்கோடுவாங்கிமாத்
தேர்படப்புடைக்குமத்தேரின்சில்லியால்
வீரரையுருட்டுமவ்வீரர்வாளினால்
தாருடைப்புரவியைத்துணியத்தாக்குமால். (௯௪)

இரண்டுதேரிரண்டுகைத்தலத்துமேந்திவே
றிரண்டுமால்யானைபட்டுருளவெற்றுமால்
இரண்டுமால்யானைகையிரண்டினேந்திவே
றிரண்டுபாலினும்வரும்பரியையெற்றுமால். (௯௫)

மாயிருநெடுவரைவாங்கிமண்ணினிட்
டாயிரந்தேர்படவரைக்குமாலழித்
தாயிரங்களிற்றையோர்மரத்தினாலடித்
தேயெனுமாத்திரையெற்றிமுற்றுமால். (௯௬)

உதைக்கும்வெங்கரிகளைபுழுக்குந்தேர்களை
மிதிக்கும்வன்புரவியைத்தேய்க்கும்வீரரை
மதிக்கும்வல்லெழுவினாலரைக்குமண்ணிடைக்
குதிக்கும்வன்றலையிடைக்கடிக்குங்குத்துமால். (௯௭)

விசையின்மான்றேர்களுங்களிறும்விட்டகன்
றிசையுமாகாயமுஞ்செறியச்சிந்துமால்
கு[illegible]கொள்பாய்பரியொடுங்கொற்றவேலொடும்
பிசையுமாலரக்கரைப்பெருங்கரங்களால். (௫௮)

தீயுறுபொறியிடைச்செங்கண்வெங்கைமா
மீயு[illegible]த்தடக்கையால்வீரன்வீசுந்தா
றுப்பெருங்கொடியனகடலினாழ்வன
பாயுடைநெடுங்கலம்படுவபோன்றவே. (௫௯)

தேரொடுமுருளொடுந்தடக்கையாற்றனி
வீரன்விட்டெறிந்தனகடலின்வீழ்வன
வளியினெழுஞ்சுடர்க்கடவுள்வானவன்
றேரிணைநிகர்த்தனபுரவித்தேர்களே. (௬௰)

மீயுறவிண்ணிடைமுட்டிவீழ்வன
வாய்பெருந்திரைக்கடலழுவத்தாழ்வன
ஓய்வனபுரவிவாயுதிரங்கால்வன
வாயிடையெரியுடைவடவைபோன்றவே. (௬௧)

வரிந்துறவல்லிதிற்சுற்றிவாலினால்
விரிந்துறவீசலிற்கடலின்வீழ்குநர்
திரிந்தனர்செறிகயிற்றரவினாற்றிரி
அருந்திறன்மந்தரமனையராயினார். (௬௨)

வீரன்வன்றடக்கையாலெடுத்துவீசிய
வார்மதகரியினிற்றேரின்வாசியின்
மூரிவெங்கடல்புகக்கடிதின்முந்தின
ஊரின்வெங்குருதியாறீர்ப்பவோடின. (௬௩)

பிறைக்கடையெயிற்றினபிலத்தின்வாயின
கறைப்புனல்பொறிகளோடுமிழுங்கண்ணின
உறைத்தபுபடையினவுதிர்ந்தயாக்கைகள்
மறைத்தனமகரதோரணத்தைவானுற. (௬௪)

குன்றுளமரமுளகுலங்கொள்பேரெழு
ஒன்றலபலவுளவுயிருண்பாணுள
அன்றினர்பலருளையன்கையுள
பொன்றுவதல்லதுபுறத்துப்போவரோ. (௬௫)

# ௩௰௮ பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்

முழுமுதற்கண்ணுதன்முருகன்றந்தைகை
மழுவெனப்பொலிந்தொளிர்வயிரவான்றனி
எழுவினிற்பொலங்கழலரக்கரீண்டிய
குழுவினைக்களப்படக்கொன்றுநீக்கினான். (௪௬)

வேறு.

உலந்ததுதானையுவந்தனரும்பர்
அலந்தலையுற்றதவ்வாழியிலங்கை
கலந்ததழுங்குரலின்கடலோதை
வலத்தரும்தாளவனாவரும்வந்தார். (௪௭)

ஈர்த்தெழுசெய்புனலெக்கரிழுக்கத்
தேர்த்துணையாழியழுந்தினர்சென்றார்
ஆர்த்தனராயிரமாயிரமம்பால்
தூர்த்தனரஞ்சனைதோன்றலுநின்றான் (௪௮)

எய்தகடுங்கணைபாவையுமெய்தா
தொய்தகலும்படிகைகளினூறப்
பொய்தகடொன்றுபொருந்திநெடுந்தேர்
செய்தகடும்பொறியொன்றுசிதைத்தான். ()

உற்றுறுதேர்சிதையாமுனுயர்ந்தான்
முற்றினவீரனைவானின்முனிந்தான்
பொற்றிரணீளெழுவொன்றுபொறுத்தான்
எற்றினனந்தவன்வில்லினைநற்றான். (௫௰)

முறிந்ததுமூரிவிலம்முறியேகொ
டெறிந்தவரக்கனொர்வெற்பையெடுத்தான்
அறிந்தமனத்தவனவ்வெழுவேகொ
டெறிந்தவரக்கனையின்னுயிருண்டான். (௫௧)

ஒழிந்தவர்நால்வருமூழியுருத்த
கொழுந்துறுதீயெனவெய்துறுகொட்பர்
பொழிந்தனர்வாளிபுகைந்தனகண்கள்
விழுந்தனசோரியவ்வீரன்மணித்தோள். ()

ஆயிடைவீரனுமுள்ளமழன்றான்
மாயவரக்கர்வலத்தைபுணர்ந்தான்
தீயெரியுப்பதொர்கற்செலவிட்டான்
தீயவரச்சிலையைப்பொடிசெய்தார். (௫௩)

தொடுத்ததொடுத்தசரங்கடுரந்த
அடுத்தகன்மாரிபினழுத்தியகன்ற
—ற்றொருழிலான்விடுதேரொடுநொட்டின்
எடுத்தொருவன்றனைவிண்ணினெறிந்தான். ()

எய்ந்தெழுதேரிமிழ்விண்ணினையெல்லாம்
ந்ந்தியசோடிநிமிர்ந்சதுவேகம்
ஓய்ந்ததுவிழ்வதன்முன்னுயர்பாரில்
பாய்ந்தவன்மேலுடன்மாருதிபாய்ந்தான். ()

மதித்தகளிற்றினின்வாளரியேறு
கதித்ததுபாய்வதுபோற்கதிகொண்டு
குதித்தனன்மால்வரைமேனிகுழம்ப
மிதித்தனன்வெஞ்சினவீரருள்வீரன். (௫௯)

மூண்டசினத்தவர்மூவர்முனிந்தார்
தூண்டியதேரர்சரங்கடுரந்தார்
வேண்டியவெஞ்சமம்வேறுவிளைப்பார்
யாண்டினியேகுதியென்றெதிர்சென்றார். ௫௭

திரண்டுயர்தோளிணையஞ்சனசிங்கம்
அரண்டருவின்னுறைவார்களுமஞ்ச
முரண்டருதேரவையாண்டொருமூன்றின்
இரண்டிரண்டுகையிற்கொடெழுந்தான். ()

தூங்கியபாய்பரிசூதருலைந்தார்
வீங்கியதோளவர் விண்ணின்விசைத்தார்
ஆங்கதுகண்டவர்போயகலாமுன்
ஓங்கியமாருதியொல்லையினுற்றான். (௫௯)

கானிமிர்வெஞ்சிலைகையினிறுத்தான்
ஆனவர்தூணியும்வாளுமலைத்தான்
ஏனையவெம்படையில்லவரொஞ்சார்
வானிடைநின்றுயர்மல்லின்மலைந்தார். (௬௰)

வெள்ளையெயிற்றர்கறுத்துயர்மெய்யர்
பிள்ளவிரித்தபிலப்பெருவாயர்
கொள்ளவுருத்தடர்கோளரவொத்தார்
ஒள்ளிகல்வீரனருக்கனையொத்தான். (௬௧)

## ௩௨ய பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்.

தாம்பெனவாலின்வரிந்துயர்தாளோ
டேம்பலிலாரிருதோள்களிறுத்தான்
பாம்பெனநீங்கினர்பட்டனர்வீழ்ந்தார்
ஆம்பனெம்பனைபோல்பவுனின்றான். ௬௨

தின்றனனேனையனின்றதுகண்டான்
குன்றிடைவாவுறுகோளரிபோல
மின்றிரிவன்றலைமீதுகுதித்தான்
பொன்றியவன்புவிதேரொடுபுக்கான். (௬௩)

வேறு.

வஞ்சமுங்களவும்வெஃகிவழியலாவழிமேலோடி
நஞ்சினுங்கொடியராகிநவைசெயற்குரியநீரார்
வெஞ்சினவரக்கரைவரொருவனேவெல்லப்பட்ட
அஞ்செனும்புலன்களொத்தாரவனுநல்லறிவையொத்தான். (௬௪)

நெய்தலையுற்றவேற்கை நிருதரைச்செருவினேர்ந்தார்
உய்தலையுற்றுமீண்டாரொருவருமில்லையுள்ளார்
கைதலைப்பூசல்பொங்கக்கடுகினர்காலனுட்கும்
ஐவருமுலந்ததன்மையனைவருமலையக்கண்டார். (௬௫)

இறுக்குறுமின்னைநம்மைக்குரங்கெனவிரங்கியேங்கி
மறுக்குறுகின்றநெஞ்சின்மாதரையவைதுநோக்கி
உறுக்குறுசொல்லருழித்தீயெனவுலகமேழும்
சுறுக்கொளநோக்குவான்றன்செவித்தொளைதீயச்சொன்னார். (௬௬)

தானையுமுலந்ததைவர்தலைவருஞ்சமைந்தார்தாக்கப்
போனபின்மீள்வேம்யாமேயதுவும்போர்புரிகிலாமை
வானையும்வென்றுளோரைவல்லையின்மடியநூறி
ஏனையரின்மைசோம்பியிருந்ததக்குரங்குமென்றார். (௬௭)

பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்-முற்றிற்று.

ஆ படலம் * ௰ - இ - திருவிருத்தம் - ௬௱௬௪.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

சுந்தரகாண்டம்.

# ௰௧-வது அட்சகுமாரன்வதைப்படலம்.

கேட்டலும்வெகுளிவெந்தீக்கிளர்ந்தெழுமுயிர்ப்பனுகித்
தோட்டலர்தெரியன்மாலைவண்டொடுஞ்சுறுக்கொண்டேற
ஊட்டரக்குண்டபோலுநயனத்தானொருப்பட்டானைத்
தாட்டுணைதொழுதுமைந்தன்றடுத்திடைதருதியென்றான். (௧)

முக்கணனூர்தியன்றேன்மூன்றுலகடியிற்றாயோன்
ஒக்கவூர்பறவையன்றேலவன்றுயிலுரகமன்றேல்
திக்கயமல்லதேர்புன்குரங்கின்மேற்சேறிபோலாம்
இக்கடனடியேற்கீதியிருத்தியீண்டினிதினெந்தாய். (௨)

அண்டர்கோன்றன்னைப்பற்றித்தருகெனவடியேனிற்கக்
கொண்டனையென்றுன்றன்னைப்பணியெனநெஞ்சங்கொண்டல்
உண்டதுநீருமன்றேயுரனிலாக்குரங்கொன்றேனும்
எண்டிசைவென்றநீயேயேவுதியென்னையென்றான். (௩)

கொய்தளிர்கோதும்வாழ்க்கைக்கோடரத்துருவுகொண்டு
கைதவமியற்றியீண்டோர்சிறுபழிபிழைக்குங்கற்பான்
எய்தினனிமையாமுக்கணீசனேயென்றபோதும்
நொய்தினின்வென்றுபற்றித்தருகுவெனொடியினுள்பால். (௪)

துண்டத்தூணகனிற்றோன்றுங்கோளரிசுடர்வெண்கோட்டு
மண்டொத்தநிமிராண்கேழலாயினுமலைதலாற்றா
தண்டத்தைக்கடந்துபொங்கியப்புறத்தகலினென்பால்
தண்டத்தையிடுதியன்றேநின்வயிற்றந்திலேனேல். (௫)

எனவிவையியம்பியீதிவிடையெனவிறைஞ்சிநின்ற
வனைகழல்வயிரத்திண்டோண்மைந்தனைமகிழ்ந்துநோக்கித்
துனைபரித்தேர்மேலேறிச்சேறியென்றினையசொன்னான்
புனைமலர்த்தாரினானும்போரணியணிந்துபோனான். (௬)

ஏறினனென்பமன்னோவிந்திரனிகலினிட்ட
நூறொடுநூறுபூண்டநொறில்வயப்புரவிதோன்றேர்
கூறினரரக்கராசிகுமுறினமுழக்கக்கொண்மூ
ஊறினவுரவுத்தானையூழிப்பேர்கடலையொப்ப (௭)

பொருகடன்மகரமெண்ணி னெண்ணலாம்பூட்கைபொங்கித்
திரிவனமீன்களெண்ணி னெண்ணலாஞ்செய்பொற்றிண்டேர்
உருவுறுமணலையெண்ணி னெண்ணலாமுரவுத்தானை
வருதிரைமரபி னெண்ணி னெண்ணலாம்வாவும்வாசி. (அ)

ஆறிரண்டடுத்தவெண்ணி னாயிரங்குமரராவி
வேறிலாத்தோழர்வென்றியரக்கர்தம்வேந்தர்மைந்தர்
ஏறிய தேரர்சூழ்ந்தாரிறுதியின்யாவுமுண்பான்
சீறியகாலத்தீயின்செறிசுடர்ச்சிலைகளன்னார். (கூ)

மந்திரக்கிழவர்மைந்தர்மதிநெறியமைச்சர்மக்கள்
தந்திரத்தலைவரீன்ற தநயர்கள்பிறருந்தாதைக்
கந்தரத்தரம்பைமாரிற்றோன்றினராதியாயோர்
எந்திரத்தேரர்சூழ்ந்தாரீரண்டிலக்கவீரர். (ய)

தோமரமுலக்கைசூலஞ்சுடர்மழுக்குலிசந்தோட்டி
ஏமருவரிவில்வேல்கோல்கட்டிவாளெழுவிட்டேறு
மாமரம்வீசுபாசமெழுமுளைவயிரத்தண்டு
காமருகணையங்குந்தங் கற்பணங்காலநேமி. (யக)

என்றிவைமுதலயாவுமெறிதருபடைகளீண்டி
மின்றிரண்டனையவாகிவெயிலொடுநிலவுவீசத்
துன்றிருந்தூளிபொங்கித்துறுதலாலிறுதிசெல்லாப்
பொன்றிணியுலகமெல்லாம்பூதலமாயமாதோ. (யஉ)

காகமுங்கழுகும்பேயுங்காலனுங்கணக்கில்சாலச்
சேகுறவினைபிற்செப்பதீமையுந்தொடர்ந்துசெல்லப்
பாகியல்கிளவிச்செவ்வாய்ப்பனடவிழிப்பணைத்தவேய்த்தோட்
டோகையர்மனமுந்தொக்க தும்பியுந்தொடர்ந்துசுற்ற. (யங)

உழைக்குலநோக்கினார்களுலத்தவர்க்குரியமாதர்
அழைத்தழுகுரலின்வேலை யமலையினரவச்சேனை
தழைத்தெழுமொலியினுறைப்பல்லியந்துவைத்தலால்வின்
மழைக்குரலிடியிற்சொன்னமாற்றங்களொழிப்பமன்றோ. (யச)

வெயிற்கரமணிகள்வீசும் விரிகதிர்விழுங்கவெய்ய
அயிற்கரமணிகள்காலுமயிலொளிபருகவங்கை
எயிற்றிளம்பிறைகளீன்றவிலங்கொளியொடுங்கயனை
உயிர்க்குலமிரவுமன்றிப்பகலன்றென்றுணர்வுதோன்ற. (யரு)

ஓங்கிருந்தடந்தேர்பூண்டவுளையப்புரவியொல்கித்
தூங்கினவீரத்தோளுங்கண்களுமிடத்துத்துள்ள
வீங்கினமேகமெங்குங்குருதிநீர்துள்ளிவீழ்ப்ப
ஏங்கினகாகமார்ப்பவிருளில்விண்ணிடிப்பமாதோ. (௧௬)

வெள்ளிவெஞ்சேனைசூழவிண்ணுளோர்வெருவிவிம்ம
உள்ளநொந்தனுங்கிவெய்யகூற்றமுமுறுவதுன்னத்
துள்ளியசுழல்கட்பேய டோள்புடைதார்ப்பத்தோன்றும்
கள்ளவிழலங்கலானைககாற்றின்சேய்வரவுகண்டான். (௧௭)

இந்திரசித்தோமற்றவ்விராவணனேயோவென்னச்
சிந்தையினுவகைகொண்டுமுனிவுற்றகுரக்குச்சீயம்
வந்தனன்முடிந்ததன்றேமனக்கருத்தென்னவாழ்த்திச்
சுந்தரத்தோளைநோக்கியிராமனைத்தொழுதுசொன்னான். (௧௮)

எண்ணியவிருவர்தம்முளொருவனால்யான்முன்செய்த
புண்ணியமுளதாமலங்கோன்றவத்தொடும்பொருந்தினானே
நண்ணினானுநின்றேன்காலனுநணுகிநின்றான்
கண்ணியகருமமின்றேமுடிக்குவென்கடிதினென்றான். (௧௯)

பழியிலதுருவென்றாலும்பஃறலையரக்கனல்லன்
விழிகளாயிரமுங்கொண்டவேந்தைவென்றானுமல்லன்
மொழியின்மற்றவர்க்குமேலாமுரட்டொழின்முருகனல்லன்
அழிவிலொண்குமரன்யாரோவஞ்சனக்குன்றமன்னான். (௨௰)

என்றவனுவந்துவிண்டோயித்திரசாபமென்ன
நின்றதோரணத்தினும்பரிருந்ததோர்நீதியானை
வன்றொழிலரக்கனோக்கி வாளெயிறிலங்கநக்கான்
கொன்றதிக்குரங்கும்பாலாமரக்கர்தங்குழுவையென்றான். (௨௧)

அன்னதாமச்சொற்கேட்டசாரதியையகேண்மோ
இன்னதாமென்னலாமோவுலகியலிகழ்தலம்மா
மன்னனோடெதிர்ந்தவாலிகுரங்கென்றான்மற்றுமுண்டோ
சொன்னதுதுணியிற்றொண்டுசேறியென்றுணரச்சொன்னான். (௨௨

விடந்திரண்டனையமெய்யானவ்வுரைவிளம்பக்கேளா
இடம்புகுந்தனையசெய்கவிதனொடுசீற்றமெஞ்சத்
தொடர்ந்துசென்றிலகமென்றாந்துருவினொழிவுறாமல்
கடந்துபின்குரங்கென்றோதுந்தருவையுங்களைவெனென்றான். ௨௩

ஆர்த்தெழுந்தரக்கர்சேனையஞ்சனைக்குரியகுன்றைப்
போர்த்தது பொழிந்ததம்மாபொருபடைப்பருவமாரி
வேர்த்தனர்திசைகாப்பாளர்சலித்ததுவிண்ணுமண்ணும்
தீர்த்தனிவீரன்றானுந்தனிமையும்வரம்மேற்சார்ந்தான், (௨௪)

எறிந்தனநிருதர்வெய்தினெய்தனபடைகள்யாவும்
முறிந்தனவீரன்மேனிமுட்டினமொய்கரயானை
மறிந்தனமுடிந்ததேரும்வாவுமாக்குழுவுமற்றும்
நெறிந்தனவரம்பிலயாக்கையிலங்கைதன்னிலையிற்பேர. (௨௫)

சீரெரிமுளிபுற்கானிற்கலந்தெனக்காற்றின்செம்மல்
ஏயெனுமளவிற்கொல்லுநிருதர்க்கோரெல்லையில்லைப்
போயவருயிரும்போகித்தென்புலம்படர்தல்பொய்யா
தாயிரகோடிதூதருளர்கொலோநமனுக்கம்மா. (௨௬)

வரவுற்றார்வாராநின்றார்வந்தனர்வரம்பில்வெம்போர்
பொரவுற்றபொழுதும்வீரன்முடங்காற்றல்பொங்கி
எரியிற்போய்க்கதிரோனூழியிறுதியினென்னலானன்
உரவுத்தோளரக்கரெல்லாமென்பிலாவுயிர்களொத்தார். (௨௭)

வேறு.

பிள்ளைப்பட்டனநுதலோடைக் கரிபிறழ்பொற்றேர்பரிபிழையாமல்
அள்ளப்பட்டழிகுருதிப்பொருபுனலாறுகப்படிசேறாக
வள்ளைப்பட்டனமகரக்கடலெனமதில்சுற்றியபதிமறவிகோர்
கொள்ளைப்பட்டுள வுயிரொன்றும்படி கொன்றானம்புலன் வென்
[றானே. (௨௮)

தேரோபட்டனவென்றார்சிலர்சிலர்தெறுகட்செம்முகவயிரத்தோள்
பேரோபட்டனவென்றார்சிலர்சிலர்பரியேபட்டனபெரிதென்றார்
காரோபட்டனநுதலோடைக்கட கரியேபட்டனகடிதென்றார்
நேரோபட்டனர்படமாடேதனிநில்லாவுயிரொடுநின்றோ. (௨௯)

ஆழிப்பொருபடைநிருதப்பெருவலியடலோராய்மகளடுபேழ்வாய்
தாழிப்படுதயிரொத்தார்மாருதிதனிமத்தெய்யுந்தார்தகையானுந் [த்
ஏழிப்புன்மொழிடைவாழுயிர்களுமெறிவேலிளையவரினமாக
ஊழிப்பெயர்வதெரிப்புனலொத்தாரன லொத்தான்மாருதமொத்தா
[னே. (௩௰)

கொன்றானுடன்வருகுழுவைச்சிலர்பலர்குறைகின்றாருடல் குலைகின்
றின்றார்நின்றனருதிரப்பெருநதிபெருகாநின்றனரருகாரும் [றார்
நின்றார்நின்றிலர்தனிநின்றிலருருமேறுமித்தேரொடுமவனேபோ
சென்றான்வன்றிறலியல்வாயம்புகவிடரின்றான்விழியெரிகின்றான்

உற்றானிந்திரசித்துக்கிளையவனொருகாலேபலருயிருண்ணக்
கற்றானும்முகமெதிர்வைத்தானது கண்டார்விண்ணவர்கசிவுற்றார்
எற்றாமாருதிநிலையென்பாரினியிமையாவிழியிணை யிவையொன்றோ
பெறலாமலதுபெற்றாமென்றனர்பிறியாதெதிரெதிர்செறிகின்றார்

எய்தான்வாளிகளெரிவாயுமிழ்வனவீரோமெழுதிரளைபார்சோரப் [வீ
பொய்தான்மணியெழுவொன்றாலன்றது பொடியாயுதிர் வுறவடிவா
வெய்காயினபலவிட்டான்வீரனும்வேறோர்படையிலன்மாறுவெங்
கைதானேபொருபடையாகத்தொடர்காலார்தேரதன்மேலானான். ()

தேரிற்சென்றெதிர்கோல்கொள்வானுயிர்தின்றானப்பொரு செறிதி
ண்டேர், பாரிற்சென்றதுபரிபட்டன வவன்வரிவிற்சிந்திய பகழிக்
கோல, மார்பிற்சென்றனசிலபொற்றோளிடைமறை வுற்றனசிலமற
வோனும், நேரிற்சென்றவன்வயிரக்குனிசிலை பற்றிக்கொண்டெதி
ருறநின்றான். (௫௪)

ஒருகைபாலவன்வயிரத்திண்சிலை யுற்றுப்பற்றலுமுரவோனும்
இருகைபாலிவன்வலிபாமுன்னமதிற்றோடியதிவர்பொற்றோளான்
சரிகைபாலவனுருவிக்குத்தலுமதனைச்சொற்றொடுவருதூதன்
னொருகையாலிடைபிதிர்வித்தான்முதிர் பொறியோடும் படிபறியா
[வே. (௫௫)

வாளாலேபொரலுற்றானிற்றதுமண்சேராமுனம்வயிரத்திண்
டோளாலேபொரமுடுகிப்புக்கிடைகழுவிக்கோடலுமுடல்முற்றும்.
நீளாரயிலெனமயிர்தைத்திடமணிநெடுவாலவனுடனியிர்வுற்று
மீளாவகைபுடைசுற்றிக்கொண்டதுபற்றிக்கொண்டனன்மேலானான்

பற்றிக்கொண்டவன்வடிவாளெனவொளிர்பல்லிற்றுகடிமிர்படர்கை
யால், எற்றிக்கொண்டலினிலைநின்றுமிழ்சுடரினமின்னினப்பிழுவ
னமென்ன, முற்றிக்குண்டலமுதலாமணியுகமுழைநாலாவிவர்குடர்
நாலக், கொற்றத்திண்சுவல்வயிரக்கைகொடுகுத்திப்புடை யொருகு
திகொண்டான். (௫௭)

நீத்தாயோடினவுதிரப்பெருநதிநீராகச்சிலைபூராகப்
போய்த்தாழ்செறிதசையரிசிந்தினபட்டெபொங்கப்பொரு முயிர்போ
காமுன், மீத்தாவியிர்சுடர்வயிரக்கைகொடுபிடியாவிண்ணொடுபுண
காணத், தேய்த்தானாழியிலுலகேழ்தேயினு மொருதன் புகழிறை
தேயாதான். (௫௮)

புண்டாழ்குருதியின்வெள்ளத்துயிர்கொடுபுக்கார் சிலர்சிலர்பொறி
யேபயின், பண்டாரத்திடையிட்டார்தம்முடல்பட்டார்சிலர்சிலர்பய
முந்தத், திண்டாடித்திசையறியாமறுகினர்செற்றார்சிலர்சிலர்செல
வுற்றார், கண்டார்கண்டதொரிசைசயேவிசைசேர்கோலவிட்டார்ப
டையைவிட்டார். (௫௯)

# ௨௯ அட்சகுமாரன்வதைப்படலம்

மீரூப்வேலையையுற்றார்சிலர்சிலர்பசுவாய்வழிதொறுமேய்வுற்றார்
ஊறூர்பறவையின்வடிவுற்றார்சிலர்சிலர்நான்மறையவருருவானார்
மானார்கண்ணிளமடவாராயினர்முன்னேதங்குழல்வகிர்வுற்றார்
ஆனார்சிலர்சிலராயாநின்சரணென்றார்நின்றவரரியென்றா. (௪௰)

தந்தாரமுமுறுகிளையுந்தமையெதிர் தழுவுந்தொறுறுமதமரல்லேம்
வந்தேம்வானவரொன்றேகினர்சிலர் சிலர்மானுயரெனவாய்விட்டார்,
மந்தாரங்கிளர்பொழில்வாய்வண்டுக ளானார்சிலர்சிலர்மருள்கொண்
டார், இந்தாரெயிறுகளிறுவித்தார்சிலரெரிம்பால்குஞ்சியையிருள்வி
த்தார். (௪௧)

வேறு.

குண்டலக்குழைமுகக்குங்குமக்கொங்கையார்
வண்டலைத்தெழுகுழற்கற்றைநால்வருடவாய்
விண்டலத்தகவிலாக்குமுதவாய்விரிதலால்
அண்டமுற்றுளதலூரமுதம்பரமல்லயே. (௪௨)

கதிரொழுந்தனையசெந்திருமுகக்கணவன்மா
டெதிரொழுந்தடிவிழுந்தழுதுசோரிளநலார்
அதிநலங்கோதைசேர்மாதிமையாடன்றலூர்
உதிரமுந்தெரிகிலாதிடைபரந்தொழுகவே. (௪௩)

தாவில்வெஞ்செருநிலத்திடையுலந்தவர்தமேல்
ஓவியம்புரைநலார்விழுதொறுஞ்சிலருயிர்த்
தேவுகண்களுடிமைத்திலர்களாமிதுவெலாம்
ஆவியொன்றுடலிரண்டாயதாலேகொலாம். (௪௪)

ஓடினாருயிர்களுடல்கள்போனுதவியால்
வீடினார்வீடினார்மிடையுடற்குவைகள்வாய்
நாடினார்மடநலார்நவையிலாநண்பனாக்
கூடினாரூடினாரும்பர்வாழ்கொம்பனார். (௪௫)

நீட்டுவாளனையகட்டெரிவையோர்திருவனாள்
ஆட்டிநின்றயர்வதோரறுதலைக்குறையினைக்
கூட்டிநீயோருயிர்த்துணைவனெங்கோவினைக்
காட்டுவாயாதியென்றழுதுகைகூப்பினாள். (௪௬)

வந்திறைடலையையோரொழுகருங்கொம்பனாள்
காந்தனின்றாடுவானுயர்கவந்தத்தினை
வேந்தனீபலசெய்வித்தியானடமெனப்
பூந்தளிர்க்கைகளான்மெய்புதைப்புல்லினாள். (௪௭)

நாடினார்நாடியேநனைவருங்கொம்பனார்
வாடினார்கணவர்தம்மார்புறத்தழுவிமேய
வீடினாரவ்வயின்வெருவிவிண்ணவர்கடாம்
ஓடினாரரசன்மாடணுகிநின்றுரைசெய்வார், (௬௰௮)

வேறு.

கயன்மகிழ்கண்ணிணைகளுழிநான்றுகப்
புயன்மகிழ்பரிகுழல்பொடியளாவுற
அயன்மகன்மகன்மகனடியின்வீழ்ந்தனள்
மயன்மகள்வயிறலைத்தலறிமாழ்கினாள். (௬௰௯)

தாவருந்திருநகர்த்தையலார்முதல்
ஏவருமிடைவிழுந்திரங்கியேங்கினார்
காவலன்கால்மிசைவிழுந்துகாவல்மாத்
தேவருமழுதனர்களிகளுஞ்சிந்தையார். (௭௰)

அட்சகுமாரன்வதைப்படலம்- முற்றிற்று.

ஆக படலம்- ௰௧ இ திரு விருத்தம். ௯௱௮௰[illegible]

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ௰௨-வது- பாசப்படலம்

அவ்வழியவ்வுரைகேட்டவாண்டகை
வெவ்விழியெரியுகவெகுளிவீங்கினான்
எவ்வழியுலகமுங்குலையவிந்திரத்
தெவ்வழிதரவுயர்விசயச்சீர்த்தியான். (௧)

அரஞ்சுடர்வேற்றனதனுசனிற்றசொல்
உரஞ்சுடவெரியுயிர்த்தொருவனேங்கினான்
புரஞ்சுடவரிசிலைப்பொருப்புவாங்கிய
பரஞ்சுடரொருவனைப்பொருவும்பான்மையான். (௨)

ஏறினன்விசும்பினுக்கெல்லைகாட்டுவ
ஆறிருநூறுபேய்பூண்டவாழித்தேர்
கூறினகூறினசொற்கள்கோத்தலால்
ஊறினநெடுந்திசையளந்ததண்டமே. (௩)

வேறு.

ஆர்த்தனகழலுந்தாரும்பேரியுமசனியஞ்ச
வேர்த்துயிர்தலையமேனிவெதும்பினனமரர்வேந்தன்
சீர்த்ததுபோருமென்னாத்தேவர்க்குந்தேவராய
மூர்த்திகடாமுந்தத்தம்யோகத்தின்முயற்சிவிட்டார். (௪)

தம்பியையுன்னுந்தோறுந்தாரைநீர்ததும்புங்கண்ணான்
வம்பியல்சிலையைநோக்கிவாண்மடுத்துருத்துநக்கான்
கொம்பியன்மாயவாழ்க்கைக்குரங்கினாற்குரங்காவாற்றல்
எம்பியோதேய்ந்தானெந்தைபுகழன்றோதேய்ந்ததென்றான். (௫)

வேறிரண்டனவும்வில்லுமிடைந்தவும்வெற்பென்றாலும்
கூறிரண்டாக்கும்வாழ்க்கைக்குழுவையுங்குணிக்கலாற்றேம்
சேறிரண்டருகுசெய்யுஞ்செறிமதச்சிறுகண்யானை
ஆறிரண்டஞ்சுநூற்றினிரட்டிதேர்த்தொகையுடனே, (௬)

ஆயமாத்தானைதான்வந்தண்மியசண்டவேனைத்
தீயவாணிருதர்வேந்தர்சேர்ந்தவர்சேரத்தேரின்
ஏயெனுமளவின்வந்தானிராவணனிருந்தயாணர்
வாயிற்றோய்கோயில்புக்கானருவிசோர்வயிரக்கண்ணான் (௭)

தாளிணைவிழுந்தான்றம்பிக்கிரங்கினான்றறுகணானும்
தோளிணைபற்றியேந்தித்தழுவினனழுதுசோர்ந்தான்
வாளிணைநெடுங்கண்மாதர்வயிறலைத்தலறிமாழ்க
மீளியோன்மொய்ம்பினானும்விலக்கினன்விளம்பலுற்றான். (௮)

ஒன்றுநீயுறுதியோராயுற்றிருந்துளையகிற்றி
வன்றிறற்குரங்கினாற்றன்மரபுளியுணர்ந்துமன்னா
சென்றுநீர்பொருதிரென்றுதிறத்திறஞ்செலுத்தித்தேயக்
கொன்றனைநீயேயன்றோவரக்கர்தங்குழுவையென்றான், (௯)

இங்கார்சம்புமாலிகேடிலாவைவரொன்றிப்
பைங்கழலரக்கரோடுமுடன்சென்றபகுதிச்சேனை
இங்கொருவருமீண்டார்தாமில்லையேற்குரங்கதெந்தாய்
சங்கரனயன்மாலென்பார்தாமெனுந்தகையதாமே. (௰)

திக்கயவலியுமேனை திரிபுரந்தீயச்செற்ற
முக்கணன்கைலையோடுமுலகொருமூன்றும்வென்றாய்
அக்கனைக்கொன்றுநின்ற குரங்கினையாற்றல்காண்டி
புக்கினிவென்றுமென்றாற்புலம்பன்றிப்புன்மைத்தாமோ. (௰௧)

ஆயினுமையதொய்தி னுண்டொழிற்குரங்கையானே
ஏயெனுமளவிற்பற்றித் தருகுவெனிடவொன்றொன்றும்
நீயினியுழக்கற்பாலையல்லைநீடிருத்தியென்னாப்
போயினனமரர்கோவைப் புகழொடுகொண்டுபோந்தான் (௰௨)

உடைந்தவலிருளேற்றுப்பலுருக்கொடக்கதிர்க்குழாங்கள்
மிடைந்தனமிலைச்சியாங்குமெய்யணிபலவுமின்னக்
குடைந்துவெம்பகைவருன்றோய்கொற்றப்போர்வாள்வில்வீச
அடைந்தகாரரக்கர்தானையகலிடமிடமின்றென்ன. (௰௩)

ஆழியந்தேருமாவுமரக்கருமுருக்குஞ்செங்கட்
சூழிவெங்கோபமாவுந் துவன்றியநிருதர்சேனை
ஊழிவெங்கடலிற்சுற்றவொருதனிநடுவணின்ற
பாழிமாமேருவொத்தான்வீரத்தின்பான்மைதீர்ப்பான். (௰௪)

சென்றனனென்பமன்றோதிசைகளோடுலகமெல்லாம்
வென்றவனிவனென்றாலும்வீரத்தேநின்றவீரன்
அன்றதுகண்டவாழியநுமனையமரினாற்றல்
நன்றெனவுவகைகொண்டான்யாவருநடுக்கமுற்றார். (௰௫)

இலைகுலாம்பூணினானுமிருப்பிணைக்குருதிவீரத்
தலகில்வெம்படைகடெற்றியளவிடற்கரியவாகி
மலைகளுங்கடலும்யாறுங்கானமும்பெற்றுமற்றோர்
உலகமேயொத்ததம்மாபோர்ப்பெருங்களமென்றான். (௰௬)

வெப்படைகில்லாநெஞ்சிற்சிறியதோர்விம்மல்கொண்டான்
அப்படைவேலையன்னபெருமையாராற்றலோடும்
ஒப்படைகில்லாரெல்லாமுலந்தனர்குரங்குமொன்றே
எப்படைகொண்டுவெல்வதிராமன்வந்தெதிர்க்கினென்றான். (௰௭)

கண்ணனுருயிரோயொப்பார்கைப்படைக்கலத்திற்காப்பார்
எண்ணலாத்தகைமையில்லாரிறந்திடைக்கிடந்தாதம்மை
மண்ணுளேநோக்கிநின்று வாய்மடித்துருத்துமாயாப்
புண்ணுளேகோலிட்டன்னமானத்தாற்புழுங்குகின்றான். (௰௮)

கானிடையத்தைக்குற்றகுற்றமுங்கரனார்பாடும்
யானுடையெம்பிவீந்தவிடுக்கணும்பிறவுமெல்லாம்
மானிடரிருவரானும்வானரமொன்றினானும்
ஆனிடத்துளவென்வீரமழகிற்றேயம்மவென்றான். (௰௯)

நீப்புண்டவுயிரவாகிநெருப்புண்டநிறத்திற்றோன்றி
நட்புண்டற்கரியவாயபிணக்குவடிடறச்செல்வான்
தேய்ப்புண்டகம்பியாக்கைசிவப்புண்டகண்கடையில்
காய்ப்புண்டசெம்பிற்றோன்றக்கறுப்புண்டமனத்தன்கண்டான் (௨௰)

தாருகன்குருதியன்னகுருதியிற்றனிமாச்சீயம்
கூருகிர்கிளைத்தகொற்றக்கனகன்மெய்க்குழம்பிற்றோன்றத்
தேருகக்கையின்வீரச்சிலையுகவயிரச்செங்கண்
நீருகக்குருதிசிந்தநெருப்புகவயிர்த்துநின்றான். (௨௧)

வெவ்விலையயில்வேலுந்தைவெம்மையக்கருதிநோக்கி
வவ்வுதல்கூற்றுமாற்றான்மாறுமாறுலகின்வாழ்வார்
அவ்வுலகத்துளாருமஞ்சுவரொளிக்கவையா
எவ்வுலகத்தையுற்றாயெம்மைநீத்தெளிதினைந்தாய், (௨௨)

ஆற்றலனனையனாகியறிவழிந்தயரும்வேலை
சீற்றமென்றொன்றுதானேமேனிமிர்செலவிற்றாகித்
தோற்றியதுன்பநோயுள்ளுறத்தூரந்ததம்மா
ஏற்றஞ்சாலாணியாணியெதிர்செலக்கடாயதென்ன. (௨௩)

வேறு.

ஈண்டிவைநிகழ்வுளியிரவிதேரெனத்
தூண்டுறுகேசரின்மேற்றோன்றுந்தோன்றலை
மூண்டமுப்புரஞ்சுடமூடுகுமீசனின்
ஆண்டகைவனைகழலநுமனோக்கினான். (௨௪)

வேறு.

வென்றேனிசன்முன்சிலவீரனாயென்னும்வெம்மை
அன்றேமுடுகிக்கடிதெய்தவழைத்ததம்மா
ஒன்றேயினிவெல்லுதறேற்பதடுத்ததுள்ளத்
தின்றேசமையுமிவனிற்றிரசித்துவென்பான். (௨௫)

கட்டேறுநறுங்கமழ்கண்ணியிக்காளையென்கைப்
பட்டாலதுவேயவிராவணன்பாடுமாகும்
கெட்டோமெனவெண்ணியக்கேடருங்கற்பினாளை
விட்டேகுமதன்றியரக்கரும்வெம்மைதீர்வார். (௨௬)

ஒன்றோவிதனான்வருமூதியமோண்மையானைக்
கொன்றேனெனினிந்திரனுந்துயர்க்கோளுநீங்கும்
இன்றேகடிகெட்டதரக்கரிலங்கையானே
வென்றானெனவிராவணன்றன்னையும்வேவொடென்றான். (௨௭)

அக்காலையரக்கருமானையுந்தேருமாவும்
முக்காலுலகம்மொருமூன்றையும்வென்றுமுற்றிப்
புக்கானின்முன்புக்குயர்பூசல்பெருக்கும்வேலை
மிக்கானும்வெருண்டொர்மராமரங்கொண்டுமிக்கான். (௨௮)

வேறு.

உலைப்புண்டனயானையுருண்டனயானையொன்றோ
மிதிப்புண்டனயானைவிழுந்தனயானைமேன்மேல்
புதைப்புண்டனயானைபுரண்டனயானைபோரால்
வதைப்புண்டனயானைமறிந்தனயானைமண்மேல். (௨௯)

முடிந்ததேர்க்குலமுறிந்தனதேர்க்குலமுரணிற்
றிடிந்ததேர்க்குலமிற்றனதேர்க்குலமச்சிற்
றொடிந்ததேர்க்குலமுக்கனதேர்க்குலநெக்குப்
படிந்ததேர்க்குலம்பறிந்தனதேர்க்குலம்படியில் (௩௰)

சிரநெரிந்தவுங்கண்மணிசிதைந்தவுஞ்செறிதாட்
டரநெரிந்தவுமுதுகிறச்சாய்ந்தவுந்தார்ப்பூண்
உரநெரிந்தவுமுதிரங்களுமிழ்ந்தவுமொண்பொற்
குரநெரிந்தவுங்கொம்புங்கழுத்திழந்தவுங்குதிரை, (௩௧)

பிடியுண்டார்களும்பிளக்கலுண்டார்களும்பெருந்தோள்
ஒடியுண்டார்களுந்தலையுடைந்தார்களுமுருவக்
கடியுண்டார்களுங்கழுத்திழந்தார்களுங்கரத்தால்
அடியுண்டார்களுமச்சமுண்டார்களுமரக்கர். (௩௨)

வட்டவெஞ்சிலையோட்டியவாளியும்வயவர்
விட்டவிட்டவெம்படைகளும்வீரன்மேல்வீழ்ந்த
சுட்டவல்லிரும்படைகலைச்சுடுகலாதனபோல்
பட்டபட்டனதிசையொடும்பொறியொடும்பரந்த. (௩௩)

சிகையெழுஞ்சுடர்வாளிகளிந்திரசித்து
மிகையெழுஞ்சினத்தனுமன்மேல்விட்டனவெந்து
புகையெழுந்தனவெரிந்தனகரிந்தனபோக
நகையிழந்தனவழிந்தனவானுளோர்நாட்டம் (௩௪)

தேரும்யானையும்புரவியுமரக்கருஞ்சிந்திப்
பாரின்வீழ்தலுந்தானொருதனிநின்றபணைத்தோள்
வீரவீரனுமுறுவலும்வெகுளியும்வீங்க
வாரும்வாருமென்றழைக்கின்றவனுமன்மேல்வந்தான். (௩௫)

புரந்தரன்றலைபொதிந்திடப்புயல்வானில்
பரந்தபல்லுருமேற்றினம்வெளித்துயிர்பதைப்ப
நிரந்தரந்தலைநெடுநிலஞ்சுமந்தபேருரகன்
சிரந்துளங்கிடவரக்கன்வெஞ்சிலையைநாணெறிந்தான் (௫௬)

ஆண்டநாயகன்றாதனுமயனுடையண்டம்
கீண்டதாமெனக்கிரியுகநெருந்திலங்கிழிய
நீண்டமாதிரம்வெடிபடவவனெடுஞ்சிலையில்
பூண்டநாணிறத்தன்னெழிற்றோள்களைப்புடைத்தான். (௫௭)

நல்லநல்லையின்ஞாலத்துணின்னெக்கநல்லார்
இல்லையில்லையாமெலறாழ்வலிக்கியாரொம்மிகல
வல்லைவல்லையின்றுருநீபடைத்துளவாழ்நாட்
கெல்லையெல்லையென்றிந்திரசித்துவுமிசைத்தான். (௫௮)

நாளுக்கெல்லையுநிருதராயுலகத்தைநலியும்
கோளுக்கெல்லையுங்கொடுந்தொழிற்கெல்லையுங்கொடியீர்
வாளுக்கெல்லையும்வந்தனவகைகொண்டுவந்தேன்
தோளுக்கெல்லையொன்றில்லையென்றநுமனுஞ்சொன்னான். (௫௯)

இச்சிரத்தையைத்தொலைப்பெனென்றிந்திரன்பகைஞன்
பச்சிரத்தம்வந்தொழுகிடவானவர்பதைப்ப
வச்சிரத்தினும்வலியனவயிரவான்கணைகள்
அச்சிரத்தினுமார்பினுமழுத்தலுமநுமன். (௬௰)

குறித்துவாவென்றுகுறைந்திலனெடுஞ்சினங்கொண்டான்
மறியும்வெண்டிரைமாகடலுலகெலாம்வழங்கிச்
சிறியதாய்சொன்னதிருமொழிசென்னியிற்சூடி
நெறியினின்றதன்னாயகன்புகழெனநிமிர்ந்தான். (௬௧)

பாகமல்லதுகண்டிலனநுமனைப்பார்த்தான்
மாகவன்றிசைபத்தொடும்வரம்பிலாவுலகிற்
றேகநாதனையெறுழ்வலித்தோள்பிடித்தீர்த்த
மேகநாதனுமயங்கினனாமெனவியந்தான் (௬௨)

நீண்டவீரனுநெடுந்தடக்கைகளைநீட்டி
ஈண்டுவெஞ்சரமெய்தனவெய்திடாவண்ணம்
மீண்டுபோய்விழவீசியாங்கவன்மிடற்றடந்தேர்
பூண்டமாவொடுசாரதிதனைப்படப்புடைத்தான் (௬௩)

ஊழிக்காற்றன்னவொருபரித்தேரவனுதவப்
பாழித்தோளவனத்தடந்தேர்மிசைப்பாய்ந்தான்
ஆழிப்பல்படையனையனவளப்பருஞ்சரத்தால்
வாழிப்போர்வலிமாருதிமேனியைமறைத்தான். (௪௪)

உற்றவாளிகளுரத்தடங்கினவுகவுதறுக்
கொற்றமாருதியனையவன்றேர்மிசைகுதித்துப்
பற்றிவன்கையாற்பறித்தெழுந்துலகெலாம்பலகால்
முற்றவென்றபோர்மூரிவெஞ்சிலையினைமுறித்தான். (௪௫)

முறிந்தவில்லின்வல்லோனசைபோய்முடிவதன்முன்னர்
மறிந்துபோரிடைவழிக்கொள்வான்வயிரவாட்படையால்
செறிந்தவான்பெருமலைகளைச்சிறகறச்செயிரா
எறிந்தவிந்திரனிட்டவார்சிலையினையெடுத்தான். (௪௬)

நூறுநூறுபோர்வாளியோர்தொடைகொடுநொய்தின்
மாறில்வெஞ்சினத்திராவணன்மகன்சிலைவளைத்தான்
ஊறுதன்னெடுமேனியிற்பலபடவொல்கி
ஏறுசேவகன்றூதனுஞ்சிறிதுபோதிருந்தான். (௪௭)

ஆர்த்தவானவராவலங்கொளீஇயறிவழிந்தார்
பார்த்தமாருதிதாருவொன்றங்கையிற்பற்றித்
தூர்த்தவாளிகண்முறைமுறைதுணிபடச்சுற்றிப்
போர்த்தபொன்னெடுமணிமுடித்தலையிடைப்புடைத்தான் (௪௮)

பாரமாமரமுடிபுடைத்தலையிடைப்படலும்
தாரையின்னெடுங்கற்றைகள்சொரிவனதயங்க
ஆரமால்வரையருவியினழிகொழுங்குருதி
சோரநின்றுடறுளங்கினனமரரைத்தொலைத்தான். (௪௯)

நின்றுபோதம்வந்துறுதலுநிறைபிறையெயிற்றைத்
தின்றுதேவருமுனிவருமவுணருந்திகைப்பக்
குன்றும்போனெடுமாருதியாகமுங்குலுங்க
ஒன்றும்போல்வனவாயிரம்பகழிகோத்துய்த்தான். (௫௰)

உய்த்தவெஞ்சரமுரத்தினுங்கரத்தினுமொளிப்பக்
கைத்தசிந்தையன்மாருதிநனிதவகனன்றான்
வித்தகன்சிலைவிடுகணைவிசையினுங்கடுகி
அத்தடம்பெருந்தேரொடுமெடுத்தெறிந்தார்த்தான். (௫௧)

கண்ணிமைமீச்சென்றவிமையிடைகலப்பதன்முன்னே
எண்ணின்மீச்சென்றவெறுழ்வலித்திறலுடையிகலோன்
புண்ணின்மீச்சென்றுபொழிபுனல்பசும்புலால்பொடிப்ப
விண்ணின்மீச்சென்றுதேரொடும்பார்மிசைவீழ்ந்தான். (௫௨

விழுந்துபாரடையாமுனமின்னெனுமெயிற்றன்
எழுந்துமாவிசும்பெய்தினனிடையவன்படையில்
செழுந்தகைமாமணித்தேர்க்குலம்யானையுஞ்சிதைய
உழுந்துபேர்வதன்முன்னமாருதியுதைத்தான். (௫௩)

ஏறுதேரிலனெதிர்நிற்குமாரணிலனெரியின்
சீறுவெஞ்சினந்திருகுகின்றான்றிரிவானும்
வேறுசெய்வதோர்வினைபிறிதின்மையின்விரிஞ்சன்
மாறிலாப்பெரும்படைக்கலந்தொடுப்பதாய்மதித்தான். (௫௪)

பூவும்பூநிறவயினியுந்தீபமும்புகையும்
தாவில்பாவனையாற்கொடுத்தருச்சனைசமைத்தான்
தேவிபாவையமுலகமுந்திருத்தியதெய்வக்
கோவினான்முகன்படைக்கலந்தடக்கையிற்கொண்டான். (௫௫)

கொண்டகொற்றவெஞ்சிலைநெடுநாணொடுகூட்டிச்
சண்டவேகத்தமாருதிமீதாளொடுஞ்சாத்தி
மண்டுளங்கிடமாதிரந்துளங்கிடமதிதோய்
விண்டுளங்கிடமேருவுந்துளங்கிடவிட்டான். (௫௬)

நணிப்பரும்பெரும்படைக்கலந்தழலுமிழ்ந்தறுகட்
பணிக்குலங்களுக்கரசினதுருவினைப்பற்றித்
துணிக்கமுற்றுயர்கலுழனுநடுக்குறச்சுற்றிப்
பிணித்ததப்பெருமாருதிதோள்களைப்பிறங்க. (௫௭)

திண்ணென்யாக்கையைத்திசைமுகன்படைசென்றுதிருக
அண்ணன்மாருதியன்றுதன்பின்சென்றவறத்தின்
கண்ணினீரொடுங்கனகதோரணத்தொடுங்கடைநாள்
தண்ணென்மாமதிகோளொடுஞ்சாய்ந்தெனச்சாய்ந்தான் (௫௮)

சாய்ந்தமாருதிசதுமுகன்படையெனுந்தன்மை
ஆய்ந்துமற்றிதனையையவமறித்தகறல்
எய்ந்ததன்றெனவெண்ணினன்கண்முகிழ்த்திருந்தான்
ஒய்ந்ததாமிவன்வலியெனவரக்கன்வந்துற்றான். (௫௯)

ஊற்றகாலையி னுயிர்கொடு திசைதொறு மொதுங்கி
அற்றமே நோக்கினர் நிற்கின்றவா ளெயிற் றரக்கர்
சுற்றும் வந்துடல் சுற்றிய தொளையெயிற் றரவைப்
பற்றி யீர்த்தன ரார்த்தனர் தெழித்தனர் பலரால். (௬௰)

குரக்கு நல்வலங் குறைந்த தென்றுவலங் கொட்டி
இரைக்கு மாநகர் மாறிகடலொத்த தெம்மருங்கும்
திரைக்கு மாசுணம் வாசுகி யொத்தது தேவர்
அரக்க ரொத்தனர் மந்தர மொத்தன னநுமன். (௬௧)

கறுத்த டாசுணங் கனகமா மேனியைக் கட்ட
அறத்து க்காங் கொருதனித் துணையா நின்றவ னநுமன்
மறத்து மாருதம் பொருத நாள்வாளரா வரசு
புறத்து சுற்றிய மேருமால் வரையையும் போன்றான். (௬௨)

வந்திரைத்தனர் மைந்தரு மகளிரு மழைபோல்
அந்தரத்தினும் விசும்பினுந் திசைதொறு மார்ப்பார்
முந்தி யுற்ற தோருவகைக் கோர்கரையிலை மொழியின்
இந்திரன் பிணிப்புண்ட நாளொத்த தவ்விலங்கை. (௬௩)

பாசப்படலம் - முற்றிற்று.

ஆக படலம்-௰௨-இ-திருவிருத்தம்-௩௬௰௭

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

## ௰௩-வது- பிணிவீட்டுப்படலம்

வேறு.

[illegible]யினீ ருமின் னெறிமின் போழுமின்
[illegible]ப்பு மின்குடரினைக் கூறுகூறுகள்
[illegible]யுமி னுலகிடைத் தேய்மின் றின்னுமின்
[illegible]ப்பு மேலிலை நம்முயி ரென்றேடுவார். (௧)

மைத்தடங் கண்ணியர் மைந்தர் யாவரும்
பைத்தலைப் பரவெனக் கனன்றுடைதலை
இத்தனை பொழுதுகொண் டிருப்பதோ வென
மொய்த்தனர் கொலைசெய முயல்கின்றார் சிலர். (௨)

நச்சடைபடைகளானவியுமீட்டதோ
வச்சிரமுடன்மறிகடலின்வாய்மடுத்
துச்சியினழுத்துமினுருத்ததென்றெனின்
இச்சிடையிடுமெனக்கிளக்கின்றார்சிலர். (௩)

எந்தையையெம்பியையெம்முனோர்களைத்
தந்தனைபோகெனத்தடுக்கின்றார்பலர்
அந்தரத்தமரர்தமாணையாலிவன்
வந்ததென்றுயிர்கொளமறுகினார்பலர். (௪)

ஓங்கலம்பெருவலியுயிரினன்பரா
நீங்கலமின்றொடுநீங்கினமினி
எங்கலமிவன்சிரத்திருந்தலாற்றிரு
வாங்கலமென்றழுமாதரார்பலர். (௫)

கொண்டனரொதிர்செலுங்கொற்றமாநகர்
அண்டமுற்றதுநெடிதார்க்குமார்ப்பது
கண்டமுற்றுளவருங்கணவர்க்கேங்கிய
குண்டலமுகத்தியர்க்குவகைகூரவே. (௬)

வடிவுடைக்கனற்படைவபவர்மால்கரி
கொடியுடைத்தேர்பரிகொண்டுவீசலின்
இடிபடச்சிதைந்தமால்வரையினில்லெலாம்
பொடிபடக்கிடந்தனகண்டுபோயினன். (௭)

முயிறலைத்தெழுமுதுமரத்தின்மொய்ம்புதோள்
கயிறலைப்புண்டதுகண்டுகான்னிலா
தெயிறலைத்தெழுமிதழரக்கமாழையர்
வயிறலைத்திரியலின்மயங்கினார்பலர். (௮)

ஆர்ப்புறவஞ்சினரடங்கினார்பலர்
போர்ப்புறச்செயலினைப்புகல்கின்றார்பலர்
பார்ப்புறப்பார்ப்புறப்பயத்தினாற்பதைத்
தூர்ப்புறத்திரியவுற்றோடுவார்பலர். (௯)

காந்துறுகதமெழயிற்றரவின்கட்டொரு
பூந்துணர்சேர்த்தெனப்பொலியும்வாண்முகம்
தேர்ந்துறுபொருள்பெறவெண்ணிச்செய்யுமின்
வேந்துறல்பழுதெனவிளம்புவார்சிலர். (௰)

ஒளிவருநாகத்துக்கொல்கியன்றுதன்
இளிவரலின்றுயின்னெண்ணம்வேறென
களிவருசிந்தையாற்காண்டிநங்களைச்
சுளிகிலையாமெனத்தொழுகின்றார்சிலர். (௰௧)

பைங்கழலநுமனைப்பிணித்தபாந்தளைக்
கிங்கரரொருபுடைகிளர்ந்துபற்றினர்
ஐம்பதினாயிரரளவிலாற்றலர்
மொய்ம்பினினெறுழ்வலிக்கருளன்மும்மையார். (௰௨)

திண்டிறலரக்கர்தஞ்செருக்குச்சிந்துவான்
தண்டலிறன்னுருக்கரந்ததன்மையான்
மண்டமர்தொடங்கினன்வானரத்துருக்
கொண்டனனந்தகன்கொல்லென்றார்பலர். (௰௩)

அரமியத்தலந்தொறுமம்பொன்மாளிகைத்
தரமுறுநிலைதொறுஞ் சாளரந்தொறும்
முரசெறிகடைதொறுமினைத்துமொய்த்தனர்
நிரைவளைமகளிருநிறைந்தமைந்தரும், (௰௪)

கயிலையிலொருதனிக்கணிச்சிவானவன்
மயிலியற்சீதைதன்கற்பின்மாட்சியான்
எயிலுடைத்திருநகர்சிதைப்பவெய்தினன்
அயிலெயிற்றொருகுரங்காயென்பார்பலர். (௰௫)

அரம்பையர்விஞ்சைநாட்டளகவல்லியர்
நரம்பினுமினியசொனைநாடியர்
கரும்பியல்சித்தியரியககர்கன்னியர்
வரம்பறுசும்மையர்தலைமயங்கினார். (௰௬)

நீரிடைக்கண்டுயினெடியநேமியும்
தாருடைத்தனிமலருலகின்றதையும்
ஓருடற்கொண்டுதம்முருவமாற்றினர்
பாரிடைப்புகுந்தனர்பகைத்தென்பார்பலர். (௰௭)

அரக்கருமரக்கியர்குழாமுமல்லவர்
கரக்கிலாநெடுமழைக்கண்ணினீரது
விளைக்குழற்சீதைதன்மெலிவுநோக்கியோ
இரக்கமோவறத்தினதெண்மையேகொலோ. (௰௮)

ஆண்டொழிலநுமனுமவனொடேகினான்
மீண்டிலன்வெறிலன்விரும்பலுற்றிலன்
ஈண்டிதுவேதொடர்ந்திலங்கைவேந்தனைக்
காண்டலேநலமெனக்கருத்திலெண்ணினான். (௧௯)

எந்தையபகருளினுமிராமன்சேவடி
சிந்தைசெய்நலத்தினுஞ்சீதைவானவர்
தந்துளவரத்தினுந்தருகட்பாசமும்
சிந்துவெனயர்வுறு சிந்தைசீரிதால். (௨௰)

வளையெயிற்றரக்கனையுற்றமந்திரத்
தளவுறுமுதியருமறியவாணையால்
விளைவினைவிளம்பினன்மிதிலைநாடியை
இளகினனென்வயினீதலேயுமால். (௨௧)

அல்லதூஉமவனுடைத்துணைவராயினோர்க்
கெல்லையுந்தெரிவுறுமெண்ணுந்தேறலாம்
வல்லவனிலைமையுமனமுந்தேறலாம்
சொல்லுகமுயமெனுந்தூதுசொல்லவே. (௨௨)

வாலிதன்னிறுதியுமரத்துக்குற்றதும்
கூலவெஞ்சேனையின்குணிப்பிலாமையும்
மேலவன்காதலன்வலியுமெய்ம்மையான்
நீளிறத்திராவணனெஞ்சினிற்குமால். (௨௩)

ஆதலானரக்கனையெய்தியாற்றலும்
நீதியுமனக்கொளநிறுவிநீள்றவும்
பாதியின்மேற்செலநூறிட்டடையப்
போதலேகருமமென்றநுமன்போயினன். (௨௪)

கடவுளர்க்கரசனைக்கடந்ததோன்றலும்
புடைவரும்பெருப்படைப்புணரிபோர்த்தெழ
விடைபிணிப்புண்டதுபோலும்வீரனைக்
குடைகெழுமன்னிற்கொண்டுபோயினன் (௨௫)

தூதுவரோடினர்தொழுதுதொல்லைநாள்
பாதிரங்கடந்தவற்குறுகிமன்னநின்
காதலன்மறைமலர்க்கடவுள்வாளியால்
ஈதில்வானரம்பிணிப்புண்டதாமென்றார். (௨௬)

கேட்டலுங்கிளர்சுடர்க்கேட்டவாறெனை
வீட்டிருள்விழுங்கியமார்பன்யானையின்
கோட்டெதிர்பொருதபோராரங்கொண்டெதிர்
நீட்டினனுவகையினிமிர்ந்தநெஞ்சினான். (௨௭)

எல்லையிலுவகையாலிவர்ந்ததோளினன்
புல்லுறமலர்ந்தகட்குமுதப்பூவினன்
ஒல்லையினோடிநீருளாத்தென்றனையால்
கொல்லலிர்தருகெனக்கூறிவிமொன்றான். (௨௮)

அவ்வுரைதூதருமாணையால்வரும்
தெவ்வுரைநீக்கினனறியச்செப்பினான்
இவ்வுரைநிகழ்வுழியிருந்தசீதையாம்
வெவ்வுரைநீங்கினனிலைவிளம்புவாம். (௨௯)

இறுத்தனன்கடிபொழிலெண்ணிலோர்பட
ஒறுத்தனனென்றுகொண்டுவக்கின்றாளுயிர்
வெறுத்தனள்சோர்வுறவீரற்குற்றதைக்
கறுத்தலிற்சிந்தையாள்கவன்றுகூறினாள். (௩௰)

வேறு.

ஓவியம்புகையுண்டதுபோலொளிர்
பூவின்மெல்லியன்மேனிபொடியுறப்
பாவிவேடன்கைப்பார்ப்புறப்பேதுறும்
தூவியன்னமன்றாளிவைசொல்லினாள். (௩௧)

உற்றுண்டாயவிசும்பையுருவினாய்
முற்றுண்டாய்நலையாவையுமுற்றுறக்
கற்றுண்டாயொருகள்ளவரக்கனால்
பற்றுண்டாயிதுவோவறப்பான்மையே. (௩௨)

கடர்கடந்துபுகுந்தனைகண்டகர்
உடர்கடந்துநின்னூழிகடந்திலை
அடர்கடந்ததிரள்புயத்தையநீ
இடர்கடந்தனைவந்திடர்மேலுமே. (௩௩)

ஆழிநாட்டியென்னாருயிர்காட்டினாய்க்
கூழிநாட்டுவெவ்வென்றுணாத்தேனதா
வாழிநாட்டுமென்றுண்டுன்வளைப்புயப்
பாழிகாட்டியரும்பழிகாட்டினாய். (௩௪)

கண்டுபோயினைநீநெறிகாட்டிட
மண்டுபோரினரக்கனைமாய்த்தெனைக்
கொண்டுமன்னவன்போமெனுங்கொள்கையைத்
தண்டினாயெனக்காருயிர்தந்தநீ. (௧௫)

ஐயப்பன்னினளின்னனதன்னுயிர்
தேயக்கன்றுபிடியுறத்தீங்குறு
தாயைப்போலத்தளர்ந்துமயர்ந்தனள்
தீயைச்சுட்டதோர்கற்பெனுந்தீயினாள். (௧௬)

பெருந்தகைப்பெரியோனைப்பிணித்தபோர்
முருந்தன்மற்றையுலகொருமூன்றையும்
அருந்தவப்பயனாலரசாள்கின்றான்
இருந்தவப்பெருங்கோயில்சென்றெய்தினான். (௧௭)

வேறு.

நலங்கண்மூன்றிற்கும்பிறிதொருமதிதழைத்தென்ன
அலங்கல்வெண்குடைதண்ணிழலவிரொளிபரப்ப
வலங்கொடோளினான்மண்ணின்றுவானுறவெடுத்த
பொலங்கொண்மாமணிவெள்ளியங்குன்றெனப்பொலிய (௧௮)

புள்ளுயர்த்தவன்றிகிரியும்புரந்தரனயிலும்
தள்ளின்முக்கணான்கணிச்சியிற்றாக்கியதழும்பும்
கள்ளுயிர்க்கும்மென்குழலியர்முகிழ்விரற்கதிர்வாள்
வள்ளுகிர்ப்பெருங்குறிகளும்புயங்களின்வயங்க. (௧௯)

துன்றுசெம்மயிர்ச்சுடர்நெடுங்கற்றைகள்சுற்றி
நின்றுதிக்குறநிரல்படக்கதிர்க்குழாநிமிர
ஒன்றுசீற்றத்தினுயிர்ப்பெனும்பெரும்புகையுயிர்ப்பத்
தென்றிசைக்குமோர்வடவன்றிருத்தியதென்ன (௨௰

மரகதக்கொழுங்கதிரொடுமாணிக்கநெடுவாள்
நரகதேயத்துணடுக்குறவிருளைபுநக்கச்
சிரமனைத்தையுந்திசைதொறுந்திசைதொறுஞ்செலுத்தி
உரகர்கோனினிதரசுவீற்றிருந்தனனொப்ப (௨௧)

குவித்தபன்மணிக்குப்பைகள்கலையொடுங்கொழிப்பச்
சவிச்சுடர்க்கலனணிந்தபொற்றோளொடுதயங்கப்
புவித்தடம்படர்மேருவைப்பொன்முடியென்னக்
கவித்துமாலிருங்கருங்கடலிருந்ததுகடுப்ப (௨௨)

சிந்துராகத்தின்செறிதுகிற்கச்சொடுசெறியப்
பந்திவெண்முத்தினணிகலன்முழுநிலாப்பரப்ப
இந்துவெண்குடைநீழலிற்றாரகையினம்பூண்
டந்தவானுடுத்தலத்துவீற்றிருந்ததாமென்ன (௪௩)

வண்மைக்குந்திருமறைகட்கும்வானினும்பெரிய
திண்மைக்குந்தனியுறையுளாமுழுமுகத்திசையின்
கண்வைக்குந்தொறுங்களிற்றொடுமாதிரங்காக்கும்
எண்மர்க்குமற்றையிருவர்க்கும்பெரும்பயமியற்ற (௪௪)

ஏகநாயகன்றேவியையெதிர்ந்ததற்பின்னை
நாகர்வாழ்விடமுதலென நான்முகன்வைகும்
மாகமாலவிசும்பீறெனநடுவணவளாப்பில்
தோகைமாதர்கணடைந்தரிற்றோன்றினர்சுற்ற (௪௫)

வானரங்களும்வானவரிருவருமனிதர்
ஆனபுன்றொழிலோரெனவிகழ்கின்றவவரும்
ஏனைநின்றவரிருடியர்சிலரொழிந்தியாரும்
தானவின்றவேலரக்கர்தங்குழுவொடுசுற்ற. (௪௬)

நரம்புகண்ணகத்துள்ளுறைநறைநிறைபாண்டில்
நிரம்புசில்லரிப்பாணிபுங்குறடுநின்றிசைப்ப
அரம்பைமங்கையரமிழ்துகுத்தாலன்னபாடல்
வரம்பிலின்னிசைசெவிதொறுஞ்செவிதொறும்வழங்க. (௪௭)

கூடுபாணியினிசையொடுமுழவொடுங்கூடத்
தோடுசேறடிவிழிமங்கையொடுதொடரும்
ஆடன்மேனகைகுறினருந்தவமுனிவர்க்குமமைந்த
வீடுமீட்டதுறுமேனகைமேனகைவிளங்க. (௪௮)

ஊடினோர்முகத்துறுநகையொருமுகமுண்ணக்
கூடினோர்முகக்களிநகையொருமுகங்குடிப்பப்
பாடினோர்முகத்தாரமுதொருமுகம்பருக
ஆடினோர்முகத்தணியமுதொருமுகமருந்த, (௪௯)

தேவரோடிருந்தரசியலொருமுகஞ்செலுத்த
மூவரோடுமாமந்திரமொருமுகமுயலப்
பாவகாரிதன்பாவகமொருமுகம்பயிலப்
பூவைசானகியுருவொடுமொருமுகம்பொருந்த. (௫௰)

காந்தண்மெல்விரற் சனகிதன்கற்பெனுங்கடலை
நீந்திமெய்யுறுவதெங்ஙனென்றொருமுறைநினையச்
சாந்தளாவியகொங்கைநன்மகளிர்தற்சூழ்ந்தார்
ஏந்துமாடியினொருமுகமியல்புடனிலங்க, (௫௧)

பொதும்பர்வைகுதேன்புக்கருந்துதற்ககம்புலரும்
மகம்பெய்வண்டெனச்சனகிமென்மனஞ்செலமறுகி
வெதும்புவாரகம்வெந்தழிவார்நகில்விழிநீர்
ததும்புவார்விழித்தாரைவேறொடொறுந்தாக்க. (௫௨)

மாறளாவியமகரந்தநறவுண்டுமகளிர்
வீறளாவியமுகுண்முலைமெழுகியசாந்தின்
சேறளாவியசிறுநறுஞ்சீகரத்தென்றல்
ஊறளாவியகம்பெனவுடலிடைநுழைய, (௫௩)

திங்கள்வாணுதன்மடந்தையர்சேயரிக்கிடந்த
அங்கபத்தடந்தாமரைக்கலரியோனாகி
வெங்கண்வானவர்தானவரொன்றிவர்விரியாப்
பொங்குமைக்கடற்றாமரைக்கிந்துவேபோன்றும். (௫௪)

இருந்தவெண்டிசைக்கிழவனைமாருதியெதிர்ந்தான்
கருந்திறகத்தைநோக்கியகலுழனிற்கனன்றான்
திருந்தும்தாளிடைவீக்கியபாசத்தைச்சிந்தி
உருந்துநஞ்சுபோல்பவன்வயிற்பாய்வெனென்றுடன்றான். (௫௫)

உறங்குகின்றபோதுயிருண்டல்குற்றமென்றொழிந்தேன்
பிறங்குபொன்மணிபாசனத்திருக்கவும்பெற்றான்
திறங்களென்பலசிந்திப்பதிவன்றலைசிதறி
அறங்கொள்கொம்பினைமீட்டெனல்வெனென்றமைந்தான், (௫௬)

தேவர்தானவர்முதலினர்சேவகன்றேவி
காவல்காண்டிவணிருந்தவர்கட்புலன்கதுவப்
பாவகாரிதன்முடித்தலைபறித்திலெனென்றால்
ஏவதியானினிமேற்செயுமாள்வினையென்றான். (௫௭)

மாடுருத்தமற்றிவன்புணர்மங்கையர்மயங்கி
ஊடரிந்திடமுடித்தலைதிசைதொறுமுருட்டி
ஆடல்கொண்டதின்றூர்க்கின்றததுகொடிதம்மா
தேடிவந்ததோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ (௫௮)

நீண்டவாளெயிற்றரக்கனைக்கண்களினேரோ
காண்டல்வேண்டியிவ்வுயிர்சுமந்தெதிர்சிலகழறி
மீண்டபோதுண்டுவசைப்பொருள்வென்றிலேனெனினும்
மாண்டபோதிறும்புகழன்றிமற்றுமொன்றுண்டோ. (௫௯)

என்றுதோளிடையிறுக்கியபாசமிற்றேகக்
குன்றின்மேலெழுகோளரியேயெனக்குதியின்
சென்றுகூடுவலென்பதுசிந்தனைசெய்யா
நின்றுகாரியமன்றெனநீதியினைந்தான். (௬௰)

வேறு.

கொல்லலாம்வலத்தனுமல்லன்கொற்றமும்
வெல்லலாந்தரத்தனுமல்லன்மேலைநாள்
அல்லெலாந்திரண்டனநிறத்தனாற்றலை
வெல்லலாமிராமனாற்பிறரும்வெல்வரோ. (௬௧)

என்னையும்வெலற்கரிதிவனுக்கீண்டிவன்
தன்னையும்வெலற்கரிதெனக்குந்தாக்கினால்
அன்னவேகாலங்கள்கழியுமாதலான்
துன்னருஞ்செருத்தொழிறொடங்கலாயதோ. (௬௨)

ஏழுயருலகங்கள்யாவுமின்புறப்
பாழிவன்புயங்களோடரக்கன்பஃறலைப்
பூழியிற்புரட்டலென்பூணிப்பாமென
ஊழியாம்விளப்பியவுளாயுமொன்றுண்டால். (௬௩)

இங்கொருதிங்களேயிருப்பல்யானென
அங்ஙனையகன்றனதானைகூறிய
மங்கையுமின்னுயிர்துறத்தல்வாய்மையால்
பொங்குவெஞ்செருவிடைப்பொழுதுபோக்கினால். ()

ஆதலானமர்த்தொழிலழகிற்றன்றருந்
தூதனுந்தன்மையேதாய்தென்றுன்னினான்
வேதநாயகன்றனித்துணைவன்வென்றிசால்
ஏதில்வாளரக்கனதிருக்கையெய்தினான். (௬௫)

தீட்டியவாளெனத்தெறுகட்டேவியர்
கூட்டியகுழுவிடையிருந்தவேந்தற்குக்
காட்டினனநுமனைக்கடலிராழு
தூட்டியவும்பளையுலையவோட்டினான். (௬௬)

## பிணிவீட்டுப்படலம்

புவனமெத்தனையவையனைத்தும்போர்கடந்
தவனையுற்றரியுருவானவாண்டகை
சிவனெனச்செங்கணனென்னச்சேவகன்
இவனெனக்கூறிநின்றிருகைகூப்பினான், (௬௭)

நோக்கியகட்பொறிநுவன்றவாய்களில்
தூக்கியபொறியொடுமயிர்சுறுக்கொளத்
தாக்கியவுயிர்ப்பொடுந்தவழவெம்புகை
நீக்கினனவ்வுடல்விசித்தபாம்பினை. (௬௮)

அன்னவோர்வெகுளியனமரராதியர்
துன்னியதுன்னலர்த்துணுக்கஞ்சுற்றுற
என்னிவண்வரவுநீயாரையென்றவன்
தன்மையைவினவினான்கூற்றின்றன்மையான் (௬௯)

நேமியோகுலிசியோநெடுங்கணிச்சியோ
தாமரைக்கிழவனோதறுகட்பஃறலைப்
பூமிதாங்கொருவனோபொருதுமுற்றுறா
நாமமுமுருவமுங்கரந்துநண்ணினாய். (௭௰)

நின்றிசைத்துயிர்கவர்நீலக்காலனோ
குன்றிசைத்தயிலுறவெறிந்தகொற்றனோ
தென்றிசைக்கிழவனோதிசைநின்றாட்சியர்
என்றிசைக்கின்றவர் யாருள்யாவனீ (௭௧)

அந்தணர்வேள்வியினுக்கியாணையின்
வந்துறவிடுத்ததோர்வயவெம்பூதமோ
முந்தொருமலருளோனிலங்கைமுற்றுறச்
சிந்தெனத்திருத்தியதறுகட்டெய்வமோ (௭௨)

ஆரைநீயென்னையிங்கெய்துகாரணம்
ஆருனைவிடுத்தவரரியவாணையால்
சோர்விலைசொல்லுதியென்னச்சொல்லினான்
வேரொடுமமரர்தம்புகழ்விழுங்கினான் (௭௩)

சொல்லியவனைவருமல்லென்சொன்னவப்
புல்லியவலியினோரேவல்பூண்டிலென்
அல்லியங்கமலமேயனையசெங்கணார்
வில்லிதன்றூதன்யானிலங்கைமேயினேன் (௭௪)

அனையவன்யாரெனவறிதியாறியேல்
முனைவருமமரருமூவர்தேவரும்
எனையவரெனையவர்யாவர்யாவையும்
நினைவருமிருவினைமுடிக்கநின்றுளோன் (எரு)

வேறு.

ஈட்டியவலியுமேனுளிபற்றியதவமும்யாணர்
கூட்டியபடைபுந்தேவர்கொடுத்தநல்வரமுங்கோட்டும்
நீட்டியபிறவுஞ்செய்ததிருத்தியவாழ்வுமெல்லாம்
நீட்டியபகழியொன்றனமுதலொடுநீக்கநின்றான் (எசு)

தேவரும்பிறருமல்லன்றிசைக்களிறல்லன்றிக்கிற்
காவலரல்லனீசன்கைலையங்கிரியுமல்லன்
மூவருமல்லன்மற்றைமுனிவருமல்லனெல்லைப்
பூவலயத்தையாண்டபுரவலன்புதல்வன்போலாம். (எஎ)

போதமும்பொருளுந்தீக்கள்விப்புணையறுபயனும்பொய்தீர்
மாதவஞ்சாந்தநீராவரங்களுமற்றுமுற்றும்
யாதவனினைந்தானன்னபயத்தனவேதுவேண்டின்
வேதமுமறனுஞ்சொல்லுமெய்யறமூர்த்தியல்லோன். (எஅ)

காரணங்கோடியாயிற்கடையிலாமறையின்கண்ணும்
நாரணனாட்டமாட்டாவறிவினுக்கறிவுமல்லோன்
போரணங்கிடங்கர்வவ்வைப்பொருதுநின்றுமுதலேயய்ற
வாரணங்காக்கவந்தகாரணமாகாக்கவந்தான். (எகூ)

மூலமுநடுவுமீறுமில்லதோர்மும்மைத்தாய
காலமுங்கணக்குநீத்தகாரணன்கைவில்லேந்திச்
சூலமுந்திகிரிசங்குங்கரகமுந்துறந்துதொல்லை
ஆலமுமலருவெள்ளிப்பொருப்பும்விட்டயோத்திவந்தான். (அய)

அறந்தலைநிறுத்திவேதமருள்சுரந்தறைந்தநீதித்
திறந்தெரிந்துலகம்பூணச்செந்நெறிசெலுத்தித்தீயோர்
இறந்துகநூறித்தக்கோரிடர்துடைத்தேகவிண்டு
பிறந்தனன்றன்பொற்பாதமேத்துவாபிறப்பறுப்பான். (அக)

அன்னவற்கடிமைசெய்வேனமுமநுமனென்பேன்
நன்னுதறன்னைத்தேடநாற்பெருந்திசையும்போந்த
மன்னரிற்றென்பால்வந்ததானைக்குமன்னன்வாலி
தன்மகனவன்றன்றூதன்வந்தனென்றனியேனென்றான். (அஉ)

என்றலுமிலங்கைவேந்தனெயிற்றினமெழிலிநாப்பண்
மின்றிரிந்தன்னநக்குவாலிசெய்விடுத்ததூத
வன்றிறலாயவாலிவலியன்கொலரசின்வாழ்க்கை
நன்றுகொலென்னலோடுநாயகன்றூதனக்கான். (அ௩)

அஞ்சலையரக்கபார்விட்டந்தரமடைந்தானன்றே
வெஞ்சினவாலிமீளான்வாலும்போய்விளிந்ததன்றே
அஞ்சனமேனியான்றனடுகணையொன்றான்மாழ்கித்
துஞ்சினனெங்கள்வேந்தன்சூரியன்றோன்றலென்றான். (அ௪)

என்னுடையீட்டினாலவ்வாலியையெறுழ்வாயப்பால்
இன்னுயிருண்டதிப்போதியாண்டையானிராமனென்பான்
அன்னவன்றேவிதன்னையங்கதனுடனுற்ற
தன்மையையுரைசெய்கென்னச்சமீரணன்றனயன்சொல்வான். (அ௫)

தேவியைநாடிவந்தசெங்கணற்கெங்கள்கோமான்
ஆவியொன்றாகநட்டானருந்துயர்துடைத்தியென்ன
ஓவியர்க்கெழுதவொண்ணாவுருவத்தனுருமையோடும்
கோவியற்செல்வமுன்னைக்கொடுத்துவாலியையுங்கொன்றான். (அ௬)

ஆயவன்றன்னொடாண்டோர்திங்களோர்நான்கும்வைகி
மேயவெஞ்சேனைசூழ்வீற்றினிதிருந்தவீரன்
போயினிர்நாடுமென்னப்போந்தனம்புகுந்ததீதென்
றேயவன்றூதன்சொன்னானிராவணனிதனைச்சொன்னான். (அ௭)

உங்குலத்தலைவன்றன்னோடொட்பிலாவுயர்ச்சியோனை
வெங்கொலையம்பிற்கொன்றாற்காடடொழின்மேற்கொண்டதோல்
எங்குலப்புறுநஞ்சீர்த்திநுப்பொடுமியைந்ததென்றால்
மங்குலிற்பொலிந்தஞாலமாதுலையுடைத்துமாதோ. (அ௮)

தம்முனைக்கொல்வித்தன்னாற்றொன்றவற்கன்புசான்ற
உம்பினத்தலைவனையாதெனக்குணர்த்தலுற்ற
தெம்முனைத்தூதுவந்தாயிகல்புரிதன்மையன்னை
தம்பினைக்கொல்லாநெஞ்சமஞ்சலைநுவறியென்றான். (அ௯)

வேறு.

துணர்த்ததாரவன்சொல்லியசொற்களைப்
புணர்த்துநோக்கிப்பொதுநின்றநீதியை
உணர்த்தினாலதுறுமெனவுன்னருங்
குணத்தினானுமினையனகூறினான். (௯௰)

தூதுவந்ததுசூரியன்றான்முளை
ஏதுவொன்றியநீதியியைந்தன
சாதுவென்றுணர்கிற்றிலேயற்றக்கன
கோதிறந்தனநின்வயிற்கூறுவாம். (கூக)

வறிதுவீழ்த்தனைவாழ்க்கையையன்னறம்
சிறிதுநோக்கலைதீமைதிருத்தினாய்
இறுதியுற்றுளதாயினுமின்னுமோர்
உறுதிகேட்டியுயிர்நெடிதோம்புவாய். (கூஉ)

போயிற்றீர்நும்புலன்வென்றுபோற்றிய
ஆயிற்றீர்வரிதாகியமாதவம்
மாயிற்றீர்வருங்கேடருங்கற்பினாள்
தீயிற்றூயவளைத்துயர்செய்ததால். (கூங)

இன்றுவீந்ததுநாளைச்சிறிதினற
நின்றுவீந்ததலாணிறைநிற்குமோ
ஒன்றுவீந்ததுநல்லுணரும்பரா
வென்றுவீங்கியவீக்கமிகுத்ததால். (கூச)

தீமைநன்மையைத்தீர்த்தலொல்லாதெனும்
வாய்மைநீக்கினைமாதவத்தால்வந்த
தூய்மைதூயவடன்மையிற்றோன்றிய
நோய்மையாற்றுடைக்கின்றனைநோக்கலாய். (கூரு)

திறந்திறம்பியகாமச்செருக்கினால்
மறந்துதத்தமதியின்மயங்கினார்
இறந்திறந்திழிந்தேதறுவதேயலால்
அறந்திறம்பினராருளராயினார். (கூசா)

நாமத்தாழ்கடன்ஞாலத்தவிந்தவர்
ஈமத்தான்மறைந்தாரிளமாதர்பால்
காமத்தாலிறந்தார்களிவண்பிறை
தாமத்தாரினவெண்ணினுஞ்சால்வரோ. (கூஎ)

பொருளுங்காமமுமென்றிவைபோக்கிவே
றிருளுண்டாமெனவெண்ணலீர்தலும்
அருளுங்காதலிற்றீர்தலுமல்லதோர்
தெருளுண்டாமெனவெண்ணலர்சீரியோர். (கூஅ)

இச்சைதத்தன்மையினிற்பிறரில்வினை
நச்சிநாளுநகையுறநாணிலன்
பச்சைமேனிபுலர்ந்துபழிபடூஉம்
கொச்சையாண்மையுஞ்சீர்மையிற்கூடுமோ. (௯௯)

ஓதநீருலகாண்டவருன்றுணைப்
போகநீங்கியராருளர்போயினார்
வேதநீதிவிதிவழிச்செல்வரும்
காதனீயறத்தெல்லைகடத்தியோ. (௱)

வெறுப்புண்டாயவொருத்தியைவேண்டினால்
மறுப்புண்டாயபின்வாழ்கின்றவாழ்வினின்
உறுப்புண்டாய்நமையோங்கியநாசியை
அறுப்புண்டாலதழகெனலாகுமே. (௱௧)

பாணாஞ்ஞூறுவடபற்பலபொற்புயம்
௲ணாஞ்ஞூறுதலையுளவென்னினும்
உ௲ணாஞ்ஞூறுங்கடுங்கணலுட்பொதி
ஙீணாஞ்ஞூறவைசேமஞ்செலுத்துமோ. (௱௨)

புரம்பிழைப்பருந்தீப்புகப்பொங்கியோன்
நரம்பிழைத்தனபாடலினல்கிய
வரம்பிழைக்குமறைபிழையாதவன்
சரம்பிழைக்குமென்றெண்ணுதல்சாலுமோ. (௱௩)

௲றிஞ்ஞுகவெஞ்சலினற்றிரு
நூறிநொய்தினையாகிநுழைதியோ
வேறுமின்னுநகையாம்வினைத்தொழில்
தேறினார்பலர்காமிக்குஞ்செவ்வியோய். (௱௪)

பிறந்துளார்பிறவாதபெரும்பதம்
சிறந்துளார்மற்றுந்தேவர்க்குந்தேவராய்
இறந்துளார்பிறர்யாருமிராமனை
மறந்துளாருளராகிலர்வாய்மையால். (௱௫)

ஆதலாற்றன்றும்பெறற்செல்வமும்
ஓதுபல்கிளையுமுயிரும்பெறச்
சீதையைத்தருகென்றெனச்செப்பினான்
சோதியான்மகனிற்கெனச்சொல்லினான். (௱௬)

என்றலுமிவைசொல்லியதற்கொரு
குன்றின்வாழுங்குரங்குகொலாமிது
நன்றுநன்றெனமாநகைசெய்தனன்
வென்றியென்றொன்றுதானன்றிவேறிலான். (௱எ)

குரக்குவார்த்தையுமானிடர்கொற்றமும்
இருக்கநிற்கநீயென்சொலடாவிரும்
புரத்தினுட்டருந்தூதுபுகுந்தபின்
அரக்கரைக்கொன்றதந்துணையாமென்றான், (௱அ)

காட்டுவாரின்மையாற்கடிகாவினை
வாட்டினேனென்னைக்கொல்லவந்தார்களை
வீட்டினேன்பின்னுமென்மையினாலுன்றன்
மாட்டுவந்ததுகாணுமதியினால். (௱௯)

என்னுமாத்திரத்திலெரிநீண்டுக
மின்னும்வாளெயிற்றன்சினம்வீங்கினான்
கொன்மினென்றனன்சொல்லியர்சேர்தலும்
நின்மினென்றனன்வீடணனீதியான். (௱௰)

ஆண்டெழுந்துநின்றண்ணலரக்கனை
நீண்டகையன்வணங்கினனீதியான்
மூண்டகோபமுறையதன்றுமென
வேண்டுமெய்யுரையையவிளம்பினான். (௱௰௧)

வேறு.

அந்தணனுலகமூன்றுமாதியினறத்தினாற்றல்
தந்தவனின்புக்கான்றதவநெறியுணர்ந்துதக்கோய்
இந்திரன்கருமமாற்றுமிறைவனியம்புதூது
வந்ததனென்றபின்புங்கொல்லியோமறைகள்வல்லோய். (௱௰௨)

பூதலப்பரப்பினண்டப்பொகுட்டினுட்புறத்துட்பொய்தீர்
வேதமுற்றியங்குவைப்பின்வேறுவேறிடத்தும்வந்தார்
மாதரைக்கொலைசெய்தார்களுளரெனவரினும்வந்த
தூதரைக்கொன்றுளார்கள்யாவரோதொல்லைநல்லோர். (௱௰௩)

பகைப்புலனணுகியுய்த்தார்பகர்ந்ததுபகர்ந்துபற்றார்
மிகைப்புலனடக்கிமெய்ம்மைவிளம்புதல்விரதம்பூண்ட
தகைப்புலக்கருமத்தோரைக்கோறலிற்றக்கார்யார்க்கும்
நகைப்புலன்பிறிதுண்டாமேநங்குலநவையுண்டாமே. (௱௰௪)

மூத்தலையெம்மைகன்மற்றைமூராந்தகன்முனிவன்முன்னு
அத்தலைநம்மைநோனுவமரர்க்குநகையிற்றுமால்
எத்தலையுலகங்காக்குமேவேந்தநீவேற்றோவ
இத்தலையெய்தினனைக்கொல்லுதலிழுக்கமின்னும். (௱௰௫)

இளையவடன்னைக்கொல்லாதிருசெவிமூக்கொடீர்ந்து
விளைவுணாவென்றுவிட்டார்வீரராய்மெய்ம்மையோர்வார்
களைதியேலாவிநம்பாலிவன்வந்துகண்ணிற்கண்ட
உளவுணாயாமற்செய்தியாதியென்றமையச்சொன்னான்.
(௱௰௬)

வேறு

நல்லதுரைத்தாய்நம்பியிவனைவைசெய்தானேயானாலும்
கொல்லல்பழுதேபோயிடைநீகூறிக்கொணர்திகடிதென்னத்
தொலலைநலமூலமறச்சுடுநகனாச்சூழ்போக்கி
எல்லைநடக்கவிடுமின்களென்றானின்றானெழுந்தார். (௱௰௭)

ஆயகாலத்தயன்படையோடிருப்பவாகாதனலிநிதல்
தூய்பாசமெனப்பலவுங்கொணர்ந்துபிணிமின்றோளென்று
மேயதெய்வப்படைக்கலத்தைவிடடானமரர்போர்வென்றான்
ஏயனுமுன்னிடைபுக்குத்தொடைவன்கயிற்றாற்பிணித்திறுத்தார்.()

நாட்டினகரினடுவுள்ளகயிறுநவிலுந்தகைமையவே
வீட்டினூசனெம்பாசமற்றதெருள்விசிதுறந்த
மாட்டும்புரவியாயமெலாமருவிவாங்குந்தொடையழிந்த
பூட்டும்வல்லின்முட்கோடும்புரசையிழந்தபோர்யானை. (௱௰௯)

மண்ணிற்கண்டவானவனைவலியிற்கவர்ந்தவரம்பெற்ற
எண்ணற்கரியவேனையனையிகலிற்பறித்ததமக்கியைந்த
பெண்ணிற்கிசையுமங்கலத்திற்பிணித்தகயிற்றையிடைபிழைத்த
கண்ணிற்கண்டவன்பாசமெல்லாமிட்டுக்கட்டினார். (௱௨௰)

கடவுட்படையைக்கடந்தறத்தினனைகடந்தேனகாமே
விடுவித்தளிதகார்தெவ்வரோவென்றெனன்றோவிவர்வென்றி
சுடுவிக்கின்றகிவ்வூராச்சுடுகென்றுமாத்தநுணிவென்று
நடுவுற்றமைப்புறம்நோக்கிமூற்றுமூவந்தானவையற்றான். (௱௨௧)

நொய்யபாசம்புறம்பிணிப்பநோன்மையிலன்போலுடனுணங்கி
வெய்யவரகர்புறத்தலைப்பவீழமுணர்ந்தேவிரைவில்லா
ஐயன்விஞ்சைதனையறித்துமறியாதான்போலவிஞ்சையெனும்
பொய்யைமெய்போனடிக்கின்றயோகிபோன்றான்போகின்றான்.()

வேந்தன்கோயில்வாயிலொடுவிளைவிற்கடந்துவெள்ளிடையின்
போந்துபுறநின்றிலாக்கின்றபொறைதீர்மறவர்புறஞ்சுற்ற
ஏந்துநெடுவால்கிழிசுற்றிமுற்றுந்தோய்த்தாரிழுதெண்ணெய்
காந்துகடுந்தீக்கொளுத்தினரார்த்தாரண்டங்கடியலங்க. (௱௨௩)

ஒக்கவொக்கவுடல்விசித்தவுலப்பிலாதவுரப்பாசம்
பக்கப்பக்கமிருகூறாய்நூறாயிரவர்பற்றினார்
புக்கபடைஞர்புடைசூழப்போதபுணரிகளனைக்கர்பறைஞ்செல்வோர்
திக்கினளவாலயனின்றுகாண்போமெல்லைதெரிவரிதால். (௱௨௪)

அந்தநகருங்கடிகாவுமழிவித்தக்கன்முதலாயோர்
சிந்தநூறிச்சிதைவையொடும்பேசிமன்னர்சிறஞ்செட்ப
வந்தகுரங்கிற்குற்றதனைவம்மின்காணவம்மென்று
தந்தந்தெருவும்வாயிறொறும்யாருமறியச்சாற்றினார். (௱௨௫)

ஆர்ந்தாரண்டத்தப்புறத்துமறிவிப்பார்போலங்கோடிங்
சேர்ந்தார்முரசமெற்றினாரிடிந்தார்தொழிதகாரெம்மருங்கும்
பார்த்தாரோடிச்சானகிக்கும்பகர்ந்தாரவளுமுயிர்பறைகத்தாள்
வேர்த்தாளுலந்தாள்விம்மினாள்விழுந்தாளழுதாள்வெய்துயிர்த்தாள்

தாயேயனையகருணையான்றுணையேயேதுந்தகைவில்லா
நாயேயனையவல்லரக்கர்நலியக்கண்டாலகாயோ
நீயேயுலகுக்கொருசான்றுநிற்கேதெரியுங்கற்பனில்
தூயேனென்னிற்றொழுகின்றேனெரியேயவனைச்சுடலென்றாள் ()

வேறு

வெளுத்தமென்னகையவள்விளம்புமேல்வையின்
ஒளித்தவெங்கனலவனுள்ளமுட்கினான்
தளிர்த்தனமயிர்புறஞ்சிலிர்ப்பததண்மையால்
குளிர்த்தவக்குரிசில்வாலென்பகூரவே. (௱௨௮)

வேறு.

மற்றினிப்பலவென்வேலைவடவனல்புவியளாய
கற்றையங்கனலிமற்றைக்காயத்தீமுனிவாதாக்கும்
முற்றுறுமும்மைச்செந்தீமுட்புரமுருங்கச்சுட்ட
கொற்றவனெற்றிக்கண்ணின்வன்னியுங்குளிர்ந்தவன்றே! (௱௨௯)

அண்டமுங்கடந்தானங்கையனலியுங்குளிர்ந்ததங்கிக்
குண்டமுங்குளிர்த்தமேகத்துருமெலாங்குளிர்ந்தகொற்றச்
சண்டவெங்கதிரவாகித்தழங்கிருள்விழுங்குந்தாவில்
மண்டலங்குளிர்ந்தமீளாநரகமுங்குளிர்ந்தமாதோ. (௱௩௰)

வெற்பினாலியன்றதன்னமேனியைவிழுங்கிவேந்தீ
நிற்பினுஞ்சுடாது நின்றநீர்மையைநினைவினோக்கி
அற்பினாரறுதசிந்தையநுமனுஞ்சனகன்பாவை
கற்பினாலியன்றதென்பான்பெரியதோர்களிப்பனானான். (௩௬௧)

அற்றையவ்விரவிற்றான்றனறிவினான்முழுதுமுன்னப்
பெற்றிலெனெனினுமாண்டொன்றுள்ளதுபிழையுறாமே
மற்றதுபொறிமுன்செல்லமறைந்துசெலலறிவுமானக்
கற்றிலாவரக்கர்தாமேகாட்டலிற்றெரியக்கண்டான் (௩௬௨)

முழுவதுந்தெரியநோக்கிமுற்றுமூர்முடிவிற்சென்றான்
வழுவுறுகாலமீதென்றெண்ணினன்வலிதிற்பற்றித்
தழுவினனிரண்டுநூறாயிரம்புயத்தடக்கைத்தாட்போ
டெழுவெனநாலவிண்மேலெழுந்தனன்விழுந்தவெல்லாம் (௩௬௩)

இற்றவாளரக்கர்நூறாயிரவருமிழந்ததோளார்
முற்றினாருலந்தகாளாயன்மொய்ம்பினோடுடலைமூழ்கச்
சுற்றியகயிற்றினோடுந்தோன்றுவானரவின்சுற்றம்
பற்றியகலுழனென்னப்பொலிந்தனன்விசும்பின்பாலான் (௩௬௪)

துன்னலர்புரத்தைமுற்றுஞ்சுடுதொழிற்றொல்லையோனும்
பன்னினபொருளுநாணப்பாதகரிருக்கைபற்ற
மன்னனைவாழ்த்திப்பின்னைவயங்கெரிமடுப்பெனென்னாப்
பொன்னகர்மீதேதல்போர்வாலினைப்போகவிட்டான் (௩௬௫)

தன்னிறைக்குறுகண்வெய்யோர்சாமியற்றலுங்கேட்டின்னே
அன்னவர்க்கிறுதியாகவணிநகரழிப்பலென்னாச்
செந்திறச்சிகையவெம்போர்மழுப்பின்னர்ச்சேறலொக்கும்
அன்னிறத்தண்ணலுற்றதனனல்கெழுகொற்றநீள்வால் (௩௬௬)

அப்புறம்வேலைகாறுமலங்குபேரிலங்கைதன்னை
எப்புறத்தளவுந்தீயவொருகணத்தெரித்தகோட்பால்
அப்புறம்மேனியண்ணன்மேருவிற்குழையத்தோளால்
முப்புரத்தெய்தகோலேயொத்ததம்மூரிப்போர்வால் (௩௬௭)

உகக்கடையுலகம்யாவுமுணங்குறவொருதன்னாட்டம்
சிகைக்கொழுங்கனலைவீசுஞ்செயன்முனம்பயில்வான்போல
மிகைத்தெழுதீயராயோர்விரிநகர்வீயப்போர்வால்
நகைத்தலினோன்மைசாலுந்தனிவீரன்சேணினுய்த்தான் (௩௬௮)

வெள்ளியிற்பொன்னினுமணியினுமிழைத்தவிஞ்சை
தெள்ளியகடவுட்டச்சன்கைமுயன்றரிதிற்செய்த
கள்ளருமனைகடோறுமுறைமுறைதாவிச்சென்றான்
ஒள்ளரியேறுங்குன்றத்தாழிவீழுருமொடொப்பான் (௱௯௧)

நீணிறநிருதர்நீண்டநெய்ப்பொழிவேள்விநீங்கிப்
பால்வருபசியினன்பானமாருதிவாலைப்பற்றி
ஆலமுண்டவனன்றாட்டவுலகெலாமுறிபினுண்ணும்
காலமேயென்னமன்னோனவியுங்கடிதினுண்டான் (௱௬௰)

பிணிவீட்டுப்படலம் முற்றிற்று
ஆ படலம் ௰௩ இ திருவிருத்தம்-௲௱௭
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ௰௪ - வது - இலங்கையெரியூட்டுப்படலம்.

கொடியைப்பற்றிவிதானங்கொளுத்திதன்
நெடியதூணைத்தழுவிநெருங்குசால
முடியச்சுற்றிமுழுதுமுருக்கிற்றால்
கடியமாமனைதோறுங்கனங்கனல். (௧)

வாசவிட்டெரிமணிமாளிகை
மூசமுட்டிமுழுதுமுருக்கலால்
ஊசவிட்டனர்வாடியுலைந்துலாய்
பூசலிட்டவியக்கர்புரமெலாம். (௨)

மணியினாயவயங்கொளிமாளிகை
பிணியிற்செஞ்சுடர்க்கற்றைபெருக்கலால்
திணிகொமாடுபுற்றதுற்றிலதோர்கிலார்
அணிவளைக்கைநல்லாரலமந்துளார். (௩)

வானகத்தைநெடும்புகைமாய்த்தலால்
போனதிக்கறியாதுபுலம்பினார்
தேனகத்தமலர்பலசிந்திய
கானகத்துமயிலன்னகாட்சியார். (௪)

கூய்க்கொழுங்கனல்குஞ்சியிற்கூந்தலில்
தீச்சொரிந்தனமாதரும்வீரரும்
ஏத்ததன்மையினெரியின்மையும்
தீக்கொளுந்தினவுந்தெரிகின்றிலார். (௫)

## ௱௫௪ இலங்கையெரியூட்டுப்படலம்.

இல்லிற்றங்குவயங்கெரியாவையும்
சொல்லிற்றீர்ந்தனபோலவளொல்குறாப்
புல்லுக்கொண்டனமாலைப்புணர்ப்பறக்
கல்வித்தம்மியல்பெய்துங்கருத்தர்போல் (௬)

ஆயதங்கொர்கூறனுருவாயடித்
தாயளந்துலகங்கடரக்கொள்வான்
மீயெழுந்தகரியவன்மேனியில
போயெழுந்துபரந்ததுவெப்புகை. (௭)

நீலநின்றநிறத்தனகீழ்நிலை
மாவின்வெஞ்சினயானைமடமானுவ
மேல்விழுந்தெரிமுற்றும்விழுங்கலால்
தோலுரிந்துழன்றனதோலெலாம். (௮)

மீதிமங்கலந்தாலன்னவெப்புகை
சோதிமங்கலத்தியொபசுற்றலால்
மேதிமங்குலின்வீழ்புனல்வீழ்மட
வோதிமங்களின்மாதரொதுங்கினர். (௯)

பொடித்தெழுந்தபெரும்பொறிபோவன
இடிக்குலங்களின்வீழ்தலுமெங்கணும்
வெடித்தகல்வலைவெதும்படமின்குலம்
துடித்துவெந்துபுலர்ந்துயிர்சோர்ந்தவால் (௰)

பருகுதீமடுத்துள்ளுறப்பற்றலால்
அருகுநீடுபவாடகத்தாரைகள்
உருகிவேலைபினூடுபுக்குற்றன
இருகுபொன்னெடுந்தண்டிற்றிரண்டவால் (௰௧)

உரையின்முந்துலகுண்ணுமெரியதால்
வரைநிவந்தனபன்மணிமாளிகை
நிரையினீணெடுஞ்சோலையினிற்குமோ
தரையும்வெந்ததுபொன்னெனுந்தன்மையால் (௰௨)

கல்லினும்வலிதாப்புகைக்கற்றையால்
எல்லிபெற்றதிமையவர்நாடியல்
வல்லிகோலிநிவந்தனமாடணிச்
செல்லியோடுந்திரண்டனதேரொலாம். (௰௩)

போயடங்கினின்றுபிறங்கெரி
மாபருண்டுறவுமறிந்ததால்
தூயவொன்றவர்வைகிடந்துன்னினால்
தீயவன்றியுந்தீமையுஞ்செய்வரால. (௰௪)

தழுவிலங்கைதழுங்கெரிதாய்ச்செலீஇ
வழுவிலவேலைபுலையின்மறுகின
எழுமெழுஞ்சுடர்கற்றைசென்றெய்தலால்
குழுவுதவளபுனன்மேகங்கொதித்தவே. (௰௫)

ஊனிலோடுமெரியொடியங்குவார்
கானிலோடுநெடிப்புனக்காணெரு
வானிலோடுமகளிர்மயங்கினார்
வேனிலோடருந்தேரிடைவீழ்ந்தனர். (௰௬)

தேனவாம்பொழிதிப்படச்சிந்திய
சோனைமாமலர்த்துய்பிதொடர்ந்தயல்
போனதீச்சுடர்பண்டரிகத்தடங்
கானமாமெனவீழ்ந்துகரிந்தவே. (௰௭)

நற்கடனிதுநம்முயிர்நாயகன்
மற்கடந்தெறமாண்டனன்வாழ்விலம்
இற்கடந்திலிம்பகலம்பாமென
விற்கடந்தநுதற்சிலாவீட்டினார். (௰௮)

பூக்கரிந்துமுறிபொறியாயடை
நாககரிந்தறுசினைநறுஞ்சாம்பராய்
மிககரிந்துநெடும்பணைவேருறக்
காககரிந்தகருங்கரியானவே. (௰௯)

கார்முழுக்கவெழுங்கனற்கற்றைபோய்
ஊர்முழுக்குவெதுப்பவுருகின
சோரொழுக்கமருமையிற்றுன்றுபொன்
வேர்விடுப்பதுபோன்றனவிண்ணெலாம். (௨௰)

நெருக்குமீமிசையொக்கநெருப்பெழுச்
செருக்குமவெண்கதிர்த்திங்களைச்சென்றுற
உருக்குமெய்யினமுதமுகுத்தலால்
அரக்கருஞ்சிலராவிபெற்றாரோ (௨௧)

# இலங்கையெரியூட்டுப்படலம்

பரிதிபற்றிநிமிர்ந்தெழுமைங்கனல்
கருகிமுற்றுமெரிந்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்தவையதாயதின்
உருகுபொற்றிரளொத்தனதெண்கதிர் (௨௨)

தளைகொளுந்தியதாவெரிதாமணி
முளைகொளுந்திமுகத்திடைமொய்த்தபேர்
உளைகொளுந்தவுலந்துலைவுற்றன
வளைகுளம்பின்மணிநிறவாசியே. (௨௩)

எழுந்துபொற்றலத்தேறலினீள்புகைக்
கொழுந்துசுற்றவுயிர்ப்பிலாக்கோளுமுற்
றழுந்துபட்டனவொத்தயர்ந்தாரழல்
விழுந்துமுற்றினர்கூற்றைவிழுங்குவார் (௨௪)

கோசிகத்துகிலுற்றதொழுங்கனல்
தூசினுத்தரியத்தொடுசுற்றுற
வாசமைக்குழல்பற்றமயங்கினார்
பாசிழைப்பரவைப்படரல்குலார். (௨௫)

வேறு.

நிலவிலங்கியதுகிலினைநெருப்புணநிருதர்
இலவிதழுஞ்சிலமுத்துளவெனுநகையனையார்
புலவியிற்கலைகண்டவரமுதுகப்புணரும்
கலவியின்கலைகண்டிலர்மண்டினர்கடன்மேல். (௨௬)

பஞ்சரத்தொடுபசுநிறக்கிளிவெந்துபதைப்ப
அஞ்சனக்கணினருவிநீர்முலைமுன்றிலலைப்பக்
குஞ்சரத்தனகொழுநரைத்தழுவுறுங்கொதிப்பால்
மஞ்சுறப்புகுமினனெனப்புகையிடைமறைந்தார். (௨௭)

வரையினைப்புரைமாடங்களெரிபுகமகளிர்
புரையில்பொற்கலன்விசும்பிடைவில்விடப்போவார்
திரையினுட்புகைப்படலையிற்கரிந்தனர்கலிங்கத்
திரையினுட்பொலிசித்திரப்பாவையின்செயலார். (௨௮)

அகருமஞ்ஞுறுஞ்சாந்தமுமுதலியவநேகம்
புகரினன்மரத்துறுவெறியுலகெலாம்போர்ப்பப்
பகருமூழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
[illegible]வெக்கனகக்கனவனங்கள் (௨௯)

மினைப்பரந்தெழுகொழுஞ்சுடருலகெலாம்விழுங்க
நினைப்பரும்பெருந்திசையுறவிரிகின்றதில்லையால்
சினைப்பரந்தெரிசேர்ந்திலதின்றவுஞ்சிலவும்
கனைப்பரந்தவுந்தெரிகிலகற்பகக்கானம். (௫௰)

ஊறும்வெம்புகைவிழுங்கலிற்சுற்றுறுமுழுநீர்
மாறும்வண்ணமாமலைநடுநிலைதொறுமடங்கிப்
பூளைவீயன்னபோவனபுணரியிற்புலன்மீன்
மீளயாவையுந்தெரிந்திலமுகிற்பணைமிசைய. (௫௧)

மிக்கவெம்புகைவிழுங்கலின்வெள்ளியங்கிரியும்
ஒக்கவெற்பினோடனமுங்காக்கையினுருவ
பக்கவேலையின்படியதுபார்க்கடன்முழுவிற்
றிக்கயங்களுங்கயங்களும்வேற்றுமைதெரியா. (௫௨)

கரிந்துசிந்திடக்கடுங்கனறொடர்ந்துடல்கதுவ
உரிந்தமெய்யினமோடினர்நீரிடையொளிப்பார்
எரிந்தகூந்தலுங்குஞ்சியுமிடைதலிற்றாழும்
எரிந்துவேகின்றவொத்தனவெறிதிரைப்பரவை. (௫௩)

மருங்கின்மேலொருமகவுகொண்டொருகனிமகவை
அருங்கையாற்பற்றிமற்றொருமகவுபின்னரற்ற
நெருங்கிநூறொடுநெறிகுழலசுறுக்கொளநீக்கிக்
கருங்கடற்றலைவீழ்ந்தனரரக்கியர்கதறி. (௫௪)

வில்லும்வேலும்வெங்குந்தமுமுதலியவிறகாய்
எல்லுடைச்சுடரனற்புகவெஃகெலாமுருகித்
தொல்லைநன்னிலைதொடர்ந்துபேருணர்வினன்றொழிலாற்
கல்விபுண்டையிற்றிரண்டனபடைக்கலச்சாலை. (௫௫)

நெய்தொடர்க்கழல்வல்லியும்புரசையுஞ்சிந்தி
நொய்தினிட்டவன்றறிபறித்துடலெரிநுழைய
மொய்தடஞ்செவிநிறுத்திவான்முதுகினின்முழங்கிக்
கையெடுத்தழைத்தோடினவோடைவெங்களிமா. (௫௬)

வெருளும்வெம்புகைப்படலையின்மேற்செலவெருவி
இருளும்வெங்கடல்விழுந்தனவெழுந்திலபறவை
மருளின்மீன்கணம்விழுங்கிடவுலந்தனமனத்தோர்
அருளில்வஞ்சனைத்தஞ்சமென்றடைந்தவரனைய. (௫௭)

நீரைவற்றிடப்பருகிமாநெடுநிலந்தடவித்
தாருவைச்சுட்டுமலைகளைத்தழற்செய்துகனிமா
மேருவைப்பற்றியெரிகின்றகாலவெங்கனல்போல்
ஊழிமுற்றுவித்திராவணன்பதிபுக்கதுயர்தீ. (௫௮)

வானமாதருமற்றுளமாதரிருமறுகிப்
போனபோனதிக்கறிகிலரனைவரும்போனார்
எனநின்றவரொங்குறுமிரிந்தனரிலங்கைக்
கோனவானவர்பதிகொண்டநாளெனக்குலைந்தார் (௫௯)

நாவியுந்நறுங்கலவையுங்கற்பகநகைக்கப்
பூவுமாரமுமகிலுமெய்ப்பிணையனபுகையத்
தேவுதேன்மழைசெறிபெருங்குலமெனத்திசையிற்
பாவைமார்நறுங்குழல்களும்பரிமளங்கமழ்ந்த. (௬௰)

சூழும்வெஞ்சுடர்தொடர்ந்திடயாவருந்தொடரா
வாழிவெஞ்சினத்தாண்டொழிலிராவணன்மனையின்
ஊழிவெங்கனலுண்டிடவுலகமென்றுயர்ந்த
ஏழும்வெந்தனவெரிந்தனநெடுநிலையேழும். (௬௧)

பொன்றிருத்திபகாயகாலிராவணன்புரைதீர்
குன்றமொத்துயர்தடநெடுமாநிலைக்கோயில்
நின்றநூற்றெரிபருகிடநெரிவுறவுருகித்
தென்றிசைக்குமோர்மேருவுண்டாமெனத்தெரிந்த (௬௨

அனையகாலையினரக்கனுமரிவையர்குழுவும்
புனைமணிப்பொலிபுட்பகவிமானத்துப்போனார்
நினையுமாத்திரையாவருநீங்கினர்நினையும்
வினையிலாமையில்வெந்ததவ்விலங்கன்மேலிலங்கை. (௬௩

ஆழித்தேரவனரக்கனையழலெழநோக்கி
ஏழுக்கேழெனவகுக்கியவுலகங்களெரியும்
ஊழிக்காலம்வந்துற்றதோவிதுவேறுண்டோ
பாழித்தீச்சுடவந்ததென்னகொனப்பகர்ந்தான். (௬௪)

கரங்கள்கூப்பினர்தங்கிளைதிருவொடுங்காணார்
இரங்குகின்றவலரக்கரீதியம்பினரிறையோய்
தரங்கவேலையினெடியதன்வாலிட்டதழலால்
குரங்குசுட்டதீதென்றலுமிராவணன்கொதித்தான் (௬௫

என்றுசொல்குரங்கன்னதிவ்வலிபுளதிலங்கை
நின்றுவெந்துமாநீறெழுகின்றதுநெருப்புத்
தின்றுதேக்கிடுகின்றதும்தேவர்கள்சிரிப்பார்
நன்றுநன்றுபோர்வலியெனவிராவணனைக்கான். (௪௬)

வேறு.

உண்டநெருப்பைக்
கண்டனர்பற்றிக்
கொண்டனையென்றான்
அண்டனைவெல்வான். (௪௭)

உற்றகலன்றோன்
கற்றகுரங்கைப்
பற்றுமினென்றான்
முற்றுமுனிந்தான் (௪௮)

சாரயனின்றார்
வீரர்விரைந்தார்
நேருதுமென்றார்
தேரினர்சென்றார். (௪௯)

எல்லையிகந்தார்
வில்லர்வெகுண்டார்
பல்லதிகாரத்
தொல்லர்தொடர்ந்தார் ( )

வேறு.

நீர்கெழுவேலைநிமிர்ந்தார்
தார்கெழுதானைசமைந்தார்
போர்கெழுமாலைபுனைந்தார்
ஓரொருவீரருயர்ந்தார் (௫௧)

விண்ணினைவேலைவிளிப்பார்
மண்ணினையோடுவளைந்தார்
அண்ணலைநாடியணைந்தார்
கண்ணினின்மேறயல்கண்டார் ( )

பற்றுதிர்பற்றுதிரென்பார்
எற்றுதிரெற்றுதிரென்பார்
முற்றினர்முற்றுமுனிந்தார்
கற்றனர்மாருதிகண்டான் (௫௩)

எல்கொடுவஞ்சரெதிர்ந்தார்
நால்கொடுகைகொடுவார்போல்
வேல்கொடுகோலினர்வெந்தீ
வால்கொடுதானும்வளைந்தான். ( )

பாதவமொன்றுபறித்தான்
மாதிரம்வாலின்வளைத்தான்
மோதினன்மோசமுனிந்தார்
ஏதியுநாளுமிழந்தார். (௫௫)

நூறிடமாருதிநொந்தார்
ஊறிடவூனிடுபுண்ணீர்
சேறிடவூரடுசெந்தீ
ஆறிடவோடினதாறாய். (௫௬)

தோற்றினர்துஞ்சினரல்லாய்
ஏற்றிகல்வீரரெதிர்ந்தார்
காற்றின்மகன்பலகற்றான்
கூற்றினுமும்மடிகொன்றான் ( )

மஞ்சுறமேனியவன்றண்
மொய்ம்பினவீரர்முடிந்தார்
ஐம்பதினாயிரரல்லார்
மைப்புனல்வேலைபடிந்தார் (௫௮)

தோய்ச்சினன்வாலதிதோயாக்
காய்ச்சினவேலைகலந்தார் [ர்
போய்ச்சிலர்பொன்றினர்போனா
எச்செனமைந்தரெதிர்ந்தார். ( )

சுற்றினரேரினர்சோலை
விற்றொழில்வீரம்விளைத்தார்
எற்றினன்மாருதியெற்ற
உற்றெழுவோருமுலந்தார் (௬௰)

விட்டெயர்விஞ்சையர்வெந்தீ
வட்டமுலைத்திருவைகும்
புட்டிரள்சோலைபுறத்தும்
சுட்டிலதென்பதுசொன்னார் ()

வந்தவர்சொல்லமகிழ்ந்தான்
வெந்திறல்வீரன்வியந்தான்
உய்ந்தனனென்னவுயர்ந்தான்
பைந்தொடிதாள்கள்பணிந்தான்.

பார்த்தனள்சானகியாரா
வேர்த்தெரிமேனிகுளிர்ந்தாள்
வார்த்தையெயன்வந்தனையென்றாப்
போர்த்தொழில்மாருதிபோனான்

தெள்ளியமாருதிசென்றான்
கள்ளவரக்கர்கள்கண்டால்
என்னுவர்பற்றுவதொன்றை
ஒள்ளெரியோனுமொளித்தான் ()

இலங்கையெரியூட்டுப்படலம்.
முற்றிற்று.

ஆ படலம்-௰௬௩ திருவிருத்தம்
௲௨௱௫௰௧.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ௰௫ - வது - திருவடிதொழுதபடலம்

நீங்குவென்விளைவினென்று நினைவினன்மருங்குநின்ற
தாங்கொருகுமிக்குன்றையருக்கனினணைந்தவையன்
வீங்கினனுலகையெல்லாம்விழுங்கினனென்னவீரன்
பூங்கழற்றொழுதுவாழ்த்திவிசும்பிடைக்கடிதுபோனான். (௧)

மைந்நாகமென்னநின்றகுன்றையுமரபினெய்திக்
கைந்நாகமனையோனுற்றதுணர்த்தினன்கணத்தின்காலைப்
பைந்நாகநிற்கும்வீரர்தன்னெடுவரவுபார்க்கும்
கொய்ந்நாகநறுந்தேன்சிந்துங்குன்றிடைக்குதியுங்கொண்டான். (௨)

போய்வருங்கருமமுற்றிற்றென்பதோர்பொம்மல்பொங்க
வாய்வெரீஇநின்றவென்றிவானரவீரர்மன்றே
பாய்வருநீளத்தாங்கணிருந்தனபறவைப்பார்ப்புத்
தாய்வரக்கண்டதன்னவுவகையிற்றளிர்த்தாரம்மா. (௩)

அழுதனர்சிலவர்முன்னின்றார்த்தனர்சிலவரண்மித்
தொழுதனர்சிலவராடித்துள்ளினர்சிலவர்துள்ளி
முழுதுறவிழுங்குவார்போன்மொய்த்தனர்சிலவர்சுற்றும்
தழுவினர்சிலவர்கொண்டுசுமந்தனர்சிலவர்தாங்கி. (௪)

தேனொடுகிழங்குகாயுநறியனவரிதிற்றேடி
மேன்முறைவைத்தேமண்ணனுகர்ந்தனைமெலிவுதீர்தி
மானவாண்முகமேநங்கட்குனாத்ததுமாற்றமென்று
தானுயர்சாகமெல்லாமுறைமுறைசிலவர்தந்தார். (௫)

தாள்களின்மார்பிற்றோளிற்றலைகளிற்றடக்கைதம்மின்
வாள்களின்வேலிற்கோலின்மழையினின்வருத்தபுண்கள்
நாள்கண்மேலுலகிற்சென்றவெண்ணனநம்பிகண்ணா
ஊழ்கொளநோக்கிநோக்கியுயிருகவுளைந்துயிர்த்தார். (௬)

வாலிகாதலனைமுந்தைவணங்கினனெண்கின்வேந்தைத்
காலுறப்பணிந்துபின்னைக்கடன்முறைகடவோர்க்கெல்லாம்
மேலுறவியற்றியாங்கணிருந்திவணிருந்தோர்க்கெல்லாம்
ஞாலநாயகன்றன்றேவிசொல்லினைன்மையென்றான். (௭)

என்றலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சித்தாழா
நின்றனருவகைபொங்கவிம்மலானிமிர்ந்தநெஞ்சர்
சென்றதுமுதலாவந்ததிறுதியாச்செட்பற்பாலை
வன்றிறலுரவோயென்னச்சொல்லினன்மருத்தின்மைந்தன். (௮)

ஆண்டகைதேவியுள்ளத்தருந்தவமமையச்சொல்லிப்
பூண்டபேரடையாளங்கைக்கொண்டதும்பகன்றுபோரில்
நீண்டவாளரக்கரோடுநிகழ்ந்ததுநெருப்புச்சிந்தி
மீண்டதும்விளம்பான்றான்றன்வென்றியையுரைப்பவெள்கி. (௯)

பொருதமைபுண்ணேசொல்லவென்றனைமபோந்ததன்மை
உரைசெயவூர்தீயிட்டதோங்கிரும்புகையேயோதக்
கருதலிர்பெருமைதேவிமீண்டிலாச்செயலேகாட்டத்
தெரிதரவுணர்ந்தேதம்பின்னரொன்னினிச்செய்துமென்றார். (௰)

யாவையுமினிவேறெண்ணல்வேண்டுவதிறையுமில்லைச்
சேவகன்றேவிதன்னைக்கண்டமைவிரைவிற்செப்பி
ஆவதவ்வண்ணலுள்ளத்தருந்துயராற்றலேயாம்
போவதுபுலமையென்னாப்பொருக்கெனவெழுந்துபோனார். (௰௧)

போயினர்களிப்பினோடும் புங்கவன்சிலையினின்றும்
ஏயினபகழியன்னவெழுந்துவிண்படர்ந்துதாவிக்
காய்கதிர்க்கடவுள்வானத்துச்சிசென்றிறுக்குங்காலத்
தாயனவீரரும்போய்மதுவனமதிலிறுத்தார். (௰௨)

ஏதுநாளிறந்தசாலவெண்பதோர்வருத்தநெஞ்சத்
தாதலானுணவுதீர்ந்துவருந்தினமளியமெய்மைச்
சாதநீர்த்தளித்தவீர்தந்தருளுணவுமென்னப்
போதுநாம்வாலிசெய்பாலென்றுடனெழுந்துபோனார். (௰௩)

அங்கதன்றன்னையண்மியனைவருமிருகைகூப்பிக்
கொங்குதங்கலங்கன்மார்பநின்னுடைக்குரக்குச்சேனை
வெங்கதமொழிந்துசாலவருந்தினவேடையோடி
இங்கிதற்களித்தல்வேண்டுமிறாலுமிழ்பிரசமென்றார். (௰௪)

நன்றெனவவனுநேர்ந்தானரலையுநடுங்கவார்த்துச்
சென்றுறுபிரசந்தூங்குஞ்செழுவனமதனினூடே
ஒன்றின்முன்னொன்றுபாயுமொடிக்குமென்பிரசமெல்லாம்
தின்றுநின்றுவகைகூருந்தேனுகரளியின்மொய்த்தே. (௰௫)

ஒருவர்வாய்க்கொள்ளுந்தேனையொருவருண்டெளிதிற்போவார்
ஒருவர்கைக்கொள்ளுந்தேனையொருவர்கொண்டோடிப்போவார்
ஒருவரோடொருவரொன்றத்தழுவுவர்விழுவரோடி
ஒருவர்மேலொருவரேறியோகையென்றுவகைகூர்வார். (௰௬)

இன்னணநிகழுங்காலையெரிவிழித்தெழுந்துசீறி
அன்னெடுஞ்சாலைகாக்கும்வானரரவரைநோக்கி
மன்னெடுங்கதிரோன்மைந்தனாணையைமறுத்துநீயிர்
என்னினைந்தென்செய்தீர்மன்னும்முயிர்க்கிறுதியென்ன (௰௭)

முனியுமாலெம்மையெங்கோனென்றவர்மொழிந்துபோர்த்து
கனியுமாமதுவனத்தைக்கட்டழித்திட்டதின்று
நனிதருகவியின்றானைநண்ணலார்செய்கைநாண
இனியெம்மாற்செயலின்றென்றுத்ததிமுகற்கியம்பினாரே. (௰௮)

கேட்டவன்யாவரோயம்மதுவனங்கேடுசூழ்ந்தார்
காட்டியொன்றெழுந்தானன்னார்வாலிசெய்முதலகற்றோர்
கூட்டம்வந்திறுத்ததாகவங்கதனேவலன்றால்
மாட்டினகவியின்றானைமதுவளருலவையீட்டம். (௰௯)

உரங்கிளர்மதுகையான்றனாணையாலுமுறிகொண்டே
குரங்கினந்தம்மையெல்லாம்விலக்கினன்கொடுமைகூறிக்
கரங்களாலெற்றநொந்தேங்கவலோவென்னேலொடும்
தரங்கிளர்தானைபட்டதறிந்திலன்றுயன்போலவும். (௨௰)

எனவுரைத்தனலிற்பொங்கியெழுந்திரைத்திரண்டுகோடி
கனைகழற்கவியின்சேனைகல்லெனக்கலந்துபுல்லப்
புனைமதுச்சோலைபுக்கான்மதுமுகர்புனிதச்சேனை
அனையனைவாழ்த்தியோடியங்கதனடியின்வீழ்ந்த (௨௧)

இந்திரன்வாலிக்கீந்தவின்சுவைமதுவின்கானம்
அந்தரத்தவர்க்குநோக்கற்கரியவென்றுணைதன்னைச்
சிந்தினைகதிரோன்மைந்தன்றிறலினையறிதியன்றே
மந்தரமனையதோளாயிற்றதுன்வாழ்க்கையின்றே. (௨௨)

மதுவனந்தன்னையின்னேமாட்டுவித்தனைநீயென்னாக்
கதுமெனவாலிசேய்மேலெறிந்தனன்கருங்கற்பாறை
அதுதனைப்புறங்கையாலேயகற்றியங்கதனுஞ்சீறித்
ததிமுகன்றன்னைப்பற்றிக்குத்தினன்றடக்கைதன்னால். (௨௩)

வாய்வழிக்குருதிசோரமணிக்கையான்மலங்கமோதிப்
போய்மொழிகதிரோன்மைந்தற்கென்றவன்றன்னைப்போக்கித்
தீயெழும்வெகுளிபொங்கமற்றவன்சேனைதன்னைக்
காய்தனல்பொழிபுங்கையாற்குத்துதிர்கட்டியென்றான். (௨௪)

பிடித்தனர்கொடிகடம்மாற்பிணித்தனர்பின்னுமுன்னும்
இடித்தனரசனிபஞ்சவெறுழ்வலிக்கரங்களோச்சித்
துடித்தனருடலஞ்சோர்ந்தார்சொல்லும்போய்நீருமென்னாப்
படித்தனன்வாலிமைந்தன்பயத்துடனவரும்போனார். (௨௫)

அலைபுனல்குடையுமாபோன்மதுக்குடைந்தாடித்தத்தம்
தலைவர்கட்கினியதேனுங்கனிகளும்பிறவுந்தந்தே
உலைவுறுவருத்தந்தீர்ந்திட்டுபவனத்திருந்தாரப்பால்
சிலைவளைத்துலவுந்தோன்றெறும்வெயிறணிவுபார்த்தே. (௨௬)

முத்தலையெஃகிறைக்குமுடிப்பருங்கருமமுற்றி
வித்தகன்றூதுமீண்டதிறுதியாய்விளைந்ததன்மை
அத்தலையறிந்தவெல்லாமறைந்தனமாழியான்மாட்
டித்தலைநிகழ்ந்தவெல்லாமியம்புவாமெடுத்துக்கொண்டாம். (௨௭)

வேறு.

சேற்றிளமரைமலர்த்திருவைத்தேர்கெனக்
காற்றின்மாமகன்முதற்கவியின்சேனையை
நாற்றிசைமருங்கினுமேவிநாயகற்
றேற்றினனிருந்தனன்கதிரின்செம்மலே! (௨௮)

கார்வரையிருந்தனன்கதிரின்காதலன்
சீரியசொற்கனிற்றெருட்டச்செங்கணான்
ஆருயிராயிரமுடையனுமென்னச்
சோர்தொறுஞ்சோர்தொறுமுயிர்த்துத்தோன்றினான்

தண்டலினெடுந்திசைமூன்றுந்தாயினர்
கண்டிலர்மடந்தையையென்னுங்கட்டுரை
உண்டியிரகத்தெனவொறுக்கவும்முளான்
திண்டிறலனுமனைநினையுஞ்சிந்தையான். (௫௰)

ஆரியனருந்துயர்க்கடலிலாழ்பவன்
சீரியகன்றுநஞ்செய்கைதீர்வரும்
பூரியவெம்பழிபொடித்ததாமெனச்
சூரியசிறுவனைநோக்கிச்சொல்லினான். (௫௧)

குறித்தநாளிகந்தனகுன்றத்தென்றிசை
வெறிககருங்குழலியைநாடன்மேயினார்
மறித்திவண்வந்திலர்மாண்டுளார்கொலோ
பிறிந்தவர்க்குற்றுளதெவ்வினைபெற்றியோ. (௫௨)

மாண்டனளவளிவண்மாண்டவார்த்தையை
மீண்டவர்க்குரைத்தலின்விளிதனன்றெனாய்
பூண்டதோர்துயர்கொடுபொன்றினார்கொலோ
தேண்டினரின்னமுந்திரிகின்றார்கொலோ. (௫௩)

கண்டனரரக்கரைக்கறுவுகைமிக
மண்டமர்தொடங்கினார்வஞ்சர்மாயையால்
விண்டலமதனின்மேயினர்சொல்வேறிலாத்
தண்டலினெடுஞ்சிறைதளைபட்டார்கொலோ. ( ).

கூறினநாளவரிருக்கைகூடலம்
ஏறலஞ்சுறுமெனவின்பதுன்பங்கள்
ஆறினாருந்தவமயர்கின்றார்கொலோ
வேறவர்க்குற்றதென்விளம்புவாயென்றான் (௫௫)

என்றுரைத்திடருழந்திருக்கும்வேலையில்
வன்றிறற்றிருகண்ஞானமோகன்றன்
தன்றலைப்பொழிதருகுறிகனெடும்
துன்றெனப்பணித்தனவிருதைகட்டியே. (௫௬)

எழுந்துநின்றையயேயின்றுநானேயோ
டழிந்ததுமதுவனமடையவென்றலும்
வழிந்திடுருதியின்வதனநோக்கியே
மொழிந்திடங்கியாரதுமுடித்தளோரோன. (௩௭)

நீலனுங்குமுதனுநெடியகுன்றமே
போலுயர்சாம்பனும்புனரிபோர்த்தென
மேலெழுசேனையும்விரைவின்வந்துறுஞ்
சால்புடைமதுவனந்தனையழிப்பவே. (௩௮)

தலைந்தவச்சேனையைத்தள்ளிநின்னையும்
மிகழ்ந்துரைத்தியைத்தனன்வாலிசேயெமக்
குகந்தனபுகன்றவவ்வுரைபொருடடமே
புகைத்தொருபாவறையின்புணர்ப்புநீக்கியே. (௩௯)

இமைத்தன்முன்வாலிசேயெழில்கொள்யாக்கையைச்
சமைத்தியென்றெறிதரப்பறங்கையாற்றகைத
துமைத்தருகனலெனவழன்றெற்பற்றியே
குமைத்துயிர்பதைப்பநீகூறுபோயென்றான் (௪௰)

எம்பலொடெழுந்துநின்றிரவிகான்முனை
பாம்பணையமலனைவணங்கிப்பைந்தொடி
மேம்படுகற்பினளென்னுமெய்ம்மையைத்
தாம்புகன்றிட்டிச்சலமென்றோதினான். (௪௧)

பண்டருகிளவியாடன்னைப்பாங்குறக்
கண்டனரன்னதோர்களிப்பினலவர்
வன்றிறைமதுவனமழித்துமாந்திய
தண்டநாயகவினியவலந்திர்கெனு. (௪௨)

வந்தனர்தென்றிசைவாவிறனெனப்
புந்திநொந்தென்னைகொல்புகலற்பாலதொன்
றெந்தையுமிருந்தனனிரவிகான்முனை
நொந்தவத்திமுகன்றன்னைநோக்கியே. (௪௩)

யாரவணிறுத்தவரியம்புவாயென
மாருதிவாலிசேய்மிந்தன்சாம்பவன்
சோர்வறுபதினெழுவோர்கடுன்னினர்
ஆர்கலிநாணவந்தார்க்குஞ்சேனையார். (௪௪)

# திருவடிதொழுதபடலம்

என்றவனுரைத்தபோதிரவிகாதலன்
வன்றிறற்றதிமுகன்வதனநோக்கியே
ஒன்றுனக்குணர்த்துவதுளதுவாலிசேய்
புன்றொழிற்செய்கைசேர்புணர்ப்பனல்லனால். ( )

கொற்றவன்பணிதலைக்கொண்டுதெண்டிரை
சுற்றியதிசையெலாந்துருவித்தோகையைப்
பற்றியபடைஞராகக்கடிந்துபாங்கர்வந்
துற்றனரவளையாமுரைப்பதென்னையே (௪௬)

அன்றியும்வாலிசேயரசதர்தலின்
பின்றுதநீதமோயிணங்குஞ்சிந்தையாய்
ஒன்றுநீயுணரலையுறுதிவேண்டுமேல்
சென்றவன்றனைச்சரண்சேர்தியீண்டென (௪௭)

வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
உணங்கியசிந்தையனொடுங்குமேனியன்
கணங்கொளோடேகியக்கானநண்ணினான்
மணங்கிளர்தாரினான்மறித்தும்வந்தமோ (௪௮)

கண்டனன்வாலிசேய்கழுவுகைமிக
விண்டவனம்மெதிர்மீண்டிளானெனின்
உண்டிடுததுமுயிரொன்னவுன்னினான்
தொண்டனத்ததிமுகன்றொழுதுந்தோன்றினான் ( )

போழ்ந்தனயான்செய்தகுறைபொறுக்கென
வீழ்ந்தனனடியிசைவீழவாலிசேய்
தாழ்ந்துகைபற்றிமெய்தழீஇக்கொண்டும்மையான்
சூழ்ந்ததும்பொறுக்கெனமுதன்மைசொல்லினான்

யாமுதற்குறித்தநாளிறத்தலெண்ணியே
ஏமுறத்துயர்துடைத்தளித்தவேற்றம்போல்
தாமரைக்கண்ணவன்றுயரந்தள்ளநீர்
போமெனத்தொழுதுமுன்னதுமன்போயினான் ( )

வன்றிறற்குரிசிலுமுனிவுமாறினான்
வென்றிகொள்கதிருத்தன்வெம்மையாறினான்
என்றுகொண்டியாவருமெழுந்துபோதமேல்
நன்றெனவேகினார்நலைவக்கணீங்கினார் (௫௨)

இப்புறத்திராமனுமிரவிசேயினை
ஒப்புறநோக்கிவந்துற்றதானையர்
தப்புறக்கண்டனமென்பரோதகா
தப்புறத்தென்பரோவறைதியாலென்றான். (௫௩)

என்புழியனுமனுமிரவியென்பவன்
தென்புறத்துளனெனத்தெரிவதாயினான்
பொன்பொழிதடக்கையப்பொருவில்வீரனும்
அன்புறுசிந்தையனமையநோக்கினான். (௫௪)

எய்தினனநுமனுமெய்தியேந்தறன்
மொய்கழறொழுகிலன்மூளரிநீங்கிய
தையலைநோக்கியதலையன்கையினன்
வையகந்தழீஇநெடிதிறைஞ்சிவாழ்த்தினான். (௫௫)

திண்டிறலவன்செயறெரியநோக்கினான்
வண்டிறலோதியும்வலிபண்மற்றிவன்
கண்டதுமுண்டவள்கற்புநன்றெனக்
கொண்டனன்குறிப்பினுணருங்கொள்கையான்

ஆங்கவன்செய்கையையளவையாமெனா
ஓங்கியவுணர்வினால்விளைந்ததுன்னினான்
வீங்கினன்றோள்புனல்கண்கள்விம்மினன்
நீங்கியதருந்துயர்காதனீண்டதே. (௫௭)

கண்டனென்கற்பினுக்கணியைக்கண்களால்
தெண்டிரையலைகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினித்துறத்தியையமும்
பண்டுளதுயருமென்றநுமன்பன்னுவான். (௫௮)

வேறு.

உன்பெருந்தேவியென்னுமுரிமைக்குமுன்னைப்பெற்ற
மன்பெருமருகியென்னும்வாய்மைக்குமிதிலைமன்னன்
தன்பெருந்தனையையென்னுந்தகைமைக்குந்தலைமைசான்றாள்
என்பெருந்தெய்வமையாவின்னமுங்கேட்டியென்பான். (௫௯)

பொன்னலதில்லைப்பொன்னையொப்பெனப்பொறையினின்றாள்
தன்னலதில்லைத்தன்னையொப்பெனத்தனக்குவந்த
நின்னலதில்லைநின்னையொப்பெனநினக்குநேர்ந்தாள்
என்னலதில்லையென்னையொப்பெனவெனக்குமீந்தாள். (௬௰)

## [illegible] திருவடிதொழுதபடலம்

உன்குலமுன்னதாக்கியுயர்புகழ்க்கொருத்தியாய
தன்குலந்தன்னதாக்கித்தன்னையித்தனிமைசெய்தான்
வன்குலங்கூற்றுக்கீந்தவ்வானவர்குலத்தைவாழ்வித்
தென்குலமெனக்குத்தந்தாளென்னினிச்செய்வதெம்மோய். (௬௧)

விற்பெருந்தடந்தோள்வீரவீங்குநீரிலங்கைவெற்பின்
நற்பெருந்தவத்தளாயநங்கையைக்கண்டேனல்லேன்
இற்பிறப்பென்பதொன்றுமிரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும்பெயரதொன்றுங்களிநடம்புரியக்கண்டேன் (௬௨)

கண்ணினுமுளைநீதையல்கருத்தினுமுளைநீவாயின்
எண்ணினுமுளைநீகொங்கையிணைக்குவைதன்னினெவ்வா
தண்ணல்வெங்காமனெய்தவலரம்புதொளைத்தவாற்றப்
புண்ணினுமுளைநீநின்னைப்பிரிந்தமைபொருந்திற்றாமோ. (௬௩

வேலையுளிலங்கையென்னும்விரிநகரொருசார்விண்டோய்
காலையுமாலைதானுமில்லதோர்கனகக்கற்பச்
சோலையங்கதனினும்பிபுல்லினாற்றொடுத்ததூய
சாலையினிருந்தாளையதவஞ்செய்ததவமாந்தையல். (௬௪)

மண்ணொடுங்கொண்டுபோனான்வானுயர்கற்பினோடும்
புண்ணியமேனிதீண்டவஞ்சுவானுலகம்பூத்த
கண்ணகன்கமலத்தண்ணல்கருத்திலாட்டோடுதல்கண்ணின்
எண்ணருங்கூற்றுமாய்தியென்றதோர்மொழியுண்டென்பான் ()

தீண்டிலனென்னும்வாய்மைதிசைமுகன்செய்தமுட்டை
கீண்டிலதெநந்தனுச்சிகிழிந்திலதெழுந்துவேலை
மீண்டிலசுடர்கள்யாவும்விழுந்திலவதஞ்செய்கை
மாண்டிலதென்னுந்தன்மைவாய்மையானுணர்தியன்றே (௬௬)

சோகத்தாளாயநங்கைகற்பினாற்றொழுதற்கொத்த
மாகத்தார்தேவிமாரும்வான்சிறப்புற்றார்மற்றைப்
பாகத்தாளிப்போதீசன்மகுடத்தாள்பதுமத்தாளும்
ஆகத்தாளல்லண்மாயனுயிரவெளிமேலாள் (௬௭)

இலங்கையைமுழுதுநாடியிராவணனிருக்கையெய்திப்
பொலங்குழையவரையெல்லாம்பொதுவுறநோக்கிப்போந்தேன்
அலங்குதழ்சோலைபுக்கேனவ்வழியணங்கனைக்
கலங்குதெண்டிரையாயிற்றுயகண்ணினீர்க்கடலிற்கண்டேன் (௬௮)

அரக்கியரளவற்றாருமலகையின்குழுவுமஞ்சச்
செருக்கினல்கண்டுசெய்யமெய்க்கனறீக்கச்சீர்த்த
இரக்கமென்றொன்றுதானேயேந்திழைவடிவமெய்தித்
தருக்கியசிறையுற்றன்னதகையளத்தமியளம்மா. (௬௯)

மாண்பிறந்தமைந்தகற்பின்வானுதனின்பால்வைத்த
சேண்பிறந்தமைந்தகாதல்கண்களிற்றெவிட்டித்தீராக்
காண்பிறந்தமையானீயேகண்ணகன்ஞாலந்தன்னுள்
ஆண்பிறந்தமைந்தசெல்வமுண்டனையாதியன்றே. (௭௦)

அயிர்ப்பிலர்காண்பார்முன்னுமறிந்திலெனினுமைய
வெயிற்புனையிலங்கைமூதூரிந்திரன்யாக்கைக்கேற்ற
மயிற்புனையியலினானமைந்தருநாளுமாங்கே
உயிர்ப்பொடுமுயிரினோடுமூசனின்றுடுவாரும். (௭௧)

தையலைவணங்கற்கொத்தவிடைபெறுந்தன்மைநோக்கி
ஐயயானிருந்தகாலையலங்கல்வேலிலங்கைவேந்தன்
எய்தினனிரந்துகூறியிறைஞ்சினனிருந்துநங்கை
வெய்துரைசொல்லச்சீறிக்கோறன்மேற்கொண்டுவிட்டான். (௭௨)

ஆயிடையணங்கின்கற்புமையநின்னருளுஞ்செய்ய
தூயநல்லறனுமென்றிங்கினையனதொடர்ந்துகாப்பப்
போயினனரக்கிமாரைச்சொல்லுமின்பொதுவினென்றுங்
கேயினனவரெல்லாமெய்ம்மந்திரத்துறங்கியிற்றார். (௭௩)

அன்னதோர்பொழுதினங்கையாருயிர்துறப்பதாக
உன்னினள்கொடியொன்றேந்திக்கொம்பொடுமுறைப்பச்சுற்றித்
தன்மணிக்கழுத்திற்சார்த்துமளவையிற்றடுத்துநாயேன்
பொன்னடிவணங்கிநின்றுநின்பெயர்புகன்றபோதில். (௭௪)

வஞ்சனையரக்கர்செய்கையிதுவெனமனக்கொண்டேயும்
அஞ்சனவண்ணத்தான்றன்பெயருரைத்தளியையென்பால்
துஞ்சுறுபொழுதிற்றந்தாய்துறக்கலென்றுவந்துசொன்னாள்
மஞ்செனவனமென்கொங்கைவழிகின்றமழைக்கணீராள். (௭௫)

அறிவினிற்றேறிச்சொன்னபேரடையாளம்யாவும்
செறிவுறநோக்கிநாயேன்சிந்தையிற்றிருக்கமின்மை
முறிவுறவெண்ணிவண்ணமோதிரங்காட்டக்கண்டாள்
இறுதியினுயிர்தந்தீயுமருந்தினொத்தனையதெந்தாய். (௭௬)

ஒருகணத்திரண்டுகண்டேனொளிமணியாழியான்ற
திருமுலைத்தடத்துவைத்தாள்வைத்தலுஞ்செல்வநின்பால்
விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினால்வெந்
துருகியதுடனேயாறிவலித்ததுகுளிர்ப்புளூற (எஎ)

வாங்கியவாழிதன்னைவஞ்சரூர்வந்ததாமென்
றோங்குயர்மழைக்கணீராலாயிரங்கலசமாட்டி
ஏங்கினளிருந்ததல்லாலியம்பலளெய்த்தமேனி
வீங்கினள்வியந்ததல்லாலிமைத்திலளுயிர்ப்புவிண்டாள் (எஅ)

அன்னவர்க்கடியனேனிற்பிரிந்தபினடுத்தவெல்லாம்
சொன்முறையறியச்சொல்லித்தோகைநீயிருந்தசூழல்
இன்னதென்றறிகிலாமேபித்தனைதாழ்த்ததென்றே
மன்னநின்வருத்தப்பாடுமுணர்த்தினெனுயிர்ப்புவந்தாள் (எகூ)

இங்குளதன்மையெல்லாமிறையுளியிறையக்கேட்டாள்
அங்குளதன்மையெல்லாமடியனுக்கறியச்சொன்னாள்
திங்களொன்றிருப்பெனின்னேதிருவுளந்தீர்ந்தபின்னை
மங்குவெனுயிரோடென்றுன்குறைகழற்றலைக்கண்வைத்தாள். (அ௰)

வைத்தபின்றுகிலின்வைத்தமாமணிக்கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதினீந்தாடாமரைக்கண்களார
வித்தககாண்டியென்றுகொடுத்தனன்வேதநன்னூல்
உய்த்துளகாலமெல்லாம்புகழொடுமோங்கநிற்பான். (அக)

ணைப்பையப்பயந்தகாமம்பரிணமித்துயர்ந்துபொங்கி
மெய்புறவெதும்பியுள்ளமெலிவுறுநிலையைவிட்டான்
ஐயனுக்கங்குமுன்னரங்கையாற்பற்றுநங்கை
கையெனலாயிற்றன்றேகையுக்கமணியின்காட்சி. (அஉ)

பொடித்தனவுரோமம்போந்துபொழிந்தனகண்ணீர்பொங்கித்
துடித்தனமார்புந்தோளுந்தோன்றினவியர்வின்றுள்ளி
மடித்ததுமணிவாயாவிவருவதுபோவதாகித்
தடித்ததுமேனியென்னேயாருளார்தன்மைதேர்வார். (அங)

ஆயிடைக்கவிகளோடுமங்கதன்முதலினோர்
மேயினர்வணங்கிப்புக்கார்வீரனைக்கவியின்வேந்தைப்
போயினகருமமுற்றிப்புகுந்தனோர்பொம்மறன்றால்
சேயிருமதியமென்னத்திகழ்தருமுகத்தரானார். (அச)

ஆண்டையினருக்கன்மைந்தனையகேளிர்வைகுநம்பால்
காண்டலுக்கெளியளானாளென்றலுங்காலந்தாழ
ஈண்டினுமிருத்திபோலாமென்றனனென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான்பொருக்கெனவெழுந்துசொன்னான்

எழுகவெம்படைகளென்றானெனுமளவினெங்கும்
முழுமுறைசொற்றகொற்றவள்ளுவர்முடுகமுந்திப்
பொழிதிரையன்னவேலைபுடைபரந்தென்னப்பொங்கி
வழுவில்வெள்ளத்தானைதென்றிசைவளர்ந்ததன்றே (அ௬)

வையகமதனின்மாக்கண்மயங்குவர்வயவெஞ்சேனை
எய்திடினென்பதுன்னியிராகவனினிதினேவப்
பெய்கனிகிழங்குதேனென்றினையனபெறுதற்கொத்த
செய்யமால்வரையேயாறாச்சென்றனதகைப்பில்சேனை (அ௭)

வீரரும்விரைவிற்போனார்விலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக்காவற்பாடும்பெருமையுமரணுங்கொற்றக்
கார்நிறத்தரக்கரொன்போர்முதலியகணிப்பிலாத
வார்கழலனுமன்சொல்லவழிநெடிதெளிதிற்போனார் (அ௮)

அந்நெறிநெடிதுசெல்லவரிக்குலத்தரசனோடு
நன்னெறிக்குமரர்போகநயந்துடன்புணர்ந்தசேனை
இன்னெடும்பவழக்குன்றிற்பகலெலாமிறுத்தபின்னர்
பன்னிருபகலிற்சென்றுதென்றிசைப்பரவைகண்டார். (அ௯)

திருவடிதொழுதபடலம் - முற்றிற்று.

[illegible] படலம் - [illegible] - திருவிருத்தம் - [illegible].

## சுந்தரகாண்டம் - முற்றிற்று.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்

# படலாகராதி


| (பக்கம்.) | | | (பாட்டு.) |
|---|---|---|---|
| ௱௨௧ | ௰௧-வது | அட்சகுமாரன்வதைப்படலம் | ௫௰ |
| ௱௫௩ | ௰௪-வது | இலங்கையெரியூட்டுப்படலம் | ௬௪ |
| ௬௩ | ௫-வது | உருக்காட்டுப்படலம் | ௱௰௭ |
| ௰௩ | ௨-வது | ஊர்தேடுபடலம் | ௨௱௩௪ |
| ௧ | ௧-வது | கடற்றாவுபடலம் | ௯௫ |
| ௪௩ | ௩-வது | காட்சிப்படலம் | ௭௭ |
| ௯௭ | ௮-வது | கிங்கரர்வதைப்படலம் | ௬௧ |
| ௱௫ | ௯-வது | சம்புமாலிவதைப்படலம் | ௫௧ |
| ௭௮ | ௬-வது | சூடாமணிப்படலம் | ௮௯ |
| ௱௬௰ | ௰௫-வது | திருவடிதொழுதபடலம் | ௮௯ |
| ௫௩ | ௪-வது | நிந்தனைப்படலம் | ௮௨ |
| ௱௰௨ | ௰-வது | பஞ்சசேனாபதிகள்வதைப்படலம் | ௬௭ |
| ௱௨௭ | ௰௨-வது | பாசப்படலம் | ௬௩ |
| ௱௩௫ | ௰௩-வது | பிணிவீட்டுப்படலம் | ௱௪௰ |
| ௯௰ | ௭-வது | பொழிலிறுத்தபடலம் | ௬௰ |
| | | ஆக-திருவிருத்தம் | ௲௩௱௪௰ |
| | | தனியன் | ௧ |
| | | ஆக- | ௲௩௱௪௧ |


# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௭ | ௪௭ | ௩ | சிகரப்படா | சிகரப்படர் |
| ௨௰ | ௫௬ | ௨ | உதயமேய்மடி | உதயமேமடி |
| ” | ” | ௩ | முலைக்கதிர் | முலைகதிர் |
| ௨௯ | ௮௧ | ௪ | வருகவென்றான் | வருகென்றான் |
| ௯௨ | ௨௱௩௧ | ௨ | செய்யந் | செய்யுந் |
| ௭௫ | ௯௮ | ௪ | நிலவிணு | நிலவிணு |
| ௭௭ | ௱௯ | ௩ | மியன்றல் | யென்றனு |
| ௯௫ | ௪௫ | ௧ | சுடர்சூடை | சுடர்ச்சூடை |
| ௱௰௨ | ௫௧ | ௨ | சுமுமி | சூமிழி |
| ௱௨௭ | ௬௮ | ௪ | மாடணுகி | மாட்டணுகி |
| ௱௬௰ | ௬௰ | ௨ | விற்றொழுமில் | விற்றொழுதில் |

54510